# மீண்டும் ஜீவனோடு

பாகம் – 2




சகோ. யூஜின் பர்ன்ஸ்

# மீண்டும்

# ஜீவனோடு

பாகம் – உ

சகோ. யூஜின் பர்ன்ஸ்

*"பூமியின் வம்சங்களில் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ள வராதவர்கள் எவர்களோ அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை" (சகரியா 14:17).*

# அத்தியாயம் - 10

லெவ் ஓர் அழகான நாளின் விடியலில் விழித்தெழுந்தான். பழங்களை அறுவடை செய்து கொண்டு வீட்டிற்குள் திரும்பிய பெஞ்சமின், அனைவரையும் பார்த்து "ஷாலோம்" என்று மனதார வாழ்த்தினார். காலை உணவுக்குப் பின்னர், அவர்கள் மெதுவாக நடந்து தேவாலயத்திற்கு வந்தனர். வழிபாடு துவங்குவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்பாகவே தேவாலயத்தை வந்தடைந்தனர்.

ஒபதியாக்கள், தோட்டக்கலையில் அவர்களின் பங்களிப்பிற்காக பெரிதும் பாராட்டப்பட்டனர். பூமி அதன் விளைச்சலை அதிகமாகக் கொடுக்கத் துவங்குவதற்கு முன்பே, அவர்கள் அந்தப் பகுதியை செழிப்பான தோட்டமாக மாற்றியிருந்தனர். பெஞ்சமின் காலை ஆராதனையைத் துவக்கினார்.

"பூமியை அழிவுக்குள்ளாக்கும் செயல்முறை முடிவுக்கு வந்துவிட்டது. ஒரு நாற்று மட்டுமே வளர்ந்திருந்த இடத்தில், இரண்டு நாற்றுகள் வளர்வதற்குக் காரணமாயிருந்த எவரும் பூமியைக் கொஞ்சம் வளமாக்குகிறார். அந்த ஒரு நாற்றையும் காலால் மிதித்துப் போடுகிறவர்கள், ஒன்றையும் வளரவிடாது செய்து பூமியை ஏழ்மையாக்குகின்றனர். சிலர் பரலோகத்திற்குச் செல்வார்கள் என்று சொல்லப்பட்டாலும், அவர்கள் பூமியிலிருந்து எந்த நிலையில் சென்றார்கள் என்பது ஒரு பொருட்டல்ல. எல்லோரும் பரலோகத்திற்குத்தான் செல்கிறார்கள் என்றால், அவர்கள் ஏன் பூமியைப் பற்றி கவலைப்பட வேண்டும்? எவ்வளவு மோசமான

நிலையில் பூமி இருக்கிறதோ, அவ்வளவு சிறப்பாக பரலோகம் இருக்கும்'' என்று பெஞ்சமின் தொடர்ந்தார்.

கிறிஸ்துவின் தலையீடு இதனை மாற்றியுள்ளது. பூமியை மீண்டும் ஏதேனின் முந்தைய நிலைமைக்கு மீட்டெடுக்கும் பணியுடன் முற்பிதாக்கள் திரும்பினார்கள். அவர்கள் இதைக் குறித்த காட்சிகளைக் கடந்த காலத்தில் தீர்க்கதரிசனமாகப் பார்த்தது மட்டுமல்லாமல், இன்று இந்த இலக்கை அடைவதற்குத் தேவையான வழிகளை ஞானத்தோடும், அர்ப்பணிப்போடும் வழங்கி வருகிறார்கள்.

''முற்பிதாக்கள், பரலோகத்திற்குத் தப்பிப் போவதற்கான கற்பனையின் கதவினை அடைத்துவிட்டு, மனிதர்கள் கற்பனை செய்த ''உட்டோபியா'' என்ற தீவினைப் போன்ற அழகான பூமிக்கான கதவினைத் திறந்தார்கள். கர்த்தரின் உன்னத திட்டமான மனிதனின் நிலையான குடியிருப்பான பூமியைச் சீரமைத்து அதனைப் பரிபூரண நிலைக்கு மீட்டெடுக்கும் இந்த மாபெரும் முயற்சியில் நாங்கள் மகிழ்ச்சியுடன் ஈடுபட்டு உள்ளோம். கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக, ஆமென்'' என்று பெஞ்சமின் கூறினார்.

வழிபாடு முடிந்ததும், பெஞ்சமினுக்கு வழங்கப்பட்டிருந்த முக்கியமான வேலையில் அவருடன் இப்போது பணிபுரிந்து கொண்டிருக்கும் பலரை லெவ் சந்தித்தான். சமீபத்தில் மரணத்திலிருந்து, ஜீவனுக்குத் திரும்பியிருந்த சிலர் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தார்கள். சிலர் லெவ்வைப் போலவே எருசலேமைப் பாதுகாப்பதற்காக நடந்த போரில் மரித்திருந்தனர், மற்றவர்கள் உடல் நலக்குறைவினாலும், நோயினாலும் மரித்திருந்தார்கள். பழைய உலகில் குழந்தை பிறப்பு என்பது மிகவும் சுவாரஸ்யமானதாக இருந்தது, அவனது அல்லது அவளது பண்புகளைப் பற்றி முழுமையாக

அறிந்திராத நிலையிலும், அக்குழந்தையின் பிறப்பானது சுவாரஸ்யமானதாகவே இருந்தது. ஒருவர் மரித்தோரிலிருந்து திரும்பும்போது, அவர் பழைய உலகில் இருந்த அதே நபராக, ஆனால் இப்போது தேவன் அவருக்கென்று கொடுக்க விரும்பிய மரபணு ரீதியாக அதேபோல் உருவாக்கப்பட்ட நகல் உடம்பில் இருக்கிறார்.

மரித்தவர்கள் மிகச்சிறந்ததொரு ஒழுங்குமுறையில் உயிர்த்தெழுந்து திரும்பி வருவதில் வெளிப்பட்டிருந்த தேவனுடைய வல்லமையைக் குறித்து லெவ் விரிவாகப் பேசினான். உயிர்த்தெழுதல் என்பது கைகள், கால்கள் மற்றும் உடலின் பாகங்கள் காற்றில் பறந்து வந்து உண்மையான உடலுடன் மீண்டும் இணைக்கப்படும் என்றும், இது இருபத்தி நான்கு மணி நேரங்கள் கொண்ட ஒரு நாளுக்குள்ளாகவே, மறுசீரமைக்கப்பட்ட உடலுடன் பில்லியன் கணக்கானவர்கள் திரும்பி வரும் காரியமாக இருக்கும் என்றும் பலரால் கூறப்பட்டிருந்தது. உயிர்த்தெழுதலானது யதார்த்தமானதாகவும், முற்றிலும் வித்தியாச மானதாகவும், கண்ணியமானதாகவும் மற்றும் ஒழுங்கானதாகவும் இருக்கிறது. கிறிஸ்து, தான் தெரிந்துகொண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு புதிய மேனியைக் கொடுக்கின்றார். இந்த நிகழ்வானது கர்த்தருடைய ஆயிர வருட அரசாட்சி முழுவதிலும் நடைபெறுகின்றது என்று லெவ் விளக்கினான்.

லெவ், பெஞ்சமினின் வீட்டிற்குத் திரும்பியதும் அவன் சீர்படுத்தப்பட்ட மற்றும் குணமாக்கப்பட்ட உலகத்தில் தான் கண்ட காட்சிகளால் உற்சாகமாகக் காணப்பட்டான். ஒவ்வொரு நபரும் தங்களது பிரயாசத்தின் மூலம் பலிகளை ஏறெடுத்து "இழந்ததைத் திரும்பக் கொடுப்பதற்காக" வந்த இரட்சகரைப் பின்பற்றுவதன் மூலம் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வார்கள். தம்முடைய சொந்த

இரத்தத்தை விலைக்கிரயமாகக் கொடுத்து அவர்களை மீட்டுக் கொண்ட கிறிஸ்து, இப்புதிய உலகில் முழு மனுக்குலத்தையும் சீர்ப்படுத்தி, பூமியினைப் பரதீஸாக மாற்றும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

பெஞ்சமினும், தெபோராவும் தங்களது வாழ்க்கையிலும் மற்றும் வேலைகளிலும் பரிசுத்தத்தை நிரூபித்திருந்தனர். அனைவருக்கும் ஜீவனைக் கொடுப்பதற்கான இந்த மாபெரும் தோட்டக்கலை திட்டத்தில், முக்கியமான பங்கினை வகிக்கும்படி முற்பிதாக்கள் இவர்களை ஏன் குறிப்பிட்டுத் தேர்ந்தெடுத்தார்கள் என்பதை எளிதாகப் புரிந்துகொள்ள முடிந்தது. ஒபதியாக்கள் தங்களது குடும்பத்தின் ஒரு பாகமாக இருப்பதைக் கனமிக்க ஒன்றாகவும் மற்றும் உத்வேகம் அளிக்கக்கூடிய ஒன்றாகவும் லெவ் கருதினான்.

## கானா

"மேலும் இரண்டு தேசங்கள், கிறிஸ்து மற்றும் முற்பிதாக்களுடைய அதிகாரத்தின் கீழ் வருவதற்குக் கேட்டிருக்கின்றார்கள் என்றும், இது அவ்விரண்டு தேசங்களுக்கும் ஆசீர்வாதங்கள் குவியத் தொடங்கப் போவதை அர்த்தப்படுத்துகிறது" என்ற செய்தியை, அவர்கள் மதிய உணவை உண்ணும்போது தெபோரா அறிவித்தாள். அவர்கள் நம்முடன் இணையப் போவதற்காக நாம் மகிழ்ச்சியடைகிறோம். முன்பு, இந்த தேசங்கள் எருசலேமின் தலைமையை ஏற்க மறுத்திருந்ததினால் அங்கே மழைப்பொழிவு இல்லாதிருந்தது. 'பூமியின் வம்சங்களில் சேனைகளின் தேவனாகிய கர்த்தரை, ராஜாவாகத் தொழுதுகொள்ள வராதவர்கள் எவர்களோ, அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை' என்ற தீர்க்கதரிசன நிறைவேறுதலையும் தெபோரா குறிப்பிட்டார்.

"சில நாடுகள் பட்டினியின் விளிம்பில் உள்ளன, ஆனாலும் அவர்களுக்கு இருக்கும் பெருமை மற்றும் தவறான எண்ணங்கள்

எருசலேமின் தலைமையை ஏற்றுக் கொள்வதிலிருந்து அவர்களைத் தடுக்கின்றன, இருப்பினும் மற்றவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதை அவர்கள் பார்க்கும்போது, கர்த்தரின் ஆசீர்வாதங்களை எதிர்ப்பதற்குப் பதிலாக, அவைகளை ஏற்றுக்கொள்ளும் முடிவிற்கு இறுதியாக வருவார்கள். அவ்வாறு நிகழும்போது, நாம் மரங்களின் ஏற்றுமதியை விரிவுபடுத்த வேண்டும். மேலும் கூடுதல் மரத் தோட்டங்களை (நாற்று பண்ணைகளை) அமைக்கவும் வேண்டும். ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், தேசங்கள் உதவி கோரும்போது நாம் தயாராக இருப்பதே ஆகும். நம்மால் மட்டுமே இவ்வளவு கச்சிதமாகத் திட்டமிட்டிருந்திருக்க முடியாது. இந்த தேசங்கள் நமது தலைமையை ஏற்றுக்கொண்ட உடனேயே, அவர்களுக்கு மழை வந்து சேரும். நில அளவையாளர்கள், நடவு செய்வதற்கும் மற்றும் வீடுகள் கட்டுவதற்குமான நிலத்தை பிரித்தவுடன், இந்த இரண்டு தேசங்களுக்கும் ஏதேன் மரங்களை நாங்கள் ஏற்றுமதி செய்வோம். ஏதேனுக்கு இட்டுச் செல்லும் பாதையில் ஏற்கனவே பெரும்பாலான முக்கிய நாடுகள் உள்ளன" என்று பெஞ்சமின் மேலும் கூறினார்.

"பாட்டி, தாத்தா நான் ஆப்பிரிக்காவிலுள்ள கானாவுக்குச் செல்லப்போகிறேன் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன். கானா, இஸ்ரயேலின் உதவியைக் கேட்டிருக்கிறது. அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. முற்பிதாவாகிய ஏனோக்கு என்னைத் தொடர்பு கொண்டு, முற்பிதாக்கள், என்னை கானாவுக்கு அனுப்ப ஒப்புக் கொண்டுள்ளதைக் கூறினார். ஜேக் மாமா வேலை செய்வது போன்றதொரு தொழிற்சாலையை உருவாக்க நான் உதவுவேன். மாமா எனக்கு நிறைய ஆலோசனைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். அவர் கொடுத்த வரைபடங்களும் கூட வீட்டில் என்னிடம் உள்ளன" என்று ஆலன் கூறினான்.

பெஞ்சமின் புன்னகைத்தவாறு, "ஆலன், இது ஒரு சிறந்த செய்தி! கர்த்தருடைய ஆசீர்வாதத்தால் உன்னால் அவ்வேலையைச் செய்ய முடியும் என்று நாங்கள் அறிவோம். நாங்கள் ஏற்கனவே சிறிய ஏதேன் மரங்களை கானாவிற்கு அனுப்பியுள்ளோம். ஏதேன் பழங்களை விரைவாகக் கொடுக்கும் மரங்களையும் நாங்கள் அனுப்பியுள்ளோம். இந்த மரங்கள் நோய்வாய்ப்பட்டோர் மற்றும் வயதானவர்களின் நலனுக்காக அறுவடை செய்யப்படும். பெரும்பாலான மக்கள் ஆரோக்கியம் மற்றும் உயிர்ச்சக்தியைப் பெற்று அதனை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வதன் மூலம் மறுசீரமைப்பின் வேலையில் தங்களை இணைத்துக் கொள்வார்கள். கானா, பூமத்திய ரேகைக்கு அருகில் உள்ளது. எப்போதும் ஏராளமான மழைப் பொழிவைக் கொண்டிருக்கும் கானாவின் மண் மிகவும் வளமானது. இத்தகைய சாதகமான காலநிலையின் கீழ் மரங்கள் செழித்து வளரும். ஒருவேளை நான் உங்களைச் சந்திக்க அங்கு வரலாம். நான் முற்பிதாவாகிய ஆபிரகாமிடம் பேசுகிறேன். எங்களது வேலை இங்கு எவ்வித தடையும் இன்றி நன்றாக சென்று கொண்டிருக்கிறது. இவ்வேலையை முன்னெடுத்துச் செல்வதற்கு இங்கு நிறைய பேர் இருக்கின்றார்கள்" என்று பெஞ்சமின் விளக்கினார்.

"மிகவும் நல்லது, தாத்தா. ஒருவேளை பாட்டியும் கூட உங்களுடன் வரலாம் இல்லையா? நீங்கள் இருவருமே இந்த வேலையைச் செய்வதற்கு மிகவும் தகுதியானவர்கள். உங்கள் இருவருடைய பெயர்களும் மிகவும் பிரபலமாக மாறிவிட்டன" என்று ஆலன் வியப்புடன் கூறினான்.

"பாராட்டுக்கு நன்றி, ஆனால் இந்தப் புகழ் கிறிஸ்துவுக்கே உரியது. அவருடைய ஆசீர்வாதம் இல்லாமல் எங்களது வேலை

வெற்றியடையாது. நாம் சீரான மழைப்பொழிவைப் பெற்றுள்ளோம், அதனால்தான் நமது விதைகள் அனைத்தும் செழித்து வளர்கின்றன. சீரான மழைப்பொழிவு எப்போதும் இருக்கும் என்று என்னிடம் கூறப்பட்டது, அதைப் போலவே இருந்தும் வருகிறது. இந்த நாற்றுகளுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு நாங்கள் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியிருந்தால், நிச்சயமாக அது எங்கள் வேலையைச் சிக்கலாக்கி இருக்கும். பூமி அதன் விளைச்சலை அபரிமிதமான வழிகளில் கொடுத்துக் கொண்டு வருகிறது. தாவரங்கள் விரைவாகவும், வலுவாகவும் வளர்கின்றன. நோய்களோ அல்லது பூச்சிகளோ எதுவும் இங்கு இல்லை. நாங்கள் வெறுமனே விதைகளை விதைத்து விட்டு வெளியேறுகிறோம்" என்று பெஞ்சமின் கூறினார்.

"தாத்தா, நீங்கள் இவ்வேலையை மிகவும் எளிமையாக மாற்றிவிட்டீர்கள். இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான திட்டமிடுதலில் நீங்கள் இருவரும் எந்த ஒரு விவரத்தையும் தவறவிடுவதில்லை என்பது எங்கள் அனைவருக்கும் தெரியும்." ஒரு செடியைப் பார்க்கும்போதே அதற்கு என்ன தேவை என்பதை உங்களால் கூற முடியும். சாலமோன் தாவரங்களைப் பற்றி விரிவுரையாற்றுவதில் ஞானமுள்ளவராக இருந்தார், ஆனால் அவற்றை எப்படி செழிக்கச் செய்வது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும்" என்று ஆலன் கூறினான்.

"சரி, இங்கே காரியங்கள் சுமூகமாக நடக்கும்போது, தெபோராவும், நானும் இதே போன்ற திட்டங்களை மேற்பார்வையிடுவதற்கு, மற்ற தேசங்களுக்குச் செல்ல முற்பிதாக்கள் எங்களை அழைக்கலாம் என்று முற்பிதாவாகிய ஆபிரகாம் கூறி உள்ளார். கர்த்தர் பூமியை ஆசீர்வதிப்பதால் நமது வேலை எளிதாகி உள்ளது, அதனால் பூமி இனி

செழிப்பான அறுவடைகளைக் கொடுக்கும். பயிரிடும் அனைத்தும் இரண்டு மடங்கு வேகமாக வளர்ந்து, நான்கு மடங்கு பலனை அளிக்கின்றன. இன்று நாம் பெறும் விளைச்சலை என்னால் நம்ப முடியவில்லை. இதற்காக எந்த கனத்தையும் நாம் எடுத்துக் கொள்ள முடியாது, அது கர்த்தரையே சாரும்" என்று பெஞ்சமின் மேலும் கூறினார்.

## வீட்டிற்குத் திரும்புதல்

விரைவில் வீட்டிற்கு திரும்புவதற்கான பயணத்திற்குத் தயாராக வேண்டிய நேரம் வந்துவிட்டது. அன்பினால் நிறைந்திருந்த பெஞ்சமினும், தெபோராவும், ஆலன் கானா வேலையை ஏற்றுக்கொண்டதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தனர். "கர்த்தராலே, எல்லாம் ஆகும்" என்று தெபோரா ஆலனிடம் கூறினார்.

இஸ்ரயேலின் மற்ற பகுதிகளை லெவ்விற்குக் காட்டுவதற்காக குடும்பத்தினர், மத்தியதரைக்கடல் வழியாக வீட்டிற்குப் பயணம் செய்தனர். வறண்ட பாறை நிலம், பழம்தரும் பரதீசாக மாற்றப்பட்டிருந்தது. எந்தெந்த பகுதிகளில் என்னென்ன பயிர்கள் சிறந்த முறையில் விளைந்தன என்பதை வேதாகம சரித்திரம் நமக்குக் கற்பித்துள்ளது. இரவின் மழையும், காலையின் பனியும் நிலத்திற்கு தண்ணீரைக் கொடுத்தன. களைகள் மற்றும் நோய்கள் ஒழிந்துபோய் இருந்தன. வியர்வை மற்றும் உழைப்பு இல்லாமலேயே பூமி தன் பொக்கிஷங்களைத் தாராளமாகக் கொடுக்கத் தொடங்கியிருந்தது.

அழகான மத்தியதரைக்கடலின் கம்பீரமான காட்சி, லெவ்வை பிரம்மிப்பில் ஆழ்த்தியது. ஆனால் இதே கடல்தான் ஒரு காலத்தில் கொடூரமானதாக இருந்தது என்பதை லெவ் நினைவு கூர்ந்தான். அதன் அடிப்பகுதியில் எத்தனை கப்பல்கள் மூழ்கி உள்ளனவோ? புயல்கள் எழுந்திருந்தன, சில சமயங்களில் பல நாட்கள் கூட

நீடித்திருந்தன. மேலும் பல கப்பல்களால் கடலின் கடுமையான காற்றையும், கொந்தளிக்கும் அலைகளையும் தாங்க முடியாமல் போயிருந்தன. கடலில் மரித்த எவரும் அப்படியே விட்டுவிடப் போவதில்லை என்பதை அறிந்த லெவ் மிகுந்த மகிழ்ச்சியடைந்தான். கிறிஸ்துவின் குரல் ஏற்ற வேளையில், அவர்களின் நீர் கல்லறையிலிருந்து அவர்களை அழைக்கும். அவர்கள் கடலுக்குள்ளேயே இருக்கும்படி விடப்படுவதில்லை. தான் பெற்றுக் கொண்டதைப் போலவே, ஒவ்வொருவரும் தங்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகளில், வாழ்க்கைக்கான ஏராளமான வசதிகளுடன் உயிர்த்தெழ உள்ளனர் என்று லெவ் எண்ணினான்.

ஜேக், லெவ்வின் எண்ணங்களை இடைமறித்தான். "பயங்கரமான சூறாவளிகள் மற்றும் பூகம்பங்களைக் கட்டுப்படுத்துவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக, முற்பிதாக்கள் எங்களிடம் கூறியுள்ளனர். மனிதர்கள் 'பூமியை நிரப்பி, அதனை தங்களுக்குக் கீழ்ப்படுத்தி இருக்க வேண்டும்.' ஆனால் பல ஆண்டுகளாக மனிதர்களுக்குப் பூமியின் தனிமங்களை எப்படி 'கீழ்ப்படுத்துவது' என்று தெரியவில்லை. அவர்களுக்கு பூமியை எப்படி அழிப்பது என்றே தெரிந்திருந்தது. பூமியை எப்படி தங்களுக்குக் கீழ்ப்படுத்துவது என்று தெரியவேயில்லை. ஆனால் இப்போது பூமியை வளமாக்கும் செயல்முறையை நிறைவேற்றுவதற்கான படிப்புகள் உள்ளன, ஏற்கனவே இயற்கை பேரழிவுகளினால் உண்டான வன்முறை மற்றும் அழிவுகளினால் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பருவ நிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கு கிறிஸ்து பொறுப்பேற்றுள்ளார். ஆனால் சரியாக அறிவுறுத்தப்பட்ட பிறகு, மனிதன் தாங்களாகவேச் செய்யக்கூடிய காரியங்களுக்கு, கிறிஸ்து எந்த உதவியும் அளிக்க மாட்டார். நாம் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது" என்று ஜேக் கூறினான்.

"உண்பதும், உறங்குவதும், உலாவுவதும் தவிர வேறு எந்த வேலையும் செய்வதற்கு இருக்காது என்று அவர்கள் கற்பனை செய்திருந்ததால், கற்பனையில் கண்ட இடம் (உட்டோபியா) சலிப்பானதாக இருக்கும் என்று பலர் நினைத்தார்கள். மன ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும் மற்றும் அறிவியல் ரீதியாகவும் இவ்வளவு சவாலான ஒரு நேரத்தை நாங்கள் கனவுகளில் கூட நினைத்துப் பார்த்ததில்லை. முப்பது பில்லியன் மக்களை, மரித்தோரிலிருந்து மீட்டெடுப்பதில் பங்குபெறும் இந்த மிகப் பெரிய பணியினைப் பற்றி நமக்கு எந்த எண்ணங்களும் இல்லை" என்றவாறு ரேச்சல் தொடர்ந்தாள்.

"நல்லவேளையாக இப்புதிய பூமியில் ஒவ்வொருவருக்கும் தேவையான ஏற்பாடுகளையும், அவர்களுக்கான திட்டங்களையும் தேவன் செய்திருக்கிறார். இத்திட்டமானது தற்செயலாகவோ அல்லது மனிதர்களின் தவறு மூலமாகவோ உண்டானதல்ல. 'தேவன் தன் ஒரே பேறானவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்ததினால்,' இதிலிருந்து மனுக்குலம் பயனடைவதற்கு அவர் அனைவருக்கும் ஒரு முழுமையான வாய்ப்பினைக் கொடுத்திருப்பது நியாயமானதே. இனஅழிப்பு (ஹோலோகாஸ்ட்) அல்லது 'பரிசுத்த' விசாரணை என்று அழைக்கப்படுவதை தேவன் ஏன் அனுமதித்தார் என்பது புரிந்து கொள்ளவதற்குக் கடினமான கேள்வியாய் உள்ளது. ஒட்டுமொத்த சீரழிவின் உச்சகட்டமான இத்தகைய செயல்களைப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது. காட்டுமிராண்டிகள் என்பவர்கள் கொடூரத்தன்மைக்கு பெயர்போனவர்களாக இருந்தாலும், அவர்கள் அறியாமை மற்றும் மூடநம்பிக்கையினாலேயே அவற்றைச் செய்திருந்தனர். ஆனால் நான் குறிப்பிடுபவர்கள் படித்தவர்கள் மற்றும் மத குருமார்களாக இருக்கிறவர்கள்" என்று ரெபெக்காள் மேலும் கூறினாள்.

"நாம் பதில்களுக்காக நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியதில்லை அம்மா" என்று ஆலன் ஒப்புக்கொண்டான். "மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில், மூன்றாம் ஜெர்மனி குடியரசின் சில முக்கிய நபர்கள் உயிர்த்தெழுந்து வருவார்கள். ஹிட்லருடன் கூட்டிணைந்து செயலாற்றிய, மதகுருமார்கள் மீண்டும் திரும்பி வருவார்கள். ஒவ்வொருவரும் அவரவர் செயல்களை விளக்குவதற்கான பகுத்தறிவு கொண்டவர்களாக இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். எனினும், அவர்கள் கூறும் காரணங்கள் போலியானதாயிருக்கும். உண்மைகளை மறைக்க சாத்தானால் இப்போது முடியாது. அவனுக்கென்று நியமிக்கப்பட்டுள்ள படு குழியில் தள்ளிக் கட்டப்பட்டுள்ளான். மனிதகுலத்திற்கு எதிரான தங்களது குற்றங்களுக்கு மக்களே பொறுப்பேற்க வேண்டும். ஒரு காலத்தில் சமூகத்தில் பொறுப்பற்ற அணுகுமுறை ஊடுருவி இருந்தது. ஒவ்வொருவரும் தங்களது கணக்கைக் கொடுக்கும்படி திரும்பி அழைக்கப்படுவார்கள் என்று யாரும் எதிர்பார்த்திருந்திருக்க மாட்டார்கள்" என்று ஆலன் மேலும் கூறினான்.

## குஸ்டாவ் ஜான்சன், ஸ்வீடன்

அவர்களின் கால்களை நீட்டியபடி, கரையோரம் நடப்பது நன்றாக இருந்தது. அவர்கள் ஒரு சிறிய சோலையில் ஓய்வெடுத்தனர், அங்கு பலர் அமர்ந்திருந்தனர். லெவ் மதிய உணவு சாப்பிடுவதற்கான மேசையைத் தேடிக் கொண்டிருக்கையில், அயல்நாட்டு உச்சரிப்போடு பேசிய ஒரு நடுத்தரவயது மனிதர், அவர்களை அவருக்கு அருகில் உட்கார அழைத்தார். அவர் தன்னை ஸ்வீடனைச் சேர்ந்த குஸ்டாவ் ஜான்சன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டார். முற்பிதாக்களின் அழைப்பின் பேரில் குஸ்டாவ், இஸ்ரயேலுக்கு வந்திருப்பதாகக் கூறினார்.

ஸ்வீடன், இஸ்ரயேலுடன் கூட்டுச் சேர்வதற்காக விதிக்கப்பட்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டாலும், அனைத்து நிபந்தனைகளுக்கும் இணங்குவதில் அந்தச் தேசம் சிக்கலை எதிர்கொண்டது. சிறிய மாற்றங்களை மட்டுமே செய்து, அவர்கள் முன்பு இருந்ததைப் போலவே செயல்பட முடியும் என்று நினைத்தார்கள். இதன் விளைவாக ஸ்வீடன் இன்னும் முழு ஆதரவையும் மற்றும் எதிர்பார்த்த உதவியையும் பெற்றுக் கொள்ளவில்லை. குஸ்டாவ், டெல் அவிவில் தரையிறங்கியதாகவும், எருசலேமிற்குப் பயணம் செய்வதற்கு அவருக்கு கார் அனுப்பப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தார். இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்த முற்பிதாவாகிய சாமுயேல், குஸ்டாவ் நேரில் வந்து இஸ்ரயேல் தேசத்தைப் பார்க்க விரும்பினார்.

லெவ், தங்களிடமிருந்த மிகுந்த சுவையான ஏதேன் பழங்கள் வைக்கப்பட்டிருந்த கூடையை ஆசீர்வதித்து, பின்னர் அதிலிருந்து சிலவற்றை குஸ்டாவுக்கு கொடுத்தான்.

சிலவற்றை எடுத்துச் சாப்பிட்ட அவரது முகம் மகிழ்ச்சியில் பிரகாசித்தது. "இந்தப் பழம், நான் இதுவரை ருசித்த பழங்களிலேயே, மிகவும் சுவையான பழம் என்பதை நான் உங்களுக்கு கண்டிப்பாகச் சொல்ல வேண்டும்" என்று குஸ்டாவ் கூறினார்.

"நான் ஆறு நாட்களுக்கு முன்பு உயிர்த்தெழுப்பப்பட்டபோது தான், முதன்முதலாக ஏதேன் பழத்தின் சுவையை ருசித்தேன். அப்போதிலிருந்தே நான் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். எருசலேமைப் பாதுகாக்கும் கடைசிப் போரில் நான் மரித்தேன். நான் ஜீவனுக்குத் திரும்பி, முதல் முறையாக ஏதேன் பழத்தை சுவைத்தபோது - அது இவ்வளவு விரைவாக உயிர்ச்சக்தியையும் மற்றும் மனத்தெளிவையும் மீட்டெடுக்கும் என்று எனக்குத் தெரியாது. குஸ்டாவ், இந்தப் பழத்தை

உட்கொள்ள ஆரம்பித்த சில நாட்களிலேயே நீங்கள் வித்தியாசத்தை உணர்வீர்கள்" என்று லெவ் கூறினான்.

"ஏதென் பழத்தையும் ருசித்து, உங்கள் சாட்சியத்தையும் கேட்ட பிறகு, நீங்கள் கூறியதை நான் நம்புகிறேன். நீங்கள் மரித்துவிட்டீர்கள் என்றும், இப்போது நீங்கள் மீண்டும் உயிர்த்தெழுப்பட்டுள்ளீர்கள் என்றும் நீங்கள் சொல்வது விசித்திரமாக இருக்கிறது. இஸ்ரயேலில் உயிர்த்தெழுதல் நடப்பதைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோம், ஆனால் ஸ்வீடனில் யாரும் உயிர்த்தெழுதலை இன்னும் அனுபவிக்க வில்லை. என் மகனும் கூட அந்தப் போரில் மரித்து விட்டான். அவன் எங்களது நாட்டிலிருந்து சென்றிருந்த ஒரு சிறிய குழுவைக் கொண்ட படைப்பிரிவில் இருந்தான். எருசலேமிற்கு எதிரான அந்த முற்றுகையை அரசியல் மற்றும் மதத் தலைவர்களே உண்டாக்கி இருந்தனர். ஆனால் இது சாதாரண மக்களைக் கடுங்சோதனைக்குள்ளாகத் தள்ளி இருந்தது. அதனாலேயே இஸ்ரயேலை எதிர்த்துப் படையெடுத்தவர்களைத் தேவன் அழித்துவிட்டார் என்று வெளிப்படையாகத் தெரிந்தபோது, இந்த தோல்விக்குக் காரணமாயிருந்தவர்கள் மீது மக்கள் கோபமடைந்தனர். எருசலேமைக் கைப்பற்றும் இந்தப் பணி தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டிருந்தது என்று தலைவர்கள் கூறியிருந்தனர். அவர்களின் லட்சியங்களை நிறைவேற்ற உதவுபவர்களுக்கு பெரும் வெகுமதிகளைத் தருவதாகவும் தலைவர்கள் உறுதியளித்திருந்தனர். ஆனால் இந்த முறை ஜனங்களின் உயிரைக் கொடுத்தாகிலும் எருசலேமைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம், தலைவர்களின் முகங்களில் தென்பட்டன" என்று குஸ்டாவ் கூறினார்.

"முற்பிதாக்களின் நிபந்தனைகளை விரைந்து ஏற்றுக்கொள்ள நீங்கள், உங்கள் ஜனங்களை இணங்க வைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

அவர்கள் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொள்ள வேண்டும். மேலும் அவர்கள் செய்யும் எதுவும் அவருடைய வழிகாட்டுதல்களுக்கு அப்பாற்பட்டு இருக்கக் கூடாது. நீங்கள் இஸ்ரயேலுக்குச் செல்கையில் அங்கு அனைத்தும் எவ்வளவு சமாதானமாகவும், திறன்படவும் மற்றும் ஒழுங்காகவும் இருக்கிறது என்பதைக் காண்பீர்கள். எந்த ஒரு முயற்சியும் வீணாணதாகவோ அல்லது போலியானதாகவோ இல்லை. ஏதேன் பழத்தின் காரணமாக, நோய்வாய்ப்பட்டவர்களோ அல்லது இயலாமையில் உள்ள மக்களோ எங்கள் தேசத்தில் இல்லை. இப்பழத்தின் விளைவாக சிறு குழந்தைகள் தவிர மற்ற அனைவரும், மிகச்சிறந்த மறுசீரமைப்பின் திட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்கின்றனர். மிகப்பெரிய பிரச்சனை என்னவென்றால், தங்களின் முந்தைய வாழ்க்கையைக் குறித்ததான எண்ணங்களே ஜனங்களுக்குச் சுமைகளாக இருக்கும். கெட்ட பழக்க வழக்கங்களும், பாவமான வழிகளில் நடத்தலும், பழைய பிரயோஜனமற்ற சுயநலமும் அவர்களின் இருதயங்களில் இன்னும் வாழ்கின்றன. எந்த ஒரு மனித பலவீனத்தையும் அவர்களது தனிப்பட்ட முயற்சி இன்றி வென்று விட முடியாது. ஒவ்வொருவரும் ஒன்று அவர்களது பாவத்தை மேற்கொள்வார்கள் அல்லது பாவம் அவர்களை மேற்கொள்ளும். உதவியானது அனைவருக்கும் சமமாக வழங்கப்படும், ஆனாலும் அனைவரும் மாற்றத்தை விரும்ப மாட்டார்கள்" என்று ஜேக் கூறினான்.

"உங்களோடு கூட அமர்ந்து சாப்பிடுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். உங்களது அனுபவங்களைக் கேட்பதற்கு மட்டுமல்லாமல், உங்களது உணவினையும் சுவைத்துப் பார்ப்பதற்கு நான் விரும்பினேன்" என்று குஸ்டாவ் கூறினார். "நான் இங்கு வந்த போது சிறிது சோர்வாக இருந்தேன் என்பதை ஒப்புக்கொள்கிறேன்.

ஏனென்றால் நான் விமான நிலையத்தில் வந்து இறங்கிய போது என்னை வரவேற்க எந்த அதிகாரியும் இல்லை, இந்தக் கார் மட்டுமே அனுப்பப்பட்டிருந்தது. ஸ்வீடனில் இருந்து தூதராக வந்த என்னை சிவப்பு கம்பளம் விரித்து வரவேற்பார்கள் என்று நான் எதிர்ப்பார்த்திருந்தேன்" என்று மேலும் கூறினார்.

"கிறிஸ்து யாரொருவருக்கும் சிவப்பு கம்பளம் விரிப்பதில்லை. நீங்கள்தான் கிறிஸ்துவுக்குச் சிவப்பு கம்பளம் விரிக்க வேண்டும். அவருக்குக் கொடுப்பதற்கு கீழ்ப்படிதலையும், நன்றிகளையும் தவிர எதுவும் உங்களிடத்தில் இல்லை. நீங்களும், உங்கள் ஜனங்களும் எவ்வளவு சீக்கிரம் அவரை ஏற்றுக்கொள்ளுகிறீர்களோ அவ்வளவு சீக்கிரம், உங்களால் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிலான ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வீர்கள். ஸ்வீடனைச் சேர்ந்தவர்கள் மிகச்சிறந்த கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவை ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்கு என்ன கடினம் ஏற்படப்போகிறது. யூதர்களான எங்களுக்குதான் மேசியாவை நிராகரித்த வரலாறு இருக்கிறது. ஆனால் நாங்களே இப்போது அவருடைய அதிகாரத்திற்கு கீழாக வந்துள்ளோம்" என்று ஜேக் கூறினான்.

"தன்னுடைய தொழுநோயை, எலியா குணப்படுத்த வேண்டும் என்று விரும்பிய சீரியத் தளபதியான நாகமானின் கதை நினைவில் இருக்கிறதா? எலியா, நாகமானிடம் சேறு நிறைந்த யோர்தானிற்குச் சென்று ஏழு முறை முழுக வேண்டும் என்று கூறிய போது அவர் கோபமடைந்து, யோர்தானில் மூழ்காமலேயே வீடு திரும்பினார். இறுதியில் அவருக்குச் சிறந்த அறிவுரை கொடுக்கப்பட்ட போது, அவர் மனமுவந்து முழுகுவதற்கு இசைந்தார். நாகமான் ஆச்சரியப்படத்தக்க வகையில் குணமடைந்தார். ஸ்வீடனும் தங்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும்

ஒவ்வொரு நிபந்தனைகளுக்கும் இணங்கும் என்று நாங்கள் நம்புகிறோம். விரைவாகவோ அல்லது தாமதமாகவோ அவர்கள் இணங்குவார்கள். எவ்வளவு சீக்கிரமாக அவர்கள் புதிய பூமியின் ஆட்சியாளர்களின் நிபந்தனைகளுக்குச் செவி சாய்க்கிறார்களோ, அவ்வளவு சீக்கிரமாக அவர்கள் ஆசீர்வாதத்தையும், கனத்தையும், ஜீவனையும் பெற்றுக் கொள்வார்கள்" என்று ரெபெக்காள் கூறினாள்.

குஸ்டாவ் புன்னகைத்தவாறு, "நீங்கள் உங்கள் கருத்துக்களை மிகத் தெளிவாகக் கூறியுள்ளீர்கள். ஸ்வீடனின் பெருமையானது, விரைவான மற்றும் உற்பத்தியில் நல்லதொரு பலனைப் பெறுவதற்கானக் கதவை கிட்டத்தட்ட மூடியிருக்கிறது. இங்கு வரும்போது எனக்கும் சிறிதளவு பெருமை இருந்ததை நான் ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். அதிகாரிகள் யாரும் என்னை வரவேற்க வராதிருந்ததைப் பார்த்தபோது, நானும் கொஞ்சம் நாகமானைப் போலவே நடந்து கொண்டேன். எனது சிந்தையைத் தெளிவுபடுத்தியதற்கு நன்றி, நம்முடைய சந்திப்பு எனக்குத் தேவையான ஒன்றுதான். எருசலேமில் உள்ள முற்பிதாக்களைச் சந்திப்பதற்கு இப்போது நான் தயாராக இருப்பதாக உணர்கிறேன்" என்றார்.

"நீங்கள் விஷயங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ள மட்டுமே நாங்கள் உதவினோம். நீங்கள் முற்பிதாவாகிய சாமுயேலையும், மற்ற முற்பிதாக்களையும் சந்திக்கும்போது நிச்சயம் அவர்களின்பால் ஈர்க்கப்படுவீர்கள். நீங்கள் இதுவரை அவர்களைப் போன்ற பரிபூரணமானவர்களைச் சந்தித்திருக்க முடியாது. நீங்கள், அவர்களைச் சந்திக்கும் போது நிச்சயமாக ஆச்சரியப்படுவீர்கள். அவர்கள் அழகானவர்கள் மற்றும் அறிவுக்கூர்மை உள்ளவர்கள். அவர்கள் அதிகாரத்துடன் பேசுவார்கள், ஆனால் அன்பு மற்றும்

கருணை மிகுந்தவர்களாக இருக்கிறார்கள். முற்பிதாக்கள் வேலைப் பளு நிறைந்தவர்களாய் இருப்பதால் தேவையில்லாமல் நேரத்தை வீணடிக்க மாட்டார்கள். அவர்கள் கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அனைத்து நிபந்தனைகளும் கிறிஸ்துவிடமிருந்தே வருகின்றன. முற்பிதாக்கள் அவர்களின் வாயாக இருந்து செயல்படுபவர்கள் மட்டுமே. நான் இதுவரை கிறிஸ்துவை வணங்கியதே இல்லை. ஆனால் இப்போது அவராலேயே ஜீவனுக்குத் திரும்பி இருக்கிறேன். நான் அவருக்கு கடன்பட்டுள்ளதை உணர்கிறேன். கிறிஸ்துவைச் சந்திப்பதற்குச் சிறந்த இடம் நமது முழங்கால்தான். முற்பிதாவாகிய சாமுயேல் மற்றும் அவருடன் இருக்கும் மற்ற முற்பிதாக்கள் சொல்வதை மாத்திரம் கேளுங்கள். அவர்கள் சொல்வதை எல்லாம் செய்யுங்கள். அது மிகவும் எளிமையானதாகத்தான் இருக்கும். நீங்கள் எவ்வளவு விரைவாக அவர்களின் நிபந்தனைகளுக்குச் செவிசாய்கிறீர்களோ, அவ்வளவு விரைவாகப் பலன்களைப் பெற்றுக்கொள்வீர்கள். ஸ்வீடன் மக்கள் முற்பிதாக்களின் நிபந்தனைகளுக்கு இணங்குகிற நாளிலிருந்து, அவர்களின் மாபெரும் மறுசீரமைப்பு செயல்முறையால் நீங்கள் மேற்கொள்ளப்படுவீர்கள்" என்று லெவ் கூறினான்.

குஸ்டாவ் அவர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்தார். "இன்று நான் உங்களைச் சந்தித்தது முன் தீர்மானிக்கப்பட்ட தெய்வீகச் செயலாகவே இருக்க வேண்டும். என்னுடைய அணுகுமுறையைச் சரி செய்வது அவசியமானதாக இருந்தது. நீங்கள் அதற்கு எனக்கு உதவினீர்கள். முற்பிதாவாகிய சாமுயேலைச் சந்திப்பதற்கு நான் இப்போது தயாராக இருக்கிறேன், உங்களுக்கு நன்றி. ஏதேன் பழங்கள் ஏற்கனவே எனது சிந்தையைத் தெளிவுபடுத்தத் துவங்கி விட்டது!" என்றார்.

அந்தச் சிறிய குடும்பம் இஸ்ரயேலின் தேவனுடைய அன்பு மற்றும் வல்லமையைக் கண்டு வியந்தவாறும், கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக ஊழியம் செய்வதில் மகிழ்ந்தவாறும் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தனர். இந்தப் பயணம் லெவ்விற்கு பரவசமான ஒன்றாக இருந்தது.

"நாளை நம்முடைய விடுமுறை நாளின் கடைசி நாள் - நாளைக்கான நம்முடைய வேலைகள் என்ன? இதன் பிறகு விரைவில் ஆலன் கிளம்புவான். நம்முடைய பெற்றோர்களுக்காக எங்கு வீடுகளைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நாளை சென்று பார்க்கலாமா?" என்று லெவ் கேட்டான்.

"நாளை ஓய்வு நாள், நாம் வழக்கத்தை விட அதிக நேரம் தேவாலயத்தில் செலவிடுவோம். ஆனால் அவர்களுக்கான வீட்டிற்கென்று ஒதுக்கப்பட்ட இடங்கள் அருகில்தான் உள்ளது. மதிய உணவிற்குப் பிறகு, அந்த இடத்திற்குச் சென்று கட்டுமானத்திற்கு இன்னும் என்னென்ன பொருட்கள் தேவை என்பதைச் சரி பார்க்கலாம். ஒருவேளை அஸ்திவாரம் போடப்பட்டு விட்டது என்றால், மேற்கொண்டு கட்டுவதற்குத் தேவையானப் பொருட்களைக் கட்டிடங்களுக்கு அனுப்பலாம்" என்று ரெபெக்காள் பதிலளித்தாள்.

## ரூபனின் குடும்பம்

தனிப்பட்ட பொறுப்புகளைச் செய்வதற்கு சரியான நேரம் மாலை நேரம்தான் என்பதை உணர்ந்து, அந்நேரம் தொடங்கும் நேரத்தில் லெவ், ஜேக், ரேச்சல் மற்றும் ஆனி ஆகிய நால்வரும் அவரவருடைய வீட்டை அடைந்தனர். லெவ் தன் வீட்டை நோக்கி நடந்தவாறு, வரும் வாரத்திற்கான வேலைகளையும் மற்றும் தனது தாய் மற்றும் தந்தைக்கான வீட்டினை விரைவில் கட்டத் துவங்குவதற்கான

திட்டங்களையும் யோசித்தவாறு நடந்தான். அவன் தனக்கு இருக்கும் நேரத்தை தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதற்கும், முற்பிதாக்களால் வழங்கப்படும் கட்டிடக்கலை மற்றும் தொழில்நுட்பம் போன்ற பாடங்களைப் படிப்பதற்கும் கவனமாகத் திட்டமிட்டு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று முடிவு செய்தான். திடீரென்று கேட்ட ஒரு பெண்மணியின் அழுகுரலினால் அவனது யோசனைகள் தடைபட்டன. அந்தப் பெண்மணி சாலையின் ஓரமாக அமர்ந்து தனது கைகளை தலையின் மீது வைத்தவாறு அழுது கொண்டிருந்தாள்.

"உங்களுக்கு உதவுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று தன்னை மறந்து கேட்டான். அவனது அந்த இயல்பான உதவும் தன்மையைக் கண்டு லெவ் ஆச்சரியமடைந்தான்.

அந்தப் பெண் அவன் கூறியது எதையும் கேட்காதவாறு, தொடர்ந்து அழுது கொண்டிருந்தாள்.

லெவ் அவளது அருகில் அமர்ந்து, அவளது தோள்களில் தன் கையை வைத்தவாறு, "என்னால் செய்ய முடிந்த உதவியை நான் உங்களுக்குச் செய்கிறேன். அதைச் செய்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். எனக்கு அவசரமான வேறு வேலை எதுவும் இல்லை" என்றான்.

"ஏய்!" என்று ஒரு கரகரப்பான குரல் கேட்டது. "நீ என்ன செய்து கொண்டிருப்பதாக நினைக்கிறாய்?" என்று அந்தக் குரல் லெவ்விடம் வினவியது. அந்தக் குரலைக் கேட்டதும் லெவ்வின் உடல் விரைப்பானது. அக்குரலுக்குச் சொந்தக்காரன் ரூபன் மேயர். லெவ்வின் கண்கள், ரூபன் மேயரின் முகத்தை நேராக நோக்கின. "என்னுடைய மனைவியை அழ வைத்துக் கொண்டிருக்கிறாய், நல்ல வேலை செய்கிறாய், இதுதான் புதிய பூமியின் வேலையா?" என்று கேட்டான்.

"அவர் அழுகையின் சத்தத்தைக் கேட்டு ஏதாவது உதவி செய்ய விரும்பியே, நான் அவர் அருகில் வந்தேன்" என்று கூறியவாறு தலையசைத்தான்.

"நல்லது, உனது உதவி எங்களுக்குத் தேவையில்லை. நீ கிளம்பலாம்" என்று ரூபன் கூறினான்.

அந்த வேளையில், ஒரு சிறுமி ரூபனை நோக்கி ஓடி வருவதையும், பின்பு ரூபனின் பேண்டை இறுக்கிப்பிடித்தவாறு, "அப்பா" என்று அழைப்பதையும் லெவ் கவனித்தான்.

"உடனடியாக வீட்டிற்குள் போ!" என்று ரூபன் எரிச்சலாகக் கூறினான். அந்தச் சிறுமி வீட்டை நோக்கி ஓடினாள். ரூபன் தன் மனைவியை அழைத்துக் கொண்டு, தானும் அச்சிறுமி சென்ற திசையை நோக்கிச் சென்றான்.

## மாலை நேர நினைவலைகள்

அன்றைய நாளின் பின் மாலை வேளையில், லெவ் கணினியைத் திறந்து தான் படிக்க விரும்பும் பாடத்தினைத் தேட ஆரம்பித்தான். பல்வேறு பிரிவுகளிலிருந்து, கட்டிடத்துறை சார்ந்த படிப்பினைத் தேர்ந்தெடுத்தான். ஏனெனில் வீடு கட்ட உதவும் ஊழியமே, அவன் செய்ய விரும்பும் முதல் ஊழியமாக இருந்தது. நகைச்சுவை உணர்வுடனும், உற்சாகம் அளிக்கும் விதமாகவும் தீர்க்கதரிசி ஏசாயாவினால் வழங்கப்பட்ட தெளிவான அறிவுரைகளைக் கேட்டதில் அடுத்த இரண்டு மணி நேரம் பறந்து விட்டது. அவரது உரையாடலானது முழுவதுமாக லெவ்வைக் கவரும் வகையில் இருந்தது.

லெவ் தன்னுடைய தோட்டத்திற்கு எழுந்து சென்று அங்கிருந்த பெஞ்சில் அமர்ந்து, ஏதேன் பழத்தைச் சுவைத்தவாறு இதுவரை

நிகழ்ந்தவைகளைச் சிந்தித்துப் பார்த்தான். நல்ல ஆரோக்கியமான உடலுடன் மீண்டும் திரும்பிவந்து, தன்னுடைய குடும்பத்தினரோடு இணைந்ததால் உண்டான சந்தோஷத்தை லெவ் அனுபவித்து இருந்தான். தங்களுக்கு முன்னால் இருந்த திணறடிக்கும் தடைகளைத் தாண்டி வந்திருக்கும் பலதரப்பட்ட மக்களை, உதாரணமாக முன்பு பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்த ஜான் போன்றவர்களை லெவ் சந்தித்திருந்தான். தனது முதல் விளைவினையும் அனுபவித்திருந்தான். இந்தப் புதிய வழிமுறையை எதிர்த்து, சமாளிக்க முடியாமல் திணறி இருந்தான். பின்பு இந்த புதிய திட்டங்கள் வாழ்க்கையை இன்பமயமாக்குவதையும், இதற்குக் கீழ்ப்படிவதினால் ஏற்படும் மகிழ்ச்சியையும், எதிர்ப்பதை விட இணங்குவதே அதிக மகிழ்ச்சியைக் கொடுக்கும் என்பதையும் லெவ் கண்டு கொண்டான். பழைய வழிகளில் பிடிவாதமாகக் காணப்படுவது என்பது எந்த ஒரு பிரயோஜனத்தையும் அளிக்காது என்று உணர்ந்து கொண்டான். லெவ்விற்கும், ரெபெக்காளிற்கும் இருந்த இரகசியங்களைப் பகிர்ந்து கொண்ட பிறகு, அவனால் அவனது முன்னாள் மனைவியுடன் அவன் கற்பனை செய்ததை விட ஆழமான அன்புடன் பழக முடிந்தது. லெவ் கடந்த காலத்தில் சில வலிகளையும், பாதுகாப்பின்மைகளையும் எதிர்கொண்டான். மேலும் அதிலிருந்து குணமடையவும் தொடங்கிவிட்டான். ஆனால் இன்று ரூபனுடான இரண்டாவது சந்திப்பு, அவனுக்கு மீண்டும் ஏதோ ஒரு வலியை ஏற்படுத்தியது. உற்சாகமான திருமதி.மில்லியின் வாழ்க்கையிலும் மாற்றங்கள் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்துள்ளான். லெவ், ஒபதியாக்களைப் பார்த்து வந்திருக்கிறான். கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின் ஏற்பாட்டின் காரணமாக, குஸ்டாவ் ஜான்சனை

சந்தித்திருந்தான். இதுவரை நிகழ்ந்தவைகளை எண்ணியவாறு லெவ் தோட்டத்தில் அமர்ந்திருந்தான்.

லெவ் வீட்டிற்குள் வந்து, உடைகளை மாற்றிவிட்டு படுக்கைக்குச் செல்லத் தயாரானான். தன்னுடைய படுக்கையில் அமர்ந்து, சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும்படி வட்ட வடிவத்தில் இருந்த சூரிய மேற்கூறையின் வழியாக, இரவு நேரத்தில் பிரகாசிக்கும் நட்சத்திரங்களைப் பார்த்தான். பின்பு அருகில் இருந்த வேதாகமத்தை எடுத்து வாசிக்க ஆரம்பித்தான்.

"மேய்ப்பனைப் போல தமது மந்தையை மேய்ப்பார் ஆட்டுக்குட்டிகளைத் தமது புயத்தினால் சேர்த்து, தமது மடியிலே சுமந்து கறவலாடுகளை மெதுவாய் நடத்துவார்" (ஏசாயா 40:11) என்ற வசனத்தை லெவ் வாசித்தான்.

அந்த வசனத்தை ஏற்றுக்கொள்வது போல் தலையசைத்தான். மேய்ப்பனின் பராமரிப்பானது, அவன் எதிர்பார்த்ததை விட மென்மையாக இருந்தது. பின்பு அவனது நினைவுகள் ரூபனிடம் திரும்பின.

"புதிய வாழ்க்கையின் ஒரு பகுதியாக, நம் உணர்ச்சிகளைச் சாந்தப்படுத்தும், உடலுக்கு வலிமை சேர்க்கும் ஏதேன் பழத்தை சாப்பிட்ட பின்பும் கூட நான் ஏன் ரூபனை வெறுக்கிறேன்? என்று லெவ் எண்ணினான். ரூபனின் மீதான கோபமும், எரிச்சலும் ஏன் எனக்குள் மீண்டும் மீண்டும் வருகிறது? என்பதைக் குறித்த கவலையுடனும், ஏன் என்று அறியும் ஆர்வத்துடனும் லெவ் கண்களை மூடினான்." பின்பு ஆழ்ந்த உறக்கத்திற்குள் கடந்து சென்றான்.

❋❋❋

**"அந்நாளிலே எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப்பார்ப்பேன்". (சகரியா 12:9)**

# அத்தியாயம் – 11

அன்று லெவ்வினுடைய முதலாவது ஓய்வு நாள். வேதாகமம் தொன்மையானது மட்டுமல்லாமல், நிறையத் தகவல்களை அறிந்து கொள்ள உதவும் என்பதால் வேதாகமத்தை வழிபாட்டிற்கு எடுத்துச் செல்ல லெவ் முடிவு செய்தான். தேவாலயத்தை நெருங்கியவுடன் அங்கு நடந்து சென்று கொண்டிருந்தவர்கள் சிலர், லெவ்வை வரவேற்றார்கள். அவர்களில் சிலரை லெவ்வால் அடையாளம் கண்டு கொள்ள முடிந்தது. ஆனால் லெவ் இதுவரை பார்த்திராத ஒரு நபர் அங்கு இருந்தார். அவர் ஜோசப் கோல்ட்ஸ்டைன், நேற்றுதான் உயிர்த்தெழுந்திருந்தார். எருசலேம் மீதான தாக்குதலில் அவர் கொல்லப்பட்டிருந்தார்.

ஜோசப் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, எனக்கு நியாபகமிருக்கிறது, "இஸ்ரயேல், சமாதானத்தை விரும்பி, போரினைத் தவிர்ப்பதற்கான சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்ததால், நம்மிடம் இராணுவ பலம் குறைவாக இருந்தது. நாம் 'மதிலில்லாத பட்டணம்' போல இருந்தோம். மின்னல் வேகத்தில் இஸ்ரயேலை முற்றுகையிடும் எதிரிகளோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் மிகக் குறைவான அளவிலேயே தயாராக இருந்தோம். அவர்கள் ஹெலிகாப்டர்களில் துருப்புகளைக் கொண்டுவந்து, நகரத்திற்கு வெளியே தரையிறக்கினர். மேலும் டிரக்குகள் மற்றும் டாங்கிகளில் படைகளை நகருக்குள் கொண்டு வந்தனர். எதிரிகள் தங்களது துருப்புகளை, எரிந்து கொண்டிருந்த தீக்குழம்பினால் பாதிப்படையாதவாறு பாதுகாப்பாக நிறுத்தினார்கள். பின்பு தங்களது

வீரர்களைக் கனரகத் துப்பாக்கிகளோடு, இஸ்ரயேலின் படை வீரர்களை எதிர்த்துப் போரிடுவதற்காக அனுப்பினார்கள். எதிரிகளிடம் சிறந்த அளவிலான கனரகத் துப்பாக்கிகள் இருந்தன. இஸ்ரயேலிய வீரர்களை வீழ்த்துவதற்கு அவர்களுக்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. நகரத்தில் தாக்குதலை சிறந்த முறையில் செய்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்தார்கள். சிறிய அளவிலான இஸ்ரயேலியப் படை வீரர்களை வீழ்த்திவிட்டால், மீதமுள்ள இஸ்ரயேலர்கள் அனைவரும் தாங்களாகவே முன்வந்து சரணடைந்துவிடுவார்கள் என எண்ணினார்கள்" என்றவாறு நடந்தவைகளை ஜோசப் நினைவுகூர்ந்தார்.

"ஆங்காங்கே பரவலாக இருந்த இஸ்ரயேலின் படைகளைத் தோற்கடிக்கும் வரை, எதிரிகள் எருசலேமைத் தாக்குவார்கள் என்று நாமும் நினைக்கவில்லை, அவர்களும் கூட அவ்வாறு நினைக்க வில்லை. ஆனால் எதிரிகள், நமது ஆரம்ப எதிர்ப்பை மிக விரைவாகவும், எளிதாகவும் மேற்கொண்டால், நம்மை எளிதில் தோற்கடிக்கலாம் என்பதை அறிந்து கொண்டு, மேற்கு நகரத்திற்கு எதிராக மின்னல் வேகத் தாக்குதலை நடத்த முடிவு செய்தனர். நாங்கள் சரணடைந்தது மிகவும் வேதனையானதொன்று - நாங்கள் காட்டுமிராண்டித்தனமாக நடத்தப்பட்டோம். சரணடைந்த பிறகும் கூட ஆண்களைச் சுட்டு வீழ்த்தினார்கள். பெண்களையோ, வெட்கக்கேடான முறையில் நடத்தினார்கள். எதிரிகள், சிறைப்பிடிக்கப்பட்டவர்களை லாரிகள், டாங்கிகள் மற்றும் ஹெலிக்காப்டர்களில் கொண்டு செல்ல முடிவு செய்தார்கள். ஆனால் எங்கள் அனைவருக்கும் போதுமான அளவுக்கு இடமில்லாதிருந்தது. அதனால் எஞ்சி இருந்தவர்களைச் சுட்டுக் கொன்றார்கள். கனரகத் துப்பாக்கிகள் குண்டுகளைப் பொழிந்தபோது, எங்களில் பெரும்பாலானோருக்கு மரணம் சம்பவித்தது. எனக்குக் கடைசியாக நினைவிருப்பது.....ஓர் சூடான குண்டு.... என் உடலைத்

துளைத்தது மட்டுமே. பின்னர் இருள் சூழ்ந்து கொண்டது. நேற்றுதான் நான் ஜீவனோடெழுந்தேன்" என்று ஜோசப் அமைதியான குரலில் கூறினார்.

"ஒவ்வொருவருக்கும் அவர்களது கடைசி நாட்களைப் பற்றி சொல்வதற்கு ஒரு கதை இருக்கிறது. யூதர்களை அழித்து, புனித நகரத்தைக் கைப்பற்ற ஒரு இருண்ட சக்தி தனது கடைசி முயற்சியை மேற்கொள்வது போல் எங்களுக்கு அந்த நேரத்தில் தோன்றியது" என்று ஜோசப் கூறினார்.

அவர்கள் சரியான நேரத்திற்கு வழிபாட்டுத் தலத்தை வந்தடைந்து, அங்கிருந்த இருக்கைகளில் அமர்ந்தனர். ஆராதனை தொடங்குவதற்கு முன்பு, தங்களது சிந்தையை ஒருமுகப்படுத்தினர். ஜோசப் கோல்ட்ஸ்டைனுக்கு அருகில் அமர்ந்தபோது, மீண்டும் ஜீவனுடன் இருப்பதில் அவருக்குள் ஏற்பட்டிருந்த உற்சாகத்தை லெவ்வால் உணர முடிந்தது.

அன்றைய நாளிற்கான செய்தியானது "வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" மத்தேயு 11:28-ல் இருந்து எடுக்கப்பட்டது. பார்வையாளர்களில் ஒருவர் ஆர்வத்தோடு முன்வந்து, இந்த வசனம் முதலாவதாக இயேசு, தம்முடையவர்களைத் தெரிந்தெடுத்துக் கூட்டிச் சேர்த்துக் கொண்டிருந்த கிறிஸ்தவ காலப்பகுதியையேக் குறிக்கிறது என்று விளக்கினார். இருப்பினும் அப்போதிலிருந்து இப்போது வரை, இயேசு தன் குணத்தில் இருந்து மாறவேயில்லை, இன்னும் பாரம் சுமப்பவராகவே அவர் இருந்து கொண்டிருக்கிறார். இதே ஆவியை நாமும் பெற்றுக்கொள்ளவும், மனவேதனைகளையும், பாரங்களையும் சுமப்பவர்களைத் தாங்கி நிலைநிறுத்தவும், நம்மை இயேசு

உற்சாகப்படுத்துகின்றார். கிறிஸ்துவின் இரக்கத்ததின் மறைவில் இருக்கும் அனைவரும், கடந்த காலங்களில் வாழ்ந்தவர்கள் கிறிஸ்தவ குணலட்சணங்களை வளர்த்துக் கொண்டதைப் போலவே, நாமும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதைத் தன்னார்வலர் அவர்களுக்கு நினைவுபடுத்தினார்.

ஆராதனை முடிவிற்கு வந்தபோது அவர்கள் இருதயம் மகிழ்ச்சியில் நிறைந்திருந்தது. வழிபாட்டுத்தலத்திலிருந்து கிளம்ப ஒருவருக்கும் மனம் வரவில்லை. ஒருவரோடொருவர், அவர்களது மரணம் மற்றும் ஜீவன் பற்றிய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் மனித இனத்தை மறுசீரமைக்கும் பணியில் கர்த்தரின் மகத்தான வல்லமையைக் குறித்த விளக்கங்களைப் பற்றிப் பேசிப் பேசி பரவசமடைந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் முந்தைய வாழ்க்கையில் இருந்து வடுக்களைப் பெற்றிருந்தனர். அவர்களின் இப்போதைய போராட்டம் கல்லான இருதயத்தை, சதையான இருதயமாக மாற்றுவதற்காக இருந்தது. அதை ஒருவராலும் தனிநபராகச் செய்ய முடியாது. கிறிஸ்துவின் உதவியினால் மட்டுமேதான் அதை நிறைவேற்ற முடியும். மேலும் புதிய இருதயத்தையும், சிந்தையையும் உண்மையாகத் தேடுபவர்களால் மட்டுமே அதனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## ஆலனின் பிரியாவிடை

முற்பிதாக்கள் தங்கள் பெற்றோருக்காக ஒதுக்கிய அவ்விரண்டு இடங்களையும் சுற்றிப் பார்ப்பதே அன்றைய நாளுக்கான அவர்களின் திட்டமாயிருந்தது. அவ்விரண்டு இடங்களையும் பார்வையிடுவதற்கு அவர்கள் நடந்தே சென்றனர். அச்சிறிது தூர நடையை யாரும் பொருட்படுத்தவில்லை. மரத்தோப்புகளில் இருந்த ஏதேன் மரங்கள், பலனளிக்கத் துவங்கியிருந்தன. இரண்டு வீடுகளுக்கும் அஸ்திவாரம் போடுவதற்காக மணல்கள் தோண்டியெடுக்கப்பட்டு, அஸ்திவாரமும்

போடப்பட்டிருந்தது. இவைகளைப் பார்த்துவிட்டு ஆரோன் குடும்பம், மகிழ்ச்சியான இருதயத்துடன் லெவ்வின் வீட்டை நோக்கி நடந்து சென்றனர்.

"இன்னும் இரண்டு மாதங்களில் நாம் வீட்டினைக் கட்டி முடிக்க முடியும்" என்று ஜேக் கூறினான்.

"ஆஹா, இந்த உலகில் வேலைகள் எல்லாம் விரைவாக நடக்கின்றது போலவே" என்று லெவ் தன் கருத்தைத் தெரிவித்தான்.

ரெபெக்காள், ஆனியைத் தோளில் தட்டிக் கொடுத்தவாறே தனது குடும்பத்தினரைச் சுற்றி வட்டமடித்து ஓடி, பின்பு லெவ்வின் அருகே வந்து அவனது தோளின் மீது அவளது தாடையை வைத்து இளைப்பாறினாள். "குடும்பத்தில் வேறு எந்தவிதமான பிரச்சனைகளும் இல்லாத போது, வேலைகள் எளிதாக மாறியுள்ளன" என்று ரெபெக்காள் கூறினாள்.

"உன்னைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாக உள்ளது, ஏனென்றால் உன் பெற்றோர்கள் நீ இருக்கும் இடத்தினருகேயே வசிக்கின்றனர். என் பெற்றோர்கள் வெகு தொலைவில் வசிக்கின்றார்கள், அதனால் ஒருவருக்கொருவர் உதவ முடியவில்லை. ஆனால் முற்பிதாக்கள் இச்சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு உதவுவதற்கு ஏதேனும் வழிகளை வைத்திருப்பார்கள்" என்று ரேச்சல் இடையிட்டுக் கூறினாள்.

"கழிவுநீர் அமைப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன?" என்று லெவ் பேச்சினைத் திசை திருப்பினான்.

"ஒவ்வொரு வீடும், சுற்றுச்சூழலைத் தாங்கும் வண்ணம் உருவாக்கப்பட்டுள்ளது. வீட்டுக்கழிவுகள், உரமாக மறுசுழற்சி செய்யப்படுகின்றன. ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை,

தயாரிக்கப்பட்ட உரம், தோட்டத்திலுள்ள மரங்கள் அல்லது தாவரங்களுக்குப் பயன்படுத்த தயாராக உள்ளது. திடக் கழிவுகளை, திரவக் கழிவுகளிலிருந்து பிரிக்கும் அமைப்பு மிகவும் சிறப்பானது. கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு, ஆவியாகும் வகையில் அமைந்துள்ள தாவரப்படுகைகளால் உறிஞ்சப்படுகிறது. கழிவுகளை உலர்த்தி, சுருக்கி, சூடேற்றுவதால் தீங்கு விளைவிக்கும் பாக்டீரியாக்கள் அழிக்கப்பட்டுவிடும், அதன் பின்பே கழிவுகள் அகற்றப்படுகின்றன. இச்செயல்முறை முற்றிலும் துர்நாற்றமற்றது. நம்மிடம் மத்திய நீர் உந்து நிலையங்கள் (Central Water Pumping Stations) இல்லை, கழிவுநீர் அமைப்புகளும் இல்லை. பூமியை மாசுபடுத்தும் வகையில் குப்பைகளை அகற்றும் லாரிகள் இல்லை என்று ஜேக் பதிலளித்தான். பிரெஞ்சு எழுத்தாளரான தோரூ, பூமியில் உள்ள அனைத்தையும் 'எளிமைப்படுத்து, எளிமைப்படுத்து, எளிமைப்படுத்து' என்று கூறியிருந்தார். இத்தனை நாள் அவர் எவற்றிற்கெல்லாம் ஏங்கியிருந்தாரோ, இப்போது அவை அனைத்தும் நிஜமாகியுள்ளது" என்று ஜேக், லெவ்விற்கு பதிலளித்தான்.

அன்றைய ஓய்வுநாளினுடைய மதிய உணவிற்காக அவர்கள் வீட்டிற்குத் திரும்பினர். ரெபெக்காள் தன் மகன் ஆலன் கிளம்ப வேண்டிய நேரம் வந்துவிட்டதை எண்ணியும், இதுவே அவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து இருக்கும் கடைசி சில மணித்துளிகளாக இருக்கும் என்பதை எண்ணியும் பெருமூச்சு விட்டாள். அவளுக்குப் பெருமையாகவும், அதே நேரத்தில் கவலையாகவும் இருந்தது. ஒரு காலத்தில் சிறுவனாகத் தன்னுடைய வீட்டின் கொல்லைப்புறத்தில் மரவீடுகளையும், சிறிய பொம்மை லாரிகளுக்காகச் சாலைகளையும் கட்டிக் கொண்டிருந்தவன் இப்போது இளைஞனாகத் தன் முன் நிற்பதைக் கண்டு அவள் இரசித்தாள். இந்த நேரத்தில் அவளுடைய பெரும்பாலான குடும்ப உறவுகள் ஒரே இடத்தில், ஒன்றாக இருப்பதை எண்ணி அவள் மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தாள்.

ஆனி, மதிய உணவினை ஆசீர்வதிக்க வேண்டி நன்றி உள்ள இருதயத்தோடு ஜெபத்தை ஏறெடுத்தாள். "தேவனே நன்றி, பூமியானது உங்களது நிறைவான அன்பினால் நிறைந்திருப்பதற்காக நன்றி. தேவனே, ஆலனை ஆசீர்வதியுங்கள். கானாவில் ஆலனின் பணியில் அவனுக்கு உதவுங்கள். தேசங்களை ஆசீர்வதித்து, மேசியாவை அவர்கள் ஏற்றுக் கொள்ள உதவி செய்யுங்கள், மேசியாவின் நாமத்தினாலே ஜெபிக்கிறோம், ஆமென்" என்று ஆனி தனது ஜெபத்தை முடித்தாள்.

ஆலன் சாப்பிட்டு முடித்து, "சரி, நான் தேவையானவற்றை எடுத்து வைக்கப் போகிறேன்" என்று கூறிச் சென்றான்.

"நாளை காலை நாங்கள் உன்னைச் சந்திக்கலாமா?" என்று ரெபெக்காள் தன்னுடைய கண்ணீரைக் கட்டுப்படுத்தியபடி ஆலனிடம் கேட்டாள். ஆனாலும் அவளுடைய குரல் நம்பிக்கையுடன் இருந்தது.

"அம்மா, முற்பிதாக்கள் காரை அனுப்பி வைப்பதாகக் கூறியுள்ளனர். நானும் உங்களது அருகில் இருப்பதை இழக்கவே செய்வேன் (I will miss you)" என்று கூறி தன் அம்மாவைத் தழுவ நடந்தான். "பாட்டி மற்றும் தாத்தா உயிர்த்தெழுப்பப்படுகையில் நான் இங்கு வந்து சிறிது காலம் தங்கலாம் என்று முற்பிதாக்கள் கூறியது நினைவில் இருக்கிறதா அம்மா? நாம் பிரிந்திருக்கும் நாட்கள் நீண்டதாக இருக்காது, நீங்கள் மீண்டும் என்னுடன் ஒன்றாக இருப்பீர்கள்" என்று ரெபெக்காளைத் தழுவியபடி கூறினான். பின்பு எல்லோரும் ஆலனை அணைத்து விடை கொடுத்தனர்.

"அந்த மாம்பா பாம்புகளுக்கு இன்னும் பயப்படுகிறாயா ஆலன்?" என்று கேட்டவாறு ஆனி, ஆலனை அனைத்துக் கொண்டாள். அவளது கண்கள் குறும்பினாலும், பாசத்தினாலும் நிரம்பியிருந்தன.

"ஆமாம், என் பொருட்களோடு உன்னையும் சேர்த்து பேக் செய்துவிடலாம் என்று நினைக்கிறேன். அப்படி செய்தால் நீ, எனக்கு மாம்பா பாம்புகளைப் பற்றி கற்றுக் கொடுக்கலாம். ஏன்? நீ என்னுடைய பாதுகாவலராகக் கூட இருக்கமுடியும்" என்று ஆலன் கிண்டலாகக் கூறினான். அவனது கண்களும் அதே குறும்பையும், அன்பையும் பிரதிபலித்தன.

சற்று நேரத்தில் ஆலன் விட்டை விட்டு வெளியேறி, அவனுக்கென்று கொடுக்கப்பட்ட பணிக்குக் கடந்து சென்றான்.

## போர் மதிப்பீடு செய்யப்பட்டது

வரவேற்பு அறையில் அமர்ந்து, எருசலேமிற்கான கடைசிப் போரில் லெவ்வின் நிலைப்பாட்டிற்கு எதிர்மாறானதாக இருந்த நிலையைக் குறித்து ஜேக் கூறிக் கொண்டிருந்தான்.

ஜேக்: "லெவ், அன்று உனக்கு என்ன நடக்கப் போகிறது என்பது எனக்கு ஓரளவு தெரிந்திருந்தது. நம் தேசத்தையும், நகரத்தையும் பாதுகாப்பதற்காக, நான் இறப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும் என்று நீ நினைத்தாய். நான் அந்த நிலைப்பாட்டில் இல்லாததால், நீ என் மீது கோபமாயிருந்தாய் என்றும் எனக்குத் தெரியும். நம் தேசத்திற்காக மரிப்பதில் எனக்கும் மகிழ்ச்சிதான், ஆனால் நான் அந்த நேரத்தில் சகரியா 14:2-ன் படி - 'எருசலேமுக்கு விரோதமாக யுத்தம் பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன், நகரம் பிடிக்கப்படும், வீடுகள் கொள்ளையாகும், ஸ்திரீகள் அவமானப்படுவார்கள், நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப் போவார்கள், மீதியான ஜனமோ நகரத்தைவிட்டு அறுப்புண்டு போவதில்லை' என்ற தேவனுடைய வார்த்தைகளைத் தியானித்துக் கொண்டிருந்தேன். 'மீதியான ஜனமோ நகரத்தைவிட்டு அறுப்புண்டு போவதில்லை' என்ற வார்த்தைகள் என்னைக் காத்திருக்கச் செய்தன.

"நம் தேசத்தின் மறுபிறப்பு வருஷமான 1948-ஆம் ஆண்டிற்குப் பின்னர் நடந்த அனைத்துப் போர்களிலும் நாம் வெற்றி பெற்றதை நான் அறிவேன். கர்த்தருக்காக காத்திருக்க வேண்டுமா அல்லது எதிரியோடு போராட வேண்டுமா என்பதைக் குறித்து நாம் வேறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளோம் என்பதை நான் உணர ஆரம்பித்தேன். நீயும், நானும் இருவேறு தரப்பில் இருந்தோம். நான் போருக்குப் போகவில்லை என்பதால் ரெபெக்காள் ஏமாற்றமடைந்திருந்ததையும் நான் அறிவேன். ரேச்சலும் கூட நான் தேர்ந்தெடுத்த பாதையினால் ஏமாற்றமடைந்திருந்தாள்".

"நான் சகரியா 14-ம் அதிகாரம் முழுவதையும் படித்தேன். நாம் ஒரு பெரிய பிளவின் வாசலில் நிற்கிறோம் என்பதையும், அக்கால தேசங்களும், மத உலகமும் எருசலேமைப் பற்றி, அவர்கள் கொண்டிருந்த தவறான கருத்தினால் கடினமான படிப்பினையைக் கற்றுக்கொள்ளப் போகின்றார்கள் என்பதையும் நான் அறிந்தேன். கிறிஸ்தவர்களில் ஒரு சிறு குழுவினர் மட்டுமே முன் வந்து நின்று, இந்தப் படையெடுப்பு ஒரு மிகப்பெரிய கேடான பேரழிவை ஏற்படுத்தும்" என்று கூறினர்.

"நானும், வேறு சில யூதர்களும் அறிந்திருந்ததைப் போலவே இந்தச் சிறு குழுவினரான கிறிஸ்தவர்களும், சகரியா 14:2-ம் வசனத்தின் உண்மைப் பொருளை அறிந்திருந்தார்கள். அந்த நாளில் என்ன நடக்கப் போகிறது என்பதை எங்களால் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனால் மதவெறி கொண்ட கிறிஸ்தவர்கள், எருசலேமைப் புனித ஸ்தலமாகக் கருதியதால், தேவனால் கைவிடப்பட்ட யூதர்களிடமிருந்து எருசலேமைக் கைப்பற்ற வேண்டும் என்று திட்டமிட்டனர். தேவாலயங்கள், தேவனுடைய பேரைப் பயன்படுத்தி இந்தக் காரியத்தைச் செய்ய முற்பட்டு போர்க்கொடி

தூக்கியதால் அவர்களால் இதிலிருந்து பின்வாங்க முடியவில்லை. கிறிஸ்தவ உலகிற்காக, எருசலேமின் தேவாலயத்தைக் பாதுகாப்பதன் மூலம் உலகத்தினை அர்மகெதோனிலிருந்து பாதுகாக்க முடியும் என்ற அவர்களது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தனர். இதற்கு முன்பும் அவர்கள் பல விஷயங்களில் தவறானப் புரிதலைக் கொண்டிருந்திருக் கிறார்கள். எரி நரகம் மற்றும் அழியாத ஆன்மா பற்றின அவர்களது தவறான கருத்துக்களை ஒருவராலும் நிரூபிக்க முடியவில்லை.''

''இது அவர்கள் தவறாகச் செயல்படுவதற்கான சரியான நேரமாக இருந்தது. அவர்கள் தேவனைப் பிரதிநிதித்துவப் படுத்தவில்லை, மாறாக சாத்தானைப் போலவே சுயநலமாகச் செயல்பட்டு தோல்வியைச் சந்தித்தற்கு முழு உலகமும் சாட்சியாக இருக்கும்''.

வேதாகமத்தை விசுவாசிக்கிற கிறிஸ்தவர்கள், செய்தி ஒளிபரப்புகளில் சகரியா 14:3-ஐ மேற்கோள் காட்டி, 'தேவன் புறப்பட்டு, யுத்த நாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார்' என்று கூறியது எனக்கு நினைவிருக்கிறது.

''உண்மையான விசுவாசிகளை, எதிர்த்த கிறிஸ்தவர்கள் ஏளனமாக, ஆக்ரோஷத்துடன் பதில் அளித்தனர். கிறிஸ்துவின் உண்மை விசுவாசிகள் பகிரங்கமாகக் கேலி செய்யப்பட்டு கண்டிக்கப்பட்டனர். சிலர் கொடூரமாகத் தாக்கப்பட்டனர் மற்றும் சிலர் கொல்லப்பட்டனர். நம் தேசம் உண்மையான விசுவாசிகள் சார்பாக பரிந்து பேச முயன்றது. இந்த நல்ல கிறிஸ்தவ மக்களுக்கு, நம் தேசத்துடன் எந்த விதமான அரசியல் தொடர்பும் இல்லை என்றும், அவர்கள் தங்கள் சொந்த நம்பிக்கைகளையேக் கூறுகிறார்கள் என்றும் நம் அரசாங்கத் தூதுவர்கள் தெளிவுபடுத்தினர், ஆனாலும் பயனில்லை. நம்

தேசத்தைத் தாக்க படைகள் ஏற்கனவே வந்து கொண்டிருந்தன, 'யூதர்களின் பிரச்சனை' என்று இதுவரையிலும் அழைக்கப்பட்டு வந்ததற்கு, இந்தப் போரானது இறுதித் தீர்வாக இருக்கும்."

"சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைகள் சென்று கொண்டு இருந்ததால், நாங்கள் ஆயுதங்கள் இன்றி இருந்தோம். இஸ்ரயேலுக்கு எதிராக ஏராளமானோர் வந்ததால், இஸ்ரயேலில் அவர்கள் தரையிரங்குவதையும், போரிடுவதற்கான இராணுவ உபகரணங்களைக் கொண்டு வருவதையும் நம்மால் தடுக்க முடியவில்லை. லெவ், என்னை விட உனக்கு அதிகமாக எதிரியைச் சந்தித்த நாள் குறித்த உண்மைகள் தெரியும். பூச்சிகளைப் பிடித்துக் கொல்லும் கருவி போல, நீங்களும் உங்களைத் திணறடிக்கிற எதிரிப் படைகளைப் பின்வாங்கச் செய்வதற்கான அனைத்தையும் செய்தீர்கள். உங்கள் குழு எல்லா வகையிலும் அதிகமாகவே செயல்பட்டது. எதிரிப் படைகளோடு, உங்கள் படைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், நீங்களும் எல்லா வகையிலும் அதிகமாகவே செயல்பட்டீர்கள். எதிரிப் படைவீரர்கள் பழிக்குப் பழி வாங்கும் எண்ணத்தோடு மட்டுமல்லாமல், இதுவரையிலும் வெற்றிக்கு அவர்கள் தயாராகி இருந்ததைக் காட்டிலும் இப்போது அதிகமாகவே தயாராக இருந்தார்கள். இவர்களின் முழு செயல்பாடும், நம் முழு படைகளையும் அழித்து ஒழிப்பதற்காக மட்டுமே, அதுவும் ஒரு வாரத்திற்கு மேல் நீடித்திருக்காது என்று நினைக்கிறேன். நம்முடைய எதிர்ப்பைச் சமாளிப்பதற்கு எதிரிகளுக்கு கடினமாக இருந்தால், அவர்கள் நியூட்ரான் குண்டுகளைப் பயன்படுத்தப் போவதாக அச்சுறுத்தினார்கள் இத்தகைய எதிர்ப்புகள் மற்றும் மரணத்திற்கு வழி செய்கின்ற நுட்பங்களுக்கு எதிராக இஸ்ரயேல் எவ்வளவு காலம் நிற்க முடியும்?"

ரேச்சல்: "லெவ்வினுடைய படைக்குழு சிதறடிக்கப்பட்ட அந்த நாளைப் போல் நான் ஒருபோதும் கவலையாக இருந்ததில்லை.

எருசலேமுக்காகப் போராடுபவர்கள் குறித்த எண்ணமே என் சிந்தை முழுவதும் நிறைந்திருந்தது. கர்த்தர் தலையிட்டால் மட்டுமே, நம்மை எதிர்த்து நிற்கும் நூற்றுக்கணக்கான எதிரிகளை நம்மால் வீழ்த்த முடியும் என்று நான் நினைத்தேன். முதல் நாள் முடிவில் நம்முடைய படைவீரர்கள் தோல்வியைச் சந்தித்தபோது, இஸ்ரயேல் வெற்றி பெறும் என்ற நம்பிக்கையை நான் இழந்துவிட்டேன். நமது அனைத்து முயற்சிகளையும் தாண்டி, எதிரிகளைக் கர்த்தர் தோற்கடிப்பார் என்ற நம்பிக்கையில் ஜேக் இருந்தது எனக்குத் தெரியும். அடுத்த நாளில் நடக்கப்போவது, என் விசுவாசத்திற்கான பரிசாக இருக்கப் போவதில்லை என்றும் நான் எண்ணினேன். கர்த்தர் தலையிட்டு நம்மை விடுவிப்பார் என்பதை நான் கொஞ்சமும் விசுவாசிக்கவில்லை. சகரியாவின் தீர்க்கதரிசனமானது, வேறொரு இடம் மற்றும் நாளுக்கானதாக இருக்கலாம் என்றும் நினைத்தேன். எனக்கு வேறெந்த தீர்க்கதரிசனத்திலும் நம்பிக்கையில்லை. யூதர்களாகிய நாம், அநியாயமாக இவ்வளவு காலங்களாகத் துன்பங்களை அனுபவித்தோம், அதனால் நான் என் நம்பிக்கையை இழந்துவிட்டேன். கர்த்தர் நம்மைக் கைவிட்டுவிட்டதாகவும், நம்முடைய எழும்புகள் முழுவதுமாக முறிக்கப்படுவதற்கு, எதிரிகளுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு விட்டது என்றும் நினைத்தேன்”.

ரெபெக்காள்: "ரேச்சலைப் போலவேதான் நானும் நினைத்தேன். ஜேக், தான் கொண்ட நம்பிக்கையில் முழு விசுவாசத்தோடு இருந்ததை நான் அறிவேன். ஆனால் இந்த நேரத்தில் வேதவசனங்களைப் பற்றிக் கொள்வது உதவாது என்று நினைத்தேன். ஜேக் ஒரு கோழை அல்ல என்று எனக்குத் தெரியும். ஆனால் இந்த முறை ஜேக்கை விட, லெவ்வே மதிப்புமிக்க வேலையைச் செய்து கொண்டிருப்பதாகக் கருதினேன். ஆண்கள் தங்கள் நம்பிக்கையைச் சார்ந்து எப்போதும் நிற்க வேண்டும்.

அந்த மோசமான தாக்குதலில் லெவ் தப்பிப்பார் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. தனது நம்பிக்கைக்காகப் போராடி மரிக்கும் உலகின் முதல் மனிதர் லெவ் இல்லையென்று எனக்குத் தெரியும். ஏதாவது செய்தி வரும் என்று நினைத்துக் காத்துக் கொண்டிருந்தபோது, லெவ்வின் மரணச் செய்தி வந்தது. அந்த நாள் ஒரு துரதிஷ்டமான நாளாக இருந்தது. நமது முதன்மைப் படை வீரர்கள் அனைவரும் முறியடிக்கப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தி வந்தவுடனே, லெவ்விற்கு என்ன நடந்திருக்கும் என்று என்னால் யூகிக்க முடிந்தது. லெவ்வும், நமது முதன்மைப் படைவீரர்கள் அனைவரும் மரித்துவிட்டார்கள். அந்த நாள், என் வாழ்க்கையின் மிக மோசமான நாள். நான் லெவ்வை இழந்துவிட்டேன், நாம் நம் தேசத்தையும் இழக்கப் போகிறோம். எங்களுக்கு முன் இருளைத் தவிர வேறு எதுவும் இல்லை. எனக்கும், ஜேக்கைப் போன்ற நம்பிக்கை இருக்க வேண்டும் என்று விரும்பினேன். லெவ்வின் மரணத்தைக் கேட்டு அவர் மனம் உடைந்தார். ஆனால் விரக்தியடைய வேண்டாம் என்று உறுதியோடு எனக்கு ஆறுதலளித்தார். நிச்சயமாக, கர்த்தர் செங்கடலில் அல்லது எரிகோவில் செய்ததைப் போல, பரலோகத்திலிருந்து நமக்காகப் போரிடுவார் என்றார். ஆனால் அத்தகைய நம்பிக்கை எனக்கு இல்லை. நான் ஜேக்கின் இரங்கல் செய்தியை ஏற்றுக்கொண்டாலும், முற்றுமாகக் கைவிடப்பட்ட நிலையில் நம்பிக்கையோடு இருக்க என்னால் முடியவில்லை.”

லெவ்: “ஜேக், போர் தொடங்குவதற்கு முன்பு நான் உன்னைவிட்டுப் போனபோது, நான் உன் மீது கோபமாகத்தான் இருந்தேன். இருப்பினும் பின்பு, உன்னுடைய மனநிலைக்கு எதிர்மாறான மனநிலையை நான் கொண்டிருந்ததற்காக வருந்தினேன். எதிரிகளிடமிருந்து எங்களைத் தற்காத்துக் கொள்ள நாங்கள் முயற்சித்தபோதும் கூட எங்களுக்கு நம்பிக்கை முற்றுமாக இல்லை.

கர்த்தர் உண்மையிலேயே நம் மீது அக்கறை காட்டுவாரா? என்று நான் சந்தேகப்பட்டேன். அவர் உயர்ந்த மற்றும் பரிசுத்தமான இடத்தில் இருக்கிறார். இந்தக் குழப்பமான மற்றும் கொடூரமான போரில் அவர் ஏன் ஈடுபட வேண்டும்? அவர் ஏன் நமக்காக கவலைப்பட வேண்டும்? நான் இவ்வாறு சிந்திக்கும் போது, வரலாறு முழுவதிலும் நடந்த போரில் எத்தனையோ முறை கர்த்தர் தலையிட்டு இஸ்ரயேலைக் காத்தார் என்ற எண்ணம் ஒரு தடவை கூட எனக்கு உதவ முன்வரவில்லை. அவருடைய அக்கறைக்கும், கவனிப்பிற்கும் நாம் தகுதியற்றவர்கள். ஆனால் நம்முடைய முற்பிதாக்களின் பொருட்டு அவர் இன்னும் நம் மேல் பிரியமானவராக இருக்கலாம். ஏனென்றால் அவர், ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் தேவனாக இன்னும் இருக்கிறார்".

"பல நூற்றாண்டுகளாக நம்மோடு இருந்து நம்மைப் பாதுகாத்து வழிநடத்தி வந்த தேவனால், நம்மை ஒரு தேசமாக தோல்வியடைய விட்டுவிட முடியுமா? இந்தத் தருணம் சத்தியத்தின் தருணம் என்று உணர்ந்தேன். ஒன்று தேவன் நம் தேசத்தைக் காப்பாற்றுவார் அல்லது நம்மைத் தோல்வியடைய விட்டுவிடுவார். ஜேக், நான் கோபமாகக் கிளம்பிப் போய் இருந்தாலும், போர்க்களத்தில் இருக்கும் போதே உன்னுடைய நிலைப்பாட்டிற்கு என்னுடைய மனமும் வந்து கொண்டிருந்தது".

ரெபெக்காள்: "இரவு முழுவதும் நான் அழுது கொண்டே இருந்தேன். லெவ், நான் உங்களையும் இழந்திருந்தேன். என் தனிப்பட்ட இழப்பு மட்டுமின்றி, நம்முடைய ஜனங்கள் படையெடுத்து வந்த எதிரி நாடுகளிடம் உதவியற்ற நிலையில் விழுவதை என்னால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. கர்த்தர் நம்மை நினைவில் கொள்ள வேண்டி நான் ஆவலுடன் ஜெபித்தேன். நம்முடைய பிதாக்களின் தேசத்தை நாம் ஆண்டு கொள்ள ஏன் அனுமதித்தார்? ஏன் பிற தேசங்களால் நம்மை வெறுப்பதை நிறுத்த முடியவில்லை?

நம்மை மிகவும் கொடூரமானவர்களாகக் காட்டியது எது? நான் இரவு முழுவதும் கர்த்தரை நோக்கி அழுதேன்".

## அவ்விடியலின் காற்றில் மரணம் இருந்தது

ரெபெக்காள்: "மறுநாள் காலை விடிந்தபோது, நான் இதுவரை கண்டிராத வகையில் வானம் மேக மூட்டமாகக் காட்சியளித்தது, அது அச்சமூட்டுவதாக இருந்தது. எதிரிகள், ஏதோ பேரழிவு நடக்கப் போவதை உணர்ந்து கொண்டார்கள். அவர்களின் வானொலிகள் மற்றும் கம்பியில்லா தகவல்தொடர்பு கொள்ளும் மின்னணு உபகரணங்கள் அனைத்தும் செயலிழந்துவிட்டன. ஆண்கள், தங்கள் பீரங்கி வண்டிகளிலும், வாகனங்களிலும் அச்சத்துடன் அமர்ந்திருந்தனர். விமானிகள் தங்களது ஊடுருவல் உபகரணங்கள் தவறாகச் செயல்படுவதைக் கண்டறிந்தனர். எதிரிகளின் உயர்மட்ட அதிகாரிகள் தாக்குதலை நிறுத்த விரும்பினர். ஆனால் அவர்களால் தங்கள் படைகளுடன் தொடர்பு கொள்ள முடியவில்லை".

ரேச்சல்: இதனை நானும் ஒப்புக் கொள்கிறேன் "ஆமாம், என்னாலும் தூங்க முடியவில்லை. காலையில் இருளைப் பார்த்தபோது, ஏதோ பேரழிவு நடக்கப் போவதை நானும் உணர்ந்தேன். பழைய நாட்களில் கர்த்தர் இஸ்ரயேலுக்காகப் போராடியது என் நினைவிற்கு வந்தது. முதல் முறையாக, கர்த்தர் இந்த மாபெரும் எதிரிகளை முறியடிக்கப் போகிறார் என்று நம்பினேன். எதிரி இராணுவத்தில் இருந்த இளைஞர்கள் அனைவரும் பாதிப்பிற்குள்ளானவர்களாகவே இருந்தார்கள் என்று எனக்குத் தோன்றியது. அவர்களது வெறிபிடித்த தலைவர்கள் தங்களுக்கு வெற்றியே கிடைக்கும் என்றும், "எருசலேமின் பிரச்சனைக்கு" இந்தப் போர் இறுதித் தீர்வாக இருக்கும் என்றும் உறுதியளித்திருந்தனர். இதே போன்ற வார்த்தைகளையுடைய

போர்முரசைத்தான் ஹிட்லரும், யூதர்களை அழிப்பதற்காக பயன்படுத்தி இருந்தார். எதிரிகள், நம்முடைய அன்பான நகரமான எருசலேமைக் கைப்பற்றுவதற்காக இந்த வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள்".

ஜேக்: "எருசலேம், கர்த்தர் கொடுக்க தீர்மானித்திருந்த ஜனங்களின் கைகளில்தான் இருந்தது. எருசலேமைக் கைப்பற்றும் போரில் மரிக்கும் ஒவ்வொவருக்கும், பரலோக வாய்ப்பானது உறுதி செய்யப்பட்டுள்ளது என்று தேவாலயங்கள் மீண்டும் மீண்டும் உறுதி அளித்தன. முஸ்லிம்களும், எருசலேமுக்கான போரில் மரிப்பவர்களுக்கு பரலோக வாய்ப்பு மட்டுமல்லாது, எழுபத்தி இரண்டு கன்னிகைகளையும் கொடுப்பார்கள் என்று தேவாலயங்களைப் போன்றே ஊக்க உத்திகளைப் பயன்படுத்தினர். இரு மதத்தைச் சேர்ந்தவர்களும், ஏசாயா 2:3-ல் உள்ள "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்திற்கும் போவோம் வாருங்கள் அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார்: நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" என்ற வசனத்தை அறிந்திருந்தார்கள். யாக்கோபின் சந்ததியினருக்கே எருசலேம் உரியது என்று ஏசாயா 2:3 கூறியிருந்ததால், எருசலேமைக் கைப்பற்றுவதற்காக, கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிகள் இருவருமே தாங்கள்தான் யாக்கோபின் உண்மையான சந்ததியினர் என்று உரிமை கோரியதால், தேவனுடைய பிரதிநிதி யார் என்பது நிச்சயமற்றதாக இருந்தது. கர்த்தரின் வார்த்தை வெளிப்படும் இடமாக ரோம் இருக்கும் என்று தேவன் ஒருபோதும் குறிப்பிடவில்லை. மேலும் மெக்காவிலிருந்து வெளிப்படும் என்றும் குறிப்பிடவில்லை. அதனால் முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும்

தாங்களே தேவனுடைய ஆசீர்வாதங்களிற்குத் தகுதியானவர்கள் என்பதை நிலைநாட்டுவதற்குப் புனித நகரமான எருசலேமைக் கைப்பற்ற வேண்டியிருந்தது. இஸ்ரயேலிடம் இருந்து எருசலேமைக் கைப்பற்றிய பிறகு, தாங்களே தேவனுடைய பிரதிநிதிகள் என்று உரிமை கொண்டாடலாம்" என்றும் நினைத்தார்கள்.

லெவ்: "எதிரிகள், எருசலேமைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டால் இஸ்ரயேலுக்கான ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதை தவிர்க்கலாம் என்றும் நினைத்திருந்தனர் - எதிரிகள் தோல்வியடைந்ததில் ஆச்சரியமில்லை, இந்தப் பெருந்திரளான படைகளைக் கர்த்தர் அழித்தபோது, ஒரே அடியில் இரண்டு விஷயங்களைச் செய்தார். முதலாவதாக, தாங்கள் மட்டுமே தேவன் மற்றும் கிறிஸ்துவின் உண்மையான பிரதிநிதிகள் என்ற எதிரிகளது உரிமை கோரலானது தவறு என்று தேவன் வெளிப்படுத்தினார். இரண்டாவதாக, எதிரிகள் எருசலேமைக் கைப்பற்றுவதைத் தடுத்து, அவர்களால் இஸ்ரயேலுக்கான தேவனுடைய தீர்க்கதரிசன நிறைவேறுதலை ஒருபோதும் தடுக்க முடியாது என்றும் நிரூபித்தார்".

ரெபெக்காள்: "இந்த யுத்தம் ஓரிரு வருடங்கள் நீடித்திருந்தால், கர்த்தர், எருசலேமை யாக்கோபின் சந்ததியினரின் கைகளில்தான் கொடுத்து இருக்கிறார் என்பதை கண்டுணர்ந்திருக்க யாரும் இருந்திருக்கமாட்டார்கள். இவ்வளவு பிரம்மாண்டமான அளவில் தெய்வீகத் தலையீட்டை உலகம் கண்டபோது, உடனடியாக எருசலேம் குறித்த உண்மையை இப்போதும், எப்போதும் அறிந்து கொள்ளும் படிச் செய்தது. குற்றவாளிகளுக்கு ஒளிந்து கொள்ள இடமில்லை, அவர்கள் படைகளின் மொத்த அழிவை விளக்க எந்த வழியும் இல்லை".

ஜேக்: "இந்த மோசமான போருக்குப் பிறகு நடந்த சம்பவங்களின் காட்சிகளைப் பார்ப்போமா?"

அந்தப் போரின் படுகொலை பற்றிய தெளிவான காட்சிகளை அவர்கள் இணையத்தில் கண்டனர். கண்ணுக்குத் தெரிந்தவரை சடலங்கள் கிடந்தன. டாங்கிகள், லாரிகள் மற்றும் அனைத்து வகையான இராணுவ உபகரணங்களும் சாலைகளில் சிதறடிக்கப் பட்டிருந்தன. பெரும்பாலான இராணுவ உபகரணங்கள் அதனைச் செலுத்திய வீரர்கள் இறந்த பின்பும் கூட இயக்கத்தில் இருந்தன. சில வாகனங்கள் மற்ற வாகனங்கள் மீது மோதி இருந்தன, சில வாகனங்கள் கவிழ்ந்திருந்தன, சில பாறை பள்ளத்தாக்குகளில் ஓடி வீழ்ந்திருந்தன. விமானங்கள் வானத்திலிருந்து விழுவதைக் காணமுடிந்தன. புறப்படுவதற்காக காத்திருந்த விமானங்கள் புறப்படாமல் அங்கேயே தரையில் தங்களது முறைக்காகக் காத்திருந்தன. இறந்த மனிதர்களுடன் விமானங்கள் தரையிரங்கின. யூதேயாவை விட்டுப் புறப்படத் தயாராக இருந்த மத்தியதரைக்கடல் கப்பல்கள், இறந்திருந்த மாலுமிகளின் உடல்களுடன் எந்தவித அசைவுமின்றி தண்ணீரிலேயே நின்று கொண்டிருந்தன.

கர்த்தர் இஸ்ரயேலைக் காப்பாற்றினார், ஆனால் எதிரிகள் நிறையவற்றை இழந்திருந்தார்கள். முதலில் எதிரிகளால் நடந்தவைகளை நம்ப முடியவில்லை. புத்திசாலித்தனமான மக்களாக இருந்த இஸ்ரயேலர்கள், எதிரிகள், அவர்களது படை வீரர்களுடன் தொடர்பு கொள்வதைத் தடுப்பதற்காக, அவர்களது தகவல் தொடர்பு உபகரணங்களைச் சேதப்படுத்த, சில தந்திரமான உத்திகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர் என்றே நினைத்தார்கள். என்ன நடந்தது என்பதைக் காண உயர் பதவியிலிருப்பவர்களை அழைத்து வர வர்த்தகத்துக்கான அதிவேக விமானம் அனுப்பப்பட்டது. சில மணி நேரங்களுக்குள் அவர்களின் விமானங்கள் போர்க்களங்களில் மெதுவாகப் பறப்பதைக் காண முடிந்தது. வர்த்தக ரீதியான அதிவேக

விமானங்கள் படுகொலைகளை ஆய்வு செய்வதற்கு முன்பாகவே, கூட்டணி சேர்ந்திருந்த தேசங்கள் கோபமடைந்தன. ஆனால் முழு படைகளும் இறந்திருந்ததையும், எளிதில் வெல்ல முடியாத இராணுவ படைகள் மற்றும் கப்பற்படைகளுக்கு ஏற்பட்டிருந்த சோகமான காட்சிகளைப் பார்த்தபோது, தேசத்தின் ஜனங்கள் அராஜகத்தில் கிளர்ந்தெழுந்தனர்.

ஜனங்களின் பார்வை, முக்கியமாக மற்றும் முதலாவதாக மதத் தலைவர்கள் மீது திரும்பினது. உலகில் சமாதானத்துக்கான கர்த்தரின் தூதுவர்கள் என்ற முகமூடி அகற்றப்பட்டபோது, மதத் தலைவர்களை உண்மையில் அதிக வெறுப்புடன் கண்டனர். அடுத்து கோபமடைந்த ஜனங்கள் நிதி மற்றும் அரசியல் ஆட்சியாளர்களைப் பின் தொடர்ந்தனர். மறைந்து கொள்ள இடமேயில்லை. எருசலேமைக் கைப்பற்றுவதற்கான கடைசி முயற்சியில், அவர்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டார்கள்.

## லெவ்வின் முதல் வாரம் முடிந்தது

மதியவேளை முடிவுக்கு வந்தது. அவர்கள் தங்களை மறந்து உரையாடியதில், மதிய உணவைக் கவனிக்கத் தவறிவிட்டதால், மாலை உணவை நேரடியாக உட்கொண்டனர்.

"இப்போது நம்முடைய வார விடுமுறை முடிந்துவிட்டது, நீங்கள் என்ன செய்ய திட்டமிட்டு உள்ளீர்கள், லெவ்?" என்று ரேச்சல் கேட்டாள்.

"ம்ம்ம்'. சில பாடப் பிரிவுகளைத் தேர்ந்தெடுத்துப் படிப்பதன் மூலம், நானும் சில திட்டங்களில் இணைந்து கொண்டு என் பங்கை அளிக்க முடியும் என்று நம்புகிறேன். நான் முற்பிதாக்களின் ஆலோசனையைக் கேட்க நினைத்திருக்கிறேன். அவர்கள் சொல்வதைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன். சேவைகள்

தேவைப்படும் இடங்களில் எனது விருப்பம் குறுக்கே நிற்காது. எனது வருகையை சாத்தியமாக்கிய அனைவருக்கும் நான் கடனாளியாக இருக்கிறேன். தெய்வீக வல்லமை, என்னை மரித்தோரிலிருந்து மீண்டும் கொண்டுவந்தது. முன்பு இல்லாத அளவு ஆற்றலுடன் எனது உடல், ஆரோக்கியத்தையும், வலிமையையும், இப்போது பெற்றுள்ளது. நான் கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மை என்னவென்றால், கிறிஸ்துவுக்காக என்னால் எதுவும் செய்ய முடியாது, மற்றவர்களுக்கு நான் செய்வதை, கிறிஸ்து, அவருக்குச் செய்ததைப் போல ஏற்றுக்கொள்வார் என்று நான் நம்புகிறேன்" என்று லெவ் கூறினான்.

"தேவைகளுக்கான வாய்ப்பினை அறிய முற்பிதாக்களின் ஆலோசனையைக் கேட்டுக் கொள்வது என்பது உங்கள் சார்பில் இருந்து நீங்கள் செய்யும் ஞானமான செயலாகும். உங்களுக்குக் கிடைக்கும் வேலையில் தொழில்நுட்ப அம்சங்கள் இருந்தால், உங்களுக்குத் தேவையானதைக் கற்றுக்கொள்ள அவர்கள் உங்களுக்கு நேரம் கொடுப்பார்கள்" என்று ரெபெக்காள் பதிலளித்தாள்.

விரைவில் அனைவரும் தங்கள் வீடுகளுக்கும், பொறுப்புகளுக்கும் திரும்ப வேண்டிய நேரம் வந்தது. இது நிச்சயமாக லெவ்வின் வாழ்க்கையின் சிறந்த வாரமாக அமைந்தது.

❀❀❀

***"அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தை தொழுதுகொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன்". (செப்பனியா 3:9).***

# அத்தியாயம் - 12

அன்று லெவ்வினுடைய புதிய வாழ்க்கையின் எட்டாவது நாளின் காலை நேரம், ஷூல்ட்ஸ் குடும்பத்தினருக்கு வீட்டினைக் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட இடம் இருக்கும் பகுதியை வரைபடத்தில் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுடைய ஒரு வார பயிற்சிக் காலமானது முடிந்திருந்தது. லெவ்வினுடைய புதிய வாழ்க்கையில் அவனால் செய்ய முடியும் பணியை அறிந்து கொளவதற்கு ஆர்வமாக இருந்தான். அந்தப் பகுதியில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த திட்டம் ஏதேனும் இருக்கின்றதா என்பதைக் கேட்பதற்காக, முற்பிதாக்களில் ஒருவருக்கு அதிகாலையில் லெவ் அழைத்திருந்தான்.

"ம்ம், நிச்சயமாக இருக்கிறது". முற்பிதாவாகிய உல்தாள் தீர்க்கதரிசி உற்சாகத்துடன் தெளிவாகப் பேசினார். "பாலஸ்தீன எழுச்சியில் கொல்லப்பட்ட ஒரு தம்பதியினரும், அவர்களது குழந்தையும் உயிர்த்தெழுப்பப்பட இருக்கிறார்கள். அவர்களுடைய உறவினர்கள் யாரும் இன்னும் உயிர்த்தெழுப்பப்படவில்லை. நீங்கள் விருப்பப்பட்டால் அவர்களுக்கு வீட்டைக் கட்டுவதற்கு உதவலாம். அந்தக் குழந்தைக்குப் பெற்றோர் இருவரின் உதவியும் தேவை என்பதால், அவர்கள் மூவரும் ஒரே வீட்டில்தான் வசிக்கப் போகிறார்கள்". முற்பிதாவாகிய உல்தாள், லெவ்விற்கு பல தகவல்களைக் கொடுத்தார். "இப்போது அங்கே வேறு சில தன்னார்வலர்கள் வேலை செய்து கொண்டிருப்பதால், நீங்கள் இன்றே கூட அவர்களுடன் இணைந்து

உங்களது வேலையைத் தொடங்கலாம். நீங்கள் இந்த வேலையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எந்தக் கட்டாயமும் இல்லை, யோசித்து முடிவு செய்யுங்கள்" என்று உல்த்தாள் கூறியிருந்தார்.

"என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள், உல்தாள். நான் இன்றே தொடங்குகிறேன். அந்தப் பகுதியில் வேலை செய்யும் தன்னார்வலர் பட்டியலில், என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள். நான் எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறேன். இன்னும் அதிகமாகக் கூட நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கலாம், இந்த வேலை சிறிய வேலை தான்" என்று லெவ் பதிலளித்தான்.

அன்றைய அதிகாலை வேலையில் முற்பிதாவாகிய உல்தாளுடனான தன்னுடைய இந்த உரையாடலை லெவ், ஷூல்ட்ஸ் குடும்பத்தினருக்காக வேலை பார்த்த ஒருவருடன் கூறிக் கொண்டிருந்த போது, ஒரு புதிய குரல் அவர்களைக் குறுக்கிட்டது.

"இந்த வேலையில் உங்களை, எங்களோடு இணைத்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறோம் லெவ். நான் ஜோயல், இவர் ஜோசப்" என்று கூறியவாறு ஜோயல் கட்டிட அடித்தளம் அமைப்பதற்கு தனக்கு உதவும் மற்றொருவரை நோக்கி நடந்து சென்று, "இவர் மேரி, அவர் மார்த்தாள்" என்று வேறு இருவரையும் ஜோயல் அறிமுகப்படுத்தினார்.

ஒருவர் "ஹாய்" என்றும், மற்றொருவர் "ஹலோ" என்றும் கூறி லெவ்வினை வரவேற்றார்கள். இரண்டு இளம் பெண்களும் லெவ்விடம் அறிமுகமாகுவதற்கென்று சற்று நேரம் இடைவெளி மட்டும் எடுத்துவிட்டு, மீண்டுமாகப் பூச்சுக் கலவையைக் கலக்கும் தங்கள் வேலைக்கு உடனடியாகத் திரும்பினர். இரண்டு பெண்களின் முகத்திலும் அப்பியிருந்த பூச்சுக் கலவையைக் கண்டு லெவ் சிரித்தான்.

"இவர்கள் தங்கள் வேலையைச் செய்வதில் முனைப்புடன் உள்ளார்கள் அல்லவா?" என்று லெவ் விளையாட்டாகக் கூறினான்.

ஜோயல், இரண்டு பெண்களையும் பார்த்துப் புன்னகைத்தார். "ஆம், அவர்கள் அப்படித்தான். அவர்கள் கட்டுமானச் செங்கலைத் தூக்கிச் சென்று பதிக்கும் வேலையை என்னுடன் மாற்றிக் கொள்ளும் நேரம் வரைக்கும் காத்திருந்து பாருங்கள். இவர்களின் வேகத்திற்கு நாம் ஈடுகொடுக்க வேண்டுமானால் நமது வேலையை ஓட்டமும், நடையுமாகத் தான் செய்ய வேண்டும். இவர்களுக்கு இணையாக நம்மால் வேலை பார்க்க முடியாது, இவர்கள் இருவருமே மிகவும் அற்புதமான வேலையாட்கள்"என்று ஜோயல் கூறினார்.

லெவ், அந்த இரண்டு பெண்களையும் பார்த்தான். இந்தப் புதிய பூமியில் இருபாலினருக்கும் இடையிலான பாத்திர மாற்றத்தைப் பார்க்கும்போதெல்லாம் அவனுக்குள் ஏற்படும் பய உணர்வானது, இப்போதும் அவனுக்குள் ஏற்பட்டது. "சரி, நான் எந்த வேலையைச் செய்ய வேண்டும்?" என்று லெவ் உடனடியாகக் கேட்டான்.

"நீங்கள் கட்டுமானச் செங்கலை எங்களுக்கு எடுத்துக் கொடுங்கள். இப்படியாக நாம் அவர்களைச் சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வோம்" என்று ஜோசப் தன் கருத்தை கேலியாகத் தெரிவித்தார்.

அவர்கள் தங்கள் வேலையைச் செய்வதற்கான ஒரு சுழற்சி முறையை வகுத்துக் கொண்டனர். அந்தக் குழுவில் ஒருவனாக லெவ் தன்னை உணர்ந்தான். மேலும் காலை சூரிய ஒளியில் உடலை வருத்தி வேலை பார்ப்பது, ஒரு உடற்பயிற்சியாக அமையும் என்று எண்ணி மகிழ்ந்தான்.

"உங்களுடைய வயது என்ன?" என்று மேரி கேட்டார்.

"பழைய உலகத்திலா? இல்லை புதிய உலகத்திலா?" என்று லெவ் வினவினான்.

மேரி சிரித்தவாறு "புதிய உலகத்தில்"என்றார்.

"இன்றோடு எட்டு நாட்கள் ஆகின்றன" என்று கட்டுமான செங்கலைச் சுமந்து சென்று பதித்தவாறே லெவ் பதிலளித்தான்.

"நீங்கள் இன்னும் குழந்தை தான்.... ஜோசப்பும், நானுமே இங்கு வயதில் மூத்தவர்கள். எங்களுக்குப் பன்னிரண்டு வயது ஆகிறது" என்று மார்த்தாள் சிரித்துக் கொண்டே கூறினாள்.

"எனக்கும், ஜோயலிற்கும் நான்கு மாதங்கள் ஆகின்றன" என்று மேரி கூறினார்.

"நீங்கள் வருவதற்கு முன்பு நாங்கள்தான் இங்கு 'குழந்தைகளா யிருந்தோம்,' உங்களுடைய எட்டு நாள் அனுபவம் எப்படி இருக்கிறது?" என்று கேட்டவாறு ஜோயல், லெவ்வின் முதுகில் தட்டினார்.

"சிறப்பாக இருக்கிறது! நடந்த அனைத்துக் காரியங்களும் என்னைத் திணறடித்துவிட்டன. முதல் வாரத்திலேயே என்னைக் குறித்த எல்லாக் காரியங்களைப் பற்றியும், மேசியாவைப் பற்றியும் அறிந்து கொண்டேன். முழு அனுபவமும் ஒரு சாதனை புரிந்தது போல் எனக்கு இருந்தது" என்றான்.

காலை முழுவதும் பேசிக் கொண்டே வேலை செய்தார்கள். இன்னும் இரண்டு அடுக்குகள் கட்டுமான செங்கல்களைப் பதித்து விட்டால் அடித்தள வேலைகளை முடித்துவிடலாம். ஜோயல், மதிய உணவு இடைவேளை நேரத்தை அறிவித்தார். நேரம் போனதே தெரியவில்லை.

நால்வரும் பழத்தோட்டத்தில் அமர்ந்து பழங்களைச் சுவைக்க ஆரம்பித்தார்கள்.

"சுற்றிலும் ஏதேன் மரங்கள் இருப்பது, வேகமாக உணவைப் பெற்றுக் கொள்ள மிகவும் வசதியாக இருக்கிறது, துரித உணவு போல!...." என்று கூறி லெவ் சிரித்தான்.

மேரி தன்னுடைய கண்களை உருட்டியபடி, ஓர் ஏதேன் பழத்தை எடுத்து லெவ்வின் மீது எறிந்தவாறு, ஆனால் "கலப்படமற்ற, பக்கவிளைவுகள் இல்லாத துரித உணவு" என்றார்.

"பழைய உலகின் எச்சரிக்கை: இந்த உணவில் மனச்சோர்வு, கோபம், மூட்டுவலி, மூச்சுக்குழாய் எரிச்சல் மற்றும் மரணம் ஆகியவைகளை ஏற்படுத்தக்கூடிய ரசாயனப் பொருட்கள் உள்ளன" என்று ஜோயல் தீவிரமான குரலில், அதிகாரத் தோரணையில் சொல்லிக் காட்ட அவர்கள் அனைவரும் சிரித்தனர்.

"முன்பு எனக்கு பிரெஞ்சு பிரைஸ் மிகவும் பிடித்த உணவாக இருந்தது. இப்போது என்னால் அதைக் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது" என்று ஜோசப் தன் தலையை ஆட்டியவாறு கூறினார். "பழைய உலகில் நான் விரும்பிய பலவற்றை இப்போது என்னால் கற்பனை கூட செய்து பார்க்க முடியவில்லை" என்று மேலும் கூறினார்.

## கடைசி நினைவுகள்

"உங்களைப் பற்றிக் கூறுங்கள். பழைய உலகத்தைப் பற்றி உங்களது கடைசி நினைவாக இருப்பது என்ன?" என்று லெவ் கேட்டான்.

ஜோசப் முதலில் பேசினார். "மார்த்தாளும், நானும் இறுதிப் போர் வரை வாழ்ந்தோம். மேரிக்கும், ஜோயலுக்கும் சொல்வதற்குக் கடினமான கதை இருக்கிறது" என்றார்.

"மிகக் கடினமான அனுபவம் என்று கூறியபடி மேரி தொடர்ந்தார். கிழக்கு எருசலேமில் உள்ள புனித இடங்களை அழிக்கக்கூடாது என்ற

உத்தரவின்பேரில் எதிரிப் படைகள் இருந்ததை நாங்கள் அறிவோம். சுற்றி இருந்த பிரதேசங்கள் தோற்கடிக்கப்படும் வரை, நகரத்தின் மேற்குப் பகுதியில் இருந்த எங்களையும், எதிரிகள் தாக்கக் கூடும் என்று நாங்கள் நினைக்கவேயில்லை. எப்படியோ, நகரத்தின் மேற்குப் பகுதியில் கூடியிருந்த அனைவரும், எதிரிகளை எதிர்த்துப் போரிடும் வீரர்களாகவே இருந்தோம். நாங்கள் தான் எதிரிகளை எதிர்த்துப் போரிடும் கடைசி வீரர்களாக இருப்போம் என்றும் நினைத்தோம். தாக்குதல் தொடங்கியபோது, எதிரிகள் தங்களது முந்தைய வெற்றியின் நிமித்தம் மிகவும் மகிழ்ச்சி அடைந்திருந்ததால், மின்னல் வேகத்தில் நகரின் மேற்குப் பகுதியை கைப்பற்ற படைகளை அனுப்பினார்கள். எதிரிப்படைகள் டாங்கிகள் மற்றும் லாரிகளுடனும், வெட்டி வீழ்த்துவதில் திறன் படைத்தவர்களைக் கொண்டிருந்த காலாற்படை அணிவகுப்புகளுடனும், பிரம்மாண்டமான குண்டு வீச்சுகளை உடைய விமானப் படைகளுடனும் வந்திறங்கியதால், நம்முடைய படையானது எதிர்ப்பதற்குத் திராணி இல்லாது பலவீனமாகக் காணப்பட்டது. ஒருவேளை நாங்கள் எங்களது வீட்டிலேயே இருந்து, எதிரிகள் வரும்போது வீடு வீடாகப் போரிடுவதற்குத் தயாராக இருந்திருந்தால், எதிரிகள் இவ்வளவு சுலபமாக எங்களை வீழ்த்தி இருக்க முடியாது" என்றார்.

"சிறிது நேரம் நாங்கள் தைரியமாகப் போராடினோம். ஆனால் எங்களில் பெரும்பாலானோர்கள் திறந்த வெளியில் போரிட்டதால், எங்களால் ஹெலிகாப்படர்களில் இருந்து அவர்கள் வீசும் குண்டுகளுக்குத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. சரணடைவதைத் தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. சிலர் சிறைக் கைதிகளாக கொண்டு செல்லப்பட்டனர், கடைசியாகச் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன்" என்று ஜோயல் மேலும் கூறினார்.

சூரிய ஒளி கண்களில் முழுவதும் படாதவாறு தன்னுடைய கைகளை கண்களுக்கு மேல் கவசம்போல் வைத்துக் கொண்டு கண்களைச் சுறுக்கியவாறு "என்-னு-டை-ய கடை-சி நினை-வா-னது" என்று கூறிய மேரியின் குரல் நடுங்கியது. "என்-னைத் தாக்-கிய மனி-த-னால், நான் பா-லிய-ல் பலா-த்கா-ரம் செய்யப்பட்டு தலையில் சுட்டுக் கொல்லப்பட்டேன்" என்றார்.

அந்தக் காட்சியைக் கற்பனை செய்து பார்த்த லெவ், கோபத்தில் தனது கை முஷ்டியை இறுக்கினான். துடிப்புள்ள இந்த இளம் பெண் இவ்வளவு கொடூரமாக நடத்தப்பட்டிருந்ததை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நன்கு பழக்கமான இனம் புரியாத சங்கடம் லெவ்வைத் தளுவியதால் பதட்டத்துடன் நெற்றியைத் தேய்த்தான். சிறிது நேரம் ஐவரிடமும் அமைதி நிலவியது.

"இதற்காக நான் வருந்துகிறேன்", என்று இறுதியாக லெவ் பேசினான்.

"என் பழைய நினைவுகளுடன் இந்தப் புதிய பூமியில் இருப்பது எனக்கு முதலில் கடினமாகத்தான் இருந்தது. ஆனால் இப்போது நான் நன்றாக இருக்கிறேன். சொல்லப்போனோல், நான் சந்தோசமாக இருக்கிறேன். என்னை பலாத்காரபடுத்திக் கொன்ற நபரின் வருகைக்கான ஏற்பாடுகளுக்கு உதவ முற்பிதாக்களிடம் வேண்டிக் கொள்ளப் போகிறேன்" என்று மேரி கூறினாள்.

"நானும் உங்களுக்கு உதவுகிறேன் மேரி" என்று ஜோசப் கூறினார்.

"மேரி, நீங்கள் மிகவும் தைரியமானவர், அந்த நபருக்கு உதவ நான் தயாராக இருப்பேனா என்று எனக்குத் தெரியவில்லை" என்று மார்த்தாள் மேரியிடமாக நகர்ந்து அவரை அணைத்தவாறு கூறினார்.

"அவ்வளவு தைரியமெல்லாம் எனக்கு இல்லை, தேவனுடைய ஆசீர்வாதத்தினால் செய்கிறேன்" என்று கூறியவாறு மேரி சிரித்துக் கொண்டே எழுந்து நின்றாள். "மீண்டும் வேலையைத் தொடர்வதற்கான நேரம் வந்துவிட்டது" என்றவாறு ஜோயலுடன் தன்னுடைய வேலையை மாற்றிக் கொண்டு, மார்த்தாளைத் தன்னுடன் இணைந்து கொள்ளும்படி அவளுக்குச் சைகை செய்தாள்.

"கட்டுமானச் செங்கலைப் பதிப்பது இப்போது நம்முடைய முறை. லெவ், நீங்கள் ஜோயல் மற்றும் ஜோசப் உடன் சேர்ந்து பூச்சுக் கலவையைத் தயார் செய்கிறீர்களா? - கட்டுமானச் செங்கலைச் சுமக்க முடியும் தானே?" என்று மார்த்தாள் விளையாட்டாகக் கேட்டார்.

"பூச்சுக் கலவையைத் தயாரிக்கும் வேலையை அவர்களோடு இணைந்து நாமும் செய்தால் என்ன?" அப்படிச் செய்தால் நாம் மூவருமே அவர்களைவிட மெதுவாக வேலை செய்வதை யாராலும் கண்டுபிடிக்க முடியாது என்று ஜோசப் வேடிக்கையாக, மெல்லிய குரலில் எல்லோரும் கேட்கும்படி கிசுகிசுத்தார். அனைவரும் சிரித்துவிட்டு, தாங்கள் மாற்றிக் கொண்ட வேலையை ஆர்வத்துடன் செய்வதற்குத் துவங்கினர்.

"நாங்கள் வழக்கமாக இது போன்ற திட்டத்தைச் செய்வதற்கு மூன்று மணி நேரம் மட்டுமே செலவிடுவோம். ஆனால் நம்முடைய அன்புக்குரியவர்கள், உயிர்தெழுதலுக்காகக் குறிக்கப்பட்ட நாளுக்கு, இன்னும் ஒரு மாத காலம் மட்டுமே உள்ளது. அதனால்தான் இந்த வீட்டை விரைவாகக் கட்டி முடிப்பதற்கு நாங்கள் அதிக நேரம் வேலை செய்கிறோம். இந்த வீட்டை முடித்தால்தான் நம்முடைய சொந்தக்

குடும்பங்களுக்கு வீடு கட்டுவதை நாம் துவங்கமுடியும்" என்று ஜோசப் விளக்கினார்.

இவர்கள் அனைவரோடும் அதிக நாட்கள் பழகியது போல் லெவ் உணர்ந்தான். மேலும் அவன் தனது எட்டு நாள் வயதுடனான உயிர்தெழுந்த சரீரத்தின் முழு வலிமையுடன் சுறுசுறுப்பாக வேலை செய்தான். மேரியின் கதையை நினைத்துக் கொண்டே தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்ய விரைந்தான். மேரியிடம் அவன் கண்ட அன்பினாலும், தைரியத்தினாலும் ஈர்க்கப்பட்டிருந்தான். அத்தகைய கொடூரமான நினைவுகள் மறக்கப்பட வேண்டும் என்று அவன் ஏங்கினான். இல்லை -- ஆனால் உண்மையில் மறக்கமுடியாது. இதுபோன்ற விஷயங்கள் ஒருபோதும் நடந்திருக்கவே கூடாது என்று லெவ் தன் முழு மனதுடன் ஆசைப்பட்டான். மனுக்குலம் உயிர்த்தெழுப்பப்படும் போது, அவர்கள் செய்திருந்த அனைத்துக் காரியங்களும் வெளியரங்கமாக்கப்படும் என்றும், அனைத்தையும் எதிர்கொள்ள வேண்டும் என்ற உண்மையை அவர்கள் முதலிலேயே அறிந்திருந்தார்களானால், ஒருவேளை இது போன்ற தீமைகளைச் செய்யாது இருந்திருப்பார்கள் என்றும் லெவ் நினைத்தான்.

"இந்த நாளின் வேலையை முடிப்பதற்கான நேரம் வந்துவிட்டது" என்று மதிய வேளைக்குப் பின் ஜோசப் அறிவித்தார்.

லெவ், தனது புதிய நண்பர்கள் ஒவ்வொருவரையும் தழுவி விடைபெற்று தனது வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். ரூபனின் வீட்டைக் கடந்தபோது, சிறுமியையும், சோகமான பெண்ணையும் ஒருவேளை பார்க்கலாம் என்று எதிர்பார்த்தான், ஆனால் யாரையும் பார்க்க முடியவில்லை.

"ரூபன் நிறைய காரியங்களைச் சரி செய்து கொள்ள வேண்டி இருக்கிறது. ஏதாவது ஒரு வழியில் அவனுக்கு உதவும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தால் அதனைச் செய்வதில் நான் மகிழ்ச்சி அடைவேன்" என்று நினைத்தவாறே லெவ் நடந்தான்.

## எஸ்றா

லெவ் மறுநாள் அதிகாலையிலேயே எழுந்தான். விரைவான காலை உணவிற்குப் பிறகு, லெவ் தான் தீர்மானித்திருந்தபடி தேவாலயத்திற்கு மெதுவாக ஓடிச் சென்றான். புதிய உலகில் தன்னுடைய குடும்பத்தினருடன் ஓடிய அந்த நாளைவிட, இன்று தன்னுடைய ஓடும் திறன் மேம்பட்டிருப்பதைக் கண்டு வியந்தான்.

தேவாலயப் பகுதிக்கு எல்லைக் கோடுகள் போல ஏதேன் மரங்களைக் கொண்ட தோப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. அதில் போடப்பட்டிருந்த பெஞ்சுகளில் ஒன்றில் லெவ் அமர்ந்தான். தரையில் படர்ந்திருந்த புற்களின் குளிர்ச்சியை அனுபவிக்க விரும்பியவனாகத் தன்னுடைய காலணிகளைக் கழற்றினான். மரங்களுக்குக் கீழே இருந்த புல்வெளியில் இரண்டு ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. அதிகம் வளர்த்திருந்த புல் பகுதியைத் தேடி அவைகள் அழகாக உண்பதை லெவ் உன்னிப்பாகக் கவனித்தான். ஆடுகள் புற்களைச் சமன்படுத்தும் வேலையை, புற்களைச் சாப்பிடுவதன் மூலம் செய்வதைப் பார்த்தபோது "புதிய பூமியில் உள்ளவர்கள் களை எடுக்கவும், புற்களைச் சமன்படுத்தவும் தேவையில்லை" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான். தரையில் விழுந்த ஏதேன் பழத்தையும், செம்மறி ஆடுகள் சாப்பிட்டதை லெவ் கவனித்தான். ஏதேன் பழத்தால் செம்மறி ஆடுகள் ஆரோக்கியமாக உயிர் வாழ்கின்றன மற்றும் புற்களைச் சமன்படுத்தும் அற்புதமான சேவையை இலவசமாக

வழங்குகின்றன என்று எண்ணி வியந்தான். லெவ், ஆடுகளை நோக்கி நடந்து, குனிந்து அதன் தலையில் செல்லமாகத் தட்டினான்.

"ஹலோ, பசியாக இருக்கிறதா குட்டிகளா?" என்று அவற்றுடன் பேசினான். மேலும் தன்னுடைய தொடுதலுக்கு ஆர்வத்துடன் பதிலளிக்கும் வண்ணமாக ஆடுகள், தன்னை நோக்கி இன்னும் நெருக்கமாக நகர்வதைக் கண்டு லெவ் ஆச்சரியப்பட்டான். செம்மறி ஆடுகளில் ஒன்று, அவனின் முகத்திற்கு மிக அருகே வந்து அவனின் கன்னத்தை உரசியது. அதன் உரோமம் மூக்கினுள் நுழைந்து கூச்சத்தை ஏற்படுத்தியதில் லெவ் தும்மினான். இந்த விலங்குகளுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதும், முழு உலகமும் படிப்படியாக அமைதியான இராஜ்யத்திற்குக் கீழாக வருவதையும் பார்ப்பது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது என்று நினைத்து தனக்குத்தானே சிரித்தான். நன்கு அடர்த்தியாக வளர்ந்திருந்த பழுப்பு நிற கேசத்தினையும், கட்டுக்கோப்பான உடலமைப்பையும் கொண்ட ஒருவர் குழப்பமான முகத் தோற்றத்துடன் தேவாலயத்திற்குள் நடந்து செல்வதை லெவ் கண்டான்.

லெவ் அந்த மனிதனை நோக்கி நடந்தான். அவர் அருகில் சென்று, அவரிடமாய் தன்னுடைய கரங்களை நீட்டியவாறு "ஹலோ, நான் லெவ் ஆரோன். நீங்கள் யாரையாவது தேடுகிறீர்களா?" என்று கேட்டான்.

அந்த மனிதன் லெவ்வின் கையைப் பிடித்து குலுக்கினார். "ஷாலோம், நான் எஸ்றா, இந்த இடத்திற்கு நான் புதியவன். நான் நேற்றுதான் உயிர்த்தெழுப்பப்பட்டேன், ஆராதனையை நான் தவறவிட விரும்பவில்லை" என்றார்.

"நல்லது, நீங்கள் சரியான இடத்திற்குதான் வந்திருக்கிறீர்கள். ஆனால் சற்று முன்னதாகவே வந்துவிட்டீர்கள். இதிலிருந்தே

நீங்கள் ஆராதனையில் கலந்து கொள்ள எவ்வளவு ஆர்வமாக இருக்கிறீர்கள் என்பது தெரிகிறது. நான் எட்டு நாட்களுக்கு முன்புதான் உயிர்த்தெழுப்பப்பட்டேன். நான் உயிர்த்தெழுப்பப்பட்ட போது எனக்கும் முதலில் குழப்பமாகவும், தயக்கமாகவும்தான் இருந்தது என்பதை ஒப்புக்கொள்கிறேன்" என்று கூறியபடி லெவ் அந்த நபரை பெஞ்சில் தன்னருகில்அமர்வதற்கு அழைத்துச் சென்றான்.

எஸ்றா புன்னகைத்தார். "என்னுடைய ஜீவனைத் திரும்பவும் பெற்றதற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். பழைய உலகில் இஸ்ரயேலுக்கு எதிராக ஒன்றிணைந்த படைகளை, வேவு பார்ப்பதற்காக உளவுத்துறையினரால் நான், ஐரோப்பாவிற்கு அனுப்பப்பட்டிருந்தேன். நான் ஐரோப்பாவில் ஒரு சாதாரண தொழில் அதிபராக என்னைக் காட்டிக் கொண்டு, இரகசியமாகப் பணிபுரிந்தேன். அவ்வப்போது நான் இஸ்ரேலிய உளவுத்துறையைத் தொடர்பு கொண்டு தகவல்களைக் கொடுத்துக் கொண்டிருந்தேன்" என்று கூறினார்.

எஸ்றாவின் வலது கை நடுங்குவதை லெவ் கவனித்து, தன்னுடைய கைகளை அவருடைய கைகளுக்கு மேலாக வைத்து அழுத்தினான். "பின்பு ஐரோப்பயர்கள் என்னைக் கைது செய்து, பல நாட்கள் விசாரணை செய்துவிட்டு, என்னை விடுதலை செய்தனர். அவர்களுடைய படைகள் இஸ்ரயேலுக்குள் செல்லத் தயார் நிலையில் இருந்தார்கள். அதனால் அவர்கள் என்னைக் கொன்றுவிட்டு, அதனை நான் தற்கொலை செய்து கொண்டதைப் போலக் காட்டவும் தீர்மானித்து என்னை விடுதலை செய்திருக்கின்றனர்". சிறிது நேரம் எஸ்றா பேசுவதை நிறுத்தினார். பின்பு கடைசியாக... என் நினைவில் இருப்பது, "நான் என் ஹோட்டல் அறையில் தனியாக இருந்தபோது,

என் கண்களைக் கட்டியும், மேலும் என் கழுத்தை ஒரு கயிற்றினால் சுற்றியும் இருந்தனர். அவர்கள் என்னை ஒரு நாற்காலியின் மீது நிற்க வைத்திருந்தனர்'' என்று கூறியவாறு எஸ்றா தன் இரு கைகளையும் சேர்த்து இறுக்கினார். பிறகு ''என் கால்கள் தொங்கிக் கொண்டிருந்ததும், நான் சுவாசிப்பதற்குச் சிரமப்பட்டுக் கொண்டிருந்ததும்தான் எனக்கு நினைவிருக்கிறது. நான் நீண்ட நேரம் போராடிக் கொண்டிருந்தது போல் தோன்றுகிறது. பின்னர் ஒன்றும் இல்லை'' என்று முடித்தார்.

லெவ் எதுவும் பேச முடியாமல் அமைதியாக அமர்ந்திருந்தான். பின்பு ஏதோ சொல்ல விரும்பியவனாக ''உங்களுக்கு நடந்தவை களுக்காக நான் வருந்துகிறேன், எஸ்றா'' என்று அமைதியான குரலில் கூறினான். எஸ்றாவிற்கு இப்போது உயிர்தெழுதல் தேநீர் அருந்தக் கொடுத்தால் நன்றாய் இருக்கும் என்ற யோசனை லெவ்விற்குத் தோன்றியது, உடனே எழுந்து ஏதேன் மரத்தோப்பை நோக்கி நடந்து, சில ஏதேன் பழங்களைப் பறித்துக் கொண்டு வந்து எஸ்றாவிடம் சாப்பிடும்படியாகக் கொடுத்தான்.

எஸ்றா, பழத்தைச் சுவைத்தவாறு ''நன்றி, லெவ்'' என்று முணுமுணுத்தார். எஸ்றாவின் பதற்றம் குறைவதை, அவரின் கைகள் தளர்வாகுவதிலிருந்து லெவ் புரிந்து கொண்டான்.

''எஸ்றா, நீங்கள் மரணத்திற்குள் செல்வதற்கு அவர்கள் பயன்படுத்திய வழிமுறையானது சற்று கடினமானதுதான்'' என்று லெவ் கூறினான்.

''ம்ம், கடினமாகத்தான் இருந்தது. நான் பழைய உலகில் பல வகையான மனச்சோர்வினால் பாதிக்கப்பட்டிருந்தேன். எத்தனையோ முறை என் உயிரை விட்டுவிடக் கூட நினைத்திருக்கிறேன். ஆனால் என் ஜீவன் என்னை விட்டுப் பிரிந்த அந்த நேரத்தில், அதை தக்க

வைத்துக்கொள்ள மிகவும் போராடினேன். உயிர்வாழ விரும்பும் என் விருப்பமானது எவ்வளவு வலுவாக என்னில் பிணைக்கப்பட்டுள்ளது என்பதை அதுவரை நான் உணரவில்லை" என்று எஸ்றா கூறினார்.

"சரிதான், தேவனுடைய உண்மையான திட்டத்தில் நாம் மரிக்க வேண்டிய அவசியம் இல்லாதிருந்தது. ஆதாமும், ஏவாளும் பாவம் செய்யாமல் இருந்திருந்தால், மனிதனுடைய இராஜரீக உரிமையை வெகு காலத்திற்கு முன்னதாகவே மனுக்குலமானது உணர்ந்திருக்கும். இதைப் போன்றதான எந்த ஒரு பயங்கரமான விஷயங்களும் நடந்திருக்காது. ஆனால் நாம் கீழ்ப்படியாமை என்னும் கசப்பான பழத்தை ருசிக்காமல் இருந்திருந்தால், அதனால் நாம் பெற்றுக் கொண்ட படிப்பினைகளைத் தவறவிட்டிருப்போம்" என்று லெவ் கூறினான்.

"இந்தப் பழத்தினால் பெற்ற படிப்பினைகள் தேவை என்றே நினைக்கிறேன்" என்று எஸ்றா கூறினார்.

"ஆமென்" என்று கூறியவாறு லெவ் எழுந்து நின்றான். ஜனங்கள் தேவாலயத்திற்குள் சென்று அமரத் தொடங்கினர். லெவ் தேவாலயத்தில் போடப்பட்டிருந்த இருக்கைகளுக்கு நடுவே நடந்து சென்று, தாமதமாக வருபவர்கள் அமர்வதற்கு வசதியாக இருக்கும்படி உள்ளே சென்று அமர்ந்தான். எஸ்றாவும் அவனைப் பின் தொடர்ந்தார்.

"எனக்கு ஏன் இப்படி எல்லாம் நடந்தது என நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். மேலும் மேசியா யார் என்றும் அறிந்து கொள்ள வேண்டும். என்னுடைய மரண நினைவுகள் வரும்போது ஏற்படும் நடுக்கம் மறைந்து அமைதியாக இருக்கவும் நான் விரும்புகின்றேன்" என்று எஸ்றா தன் மனதில் பட்டதைக் கூறினார்.

ஒரு இனிமையான மெல்லிசை ஒலிக்கத் தொடங்கியது, அது லெவ்வின் மனதினை அமைதிப்படுத்தியது. "நீங்கள் நினைத்தது

எல்லாம் நடப்பதற்கு சில நாட்கள் ஆகும் எஸ்றா. உங்களுக்கு நடந்தவைகளை உங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் மற்றும் ஏதேன் பழங்களைச் சாப்பிடுவதையும், உயிர்தெழுதலின் தேநீர் அருந்துவதையும் தொடர்ந்து செய்யுங்கள். பின்பு உங்கள் உணர்ச்சிகள் இயற்கையாகவே சமநிலைப் பெற்று அமைதிப்படுவதைக் காண்பீர்கள். உங்களுக்கு ஏற்படும் அனுபவங்களில் தீர்க்தரிசிகளின் வார்த்தைகள் மூலமாக, மேசியா உங்கள் நடத்தையில் இனிமையான தாக்கத்தை ஏற்படுத்த அவரை அனுமதியுங்கள். உயிர்த்தெழுந்துவரும் மற்றவர்களுக்கு உதவுவதற்கான திட்டங்களில், தன்னார்வ தொண்டாற்ற முயற்சியுங்கள். இவை அனைத்தும் ஒன்றிணைந்து, நீங்கள் நினைப்பவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்யும்" என்று லெவ் கூறினான்.

ஆராதனைக்குப் பின்பு எஸ்றா, அந்நாளின் செய்தியின் மையக்கருத்தின் வார்த்தைகளை ஒவ்வொன்றாக ஆராதனை நடத்தியவர் கூறியதைப் போலவே தனக்குத்தானே முணுமுணுத்துக் கொண்டதை லெவ் கவனித்தான்.

"கர்த்தருடைய பார்வையில் நம்முடைய ஜீவன் விலையேறப் பெற்றதாய் உள்ளதால்.... அவர் நம்மை அடக்குமுறையில் இருந்தும், வன்முறையில் இருந்தும் காப்பாற்றுவார். எல்லா தேசங்களும் அவர் மூலமாக ஆசீர்வதிக்கப்படுவார்கள்." அவர்கள், அவரை பாக்கியவான் என்று வாழ்த்துவார்கள். எஸ்றா, லெவ்விடம் கையை நீட்டியவாறு "நன்றி லெவ், நான் சிந்திப்பதற்கு நிறைய இருக்கிறது"என்று கூறினார்.

"உங்களை வரவேற்கிறோம் எஸ்றா, ஷாலோம்" என்று லெவ் தனது புதிய நண்பரைத் தழுவி விடை கொடுத்தான்.

தேவாலயத்தின் வெளிப்புறத்தில் இருந்த முற்றத்தில் சிலருடன் பேசிக் கொண்டிருந்த ரெபெக்காளை, லெவ் சந்தித்து அவளைத் தழுவி

தனது அன்பினைப் பகிர்ந்து கொண்டான். பின்பு இருவரும் உற்சாகமான உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் மற்ற வழிபாட்டாளர்களையும் சந்தித்து காலை வணக்கத்தைத் தெரிவித்துவிட்டு தேவாலயத்திலிருந்து புறப்பட்டனர். அவர்கள் ரெபெக்காளின் வீட்டை அடையும் வரை, அமைதியாகப் பேசியவாறு ஒன்றாக நடந்தனர். பின்பு விடை பெற்றுக் கொண்டு அவரவர் வீட்டை நோக்கிச் சென்றார்கள். ரெபெக்காள் தன்னுடைய தொழிற்சாலை வேலைக்குச் செல்லத் தயாரானாள். பழைய உலகில் நடந்தவைகளைச் சரிசெய்வதற்காக மனுக்குலம் எதிர்கொள்ள வேண்டிய தீவிரமான உணர்ச்சிப் போராட்டத்தை எண்ணி வியந்தவாறு, லெவ் தனது மதிய வேலைக்குத் தயாராவதற்காக தனது வீட்டை நோக்கி நடந்து சென்றான்.

## ஆரோன், ஈவா மற்றும் அமி திரும்புதல்

லெவ், தன்னுடைய வேலையிடமான ஷூல்ட்ஸ் பகுதிக்குச் சென்று தனது வருகையைப் பதிவு செய்தான். பின்பு கடினமான வேலைகளை அமைதியாகச் செய்தான். இந்தக் கடின உழைப்பு, அவனுடைய மனநிலையை தற்காலிகமாகத் திசை திருப்பியதற்காக தேவனுக்கு நன்றி கூறினான்.

பிற்பகல் இடைவேளையின்போது "உங்களுக்குத் தெரியுமா? லெவ், நாம் இந்த வீட்டினைக் கட்டுவதற்கு உதவியதால், இதன் சொந்தக்காரர்களான ஆரோன், ஈவா மற்றும் அமி உயிர்த்தெழுப்பப்படும் போது, நாம் இங்கு இருந்து அவர்களை வரவேற்கும் கனத்திற்குரிய வாய்ப்பைப் பெறுவோம்" என்று மேரி தெரிவித்தார்.

உறுதியான முகபாவனையைக் கொண்டிருந்த லெவ்வினுடைய முகமானது, மேரி கூறியதைக் கேட்டதும் பிரகாசமான புன்னகைக்கு மாறியது. "நீங்கள் விளையாடவில்லையே? அது ஒரு சிறப்பான வாய்ப்பு!

மிகவும் சிறப்பானது!" என்று லெவ் தன்னுடைய ஒவ்வொரு வார்த்தையையும் அழுத்திக் கூறி சந்தோசத்தை வெளிப்படுத்தினான். அனைவரும் அவனது குரலில் வெளிப்பட்ட ஆர்வத்தையும், மகிழ்ச்சியையும் பார்த்து சிரித்தனர்.

"நாம் இந்தத் திட்டத்தை ஒரு மாதத்திற்குளாகவே முடித்துவிட முடியும். அவர்கள் உயிர்த்தெழுப்பப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள தேதிக்குள் வேலையை முடிப்பதற்குப் போதுமான நாட்கள் இருக்கின்றன" என்று ஆரோன் கூறினார்.

இன்னும் முடிப்பதற்கு என்னென்ன வேலைகள் இருக்கிறன என்பதை லெவ் சரி பார்த்தான். வீட்டினுடைய உள் அமைப்பு மற்றும் கட்டுமான வேலைகளை எளிதில் முடித்துவிடலாம். மின்சார வேலையும், பிளம்பிங் வேலையும் கூட எளிதில் முடித்துவிடலாம். வீட்டின் முற்றத்தில் பூச்செடிகளும், காய்கறிகளும் கட்டாயம் நடவு செய்ய வேண்டும். மேசை, நாற்காலி போன்ற மரச்சாமான்கள் வர வேண்டியிருக்கிறது என்று தனது கருத்தினை லெவ் தெரிவித்தான்.

"இந்தக் குடும்பம் பாலஸ்தீன கிளர்ச்சியில் மரித்திருக்கிறார்கள். நம்முடைய மக்களுக்கும், பாலஸ்தீன மக்களுக்குமான ஒரு மோசமான காலம் அது" என்று மார்த்தாள் தெரிவித்தார்.

"இந்த வீட்டினைச் சரியான நேரத்தில் கட்டி முடிப்பதற்கு, இன்னும் சிறிது நேரம் ஒதுக்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்" என்று ஜோயல் கூறினார்.

"நானும்தான்" என்று கூறியவாறு மேரியும் இணைந்தார்.

"அவர்கள் உயிர்த்தெழும் நாளுக்காக, நானும் ஆவலோடு காத்திருக்கிறேன்" என்று மார்த்தாள் கூறினார்.

"என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறியவாறு லெவ் அடுத்த நாளின் வேலைக்கு வேண்டியவற்றை தயாரிக்க

உதவினான். வீட்டிற்கு நடந்து செல்லும் வழி முழுவதும் அந்தக் குடும்பத்திற்கு உதவுவதற்கு தனக்குக் கிடைத்த சிலாக்கியத்தை நினைத்துக் கொண்டே லெவ் நடந்து சென்றான்.

## கானாவிலிருந்து மின்னஞ்சல்

ஆலனிடமிருந்து வந்த மின்னஞ்சலைப் பார்த்த தருணத்திலேயே லெவ், ரெபெக்காளை அழைப்பதற்காக தொலைபேசியை நோக்கி ஓடினான். "ரெபெக்காள், உன்னுடைய மின்னஞ்சலை உடனே பார், ஆலன் நமக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளான்" என்றான்.

"ஹலோ....லெவ்" ரெபெக்காள் தனது குரலில் சற்று எரிச்சலுடன் பேசினாள். லெவ் தன்னுடைய உற்சாகத்தின் நிமித்தமாக, தான் வழக்கமாக அவளிடம் விசாரிக்கும் கேள்விகளை மறந்தது ரெபெக்காளை எரிச்சலூட்டியது.

"ஹலோ ரெபெக்காள்" மன்னிக்கவும், ஆலனிடமிருந்து மின்னஞ்சல் வந்ததில் நான் மிகவும் உற்சாகமாக இருந்தேன்..... இன்றைய நாள் உனக்கு எப்படிச் சென்றது? என்று கேட்டான்.

"நன்றாகச் சென்றது. தொழிற்சாலையில் என்னுடைய வேலை முடிந்த பிறகு, நான் மில்லியையும், அவளுடைய குழந்தையையும் பார்க்கச் சென்றேன். அவர்களைச் சந்தித்தது எனக்கு நன்றாக இருந்தது. இன்றைய நாள் உங்களுக்கு எப்படி இருந்தது?" என்று ரெபெக்காள் கேட்டாள்.

"மிகவும் சிறப்பாக இருந்தது... ஷூல்ட்ஸ் குடும்பத்தினர் உயிர்த்தெழுந்து வரும்போது, அவர்களை வரவேற்கும் வாய்ப்பு எங்கள் அனைவருக்கும் கிடைத்துள்ளது" என்று லெவ் பதிலளித்தான்.

"அற்புதம் லெவ்!, அவர்களுடைய வீட்டினைக் கட்டுவதற்கு நீங்கள் செய்த அனைத்து கடின உழைப்பிற்குமான கனமிக்க அனுபவமாக, இந்த வாய்ப்பானது இருக்கும் என்று நான்

நினைக்கிறேன்" என்று ரெபெக்காள் கூறினாள். "சரி, நான் இப்போது கிளம்ப வேண்டும். மின்னஞ்சல் பற்றிக் கூறியதற்கு நன்றி" என்றாள்.

"குட்பை ரெபெக்காள், நான் உன்னை நேசிக்கிறேன்" என்று லெவ் கூறினான்.

"குட்பை லெவ், நானும் உங்களை நேசிக்கிறேன்" என்று ரெபெக்காளும் கூறினாள்.

ரெபெக்காள் தொலைபேசியை அதனிடத்தில் வைத்துவிட்டு, தனது கணிணியில் உள்நுழைந்து, ஆலனிடமிருந்து வந்த மின்னஞ்சலைப் பதிவிறக்கம் செய்தாள். அதில் எழுதப்பட்டிருந்த சுருக்கமான செய்தியைக் கண்ணீருடன் படித்தாள்.

அன்புள்ள அம்மா, அப்பா, மாமா ஜேக், அத்தை ரேச்சல் மற்றும் ஆனிக்கு,

கானாவிலிருந்து ஷாலோம்,

ஆப்பிரிக்கா பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறது. இங்குள்ள மக்கள் குடும்ப உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களாகவும், பக்தியுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இங்கு எல்லா இடங்களிலும் வறுமை உள்ளது. இப்போது அந்த நிலை மாறி வருகிறது. கானானியர்கள் எங்களை உண்மையான பாசத்துடன் வரவேற்று அன்பாக உபசரித்தார்கள். மேலும் அவர்கள் எங்களுக்கு உதவி செய்ய ஆர்வமாக உள்ளார்கள். பல கட்டிடத் திட்டங்கள் நடந்து வருகின்றன. கட்டிட நுட்பங்களைக் கற்றுக் கொள்ளவதில் அவர்கள் ஆர்வமாக உள்ளனர். நான் அந்நாட்டு மொழியை விரைவாகக் கற்றுக் கொண்டேன். மேலும் மின்னணு மற்றும் கணிணி தொழில்நுட்பத்தில் திறமையானவர்களாக மாறுவதில் அவர்களுக்கு எந்தப் பிரச்சனையும் இருக்காது என்று நினைக்கிறேன்.

நிலங்கள் கணக்கெடுக்கப்பட்டு, வகைப்படுத்தப்படுவது போல ஏதேனின் மரங்கள் வேகமாக நடப்பட்டு வருகின்றன. நோய்வாய்ப்பட்டி

ருப்பவர்களுக்கும், உடல் ரீதியாக காயமடைந்தவர்களுக்கும் முதலில் பழத்தைப் கொடுக்கிறோம். அங்கிருந்து விளைவதிலிருந்து மட்டும் கொடுப்பது போதுமானதாக இல்லாததால், மற்ற நாடுகளிலிருந்து இறக்குமதியும் செய்கிறோம். பழைய உலகில் பார்வையற்றிருந்த ஒரு சிறுவன், அவனுடைய பெயர் மோசஸ்-ரஸ்ஸல், இப்போது பார்வை பெற்றிருக்கிறான். அதைப் பார்ப்பதற்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. அவன் நேற்று இரவு மகிழ்ச்சியாக என்னோடு விளையாடிக் கொண்டிருந்தான். அவனுடைய கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிவதைப் பார்க்கப் பரவசமாக இருந்தது. "ஆலன்-ஆரோன், ஆலன்-ஆரோன், நீங்கள் தானே இந்தப் பழத்தை கொண்டு வந்தீர்கள். என்னால் இப்போது இந்தப் பழத்தைப் பார்க்க முடிகிறது. என்னால் உங்களையும் பார்க்க முடிகிறது என்று கண்களில் ஆனந்தக் கண்ணீரோடு தொடர்ந்து கூறிக் கொண்டே இருந்தான். பின்பு என்னுடைய முகம் வெள்ளை நிறத்தில் இருப்பதைப் பார்த்து, உங்கள் முகம் ஏன் இப்படி இருக்கிறது, உங்களுக்கு உடம்பு சரியில்லையா? நான் என்னுடைய பழத்தை உங்களுக்குச் சாப்பிடத் தருகிறேன்"என்று பரிதாபமாகக் கூறினான். அவன் கருப்பினத்தைச் சேர்ந்த சிறுவன் என்பதால், இதுவரை அவன் வெண்மை நிறத் தோலைப் பார்த்தது இல்லை. எனது வெண்மை நிறத் தோலைப் பார்த்துவிட்டு, நான் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதாக அவன் நினைத்துவிட்டான். இங்கு இருப்பவர்களில் எனக்கு மட்டுமே வெண்மை நிறத்தோல் இருக்கிறது. மற்ற அனைவருமே கருப்பினத்தவர்கள்தான். மேலும் காலில்லாதவர்கள் நடக்கிறார்கள். தொழுநோயாளிகளின் தோல் சுத்தமாக மாறுகிறது மற்றும் எய்ட்ஸ் போன்ற உயிர்கொல்லி நோயால் பாதிக்கப்பட்டோர் விரைவில் குணமடைகிறார்கள். இவைகளை எல்லாம் பார்ப்பதற்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது.

காலை வழிபாட்டு ஆராதனைக்கு நிறையபேர் வருகிறார்கள். கானானியர்கள் இதயத்திலிருந்து தேவனைத் துதித்து அற்புதமாகப் பாடுகிறார்கள். வேதங்களைப் பற்றி பேசவும் விரும்புகிறார்கள். அவர்களுக்கு நிறைய கேள்விகள் உள்ளன. ஒபதியா தாத்தா மற்றும் பாட்டியின் வருகைக்காக அவர்கள் ஆவலோடு காத்திருக்கிறார்கள். "தேவனிடமிருந்து வந்த அதிசயப் பழத்தை" பேணி வளர்க்கும் மனிதனைச் சந்திப்பதில் இருக்கும் ஆர்வம் அவர்களில் தெரிகிறது.

தொழிற்சாலைகளை நிறுவுவதில் நாங்கள் தீவிரம் காட்டி வருகிறோம், முன்னேற்றமும் கண்டுள்ளோம். தொழிற்சாலைகள் அமைக்கும் பணி விரைந்து நடைபெற்றால்தான் இனி எழுப்பப்படும், அவர்களது தலைமுறையினருக்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும் அவர்களால் உற்பத்தி செய்ய முடியும். இங்கே இருப்பது மிகவும் உற்சாகமாக இருக்கிறது. பிறகு இன்னொரு முக்கியமான விஷயம், நான் இதுவரை மாம்பா பாம்புகளைப் பார்க்கவேயில்லை.

உங்கள் அனைவரையும் மிஸ் பண்ணுகிறேன்,

அன்புடன் ஆலன்.

ரெபெக்காள் புன்னகைத்தவாறு கணிணியை அணைத்துவிட்டு எழுந்து வெளியே சென்றாள். பழத்தோட்டத்திலுள்ள பெஞ்சில் அமர்ந்தபடி, வானத்தில் சூரிய அஸ்தமனத்தின் ஒளிக்கீற்றுகள் மரங்களின் இலைகளிலும், கிளைகளிலும் வெள்ளிக் கதிர்களைப் பரப்பி ஒளிவீசிக் கொண்டிருந்ததின் அழகை ரசித்தவாறு மதியவேளையில் நடந்ததை ரெபெக்காள் யோசித்தாள்.

அன்று மதிய வேளையில், மில்லியைப் பார்த்து பேச வேண்டும் என்பது போல் இருந்ததால், ரெபெக்காள் அவரது வீட்டிற்குச்

சென்றிருந்தாள். மில்லியின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டிருந்த பெண் குழந்தை, மில்லியின் தோள்களில் அவளை அணைத்தவாறு படுத்திருந்ததைப் பார்த்த போது, அந்தக் குழந்தைக்கும் அவளுக்கும் இருந்த நெருக்கத்தை அவளால் உணர முடிந்தது. ரெபெக்காள், தன்னுடைய குழந்தையை இழக்க நேரிட்ட கசப்பான அனுபவத்தை எண்ணி மிகவும் வருந்தி அழுதாள். மில்லியும், ரெபெக்காளும் அமர்ந்து நிறையப் பேசினார்கள். தனது முதல் குழந்தையைக் கருக்கலைப்பு செய்த அனுபவத்தை ரெபெக்காளால், மில்லியுடன் இலகுவாகப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. மில்லியும், பழைய உலகில் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவளது ஏக்கத்தையும், வேதனையையும், ஆனால் கருத்தரிக்க இயலாத அவளது நிலைமையையும் கூறி அழுதார். மில்லியின் குழந்தை தன்னுடைய வட்ட வடிவ முகத்துடன் அவர்கள் இருவரையும் பார்த்துச் சிரித்தது. அதைக் கண்டு வியந்து இருவரும் சிரித்து மகிழ்ந்தார்கள். ரெபெக்காள் கிளம்ப வேண்டிய நேரம் வந்தது. "நன்றி மில்லி, உங்களோடு பேசிக் கொண்டிருந்தது, எனக்கு மிகவும் அருமையாக இருந்தது". நான் கிளம்புகிறேன் என்று கூறி விடைபெற்றுச் செல்கையில் நிமிர்வாகவும் மற்றும் வலிமையான பெண்ணாகவும் தன்னை உணர்ந்தாள்.

மாலைக் கதிரவனின் சிவப்பு நிறக் கதிர்கள், ரெபெக்காளுக்கு குழந்தையின் முகத்தை நினைப்பூட்டியது. சிவப்பு நிறக் கீற்றுகள், ஊதா நிறத்தில் மாறிய போது, சிறுவனான மோசஸ்-ரஸ்ஸல் ஆலனுக்குப் பின்னால் ஓடி விளையாடுவதைப் போல அவள் தனது மனக்கண்களால் கற்பனை செய்து பார்த்து சிரித்தாள்.

❀❀❀

**"நான் அவர்களையும் என் மேட்டின் சுற்றுப்புறங்களையும் ஆசீர்வாதமாக்கி, ஏற்றகாலத்திலே மழையைப் பெய்யப்பண்ணுவேன் ஆசீர்வாதமான மழை பெய்யும்". (எசேக்கியேல் 34:26)**

# அத்தியாயம் - 13

ஷூல்ட்ஸின் சிறிய வீட்டின் வரவேற்பு அறையில் இருந்த சோபாவில் லெவ் அமர்ந்தான். லெவ்வும், அவனது நான்கு நண்பர்களும் இந்த வீட்டைக் கட்டி முடிப்பதற்குக் கடினமாக உழைத்திருந்தார்கள். லெவ் இப்போது தன்னுடைய கண்களுக்கு முன்பாக நிகழப்போகும் அதிசயத்தை எதிர்பார்த்து அமர்ந்திருந்ததில், அவனது இதயம் வழக்கத்தைவிட வேகமாகத் துடித்தது. குழந்தை பிறப்பிற்குக் காத்திருக்கும் ஒரு தந்தையைப் போல லெவ் தன்னை உணர்ந்தான்.

"நான் ஏதேன் பழத்தைச் சேகரித்து, உயிர்த்தெழுதல் தேநீரையும் தயாரித்து விட்டேன் என்று லெவ், மார்த்தாளிடம் தெரிவித்தான். நீங்கள் ஏதேன் ரொட்டிகளைக் கொண்டு வந்து விட்டீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம், எடுத்து வந்துவிட்டேன், லெவ், இத்தோடு மூன்றாவது முறையாகக் கேட்கிறீர்கள். நாம் அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டோம். நீங்கள் அமைதியாக அமருங்கள்"என்று மார்த்தாள் சிரித்துக் கொண்டே கூறினாள். அனைத்து ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும் என்பதனால், அவர்கள் காலை ஆராதனையைத் தவிர்த்திருந்தார்கள். இப்போது அவர்கள் செய்ய வேண்டியது அக்குடும்பம் உயிர்த்தெழுந்து வரும்வரை அமைதியாகக் காத்திருப்பதுதான்.

லெவ் கண்களை மூடி, இந்தச் சிறிய குடும்பம் உயிர்த்தெழுந்து வரும்போது, அவர்களுக்கு நினைவில் இருக்கும் கடைசி நிகழ்வுகளைக் குறித்து முற்பிதாக்கள் அவர்களிடம் கூறியிருந்ததை

நினைத்துப் பார்த்தான். கடைசியாக அவர்கள் ஒரு குடும்பமாக பிரயாணம் செய்து கொண்டிருந்தனர். அப்போது ஆரோன் தன்னை அறியாமல் வாகனத்தைத் தவறுதலாக தீவிரவாத எல்லைக்குள் செலுத்திவிட்டார். தான் ஒரு தீவிரவாத எல்லைக்குள் நுழைந்து விட்டதை ஆரோன் உடனடியாக அறிந்து கொண்டார். பயத்தினால் ஆரோனின் தொண்டையில் ஏற்பட்டிருக்கும் அழுத்தத்தையும், அவன் நெற்றியில் வழிந்தோடி இருக்கும் வியர்வையையும் லெவ்வால் கற்பனை செய்ய முடிந்தது. ஆரோனும், அவரது மனைவி ஈவாவும் காரிலிருந்து வெளியே இழுக்கப்பட்டு தீவிரவாதக் கும்பலால் தாக்கப்பட்டனர். ஆரோனின் கடைசி நினைவுகள் அவரது அன்பு மகள் அமியைப் பற்றிதான் இருந்தது. "தயவுசெய்து என் குழந்தைக்குக் கருணை காட்டுங்கள், என் மகளை விட்டுவிடுங்கள்" என்று அவர் கெஞ்சினார். ஆனால் ஹமாஸ் பயங்கரவாதிகளில் ஒருவன், வாகனத்தின் பின் இருக்கையில் பயத்தோடு பதுங்கியிருந்த சிறுமியைச் சுட்டுக் கொன்றான்.

"அல்லாஹ் அக்பர்" (எல்லாப் புகழும் அல்லாஹவுக்கே), சுட்டவன் வெற்றிக் களிப்பில் கூச்சலிட்டான். அங்கிருந்த கூட்டத்தில் சிலர் நடந்த சம்பவத்தை ஏற்றுக் கொள்ள முடியாது தலையை அசைத்து, தங்களது மறுப்பைக் காட்டியவாறு உடனடியாகக் கலைந்து சென்றனர். மூவருமே இறந்துவிட்டனர், இஸ்ரேலிய ரோந்துப் படையினர் சிறிது நேரத்தில் அங்கு வந்ததால் கூட்டம் வேகமாகக் கலைந்தது. இவைகளே முற்பிதாக்கள் இவர்களிடம் பகிர்ந்து கொண்டவை.

ஆரோன் குடும்பத்தினர், உயிர்த்தெழுவதற்கான நேரம் நெருங்கி விட்டதை லெவ் உணர்ந்தான். அவன் எழுந்து மெதுவாக நடக்கத் தொடங்கினான். இதுவரை சந்தித்திராத ஆரோனையும்,

ஈவாவையும் விரைவில் லெவ் சந்திக்க உள்ளான். அவர்களும் இதுவரை தாங்கள் பார்த்திராத புதிய இடத்திலிருந்து லெவ்வையும், அவனது நண்பர்களையும் சந்திக்க உள்ளார்கள். லெவ்விற்கும், அவனது நண்பர்களுக்கும் அவர்கள் இருவரையும் ஆறுதல்படுத்தும் சிலாக்கியம் கிடைக்கும். பின்னர் அவர்களின் மகள் அமி எழுப்பப்படுவாள்.

லெவ், அந்த அறையில் இருந்து ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று அறிய தனது காதுகளைக் கூர்மைப்படுத்தினான். ஒரு கதவு திறப்பது போன்ற சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையிலிருந்த படுக்கையறையின் பக்கமாக லெவ் திரும்பினான். கதவின் அருகே ஆரோன் பயந்து ஓடத் தயாராக நின்று கொண்டிருந்தான். "ஷாலோம், ஆரோன். இவ்விடம் பாதுகாப்பானது. நீங்கள், ஈவா மற்றும் அமி மூவரும் இப்போது பாதுகாப்பாக இருக்கிறீர்கள்" என்று லெவ் அமைதியாகக் கூறினான்.

ஆரோன் தன் புருவத்தைச் சுருக்கியவாறு "பாதுகாப்பாகவா" என்று தனக்குத் தானே கூறிக் கொண்டு, அறையைச் சுற்றிலும் தான் உண்மையிலேயே பாதுகாப்பான இடத்தில்தான் இருக்கிறோமா என்று பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டார். பின்பு அவர் மீண்டுமாக "ஒருவேளை நான் கனவு கண்டிருக்கலாம்"என்று தனக்குத் தானே பேசினார். லெவ் அங்கு இருப்பதை அறிந்த ஆரோன் நிம்மதிப் பெரு மூச்சு விட்டவாறு "தேவனுக்கு நன்றி. பாருங்கள், நீங்கள் யார் என்று எனக்குத் தெரியவில்லை, உங்கள் வீட்டில் நான் என்ன செய்கிறேன் என்றும் எனக்குத் தெரியவில்லை. உங்களை நான் ஏதாவது சங்கடப்படுத்தி இருந்தால் என்னை மன்னித்துவிடுங்கள். எனக்கு கடைசியாக நிகழ்ந்தவைகளை எல்லாம் நினைப்பதற்குப் பயங்கரமாக இருக்கிறது. ஆனால் எல்லாவற்றையும் என்னால் சரியாக நியாபகப்படுத்த முடியவில்லை..." என்றான்.

அந்த நேரத்தில் ஈவாவின் அறைக் கதவு திறந்தது. அவள் ஆரோனின் குரலைக் கேட்டவுடன், உடையணிந்துவிட்டு விரைவாக வெளியே வந்தாள். அவள் கதவைத் திறந்து கணவனைப் பார்த்தபோது, அவனிடமாய் விரைந்து ஓடி "ஓ, ஆரோன், நான் உங்களை இழந்து விட்டேன் என்று நினைத்தேன்" என்று கூறியவாறு அவனைக் கட்டியணைத்தாள்.

மரியாதையின் நிமித்தமாக, லெவ் அவர்களை விட்டுச் சிறிது தூரம் விலகிச் சென்று நின்றவாறு அவர்களைக் கவனித்தான். தன்னுடைய நான்கு நண்பர்களும் கூட, மரியாதையுடன் சற்று தொலைவில் இருந்த சமையலறையின் கதவினருகே நின்று அந்தத் தம்பதியினரைக் கவனித்தார்கள். பிரிந்த இருவரும் ஒருவரையொருவர் கட்டியணைத்தவாறு நின்று கொண்டிருப்பதைக் கண்டபோது லெவ்வின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

அவர்கள் மௌன மொழியில் ஒருவரோடொருவர் கண்ணீரோடும், மகிழ்ச்சியோடும் பேசிக் கொண்டார்கள்.

"நீங்கள் கண்ட அதே கனவை நானும் கண்டேனோ, ஆரோன்?" என்ற சந்தேகத்துடன் ஈவா வினவினாள். பின்பு சற்று திடுக்கிட்டவளாக "அமி எங்கே?" என்று அக்கறையோடும், பதட்டத்தோடும் விசாரித்தவாறு அறையைச் சுற்றிலும் பார்த்தாள். அங்கு லெவ் நின்று கொண்டிருப்பதை ஈவா கவனித்தாள்.

"இந்த இடம் பாதுகாப்பானது, ஈவா. நடந்த எல்லாவற்றையும் நாங்கள் உங்களுக்கு விரைவில் விளக்குவோம். அமி, கீழே வரவேற்பு அறைக்கு அருகே உள்ள அறையில் இருக்கிறாள். இப்போது நீங்கள் இருவரும் அவளிடம் சென்று அவளை ஆறுதல்படுத்த வேண்டும். அப்போதுதான் அவள் இங்கே பாதுகாப்பாக இருக்கிறாள் என்பதை

அவளும் புரிந்து கொள்வாள்” என்று லெவ் கூறியதைக் கேட்டவுடனேயே தம்பதியினர் இருவரும் தாங்கள் லெவ்விடம் கேட்க விரும்பிய கேள்விகளையும் மறந்தவர்களாக உடனடியாக அமியின் அறைக்கு ஓடினார்கள்.

## அமி

ஆரோனும், ஈவாவும் அமியின் அறைக்குள் நுழைந்தபோது, படுக்கையில் அமி போர்வைக்குள் தன்னை ஒடுக்கிக் கொண்டு படுத்திருப்பதைக் கண்டனர். அவளது சிறிய மார்பு ஒரே சீராகவும், மெதுவாகவும் ஏறி இறங்கிக் கொண்டிருப்பதில் அவள் தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. ஈவா, தன் கண்களில் கண்ணீர் வழிய ஆரோனின் கையை அழுந்தப் பற்றியவாறு, இருவரும் அமைதியாக அமியின் அருகே சென்றனர். அமி ஆரோக்கியமாகவும் மற்றும் மகிழ்ச்சியாகவும் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டார்கள். பின்பு அமி அசையத் தொடங்கினாள், அவளுடைய சிறிய குரலில் “இல்லை!” என்று கூறியவாறு தன்னுடைய இரு கைகளையும், கால்களையும் உதறியவாறு அழத் தொடங்கினாள். அவள் தேம்பி அழ ஆரம்பித்தாள். பெற்றோர் இருவரும் அவளுக்கு மிக அருகே விரைந்தனர். ஈவா அமியின் அருகே படுக்கையில் உட்கார்ந்து, அவளைத் தன் இரு கரங்களாலும் அணைத்தவாறு, அவள் மேலிருந்த போர்வையோடு சேர்த்துத் தூக்கினாள். பின்னர் ஆரோனின் பக்கமாக அசைத்து ஆட்டினாள். அமிக்குத் தேவையான ஆறுதலை ஆரோனும், ஈவாவும் கொடுக்கத் தயாராக இருப்பதைக் கண்ட லெவ், கதவை மெதுவாக மூடி விட்டு வெளியே சென்றான்.

லெவ் மற்றும் அவரது நான்கு நண்பர்களும் வரவேற்பறைக்குச் சென்று வட்டமாக நின்றுகொண்டு அமியின் தேம்பலையும், அவளுடைய பெற்றோர்களின் ஆறுதலான வார்த்தைகளையும் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரம் கழித்து சிறுமியின் தேம்பல் நின்றுவிட்டது, பின்பு அடுத்தடுத்து அவர்கள் மூவரின் சிரிப்பின் சத்தத்தைக் கேட்டார்கள். சிறுமியின் சிரிப்பால் ஈர்க்கப்பட்டவர்களாக, ஐவரும் ஒருவரையொருவர் மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டனர். அந்தச் சிரிப்பொலி அவர்களையும் தொற்றிக் கொண்டது. முதலில் மார்த்தாள் சிரிக்கத் தொடங்கினாள், பின்பு மேரி, அதன்பின்பு ஐவருமே இணைந்து ஒரே நேரத்தில் சிரிக்கவும், அழவும் தொடங்கினர். ஜோயல், அவர்கள் குடும்பமாக எந்த நேரத்திலும் வெளியே வருவார்கள் என்ற எதிர்பார்ப்போடு தனது கைகளைத் தேய்த்தவாறு, அமியின் அறைக் கதவை நோக்கிப் பார்த்தார். பின்பு அவர் காலை உணவிற்கான ஏற்பாடுகளைத் தொடர சமையலறையை நோக்கிச் சென்றார். லெவ்வைத் தவிர மற்றவர்களும் அவரைப் பின் தொடர்ந்தனர். அடுத்த சில நிமிடங்கள் லெவ் சோபாவில் அமர்ந்து, தன் கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டான். பின்னர் அமியின் அறைக்கதவு திறப்பதைக் கண்டு எழுந்து நின்றான்.

அச்சிறிய குடும்பம் அறையில் இருந்து வெளியே வந்தது. ஈவாவும், ஆரோனும் ஒருவர் கரத்தை ஒருவர் பிடித்துக் கொண்டிருக்க, குட்டி அமி தன் தாயின் பின்னால் ஒளிந்து கொண்டு ஈவாவின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தாள்.

"ஷாலோம் ஈவா, ஷாலோம் ஆரோன்" என்றவாறு ஒரு நண்பனாகத் தன் கையை நீட்டி லெவ் அவர்களை வரவேற்றான். தன்னுடைய முகத்தைத் தன் தாயின் ஆடைக்குள் மறைத்தவாறு நின்று கொண்டிருந்த, சிறுமியின் கவனத்தை ஈர்ப்பதற்காக ஈவாவை நோக்கிக் குனிந்தவாறு மெதுவாகவும், விளையாட்டடாகவும் தனது தலையைச் சாய்த்து "ஷாலோம் அமி" என்று கூறினான். பின்பு சமையலறையை நோக்கிச் சென்றவாறே "காலை உணவு

தயாராகிவிட்டது, வாருங்கள் நாம் சாப்பிடலாம்" என்று லெவ் அவர்களை அழைத்தான்.

லெவ் சமையலறையில் இருந்த குழுவினருடன் இணைந்து கொண்டான். மார்த்தாள் புதியவர்கள் மூவரும் அமருவதற்கு உதவிவிட்டு, பின்னர் அவர்களுடன் தானும் அமர்ந்தார். இந்தக் காட்சியானது, நன்கு பிரபலமாக இயங்கும் உணவகத்தில் ஏதேன் ரொட்டிகள், ஏதேன் பழங்கள் பரிமாறப்படுவதைப் போல் இருந்தது. மேரி உயிர்த்தெழுதல் தேநீரை ஊற்றினார். பின்பு ஜோசப் ஜெபம் ஏறெடுத்துவிட்டு தானும் மேசையில் அமர்ந்தார்.

"முதலில் ரொட்டியைச் சாப்பிடுங்கள்"என்று லெவ் தன்னுடைய கருத்தைத் தெரிவித்தான். அவன் உயிர்த்தெழுந்தபோது, கடைசியாக தனக்கு நடந்த அதிர்ச்சியான நினைவுகளோடு, ஓர் ஆரோக்கியமான சூழ்நிலையில் அமர்ந்திருந்தான். அப்போது அவனுக்கு ஏற்பட்ட குழப்பத்தை லெவ் நன்கு நினைவில் வைத்திருந்தான். இதுவரை கண்டிராத ஒரு புதிய இடத்தில், அவனுக்கிருந்த பழைய நினைவுகளிலிருந்து திசைதிருப்புவதற்காக எடுக்கப்பட்ட முயற்சிகளையும் அவன் நினைவு கூர்ந்தான். அதனால் புதிய மூவரையும், ஏதேனின் மரத்தின் இலைகளால் தயாரிக்கப்பட்ட தேநீரை அருந்துவதற்கு ஊக்குவிக்க விரும்பியவனாய் "உங்களது புதிய வாழ்க்கைக்காகத் தேநீரை அருந்துங்கள்" என்றான். ஈவாவும், ஆரோனும் கவனமாகத் தேநீரைப் பருகினர். தங்கள் கோப்பைகள் காலியாகும் வரை அதை நன்றியோடு குடித்து முடித்தனர். ஈவாவின் முகத்தில் உள்ள குழப்பத்தின் கோடுகள் மறைய ஆரம்பித்து அவளது முகம் இலகுவாகவும், அமைதியாகவும் மாறியது. நடந்தவைகளை அறிந்து கொள்ளும் ஆர்வத்தையும் உணர்ந்தாள். உயிர்த்தெழுதலின் தேநீர் ஏற்படுத்திய தாக்கத்தை லெவ் கண்டான்.

அமி தனது தாயின் சட்டையை இறுக்கமாகப் பற்றி இழுத்து, அவள் கைக்கு எட்டாத தூரத்தில் இருந்த கோப்பையை நோக்கி கைகளை நீட்டினாள். "ஓ, என்னை மன்னிக்கவும், அமி, உன்னைப் பற்றி மறந்தே விட்டேன்" என்று கூறியவாறு, ஈவா கோப்பையை எடுத்து, அதன் வெப்பநிலை, அமி அருந்தும் வகையில் இருக்கிறதா என்று சரிபார்த்துவிட்டு தன் மகளிடம் கொடுத்தாள். அமி தன் சிறு கைகளால் கோப்பையை வாங்கி கவனமாக ஒரு முறை உறிஞ்சிவிட்டு, பின் விரைவாக அனைத்தையும் குடித்து முடித்து கோப்பையைக் கீழே வைத்ததை அனைவரின் கண்களும் கண்டு ரசித்தன. அமியின் அழகிய கருவிழிகளைத் தவிர வேறு எதுவும் தெரியாதவாறு கோப்பை அவளது முகத்தை மறைத்திருந்தது. அவள் முழுவதும் குடித்து முடித்ததும் கோப்பையை மேசையில் வைத்து மீண்டுமாகத் தன் தாயின் சட்டையைப் இறுக்கமாகப் பற்றி இழுத்தாள்.

"எனக்கு இன்னும் வேண்டும்" என்று முன்பைவிட சத்தமாக அவள் கேட்டாள். அவளின் இச்செயல் அங்கிருந்த அனைவரையும் சிரிக்க வைத்தது. மேரி, அவளது கோப்பையில் சூடான தேநீரை ஊற்றுவதை, எதையும் பொருட்படுத்தாது பார்த்துக் கொண்டிருந்தாள். பின்பு சிரித்துக் கொண்டே மீண்டும் கோப்பையை வாயில் வைத்துக் குடித்தாள்.

"அவள் குடித்து முடிக்கும் வரை காத்திருப்போம்" என்று லெவ் விளையாட்டாக அவளது பெற்றோரிடம் கூறுவதைப்போல அவளிடம் கூறினான். பின்பு தனது தட்டில் வைத்திருந்த பழத்தைச் சுவைத்தவாறு "இது ஏதேன் பழம், இந்த ஏதேன் பழம் சாக்லேட்டை விடச் சுவையாக இருக்கும்" என்றான்.

ஆரோனும் பழத்தை எடுத்துக் கடித்தவாறு "ஏதேன் பழமா.... நீங்கள் ஏதேன் தோட்டத்தைப் பற்றியா சொல்கிறீர்கள்?" என்று

ஆச்சரியமாகக் கேட்டார். பின்பு "ம்ம்ம்....ஆஹா, இது அருமையாக இருக்கிறது. ஈவா நீ இதை ருசித்துப் பார்த்தாயா - நான் இதுவரை, இதைப்போன்றதொரு சிறந்த பழத்தைச் சுவைத்ததில்லை" என்றார்.

ஏதேன் பழத்தைக் குறித்த ஆரோனுடைய கருத்தானது, இதுவரையில் அவர்களுக்கிடையே இருந்த இறுக்கத்தை உடைத்தது. மேலும் மிகவும் சகஜமாக அவர்கள் உரையாடலைத் தொடர்ந்தார்கள். ஐந்து நண்பர்களும் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டு, பின்பு அவர்களுக்குள்ளாகவே முறைகளை எடுத்துக் கொண்டு ஆரோனின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்கள். அவர்கள் இப்போது ஒரு புதிய உலகத்தில் வாழ்வதைப் பற்றியும், அனைத்து தேசங்களையும் உள்ளடக்கிய போர் ஒன்று மெகிதோவில் நடந்ததையும், அதில் தேவனால் அவர்களுடைய தேசம் வெற்றி பெற்றதையும், அதன் பின்பு நடந்த முற்பிதாக்களின் உயிர்த்தெழுதலையும், தேவனுடைய ஜனங்களைப் பற்றியும், மேலும் நடந்த எல்லாவற்றைக் குறித்தும் அவர்கள் விளக்கினார்கள். ஏதேன் தோட்டத்திலிருந்த மரங்களின் விதைகள், இஸ்ரயேலில் எவ்வாறு பாதுகாக்கப்பட்டன என்பதையும், இப்போது அவைகள் எவ்வாறு இஸ்ரயேலில் நடப்பட்டு வருகின்றன என்பதையும், மனதிலும், உடலிலும் ஏற்படும் அப்பழத்தின் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் குறித்தும் விவரித்தார்கள்.

"இந்தப் பழம் நமக்குத் தரும் வலிமை அற்புதமாக இருக்கிறது" என்று ஜோயல் கூறினார்.

"தெளிவான சிந்தனையையும் தருகிறது" என்று மார்த்தாள் மேலும் கூறினார்.

இவர்களது கலந்துரையாடல் தொடர்ந்து கொண்டிருக்கையில், அமி நாற்காலியில் இருந்து இறங்கி அவளது அறைக்குள் சென்றாள்.

அடுத்த ஒரு சில வினாடிகளில் அமி தனது ஒரு கையைப் பின்னால் வைத்து எதையோ மறைத்தவாறு அறையிலிருந்து வெளியே வந்தாள். அப்போது ஆரோன் "இனிமேல் நாங்கள் எங்கே வசிக்க வேண்டும்?" என்று லெவ்விடம் கேட்டுக் கொண்டிருந்தான். அமி மேசையை நெருங்கி மீண்டும் தன் தாயின் சட்டையைப் பிடித்து இழுத்ததால் அவர்களது உரையாடல் நின்றது. பின்பு அமி மெதுவாகத் தன் கைகளை முன்புறமாக நீட்டி, தான் மறைத்து வைத்திருந்த ஆச்சரியமான பொருளைத் தன் தாயிடம் காட்டினாள். மிகவும் மென்மையான பஞ்சுகளைக் கொண்டு செய்யப்பட்டிருந்த, அழகான பழுப்பு நிறமான நாய்க்குட்டி தன் சோகமான கண்களால் ஈவாவைப் பார்த்தது.

## பாராக்கேல்

"அமி! இது நீ தொலைத்த உனக்குப் பிடித்த பொம்மையைப் போலவே உள்ளது" என்று ஈவா ஆச்சரியத்துடன் கூறினாள்.

அமி உற்சாகத்தில் தலையை வேகமாக அசைத்தாள். "ஆமாம், பாராகேலைப் போலவே இருக்கிறது " என்றாள்.

"இந்தப் பொம்மை அமிக்கு அவளது வீட்டில் உள்ளதைப் போன்ற ஓர் உணர்வை அவளுக்குக் கொடுக்கும் என்று நாங்கள் நினைத்தோம்" என்று மேரி விளக்கினார்.

"பாராக்கேல் - என்பதற்கு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர் என்று பொருள்படுமல்லவா. உங்கள் நாய்க்குட்டிக்குச் சிறந்த பெயரை வைத்துள்ளீர்கள் - இப்போதிலிருந்து உங்கள் வாழ்க்கை முழுவதிலும் 'பாராக்கேல்' நிரம்பி இருக்கும்" என்று லெவ் மேலும் கூறினான்.

மகளைத் தன் மடியில் தூக்கியபடி ஈவா, எதையும் நம்ப முடியாமல் தனது தலையை இருபுறமும் அசைத்தாள். "இவைகள் எல்லாம் எப்படி

நடக்கின்றன என்பது எனது கற்பனைக்கு அப்பாற்பட்டுள்ளது. நீங்கள் எல்லோரும் மிகவும் அன்பானவர்களாக இருக்கிறீர்கள்" என்று ஈவா தன் கண்களில் கண்ணீர் வழியக் கூறினாள்.

அவர்களது உரையாடல் தடைபடுவதற்கு முன் ஆரோன் கேட்ட கேள்விக்கான பதிலை "நீங்கள் இங்கேயே வசிக்கலாம், இது உங்கள் வீடுதான்" என்று ஜோசப் கூறினார்.

"உங்களுடன் வசித்த உங்கள் உறவினர்கள் யாரும் இன்னும் உயிர்த்தெழுப்பப்படவில்லை, எனவே உங்களுக்காக இந்த வீட்டைக் கட்ட நாங்கள் முன்வந்தோம். நீங்கள் பயமின்றி இங்கு வாழலாம். யாரும் எந்தத் தீங்கும் உங்களுக்கு இங்கு செய்ய மாட்டார்கள். உங்களுக்குத் தேவையான அனைத்தும் இங்கேயே கிடைக்கும்" என்று ஜோயல் தொடர்ந்தார்.

"இந்த வீட்டை எங்களுக்கு வழங்கிய அந்தச் சிறந்த கொடைவள்ளல் யார்? நாங்கள் அவருக்கு எப்படி வாடகை செலுத்த வேண்டும்?" என்று ஆரோன் கேட்டார்.

"மேசியா. இந்த அனைத்து ஆசீர்வாதங்களும் மேசியாவான இயேசுவிடமிருந்தே வருகின்றன" என்று மரியாள் மென்மையாகச் சொன்னாள்.

ஆரோனும், ஈவாவும் ஒருவரையொருவர் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டனர். பின்பு இயேசுவின் வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் குறித்தும், இப்போது மனுக்குலம் அனுபவித்து வரும் ஆசீர்வாதங்கள் குறித்தும், தோராவிலுள்ள தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலைக் குறித்தும் உயைராடல் சுருக்கமாகத் தொடர்ந்தது.

"விரைவில் உங்கள் பெற்றோரையும், சகோதரியையும் ஜீவனுக்குத் திருப்பும் சிலாக்கியத்தை நீங்கள் பெறுவீர்கள். நீங்கள்

அவர்களுக்காக வீடுகளைக் கட்டவும், பழத்தோட்டங்களை நடவும் முடியும். இந்தச் செயல்முறையானது மரித்த அனைவரும் உயிர்த்தெழுப்பப்படும் வரை, இறுதியாக ஆதாம் மற்றும் ஏவாள் வரை தொடரும்" என்று மேரி கூறினாள்.

தன் நாற்காலியை, மேசையிலிருந்து சில அங்குலங்கள் முன்னால் நகர்த்தியவாறு, "அருமை, சிந்திப்பதற்கு அதிகம் இருக்கிறது" என்று ஆரோன் கூறினான்.

ஆரோனும், ஈவாவும் அதிகமான காரியங்களை ஒரே நாளில் அறிந்துகொண்டதால் உண்டான குழப்பத்தை உணர்ந்து (தானும் இதே போன்றதொரு அனுபவத்தைப் பெற்றிருந்ததால்) "நாம் இந்தப் புதிய வீட்டைச் சுற்றிப்பார்க்கலாமா?" என்று லெவ் அவர்களைத் திசைதிருப்புவதற்காக வினவினான். "எல்லாவற்றையும் புரிந்து கொள்வதற்கு உங்களுக்கு நிறைய நேரம் இருக்கிறது. முதலில், நானும் உங்களைப்போலவே குழப்பமாகவும், எதையும் புரிந்து கொள்ள முடியாமலும் இருந்தேன். ஆனால் பின்பு விரைவிலேயே அனைத்தையும் புரிந்துகொள்ள முடிந்தது" என்று நம்பிக்கையூட்டும் விதத்தில் கூறியவாறே, தனது இடத்தில் இருந்து லெவ் எழுந்தான்.

லெவ்வும், மேரியும் வீட்டையும், பழத்தோட்டத்தையும் சுற்றிப்பார்க்க அவர்களை அழைத்துச் சென்றார்கள். அதே நேரத்தில் ஜோயல், ஜோசப் மற்றும் மார்த்தாள் ஆகியோர் காலை உணவுக்குப் பின் அனைத்தையும் சுத்தம் செய்யத் தொடங்கினர். சுற்றிக்காட்டிய பின்பு லெவ்வும், மேரியும் அவர்களைப் பழத்தோட்டத்திற்கு அழைத்துச் சென்று, அங்கிருந்த பெஞ்சுகளில் அமர்ந்து பேச்சினைத் தொடர்ந்தனர். அமி 'ஜீவன் தரும் விருட்சங்களிலிருந்து' விழுந்து கிடந்த பழங்களை எடுத்து தானும் சுவைத்து, தனது நாய்க் குட்டிக்கும்

ஊட்ட முயன்றவாறு அந்த மரத்தைச் சுற்றிப் பரந்திருந்த புல்வெளியில் விளையாடிக் கொண்டிருந்தாள்.

"லெவ், உங்களுடைய கடைசி நினைவுகள் என்ன?" என்று ஆரோன் கேட்டார்.

லெவ் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டான். பின்பு மேரி தனக்கு நிகழ்ந்த கொடூரமான அனுபவத்தையும், மேசியா, அவளுடைய இருதயத்தில் இருந்த அனைத்து வெறுப்புகளையும் எவ்வாறு குணப்படுத்தினார் என்பதையும் விவரித்தார். ஈவா, மேரியின் கையினை ஆறுதலாகப் பற்றிக் கொண்டாள்.

"இப்போது உங்களுக்கு நன்றாக இருக்கிறது அல்லவா?" என்று ஈவா அமைதியாகக் கேட்டாள்.

"ஆமாம். உங்களுடைய அனுபவத்தையும் எங்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள், ஈவா. இந்த அனுபவங்கள் அனைத்தும் நமக்கு உதவியாக இருக்கும்" என்று மேரி கூறினார்.

"எங்களுடைய அனுபவமும் கொடூரமாகத்தான் இருந்தது. தீவிரவாதிகள் அமியை என்ன செய்வார்களோ என்று நினைத்து நான் அடைந்த பயம் இப்போதும் எனக்கு நினைவிலிருக்கிறது" என்று கூறியவாறு விளையாடிக் கொண்டிருந்த அமியைப் பார்த்து ஈவா புன்னகைத்தாள்.

## நாங்கள் தவறான திருப்பத்தைத் தேர்ந்தெடுத்தோம்

ஆரோன், அவர்களது மரணத்திற்குப் பின்னணியாக இருந்த சம்பவங்களை மேலோட்டமாகக் கூறினார். "பெரும்பாலான பாலஸ்தீனியர்கள், அவர்களின் தேசத்தையும், நிலத்தையும் இஸ்ரயேலர்களான நாம் கொள்ளையடித்துவிட்டதாக நம்ப வைக்கப்பட்டிருந்தனர். அரேபியர்கள் இந்தப் பகுதிக்கு நாடோடிகளாக

வந்து சென்றவர்களாக இருந்தனர் என்று வரலாறு கூறுகிறது. யூதர்களும், கிறிஸ்தவர்களும் இங்கு வாழ்ந்து கொண்டிருந்தனர். ஆனால் அரேபியர்கள் பாலஸ்தீனிய தேசத்தினராக இல்லாதிருந்த போதிலும் பாலஸ்தீனியாவைத் தங்களது நாடாகச் சொந்தம் கொண்டாடினர். சமாதான முன்னெடுப்புகள் தோல்வியடைந்ததால், பாலஸ்தீனியர்கள், யூதர்களுக்கு எதிராகப் போர்புரிய ஊக்குவிக்கப்பட்டார்கள். அப்போது எங்களுடைய வாகனம் அரபு சமூகத்துக்குள் தவறுதலாகச் சென்றுவிட்டது. அவர்கள் எங்களது வாகனத்தைப் பார்த்துவிட்டார்கள்" என்றார்.

ஈவா ஆழ்ந்த மூச்சை எடுத்துவிட்டு, ஆரோன் நிறுத்திய இடத்திலிருந்து தொடர்ந்தார். "விரைவாகவே நாங்கள் தீவிரவாதிகளால் சூழப்பட்டோம். தீவிரவாதிகள் எங்களது சிறிய வாகனத்தின் ஜன்னல்களை அடித்து நொறுக்கி, எங்கள் இருவரையும் வெளியே இழுத்து வீதிக்குக் கொண்டு வந்தார்கள். பின்பு காட்டுமிராண்டித்தனமாக அவர்கள் எங்களை உதைத்து, துப்பாக்கியின் பின்புற தடித்த முனையால் எங்களை அடித்தனர். அமி வாகனத்தின் பின் இருக்கையில் ஒளிந்து கொண்டிருந்தாள். அமியை விட்டுவிடும்படி ஆரோன் கடைசியாகக் கெஞ்சியது இப்போதும் எனக்கு நன்றாக நினைவிலிருக்கிறது. அமியின் அலறல் சத்தம் கேட்டது. அதனைத் தொடர்ந்து துப்பாக்கிச் சுடும் சத்தமும் எனக்குக் கேட்டது. அதன்பிறகு நிகழ்ந்த எதுவும், இன்று காலை வரை நிகழ்ந்த எதுவுமே எனக்கு நினைவில் இல்லை" என்றாள். ஈவாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது, அவள் ஆரோனின் கைகளைத் தன்னிடமாய் சேர்த்து இறுக்கமாகப் பற்றிக் கொண்டிருந்தாள். அவள் தன் மகளைப் பார்த்தவாறு "ஒரு பயங்கரமான புயலுக்குப் பிறகு

உண்டாகும் ஒரு அழகான சூரிய உதயத்தைப் பார்ப்பது போல் இப்போது இருக்கிறது" என்றாள்.

"வெறுப்பிற்கான பாடமானது, பாலஸ்தீனிய மக்களுக்கு அவர்களது வீடுகளிலும், பள்ளிகளிலும், அவர்களின் செய்தி அறிக்கைகளிலும் கற்பிக்கப்பட்டிருந்தது. வாழ்நாள் முழுவதும் அவர்கள் கற்ற வெறுப்பை எளிதில் போக்க முடியாது" என்று ஈவா மேலும் கூறினாள்.

ஆரோன், ஈவாவின் கையை மென்மையாகத் தடவிக் கொடுத்து லெவ்வை நேருக்கு நேராகப் பார்த்தார். சற்று தீவிரமான குரலில் "நாங்கள் பாதுகாப்பாக இருப்போம் என்று நீங்கள் சொன்னீர்கள். ஆனால் இந்த மக்கள் உயிர்த்தெழும்போது, நான் இப்போது பழைய நினைவுகளுடன் உள்ளது போலவே அவர்களும், அவர்களது பழைய நினைவுகளுடன் எழுப்பப்படுவார்கள் அல்லவா? எங்களைக் கொன்றவர்களில் சிலர் மிகுந்த ஆத்திரம் நிறைந்தவர்களாக இருந்தனர். கல்லான இருதயம் எப்படி சதையான இருதயமாக மாற்றப்படும்?" என்ற அவரது குரல் கவலையாக ஒலித்தது.

"அவர்கள் அத்தகைய வெறுப்புணர்வை வளர்த்துக் கொள்வதற்கு மூளைச் சலவை செய்யப்பட்டிருக்கிறார்கள்". லெவ் மென்மையாக, அதே நேரத்தில் நம்பிக்கையுடன் அவர்களுக்குப் பதிலளித்தான். ஆனால் "மேசியாவின் வல்லமையானது, எந்தவொரு மனிதனுடைய வெறுப்புணர்வையும், அழிக்கவேண்டும் என்ற விருப்பத்தையும் விட மேலானது. நமது மனித குடும்பத்தின் தன்னார்வ முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியைத் தடுக்கும் எதுவும் அனுமதிக்கப்படாது. "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை கேடு செய்வாருமில்லை" என்ற ஏசாயா தீர்க்கதரிசியின் வார்த்தைகளை லெவ் சுட்டிக் காட்டினான்.

"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல, பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" என்ற அவ்வசனத்தின் கடைசிப் பகுதியை ஆரோன் தன்னையும் அறியாமல் நிறைவு செய்துவிட்டு, மற்றவர்களைக் குழப்பத்தோடு பார்த்தார்.

"பல ஆண்டுகளாக நீங்கள் கேட்காத ஒரு வசனத்தை நீங்கள் தன்னிச்சையாக நினைவில் வைத்திருக்கிறீர்கள் அல்லவா?" என்று லெவ் கேட்டான். ஆரோன், ஆம் என்பதாகத் தலையை ஆட்டினர். "இந்த நினைவாற்றல் புதிய மூளையுடன் உயிர்த்தெழுப்பப்பட்டதாலும், ஏதேன் பழங்கள் அதன் மீது ஏற்படுத்தும் தாக்கத்தினாலும் உண்டான விளைவுதான்" என்று லெவ் புன்னகையோடு கூறினான். தான் உயிர்த்தெழுந்தபோது புதிதாகப் பெற்ற ஞாபகத்திறனால் தனக்கும் ஏற்பட்ட இதே விதமான அனுபவங்களை நினைத்து லெவ் சிரித்தான். "இந்தப் புதிய பூமியில் இருக்கும் மற்றொரு வகையான மூளைச் சலவை என்னவென்றால், தேவன் மற்றும் மேசியாவைப் பற்றின அறிவும், அவர்களோடு இருக்கும் அனுபவமும் நம்முடைய இருதயத்தைச் சுத்திகரிக்கிறது. நாம் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாகவும், மனமும், சரீரமும் குணப்படுத்தப்பட்டவர்களாகவும் இருப்பதினால், நம்மையும், மற்றவர்களையும் காயப்படுத்தி அழிக்க விரும்பும் குணமானது நீக்கப்படுகிறது"என்று லெவ் விளக்கினான்.

"மேலும் இந்த இயற்கையான குணப்படுத்தும் செயல்முறையை எதிர்ப்பவர்களுக்கு உடனடி விளைவுகள் ஏற்படுகின்றன. இதனால் மற்றொருவரின் ஆவிக்குரிய முன்னேற்றத்தை அழிக்கும் எந்தவொரு செயலையும் அவர்களால் செய்ய முடியாது" என்று லெவ் தொடர்ந்தான்.

"இவைகள் நடப்பதற்குச் சாத்தியமற்றதுபோல் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் நீங்கள் கூறுவதுபோல்தான் நடந்திருக்கிறது,

நாங்கள் எந்தவிதக் காயமும் இல்லாமல் உயிர்த்தெழுப்பப்பட்டிருக்கிறோமே” என்று ஈவா முணுமுணுத்தபடி, மேரியின் பக்கமாகப் பார்வையைத் திருப்பி “நீங்கள் உங்களுடைய காயங்களிலிருந்தும், உங்களுக்கு நடந்த கொடுமைகளிலிருந்தும் குணமாகிவிட்டீர்கள்” என்றாள். தன்னுடைய மகளுக்கு நடந்தவைகளை, அவள் மறக்க வேண்டும் என்ற அக்கறையில் அமியைப் பார்த்தவாறு கூறினாள். அமி சந்தோசமாக அந்நாயின் தாயைப் போலத் தன்னை பாவித்து விளையாடிக் கொண்டிருந்தாள். “குணமடைதல் நீங்கள் நினைப்பதைவிட இங்கு வேகமாக நடைபெறும். அவள் இப்போது சந்தோஷமாக இருப்பதைப் போல, இன்னும் சில காலங்களில் அவள் பார்த்து பயந்த காட்சிகளையும் அவள் மறந்துவிடுவாள். அந்த பயங்கரமான காட்சிகளுக்கு அவளுடைய நினைவுகள் திரும்பும் தருணங்களும் இருக்கும், அப்போது அவள் பயத்தை உணருவாள். இதைப் பற்றி அவளுடன் பேசுங்கள். உயிர்தெழுதல் தேநீர் மற்றும் ஏதேனின் பழங்களை அவளுக்குத் தாராளமாகக் கொடுங்கள். அன்பானது காலப்போக்கில் அந்த நிகழ்வின் பயங்கரத்தைப் போக்கிவிடும். அவர்கள் அவளுக்குச் செய்தவைகள் வெறும் நினைவுகளாக மட்டுமே இருக்கும். ஆனால் எந்தவித அதிர்ச்சியையும் கொடுக்காது” என்று ஜோசப் கூறினார்.

## லெவ் மாமா

மதிய மற்றும் மாலை நேரங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பதிலும், உணவு உட்கொள்வதிலும், அமியோடு விளையாடுவதிலுமாகக் கழிந்தது. ஐந்து விருந்தாளிகளில் யாரோ ஒருவர் மாறிமாறி அமியுடன் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். லெவ் நீண்ட நேரமாகக் குழந்தையோடு விளையாடவில்லை.

நாளின் பிற்பகுதியில் ஈவாவும், ஆரோனும் எருசலேமுக்கு எதிரான போரின் காட்சிகளைக் காண வேண்டும் என்று கேட்டனர். இஸ்ரயேலுக்கு எதிராக, எதிரிப் படைகள் வரும்போது கர்த்தர் இஸ்ரயேலின் சார்பாகப் போரிட்டு வெற்றி பெறுவார் என்பதைக் குறித்ததான தீர்க்கதரிசனங்களை அவர்கள் நம்பினார்கள். ஆனால் வேதவசனங்களின் நிறைவேறுதல்களை அவர்களின் கண்களுக்கு முன்பாக காட்சிகளாகக் காண்பது என்பது மற்றொரு விஷேசமாகும்.

மாலை வேளையின் முன்பகுதியில் அனைவரும் விடை பெற்றுக் கொண்டனர். அமி ஒவ்வொருவரையும் அணைத்து விடையளித்துவிட்டு லெவ்விடம் வந்தாள். அவள் லெவ்வினுடைய காற்சட்டையைப் பிடித்து இழுத்ததால், அவன் அவளிடமாய் மண்டியிட்டான். "லெவ் மாமா, நாளை நீங்கள் என் வீட்டிற்கு விளையாட வருவீர்களா?" என்று அவள் வினவினாள்.

"சரி அமி, நான் வருகிறேன். நாம் நாளை ஜனங்கள் தேவனைத் துதித்துப் பாடக் கூடிய ஒரு சிறப்பு ஆராதனைக்கு முதலில் செல்வோம். அதன் பிறகு நாம் எருசலேமைச் சுற்றிப் பார்க்கச் செல்லலாம். நீ அங்கு தேவனுடைய மனுஷர்களைக் காணலாம். சிங்கக் கெபியில் இருந்த தானியேலை நினைவிருக்கிறதா?" என்று குறும்பாகக் கேட்டான்.

"நியாபகம் இருக்கிறது" என்று அமி தலையசைத்தாள். பின்பு தன்னால் முடிந்தவரை அமி தன் சிறு கைகளால் லெவ்வை இறுக அணைத்து "நன்றி, லெவ் மாமா" என்றாள்.

"சரி அமி" என்று கூறயபடி லெவ் தன்னை ஒரு நாய் போலாக்கி மண்டியிட்டு, அமியை நோக்கிப் பாய்ந்து அவளை பயமுறுத்தி, அமியைத் தன் தாயின் கரங்களுக்குள்ளாக ஓடச் செய்தான்.

"குட் நைட் ஈவா, குட் நைட் ஆரோன்" என்று கூறி லெவ் ஈவாவையும், ஆரோனையும் தழுவினான்.

"ஷாலோம், நண்பர்களே" என்று ஆரோன் பதிலளித்தான்.

ஐந்து நண்பர்களும் விடைபெற்றுச் செல்லும்போது, லெவ் சிறிது தூரம் சென்று கடைசியாக ஒருமுறை திரும்பி அக்குடும்பத்தினருக்கு கை அசைத்தான். அமி தன் அம்மாவின் கரங்களில் இருந்தபடி, தன்னுடைய நாய்க்குட்டியின் மூக்கின் மேல் மூக்கை வைத்து உராய்சி விளையாடிக் கொண்டிருந்தாள். ஈவா, ஆரோனின் தோள்களில் தன் தலையை சாய்த்துக் கொண்டிருந்தார். ஆரோனின் கரங்கள் ஈவாவை அணைத்தபடி, அமியின் தலையை மென்மையாக வருடியபடி இருந்தன. "பாராக்கேல்" என்று கூறி அமி சிரித்தாள். அவர்களது முகத்தில் தெரியும் மகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் தன்னால் மறக்கவே முடியாது என்று லெவ் நினைத்தான்.

"ஆசீர்வாதம்" என்று லெவ் தனக்குத்தானே மென்மையாகக் கூறியபடி நடந்தான். "பயம் மற்றும் வருத்தம் நிறைந்திருந்த இடத்தில், ஆசீர்வாதமானது மனுக்குலத்தில் உள்ள அனைவருக்கும் கிடைக்கின்றன."

❀❀❀

***"பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப்பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது."***
**(ஏசாயா 55:9)**

# அத்தியாயம் - 14

அன்று காலை, வழிபாட்டு ஆராதனைக்கு ஷூல்ட்ஸ் குடும்பத்தினரும் வந்திருந்ததைக் கண்டு லெவ் மகிழ்ந்தான். அமி தான் பார்க்கும் ஒவ்வொருவரிடமும், தன்னுடைய நாய்க்குட்டியை அறிமுகம் செய்தாள். தனது புதிய நண்பர்கள், பாராக்கேலின் முன்னங்கால்களைப் பிடித்து குலுக்கும்படி நீட்டினாள்.

ஆரோனும், ஈவாவும் மற்றொரு குடும்பத்தினருடன் பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்களும் தங்களுடைய அன்பிற்குரிய ஒருவரைத் தீவிரவாதத் தாக்குதலில் இழந்திருந்தார்கள். இரு குடும்பத்தினரும், அவரவருடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டும், தங்களது மன பாரங்களை அழுது வெளிப்படுத்திக் கொண்டும் இருந்தார்கள். அந்தக் குடும்பத்தினருக்கு தன்னுடைய அனுதாபத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த ஆரோனின் முகம், மேசியாவினுடைய வல்லமை மற்றும் வழிநடத்துதல்கள், ஒருவருடைய இருதயத்தில் இருக்கும் பயம், வெறுப்புணர்வு மற்றும் தவறான எண்ணங்கள் போன்றவைகளை எவ்வாறு குணப்படுத்துகின்றன என்பதைக் குறித்த பலருடைய சாட்சிகளைக் கேட்டபோது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியதை லெவ் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஆராதனையின் முடிவில் லெவ், ஆரோன், ஈவா மற்றும் அமி ஆகியோரைத் தன் குடும்பத்தாருக்கு அறிமுகப்படுத்தினான். புதிதாக உயிர்த்தெழுப்பப்பட்ட மூவருக்கும் தான்தான் தந்தை போன்றவன் என்ற பெருமையோடு லெவ் இருந்தான். "நல்ல குழந்தையாக

இருக்கிறாள், இல்லையா?” என்று அமியைக் குறித்து அவன் ரெபெக்காளிடமும், ஆனியிடமும் கேட்டான். “இக்குடும்பத்தினர் மிகக் கடுமையான அனுபவத்தைப் பெற்றுள்ளார்கள். ஆனால் கூடிய விரைவில் குணமடைவார்கள் என்று நினைக்கிறேன்” என்றான்.

ரெபெக்காள், லெவ் வெளிப்படுத்திய பெருமையைக் கண்டதினால் விளையாட்டாகத் தனதுக் கரத்தை அவனது உதட்டின்மேல் வைத்து மூடியவாறு, “என்ன லெவ், புதியதாக-தந்தை ஆனதைப் போல் பேசிக் கொண்டே இருக்கிறீர்கள்” என்று கேலியாகக் கூறினாள். பின்னர் “உண்மைதான், ஒருவருடைய உயிர்த்தெழுதலில் முக்கியப் பங்கு வகிப்பது என்பது மிகவும் கனம்மிக்கதொன்றுதான்” என்று அமைதியாகக் கூறினாள்.

ஆராதனைக்குப் பிறகு முதன் முறையாக லெவ் சிறிது நேரம் அமைதியாக இருந்தான். “நான் கொஞ்சம் அதிகமாக உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன் என்று நினைக்கிறேன். நான் உயிர்த்தெழுப்பப்பட்டபோது, உங்களுக்கும் இப்படித்தான் இருந்ததா?” என்று லெவ் கேட்டான்.

ரெபெக்காள் தனது தலையை இருபுறமும் அசைத்து சிரித்தபடி, “சரிதான் லெவ், நீங்கள் உயிர்த்தெழுப்பப்பட்டபோது எனக்கிருந்த அனுபவத்தை வேறெந்த அனுபவத்தாலும் ஈடுகட்ட முடியாது” என்றாள்.

## ஆரோன், ஈவா மற்றும் அமி யோவான்ஸ்நானனைச் சந்தித்தல்

லெவ்வும், அச்சிறய குடும்பத்தினரும், லெவ்வினுடைய வீட்டிலேயே ஏதேன் பழத்தினாலான எளிய மதிய உணவை சாப்பிட்டனர். பின்னர் ஜேக்கிடமிருந்து இரவல் பெற்றுக் கொண்ட

காரில் எருசலேமை நோக்கிப் பயணம் மேற்கொண்டனர். அவர்கள் எருசலேமை அடைந்து, முற்பிதாக்களில் ஒருவரைச் சந்திப்பதற்காக வரவேற்பு அறையில் காத்திருந்தார்கள்.

முற்பிதாக்களின் பிரதான அலுவலகத்தின் வரவேற்பு அறையில் இருந்த ஒரு மர பெஞ்சில் அமர்ந்திருந்த தன் தாய் மற்றும் தந்தைக்கு அருகே, அமி தரையில் அமர்ந்து தனது நாய்க்குட்டியோடு விளையாடியவாறு, "லெவ் மாமா, தானியேல் எங்கே? நான் தானியேலைச் சந்திக்க விரும்புகிறேன்!" என்று கொஞ்சலாகக் கேட்டாள். மேலும் தனது பெற்றோர்கள் தனக்கு முன்பே கூறியிருந்த தேவ மனுஷர்களை இப்போது சந்திக்கப் போகிறோம் என்ற உற்சாகம் அவளது முகத்தில் தெரிந்தது.

"எந்த முற்பிதா நம்மைச் சந்திக்க வருகிறார் என்பதை அறிந்து கொள்ள நாம் சற்று நேரம் காத்திருக்க வேண்டும், அது நம்மை ஆச்சரியப்படுத்துவதாக இருக்கும்" என்று கூறியவாறு லெவ் சாய்ந்து நாய்க்குட்டியின் தலையில் செல்லமாகத் தட்டினான். அமியும், அவளுடைய பெற்றோர்களைப் போலவே முற்பிதாக்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சியோடு இருக்கிறாள் என்று லெவ் நினைத்தான்.

"ஷாலோம்", என்ற கம்பீரமான ஒரு ஆணின் குரல் அவர்களை அழைத்தது. உயரமான, கருப்பு தாடியுடன் ஒரு மனிதர் அச்சிறிய குழுவை அணுகினார். "லெவ், ஆரோன், ஈவா மற்றும் அமி ஆகியோரைச் சந்திக்க நான் இங்கே வந்துள்ளேன்" என்று கூறி அவர் ஒவ்வொருவருடனும் அன்பாகக் கையைக் குலுக்கினார். அமியிடம் வந்ததும் அவளை நேருக்கு நேராகப் பார்க்கும்படி அவள் அருகில் மண்டியிட்டவாறு, "நீங்கள்தான் அமியாக இருக்க வேண்டும்" என்று கூறிப் புன்னகைத்தவாறு, தன்னுடைய கைகளை அமியிடமாய் நீட்டினார். அவரின் புன்னகை பிரகாசமாயிருந்தது. அமி தன்

நாய்க்குட்டியின் கால்களைத் தூக்கி அவருடைய கைகளுக்குள்ளாக வைத்தாள். "ஷாலோம்" என்று அந்த உயரமான மனிதர் நாய்க்குட்டியை நேராகப் பார்த்து அதனிடம் கூறுவது போன்று விளையாட்டாகப் பேசினார். பின்பு "நீங்கள்தான் அமியின் விசேஷித்த நண்பரா? உங்கள் பெயர் ......?" என்றார்.

"பாராக்கேல். அதன் பெயர் பாராக்கேல். உங்களைச் சந்திப்பதில் அமிக்கு மிகுந்த மகிழ்ச்சி. மேலும் நீங்கள்தான் ஒருநாள் இரவு முழுவதும் சிங்கங்களுடன் குகையில் தூங்கியவரா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறாள்" என்று ஆரோன் கூறினார்.

அந்த உயர்ந்த மனிதன் சிரித்துவிட்டு, "அமி, நீ என்னை என்னுடைய நண்பர்களில் ஒருவரான தானியேல் என்று எண்ணி குழம்பிவிட்டாய் என்று நினைக்கிறேன். என் பெயர் யோவான்" என்றார்.

"என் அம்மா யோவானைப் பற்றி எந்தக் கதைகளையும் சொன்னதாக எனக்கு நினைவில்லை. நீங்கள் வேதாகமத்திலிருந்து வந்தவர்தானா?" என்று அமி கேட்டாள்.

"ஆம், நிச்சயமாக. நான்தான் கடைசி தீர்க்கதரிசி. நான் இயேசுவாகிய மேசியாவிற்கு விசேஷித்த நண்பராகவும், உறவினராகவும் இருந்தேன்" என்றார்.

அமி தன் தாயைக் குழப்பத்துடன் பார்த்தாள். "யார் கூறியது, யோவானைப் பற்றித் தெரியாது என்று செல்லம், நாம் இருவரும் சேர்ந்து இவரைப்பற்றி கற்றுக் கொண்டிருக்கிறோம்" என்று அவள் கூறினாள்.

யோவான் தன்னுடைய வார்த்தைகளால், இயேசுவைக் குறித்த சிறிய குறிப்பை கொடுக்கத் தொடங்கினார். இயேசு யார் என்பதைப் பற்றியும், அவர் எவ்வாறு தேவ ஆட்டுக்குட்டியாக இருந்தார் என்றும், ஊழியத்தில் அவருக்கு ஏற்பட்ட அவமானங்களையும், அவருடைய

மரணத்தைக் குறித்து தீர்க்கதரிசனங்கள் சுட்டிக்காட்டியவைகளைப் பற்றியும் கூறினார். பின்பு அமியைப் பார்த்து அவர் தனது உயிர்த்தெழுதலின் வல்லமையைக் கொண்டு உன்னையும், உன் அம்மாவையும், உன் அப்பாவையும், இந்தப் பூமியில் உள்ள அனைத்துக் குடும்பத்தினரையும் ஆசீர்வதிக்கிறார் என்றார்.

அமி தனது அப்பாவின் பேன்ட்டைப் பிடித்து இழுத்தாள், பின்பு ஆரோனின் காதில் "அப்பா என்னைத் தூக்குங்கள் அப்போதுதான் நான் அவரை நன்றாகப் பார்க்க முடியும்?" என்று முணுமுணுத்தாள்.

"ம்ம்..." இன்று ஒரு முக்கியமான செய்தி இருக்கிறது. "மேசியாவின் ஆட்சியின் கீழ் வருவதற்கு இன்னும் சில நாடுகள் தங்களது விருப்பத்தைத் தெரிவித்துள்ளன. பின்னர் அவர் லெவ்வை நேராகப் பார்த்து, அந்த நாடுகளில் ஒன்று ஜெர்மனி. வேறு சில நாடுகளை விட இவர்கள் தங்களது விருப்பத்தைத் தெரிவிக்க அதிக நாட்கள் எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அவர்களுக்கு அங்கு இப்போது மழைப்பொழிவு இல்லாமல் போய்விட்டது. இறுதியாக அவர்கள் இராஜாவின் ஆளுகைக்குக் கீழ் வருவதற்கு ஒத்துக் கொண்டார்கள். அடுத்த மாதம் நான் அங்கு செல்கிறேன்" என்று யோவான் கூறினார்.

யோவான் கூறியவைகள் ஆரோனையும், ஈவாவையும் கவர்ந்தன. "ஜெர்மானி! யூத மக்களின் மேசியாவை ஏற்றுக் கொள்வதற்குத் தயங்கி மௌனமாயிருந்த ஜெர்மானியர்கள், தங்களது தயக்கங்களைத் தள்ளிவிட்டு மேசியாவை ஏற்றுக் கொள்வதற்கு விரும்புகின்றார்களா?" என்று ஆரோன் நம்பமுடியாமல் கேட்டார்.

"ஜெர்மானியர்கள், நடைபெறும் மாற்றங்கள் குறித்து மகிழ்ச்சியடையாதவர்களில் சிலராகவே இன்னும் இருக்கிறார்கள். பொறுமையுடன் இருப்பதும், அன்பும் இத்தகைய உணர்விலிருந்து

வெளிவருவதற்கு அவர்களுக்கு உதவும். ஆனால் மேசியாவின் குணப்படுத்தும் செயல்முறையையும், அன்பையும் எதிர்த்து அதிக நாட்கள் இதே உணர்வில் இருப்பது கடினம்" என்று யோவான் கூறினார்.

"என்னால் முடிந்த உதவிகளை அவர்களுக்குச் செய்ய நான் விரும்புகின்றேன்" என்று லெவ் உடனடியாகக் கூறினான்.

"உங்கள் தைரியத்தையும், ஈடுபாட்டையும் நான் பாராட்டுகிறேன், லெவ். இத்தகைய வரலாற்றைக் கொண்ட தேசத்தின் நன்மைக்காக, அவர்களுக்கு உதவும் இந்த ஆபத்தான பிரயாணத்தை மேற்கொள்வதற்கு நான் எந்தளவு தயாராக இருப்பேன் என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு ஒரு நாள் வயதுதானே ஆகின்றது." என்று ஆரோன் தன்னுடைய புருவங்களை உயர்த்தி வியப்பில் கூறினார்.

"உண்மையில் எனக்கும் உங்களைவிட ஒன்றும் அதிக வயதாகி விடவில்லை, ஆரோன். நான் இந்த வேலையைச் செய்வதற்கு தகுதியானவன் அல்ல என்றும் எனக்குத் தெரியும்" என்று லெவ் முழுமையாக யோசிக்காமல், தான் உதவி செய்வதாகக் கூறியதை உணர்ந்து தடுமாற்றமடையத் தொடங்கினான். பின்னர் யோவான்ஸ்நானகனிடமாகத் திரும்பி, "எனக்கு இந்த வேலையைச் செய்யும் முதிர்ச்சி இன்னும் வரவில்லை. நான் உண்மையிலேயே அவ்வளவு முதிர்ச்சியானவன் கிடையாது, நான் அவர்களுக்கு உதவ விரும்புகிறேன் அதற்காக நான் விடாமுயற்சியுடன் படித்துக் கொண்டிருக்கிறேன். நான் விரைவில் தயாராகிவிடுவேன் என்று நம்புகிறேன். ஆனால் இப்போது நான் போதுமானளவு தயாராக இல்லை என்று எனக்குத் தெரியும்...." என்று தொடர்ந்து வேகமாகவும், பதட்டத்துடனும் கூறினான்.

யோவான் சிரித்துவிட்டு, லெவ்வின் கண்களை உற்றுப் பார்த்தார். அந்தப் பார்வை லெவ்வினுடைய கண்களை ஊடுருவி அவனுடைய இருதயத்தைப் படிப்பதுபோல் இருந்தது. "உங்களுடைய மனதில் என்ன நினைத்து இதைக் கூறினீர்கள் என்று நான் சொல்கிறேன். உங்களுடைய பெயர் லெவ் ஆரோன் தானே? உங்களுக்குள் இருக்கும் அன்பையும், மற்றவர்கள் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உதவ வேண்டும் என்ற உண்மையான விருப்பத்தையும் புரிந்து கொள்ள முடிகிறது. அதே நேரத்தில் உங்களுக்குத் தயக்கமும், பயமும் இருப்பதை நான் காண்கிறேன். உங்களால் என்ன செய்யமுடியுமோ அதை மட்டும் கிறிஸ்துவின் மூலமாக செய்வதற்கு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள், அதுவும் நீங்கள் தயாராக இருக்கும்போது மட்டுமே. குணப்படுத்தும் செயல்முறையானது, கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் செய்யப்பட்டவர்களின் வேலையாக இருக்கிறது - நாங்கள் வெறும் கருவிகள் மட்டுமே" என்றார்.

பின்பு யோவான், ஆரோன் மற்றும் ஈவாவுடன் பேசினார். "நீங்கள் இருவரும் வெறுப்பு மற்றும் தவறான எண்ணம் போன்றவற்றின் விளைவாகப் பல கொடுமைகளை அனுபவித்திருக்கிறீர்கள்". ஆரோன், ஈவா மற்றும் சிறுமி அமியின் முகங்களைப் பார்த்தபோது தீர்க்கதரிசி யோவானின் கண்கள் கண்ணீரால் நிரம்பியது. "நானும் இதைப் போன்ற கொடுமைகளை அனுபவித்திருக்கிறேன். நமது மனுக்குல குடும்பத்தாரில் அநேகரும் இதைப் போன்று அனுபவித்திருக்கிறார்கள். அனைத்து தேங்களுடனும் நமக்கிருக்கும் தொடர்பானது முழுமையான உண்மையோடும், நேர்மையோடும் இருக்கிறது என்பதில் உறுதியாக இருங்கள். நாங்கள் யாருடனும் தொடர்பு வைத்துக் கொள்ளும்படியான அதிகாரம் கொண்ட

தூதுவர்கள் அல்ல. கிறிஸ்துவே விதிமுறைகளை வகுத்துள்ளார். இந்த விதிமுறைகள் நிலையானவைகள் மற்றும் மாற்ற முடியாதவைகள். ஜனங்கள், கிறிஸ்துவின் விதிமுறைகளுக்கு கட்டாயம் இணங்க வேண்டும். காலம் செல்லச் செல்ல, ஜனங்கள் முழு மனதுடனும் இணங்க வேண்டும். இது ஜெர்மனிக்கும், மற்ற எல்லா தேசங்களுக்கும் பொருந்தும். பயப்படுவதற்குத் தேவையில்லை, ஏனென்றால் கிறிஸ்துவின் வல்லமையும், பாதுகாப்பும் நம்மைச் சுற்றிலும் உள்ளன" என்றார்.

"தேவன் உன்னை ஆசீர்வதிப்பார், அமி" என்று கூறி யோவான் விளையாட்டாக அவளுடைய கருமையான கூந்தலைக் லேசாகக் கலைத்துவிட்டு, நாய்க்குட்டியின் தலையில் செல்லமாகத் தட்டினார். "உங்கள் அனைவருக்கும் ஷாலோம். தேவனுடைய ஆசீர்வாதம் உங்களை நிச்சயமாகத் தொடரும்" என்று கூறி அவர் வந்த வேகத்திலேயே சென்றார்.

பெரிய வரவேற்பு அறையைத்தாண்டி இருந்த மற்றொரு அலுவல் அறைக்குள் யோவான் நடந்து செல்வதை நான்கு பேரும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாகள். அமி முதலில் பேசினாள். "யோவானும், அப்பாவைப் போலவே இனிமையாக இருக்கிறார்" என்று கூறி தன் கண்களை அகல விரித்து சிரித்தவாறு, தீர்க்கதரிசி யோவான் நுழைந்த கதவை நோக்கி முத்தத்தை ஊதி, தன் அன்பை வெளிப்படுத்தினாள்.

## ஜெர்மனி தொடப்பட்டது

லெவ், ஷூல்ட்ஸ் குடும்பத்தினரை அவர்களுடைய வீட்டில் விட்டுவிட்டு, பின்னர் ஜேக்கின் வீட்டிற்குச் சென்றான். லெவ், ஜேக், ரேச்சல் மற்றும் ஆனி ஆகியோர் மாலை உணவைச் சுவைத்தவாறு சுருக்கமாக கலந்துரையாடினர். லெவ் அவர்களிடம் ஷூல்ட்ஸ்

குடும்பத்தைப் பற்றியும், தீர்க்கதரிசி யோவானுடனான அவர்களின் சந்திப்பைக் குறித்தும், புதிய உடன்படிக்கை ஏற்பாட்டின் கீழ் வர ஜெர்மனி விருப்பத்தைத் தெரிவித்தது பற்றின செய்திகளையும் பகிர்ந்து கொண்டான்.

ஜெர்மனிக்கு நான் சேவைகளை வழங்க விரும்புவதையும் தெரிவித்திருக்கிறேன் என்று லெவ் கூறினான்.

ஜேக், லெவ்வை ஆச்சரியத்துடன் பார்த்தான். "யூத இன அழிப்பில் பெரும் பங்கு வகித்த ஜெர்மானியர்கள் மீது உனக்கு எப்போதும் வெறுப்புண்டு. ஒன்று நீ உன்னை மறந்து கூறியிருக்க வேண்டும் அல்லது நான் உன்னைப் பற்றி நினைத்தைவிட அதிகமாக குணலட்சணத்தில் வளர்ந்திருக்க வேண்டும். அவர்கள் யூதர்கள் மீது கொண்டிருந்த வெறுப்புணர்வும், தப்பெண்ணங்களும் ஒரே நாளில் போய்விடாது என்பதைப் புரிந்துதான் நீ யோவானிடம் சொல்லியிருப்பாய் என்று நான் நினைக்கிறேன்" என்றவாறு ஜேக் தனது கருத்தினைத் தெரிவித்தான்.

"ஆமாம், எனக்குத் தெரியும் என்ற லெவ்வின் குரல் சீராக இருந்தது. முதலில் எனக்குப் பயமாகத்தான் இருந்தது, யோசிக்காமல் பேசிவிட்டேன். ஆனால் குணப்படுத்தும் செயல்முறையானது கிறிஸ்துவினுடையது என்றும், அவருடைய வல்லமையின் உதவியோடு நம்மால் எதைச் செய்ய முடியுமோ அதை மட்டுமே செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுவோம் என்றும் யோவான் தீர்க்கதரிசி என்னிடத்தில் உறுதியாகக் கூறினார். முற்பிதாக்கள் அங்கு செல்வதற்கு விரும்பினால், அவர்களுக்கு உதவியாக நான் ஏன் அங்கு செல்லக் கூடாது? பழைய உலகில், என்னுடைய விருப்பத்தின்படி வாழ்ந்த வாழ்க்கையில் நான் மரித்துவிட்டேன். ஆனால் இப்போது கிறிஸ்துவின் அதிகாரத்திற்குள்ளாக அனைத்து நாடுகளும் வரும்வரை

வியர்வையையும், கடின உழைப்பையும், ஏன் எந்தவிதமான மனக்கசப்புகளையும் கூட நான் பொருட்படுத்தப்போவதில்லை" என்று லெவ் தெளிவான குரலில் கூறினான்.

"சேவை செய்யும் விருப்பத்தை உங்களுடைய இதயத்தின் ஆழத்தில் இருந்துதான் கூறியுள்ளீர்கள், லெவ் மாமா" என்று ஆனி கூறினாள். "முற்பிதாக்கள் உங்களை ஜெர்மனிக்குச் சேவை செய்ய அழைக்கிறார்கள் என்றால், அவர்கள் உங்கள் இருதயத்தில் என்ன நினைக்கிறீர்கள் என்பதையும், நீங்கள் அதற்காக சிறந்த வழியில் உங்களைத் தயார் செய்துவருகிறீர்கள் என்பதையும் அறிந்து கொண்டதால் மட்டுமே இருக்க முடியும். முற்பிதாக்கள் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதற்கு நான் தன்னார்வத்துடன் தொண்டாற்ற விரும்புகிறேன். அவர்கள் என்னை ஜெர்மனிக்குச் செல்ல தேர்வு செய்கிறார்கள் என்றால், நானும் சரி என்றே சொல்வேன்" என்று ஆனி தனது விருப்பத்தைக் கூறினாள்.

"நல்லது, சகோதரனே, நீங்கள் விருப்பத்தோடு இருக்கிறீர்கள் என்றால், யோவான் ஸ்நானகன் உங்களை எப்போதாவது அழைத்தால், எனக்கு ஒரு சகோதரர் இருக்கிறார், அவரும் சேவையில் இணைய விரும்புகிறார் என்று அவரிடம் சொல்லுங்கள்" என்று விளையாட்டுடன் ஜேக் தனது விருப்பத்தைத் தெரிவித்தான்.

"என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று ரேச்சல் மேலும் கூறினாள்.

## அன்யாவின் உயிர்த்தெழுதலுக்கான நாள்

அந்திசாய்வதற்கு முந்தைய வேளையின் இளவெயிலில், லெவ் தன் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான். ரெபெக்காள் வீட்டில் இருந்தால் அவளையும் பார்த்துவிட்டுச் செல்லலாம் என்று

முடிவுசெய்து, அவளின் வீட்டிற்கு நடந்தான். அவளின் வீட்டை அடைந்தவுடன், அவளது வீட்டின் விளக்குகள் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டான், அதனால் கதவைத் தட்டினான். ரெபெக்காள் கதவைத் திறந்து லெவ்வை வரவேற்றாள்.

"லெவ், உங்கள் புதிய குடும்பத்தினருடன் நீங்கள் கழித்த இந்த நாள், ஒரு சிறந்த நாளாக இருந்திருக்கும், அதனால் நீங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறீர்கள் அப்படித்தானே?" என்று லெவ்வை அணைத்தவாறு ரெபெக்காள் கேட்டாள்.

"ஆம், ரெபெக்காள் சிறப்பாக இருந்தது. அது மட்டுமல்லாமல் எங்களால் யோவான் ஸ்நானகனுடன் பேசவும் முடிந்தது". அன்றைய நாளில் நிகழ்ந்தவைகளையும், யோவான் ஸ்நானகனுடனான உரையாடலையும் லெவ் கூறியபோது ரெபெக்காளுக்கு ஆர்வமாகவும், உற்சாகமாகவும் இருந்தது.

"ஜெர்மனிக்குச் செல்வதற்கு யோவானைவிடச் சிறந்த நபரை அவர்களால் பெற முடியாது. யோவான், அரசாங்கத்தில் இருந்தவர்கள், தங்களின் அதிகார பலத்தினால் செய்த ஊழல்களைக் கையாண்டிருக்கிறார். அவரின் தலை துண்டிக்கப்படுவதற்குக் காரணமாயிருந்த அதிகாரிகளின், தப்பெண்ணங்களையும், பயங்களையும் எதிர்கொண்டிருக்கிறார். இந்தக் காலத்திற்கான அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதற்காக, தேவன் பல நூற்றாண்டுகளாக வேலை செய்து இருக்கிறார் என்பது தெரிகிறது. அவருடைய ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்குக் கொண்டு செல்வதற்கான திறன் உள்ளவர்களாக நம்மையும் தயார்படுத்துகிறார் என நினைக்கிறேன்" என்று லெவ் உணர்ச்சியோடு கூறினான்.

சமையல் அறை மேசையில், தனக்கு எதிராக உள்ள இருக்கையில் வந்து அமரும்படி ரெபெக்காள், லெவ்விற்கு செய்கை காட்டினாள். "லெவ், நான் அன்யாவைப் பற்றி நிறைய சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நான் அவளைச் சந்திப்பதற்கு ஆர்வமாகக் காத்திருக்கிறேன்" என்று ரெபெக்காள் கூறினாள்.

லெவ் தன் நாற்காலியில் சாய்ந்தமர்ந்தவாறு தொடர்ந்து பேசிக் கொண்டிருந்த ரெபெக்காளைப் பார்த்தான். "அன்யா இன்னும் ஐந்து மாதத்தில் உயிர்த்தெழுப்பப்பட இருக்கிறாள். நான் அவளுக்கு உதவ விரும்புகிறேன் லெவ், நாம் முற்பிதாக்களைத் தொடர்பு கொண்டு, நான் உதவுவதற்கு ஏதேனும் வழி உள்ளதா?" என்று கேட்க வேண்டும் என்றாள்.

"ரெபெக்காள் நீ அற்புதமானவள். நீ இப்படிக் கூறுவது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறது என்பதை வார்த்தைகளால் விவரிக்கமுடியவில்லை" என்று கூறிக் கொண்டே, லெவ் மேசையின் மீது ரெபெக்காள் ஏற்கனவே வைத்திருந்த தொலைபேசியை எடுத்தான். முற்பிதாக்களைத் தொடர்பு கொள்வதற்கான எண்ணைச் சுற்றி அவர்கள் இணைப்பிற்குள் வருவதற்காக காத்திருந்தான்.

விரைவில் உயர்த்தெழுப்பப்படவிருக்கிற ஒருவரைச் சந்திப்பது குறித்தும், ஏதாவது ஒரு வகையில் அவருக்கு உதவியாக இருக்க வேண்டும் என்ற லெவ்வின் விருப்பத்தை வரவேற்பாளர் கேட்டுக் கொண்டார். அவர் லெவ்வின் பெயரையும், அன்யாவின் பெயரையும் குறித்துவைத்துக் கொண்டு, லைனில் காத்திருக்கும்படிக் கூறினார்.

"நான் தாவீது பேசுகிறேன், லெவ். நான் உங்களுக்கு எப்படி உதவ வேண்டும்?" என்று தாவீது கேட்டார்.

லெவ், அன்யாவிற்கும் தனக்குமான உறவினை முற்பிதாவாகிய தாவீதிடம் விளக்கினான். பின்பு அவளுக்கு ஏஞ்சலா என்ற ஒரு சகோதரி இருந்தது தனக்குத் தெரியும் என்றும், தானும், தன்னுடைய இரண்டாவது மனைவி ரெபெக்காளும், அன்யாவின் உயிர்த்தெழுதலின் ஏற்பாடுகளுக்கு உதவ விரும்புவதாகவும் கூறினான். தாவீது, லெவ்விடம் ஏஞ்சலாவின் தொலைபேசி எண்ணையும், முகவரியையும் கொடுத்தார். அன்யா உயிர்த்தெழுந்த பின்பு, லெவ் முதலில் தனியாகச் சென்று அவளைச் சந்தித்து, இதுவரை நடந்தவைகளைப் பகிர்ந்து கொண்ட பிறகு, ரெபெக்காளை அழைத்துச் சென்று அவளுக்கு அறிமுகம் செய்யும்படி சில ஆலோசனைகளைக் கூறினார். மேலும் அவர் தொடர்ந்து, "நேரம் குறுகியதாக இருப்பதால், அன்யா உயிர்த்தெழுப்பப்படும்போது அங்கு இருப்பதற்காக, ஏஞ்சலாவுடன் சேர்ந்து திட்டவட்டமான ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுங்கள்" என்று தாவீது கூறினார்.

லெவ் தொலைபேசியை வைத்துவிட்டு, ஏஞ்சலாவின் எண்ணைத் தொடர்பு கொண்டான். "நான் அன்யாவின் சகோதரி ஏஞ்சலாவுடன் பேசுவதற்கு இப்போது அழைத்துள்ளேன்" என்று மறுமுனையின் அழைப்பிற்குக் காத்திருக்கும் நேரத்தில் ரெபெக்காளிடம் கூறினான். ஒரு இளம்பெண் இணைப்பிற்குள் வந்தாள். அவள் தன்னுடைய பெயரை நினைவில் வைத்திருப்பதைக் கண்டு லெவ் மகிழ்ச்சி அடைந்தான்.

❀❀❀

**"ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவி அவர்மேல் தங்கியிருக்கிறது...." (ஏசா 11:5).**

# அத்தியாயம் - 15

இது தன்னுடைய வீடுதான் என்பதை அறியாமலேயே அரியேல் ஆரோன் அறைக் கதவைத் திறந்து, வீட்டின் வரவேற்பறைக்குள் நுழைந்தார். அந்த கணத்திலேயே, லெவ்வும், ரெபெக்காளும் "அப்பா" என்று ஒன்றாக அழைத்தவாறே அவரை அணைக்க ஓடிவந்தார்கள். அவர்களைக் குறுக்கிடாமல் ஆலன் அருகில் நின்றவாறு, தானும் அவர்களோடு இணைந்து கொள்வதற்குக் காத்துக் கொண்டிருந்தான்.

"லெவ்!, ரெபெக்காள்" என்று அவர்கள் இருவரது கைகளையும் தன்னுடைய கைகளுக்குள் வைத்து அழுத்தியவாறு, நன்கு திடகாத்திரமான உடல்வாகுடன் இருந்த உயர்ந்த மனிதர் புன்னகையுடன் கூறினார். "நீங்கள் இருவரும் நன்றாக இருக்கிறீர்கள், எனக்கு ஏதோ மறந்ததுபோல இருக்கிறது, ஒன்றுமே புரியவில்லை, நீங்களே எனக்கு விளக்கிச் சொல்லுங்..." என்றவர் இடையிலேயே தன் பேச்சை நிறுத்திவிட்டு, தனக்கு நன்கு பரிச்சயமான முகத்தோற்றத்துடன், மற்றொரு இளைஞன் தனக்கு முன்னால் நின்று கொண்டிருப்பதைக் கவனித்தார்.

"யார் இந்த இளைஞன்?" என்று அரியேல் ஆரோன் கேட்டார்.

லெவ்வும், ரெபெக்காளும் ஆலனுக்கு வழிவிட்டு விலகி நிற்க, "தாத்தா, நான் ஆலன்" என்று கூறியவாறு, ஆலன் தன் தாத்தாவை அணைத்துக் கொண்டான்.

அரியேல், ஆலனின் அணைப்பிலிருந்து தன்னை விலக்கிக் கொண்டு ஆலனுடைய தோள்களைப் பிடித்து நின்றவாறு அவனை

உற்றுப் பார்த்தார். "நான் உன்னைக் கடைசியாகப் பார்த்தபோது நீ குழந்தையாகத் தானே இருந்தாய். நீ எப்படி இளைஞனாக இருக்க முடியும்? நான் எங்கே இருக்கிறேன்? அன்னாள் எங்கே? அவளும் கடைசியாக என் பக்கத்தில் இருந்தது எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது...." என்றவாறு தனக்குப் பிடித்தமான தன்னுடைய நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மூவரையும் பார்த்தார். பின்பு தன்னுடைய புருவங்களைச் சுழித்து, தலையை லேசாக இருபுறமும் அசைத்து, "எனக்கு நினைவில் இருப்பதெல்லாம் ஒரு குண்டுவெடிப்பு சம்பவம்தான்..... ஆனால் நான் இங்கே எந்தவிதமான காயங்களும் இல்லாமல் இருக்கிறேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை...." என்றார்.

லெவ் தன்னுடைய கரங்களைத் தன்னுடைய தந்தையின் தோளில் போட்டு அணைத்தவாறு, "அப்பா, எங்களுடன் வந்து அமருங்கள். நாங்கள் உங்களிடம் சிலவற்றைக் கூற வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே, தனது தந்தையை சமையலறை மேசைக்கு அழைத்துச் சென்றான். ரெபெக்காளும் அவர்களுடன் அமர்ந்தாள், ஆலன் உயிர்தெழுதல் தேநீரைக் கோப்பைகளில் ஊற்றினான்.

"அப்பா, இதைக் குடியுங்கள்" என்று ரெபெக்காள் ஊக்கப்படுத்தினாள். அரியேல் சிறிதளவு தேநீர் அருந்திய பிறகு, ரெபெக்காள் மென்மையான குரலில் நடந்தவற்றைக் கூறத் தொடங்கினாள். "அப்பா, அந்தக் குண்டுவெடிப்பில் நீங்கள் மரித்து விட்டீர்கள்.... நீங்களும், அம்மாவும் இருவருமே மரித்துவிட்டீர்கள். ஆனால் இப்போது மேசியாவின் வல்லமையால் மரணத்திலிருந்து நீங்கள் உயிர்த்தெழுப்பப்பட்டு உள்ளீர்கள்" என்று ரெபெக்காள் கூறினாள்.

அரியேல், ரெபெக்காள் கூறியதைக் கேட்டவுடன் தனது தேநீர் கோப்பையை வேகமாக அதன் தட்டில் வைத்தார், சூடான தேநீர்

கோப்பையின் மேல் பகுதிவரை எழும்பி, இருபுறமும் வேகமாக ஆடி கோப்பையை விட்டு வெளியேறியது. "என்னைப் பார்த்தால் அந்தக் குண்டுவெடிப்பில் மரித்தவன் போலவா தெரிகிறது? இப்போது இருப்பதுபோல் ஆரோக்கியமாக என் வாழ்க்கையில் நான் எப்போதும் உணர்ந்ததில்லை" என்றார்.

"அப்பா உங்களைப் போலவேதான் நானும் மரித்தேன்" என்று லெவ் கூறினான். "இஸ்ரயேலுக்கு எதிரான இறுதிப் போரில் நடந்த ஒரு குண்டுவெடிப்பில்தான், நானும் கொல்லப்பட்டேன். கடைசியாக எனக்கு நினைவில் இருந்த சம்பவம், அந்தப் போரில் என் இடது கை துண்டிக்கப்பட்டதுதான். அப்பா, நீங்கள் கண்விழித்தபின், உங்களது பிம்பத்தைக் கண்ணாடியில் பார்த்தீர்களா?" என்று லெவ் கேட்டான்.

"ம்ம்...நான் பார்த்தேன். நான் செயற்கையாக வைத்திருந்த பல் செட் காணாமல் போய்விட்டதையும், என் பற்கள் அனைத்தும் நேராக இருப்பதையும் பார்த்து எனக்கு ஆச்சரியமாக இருந்தது. நான் எனது மூக்குக் கண்ணாடியைத் தேடினேன், என்னால் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் எனக்கு இனி கண்ணாடி தேவையில்லை என்று தோன்றுகிறது... என் கண் பார்வை நன்றாக இருக்கிறது. எனக்குக் குழப்பமாக இருப்பதை ஒப்புக் கொள்ள வேண்டும், ஆனால் நான் இவைகளைக் குறையாகக் கூறுகிறேன் என்று நினைக்க வேண்டாம். இந்த மாற்றங்கள் எல்லாம் எனக்குப் பிடித்திருக்கிறது" என்று குழம்பிய மனநிலையிலும் அரியேல் உற்சாகமாகக் கூறினார்.

"அப்பா, உங்கள்....தலை முழுவதிலும் கேசம் நிறைந்திருப்பதை நீங்கள் கவனித்தீர்களா?" என்று லெவ் விளையாட்டாகக் கேட்டான்.

தானும் கவனித்துவிட்டதை தெரிவிக்கும்படியாக அரியேல், தனது வெள்ளையும் கறுப்புமான அலை அலையான அடர்த்தியான கூந்தலுக்குள் தனது கைவிரல்களையிட்டுக் கோதியபடி "ம்ம்ம்"

என்றார். அவர் அனைத்தையும் அமைதியாக ஒப்புக் கொண்டார், தேநீரைப் பருகும்படியாக அவருடைய உள்ளுணர்வு உணர்த்தவே, தன்னையுமறியாமல் தேநீர் கோப்பையை எடுத்து, அதில் மீதியிருந்த தேநீர் முழுவதையும் குடித்து முடித்தார்.

"அந்த மோசமான குண்டு வெடிப்பில் நீங்களும், அம்மாவும் இறந்துவிட்டீர்கள், அப்பா" என்று கூறி, ரெபெக்காள் மெதுவாக அரியேலின் கையைத் தடவினாள். இருவரும் மரித்த அன்று மாலை, தான் பெற்றுக் கொண்ட அவர்களின் மரணச்செய்தியை ரெபெக்காள் நினைவு கூர்ந்தாள். அரியேலும், அவரது மனைவி அன்னாவும் மிகுந்த தைரியசாலிகள், மனஉறுதி மிக்கவர்காளகவும் இருந்தனர். அவர்கள் பாதுகாப்பாக வாழ்ந்த டெல் அவிவ் பகுதியில் இருந்து, ஹெப்ரானில் இருந்த ஒரு பகுதிக்கு குடிபெயர நேர்ந்தபோதும் கூட அவர்கள் இருவரும் பயப்படவில்லை. பாலஸ்தீனியர்கள், அதிகமதிகமாக வன்முறையில் இறங்கியபோதும் கூட, அவர்கள் இருவரும் தைரியத்தோடு இருந்தார்கள். கிரியாட் அர்ஃபா என்ற சந்தைப் பகுதியில், ஹமாஸ் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவன் குண்டுகளைக் கொண்ட தற்கொலை பெல்டை அணிந்திருந்தான். அரியேலும், அன்னாவும் குண்டுவெடிப்பு நடந்த இடத்திற்கு மிக அருகில் இருந்தனர். குண்டு வெடித்ததில் பறந்த ஆணிகளும், சிதறிய உலோகத்துண்டுகளும் அவர்களையும் துளைத்து வெளியேறியது என்ற மரணச் செய்தியை ரெபெக்காள் விவரித்தாள்.

மனைவியின் பெயரைக் கேட்ட போது அவரது கண்களில் கண்ணீர் வழிந்தது. அவர் ரெபெக்காளின் கையை இறுக்கமாகப் பிடித்துக் கொண்டார். "அன்னா - இப்போது அவள் எங்கே? அவள் நன்றாக இருக்கிறாள் அல்லவா? அவள் எங்கே?" அவர் அவசர தொனியில் கேட்டார்.

"தாத்தா, விரைவில் பாட்டி நம்முடன் இருப்பார்கள்" என்று ஆலன் கூறினான். "இன்னும் சொல்லப்போனால், பாட்டியும் உங்களைப் பற்றிய இதே கேள்விகளைத்தான் இப்போது கேட்டுக் கொண்டிருப்பார்கள். பாட்டி இப்போது ஜேக் மாமா மற்றும் ரேச்சல் அத்தையுடன் இருக்கிறார்கள். நடந்து செல்லக்கூடிய தூரத்தில்தான் அவர்கள் உள்ளனர், விரைவில் இங்கு வந்து விடுவார்கள். நாம் அனைவரும் சேர்ந்து நம் காலை உணவைச் சாப்பிடலாம்" என்று ஆலன், அரியேலைச் சமாதானப்படுத்தினான்.

தன் மாமியாரின் கடைசி வார்த்தைகளை ரெபெக்காள் நினைவு கூர்ந்தாள். "அரியேல், என் அரியேல் எங்கே?" அவர் பயத்தினூடே மன்றாடி இருந்தார்.

"அன்னா, நன்றாக இருக்கிறாளா, தேவனுக்கு நன்றி. நான் இங்கே இருக்கிறேன், அவள் அங்கே இருக்கிறாள், நீங்கள் மூவரும் இங்கே இருக்கிறீர்கள். ஜேக்கும், ரேச்சலும் அங்கே இருக்கிறார்கள், நாமனைவரும் ஆரோக்கியமாக இருக்கிறோம், மேசியாவும் வந்துவிட்டார்" என்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறியவாறு, அரியேல் வானத்தை நோக்கித் தன்னுடைய கைகளை உயர்த்தி மீண்டும் தனது கடைசி வார்த்தைகளை அழுத்தமாகக் கூறி தேவனுக்கு நன்றி தெரிவித்தார். பின்பு அவர் புன்னகைத்தார், அப்புன்னகை சிரிப்பொலியாக மாறி பின்பு கொஞ்சம், கொஞ்சமாக அழுகையாக மாறத் தொடங்கியது. அரியேல் அழ ஆரம்பித்தார்.

லெவ்வும், ஆலனும் தங்களுடைய நாற்காலிகளை முன்நோக்கி நகர்த்தி அரியேலுக்கு அருகில் நெருங்கி அமர்ந்தனர். ரெபெக்காள், அவளது கையை அவரின் கழுத்தை சுற்றி பிடித்தவாறு அவருக்கு அருகில் மண்டியிட்டாள். வியப்பூட்டும் புதிய பூமியின் யதார்த்தம் அவரது சிந்தையில் ஒரு தெளிவைக் கொடுத்தது, அதனால் அவரது

உணர்ச்சிகள் அமைதியடைவதையும், அவரது கண்களில் பிரகாசம் திரும்புவதையும் அவள் அறிந்து கொண்டாள். அவர் ஏதேனின் பழத்தை ஆர்வத்தோடும், ஆச்சரியத்தோடும் சாப்பிட்டார். ஏதேன் பழத்தின் தோற்றம் மற்றும் அதன் சக்திகளைப் பற்றி அறிந்து அவர் ஆச்சரியப்பட்டார். கதவைத் தட்டும் ஓசை கேட்கும் வரை அவர்களின் உரையாடல் தொடர்ந்தது.

## அன்னா

"அரியேல் - என் அரியேல் எங்கே?" ஓர் இனிமையான குரல், வாசலில் இருந்தபடியே அரியேலை அழைத்தது. அன்னா, ரேச்சல், ஜேக் மற்றும் ஆனி வீட்டிற்குள் நுழைந்தனர்.

எந்தத் தருணத்தை எதிர்பார்த்து இவ்வளவு நாள் அவர்கள் உழைத்தார்களோ, மகுடம் சூட்டுவது போல் அந்தத் தருணம் இப்போது வந்துவிட்டதை எண்ணி ரெபெக்காள் மகிழ்ந்தாள். இவர்கள் ஐவரும் மற்றும் சில தன்னார்வத் தொண்டர்களும் சேர்ந்து, அரியேலுக்கும், அன்னாவுக்குமான தனித்தனியான இரு வீடுகளைக் கட்டியெழுப்புவதில் ஆர்வத்துடன் உழைத்திருந்தார்கள். இந்த வேலையானது கடந்த இரண்டரை மாதங்களாக எந்தவிதத் தவறும் இல்லாமலும், எந்தவிதத் தலைமைத்துவப் பொறுப்பும் இல்லாமலும் சீராக முன்னேறிக் கொண்டிருந்தது, கட்டுமானப் பணியின் ஒவ்வொரு கட்டத்திலும் என்ன செய்ய வேண்டும் என்பதை அவர்கள் ஒவ்வொருவரும் நன்கு அறிந்திருந்தனர். வீட்டிற்குத் தேவையான அனைத்துப் பொருட்களையும், துணிமணிகளையும் சேர்த்து வைத்திருந்தனர். தோட்டமானது பூத்துக் குலுங்கியது. தன்னுடைய தாத்தா, பாட்டி உயிர்த்தெழும் வேளையில் ஆலன் இங்கே இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படியாக கானாவுக்கு செய்தி அனுப்பி இருந்தனர்.

இப்போது உச்சகட்ட காட்சியான, அரியேலும், அன்னாவும் ஒன்றாக இணையும் அற்புதமான தருணத்தை அவர்கள் கண்டு இரசிக்கும்வேளை வந்துவிட்டது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவர்கள் அனைவரும் மீண்டும் ஒரு குடும்பமாக இணையப் போகிறார்கள்.

அன்னாவும், அரியேலும் ஒருவரையொருவர் கண்டு, வீட்டின் வரவேற்பு அறையின் நடுப்பகுதி வரை ஒருவரை நோக்கி ஒருவர் ஓடிவந்து கட்டியணைத்து அழுதார்கள். பின்னர் அணைப்பிலிருந்து விலகி ஒருவரையொருவர் உற்றுப் பார்த்தனர். "உங்கள் முகத்தில் ஒரு கீறல் கூட இல்லை, ஒன்று கூட இல்லை, அரியேல்" என்று அன்னா கூறினார்.

"அன்னா, நீ உயிருடன் இருக்கிறாய், ஆரோக்கியமாக இருக்கிறாய். நான் நினைவில் வைத்திருப்பதை விட நீ மிகவும் அழகாக இருக்கிறாய்" என்று அரியேல், அன்னாவின் கன்னத்தைத் தன் கையில் ஏந்தியவாறு பிரம்மிப்புடனும், ஆச்சரியத்துடனும் கூறினார்.

## ஆரோனின் குடும்பம் மீண்டும் ஒன்றிணைதல்

ஆரோனின் குடும்பத்தினர் பழைய உலகில் என்ன நடந்தது என்பதையும், புதிய பூமியில் நிகழ்ந்திருக்கும் மாற்றங்களையும் ஒருவரோடொருவர் பகிர்ந்து கொண்டதில் காலை வேளை விரைவாகச் சென்றது. அரியேலும், அன்னாவும் ஏதேன் பழத்தையும், கானாவில் இருந்து ஆலன் கொண்டுவந்த பழத்தையும் பார்த்து ஆச்சரியப்பட்டனர். அவர்களுடைய குடும்பத்தைப் பார்த்தும், ஒருவர் மேலொருவர் பொழிந்த அன்பினைப் பார்த்தும் வியந்தார்கள். மெதுவாக அவர்களுடைய குழப்பமான, அமைதியற்ற மனநிலையானது மாறத் தொடங்கி அமைதியாகக் கேள்விகளைக் கேட்கச் செய்தது.

பின்பு அவர்கள் அரியேலின் வீட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். அன்னா தன்னுடைய வீட்டையும் சுற்றிப் பார்க்க வரும்படி அழைத்ததால் அங்கும் சென்றார்கள். ஆனால் அன்னாவிற்கு இன்னும் அவர்கள் ஏன் தனி வீடுகளில் வாழ வேண்டும் என்ற குழப்பம் இருந்தது. அரியேலின் வீட்டிலிருந்து அன்னாவின் வீட்டிற்குச் சென்றது, அந்தக் குடும்பத்தினருக்கு ஒரு நடைபயிற்சியாக அமைந்தது மற்றும் மூத்த ஆரோன்களுக்கு தங்களுடைய சுற்றுவட்டாரத்தைப் பார்வையிடு வதற்கான வாய்ப்பாகவும் அமைந்தது.

அவர்கள் அரியேலின் வீட்டிற்குத் திரும்பிய பிறகு, ஒவ்வொருவரும் குண்டு வெடிப்பில் தங்களுக்குக் கடைசியாக நினைவில் இருந்தவைகளைப் பகிர்ந்து கொண்டனர். இறுதிப்போரின் காணொளிக் காட்சிகளை அவர்கள் பார்த்தார்கள். அரியேலும், அன்னாவும் பல அழிவுகளை ஏற்படுத்திய போரின் காட்சிகளைக் கண்டு அழுதார்கள். பின்னர் பல நாடுகள், முற்பிதாக்களின் அதிகாரத்தின் கீழ் வந்தவுடன் அவர்கள் பெற்றுக் கொண்ட குணப்படுத்துதல்களையும் மற்றும் அதனால் உண்டான மகிழ்ச்சியினை உள்ளடக்கிய காணொளிக் காட்சிகளையும் கண்டபோது, அவர்கள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

அன்றைய நாளின் பிற்பகுதியில் மதிய உணவிற்காக அனைவரும் மேசையைச் சுற்றி அமர்ந்தனர். அரியேல் அவ்வேளையில் உணர்ச்சிவசப்பட்டுப் பேசினார்.

"தேவன் தன்னுடைய மக்களை மீண்டும் சந்திக்கும் இந்த நாளிற்காகவே நாம் பல நாட்களாக ஜெபித்திருந்தோம். தேவன் நம் சார்பாக வல்லமையோடு எழுந்து எப்படி போரிடுவார் என்பதை நாம் உணர்ந்து கொள்ளவில்லை. மேலும் இஸ்ரயேலின் மீதான மேசியாவின்

இரக்கத்திற்கு முடிவே இல்லை. அவருடைய இரக்கம் இஸ்ரயேலில்தான் தொடங்குகிறது, அனைத்து தேசங்களின் மக்களுடன் பகிர்ந்து கொள்வதற்காகவே இங்கு தொடங்குகிறது" என்று கூறினார்.

"இறுதியாக நம்முடைய தவறுகளை திருத்திக் கொள்வதற்கு நமக்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. நாம் தவறான காரியங்களைத் தெரிந்தெடுத்ததால் சில பாடங்களைக் கற்றுக் கொண்டபோதிலும், அதனால் உண்டான விளைவுகளை சரி செய்வதற்கான காலத்தை நாம் கடந்துவிட்டோம். இதுவே கடந்த காலத்தின் துன்பமாக இருந்தது. பழைய உலகில், நான் இன்னும் சற்று சரியாக செய்திருக்கலாம் என்று நினைக்கும் காரியங்களும் உள்ளன" என்று கூறும்போது அன்னாவின் குரல் சற்று தணிந்து வருத்தத்தோடு ஒலித்தது.

"சரியானதைத் தவறாகவும், தவறானதை சரியாகவும் காட்டிய அந்தகாரத்தின் பொல்லாத ஆவிகளின் வல்லமைகளுக்கு நாம் பலியாகி இருந்தோம். நம்முடைய சொந்த சிந்திக்கும் முறைகளால் மட்டுமல்ல, ஊடகங்களிலிருந்தும் மற்றும் பள்ளிகளிலிருந்தும் கூட இந்தச் சிந்திக்கும் முறையை நாம் பெற்றுக் கொண்டிருந்தோம். தேவனுடைய பரிபூரணமான நீதியை தள்ளிவிட்டு, அவற்றை புகழ்பெற்ற தவறான போதனைகளைக் கொண்டு மாற்றுவதற்கும் என்று நிர்பந்தம் செய்யப்பட்டிருந்தோம்" என்று ரேச்சல் கூறினாள்.

"நாம் அனைவருமே சில தவறான கருத்துக்களைக் கொண்டிருந்தோம். உங்களுடைய உயிரைப் பறித்த அந்த பயங்கரவாதி, தன்னையும் மாய்த்துக் கொண்டான். அவன் மரிக்கும்போது, அவனது இந்தச் செயல்களுக்கு பரலோகத்தில் நல்ல வெகுமதி கிடைக்கும் என்று நினைத்திருப்பான். அவனுக்கிருந்த பகைமையும், அவன் செய்த வன்முறையும் அவனது மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமையும் என்றும் அவன் மரிக்கும்போது

நினைத்திருப்பான். பகைமை என்பது அவனுடைய இரத்தத்திலேயே ஊறியிருந்தது. அவன் பிறந்ததிலிருந்தே அவனுக்கு பகைமை என்ற உணர்வு ஊட்டப்பட்டிருந்தது. வன்முறையானது அவனுடைய வாழ்க்கையின் முடிவாக இல்லாமல், புதிய அத்தியாயத்திற்கான தொடக்கமாக இருப்பதற்காக தேவனுக்கு நன்றி. சரீரப் பிரகாரமான அனைத்து குணமாகுதலையும் மற்றும் அன்பினைக் கற்றுக் கொள்ளவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் அவன் பெற்றுக் கொள்வான்" என்று ஆலன் தொடர்ந்து கூறினான்.

அரியேலும், அன்னாவும் ஆனியையும் பின்னர் ஆலனையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருப்பதை ரெபெக்காள் கவனித்தாள். அவர்கள் ஆலனை இளவயது சிறுவனாகவே பார்த்திருந்தார்கள். ஆனால் ஆனியை ஒரு குழந்தையாக மட்டுமே நினைவில் வைத்திருந்தனர். இருவருடனும் சேர்ந்து இருப்பதில் அவர்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள். இப்போது உயிர்த்தெழுந்து கொண்டிருக்கும் பழைய தலைமுறையினர்களுக்கு, இந்த இரு இளைஞர்களும் (ஆலன், ஆனி), புதிய பூமியின் மாற்றங்களைப் பார்த்து தெளிவாக புரிந்து கொள்ளக் கூடிய வகையில் உறுதியான சான்றுகளாய் இருப்பார்கள் என்பதை ரெபெக்காளால் உணர முடிந்தது. ஆலன் மற்றும் ஆனியைப் பார்க்கும்போது, கால மாற்றம் நடந்துவிட்டதை அவர்களால் புரிந்து கொள்ள முடியும். உயிர்த்தெழுதலுக்கென்று நம்முடைய அடையாளமானது பாதுகாக்கப்படுவது என்பது விசித்திரமான செயல்முறையாகும். இந்த இளைஞர்கள் இருவரும் அரியேல் மற்றும் அன்னாவின் பிரியத்திற்குரிய மகன்கள் மற்றும் மருமகள்களின் சாயலின் ஒற்றுமையைக் கொண்டிருந்தார்கள். மேலும் ஒருவர் உயிர்த்தெழுப்பப்படும்போது, தங்களது நேசத்திற்குரிய குடும்ப உறுப்பினர்களால் சூழப்பட்டிருப்பது என்பது ஒரு மிகப்பெரிய

ஆசீர்வாதமாகும், இது அவர்கள் எளிதாக ஒத்துப்போவதற்கு உதவுவதோடு, பெரிய அளவிலான மகிழ்ச்சியையும் தருகிறது. கிறிஸ்துவின் அன்பான ஏற்பாடுகள் ரெபெக்காளைக் கவர்ந்தன.

"ஆனி, நீ கம்பீரமாகவும், அனைவரையும் கவரக்கூடிய அழகான இளம்பெண்ணாக இருக்கிறாய்" என்று அங்கு நிலவிய அமைதியைக் கலைக்கும் விதமாக அன்னா கூறினார். அப்போது பழங்கள் மேசையின் மீது பரிமாறப்பட்டன. "உனது பள்ளிப்படிப்பை நீ கண்டிப்பாக முடித்திருப்பாய் அல்லவா?" என்று ஆனியிடம் கேட்டார்.

புதிய பூமியில் கல்வியில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும், கணினியிலும், தொலைக்காட்சியிலும் இலவசமாகக் கிடைக்கக்கூடிய வகுப்புகளை எவ்வாறு முற்பிதாக்கள் கற்றுக் கொடுக்கிறார்கள் என்பதையும் ஆனி, அன்னாவிடம் விளக்கினாள். "இப்போது மிகவும் எளிதாகக் கற்றுக் கொள்ள முடிகிறது. ஏதேனின் பழங்கள் நமது சிந்தைக்குள் பல அதிசயங்களைச் செய்கின்றன் கடினமான பாடங்களை கிரகித்துக் கொள்வதற்கான நமது திறனானது பத்து மடங்கு அதிகரித்துள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகளுக்கு எங்களைத் தயார்படுத்திக் கொள்வதற்காக நாங்கள் பாடங்களை கற்றுக் கொள்கிறோம், இதன்மூலம் எங்களுடைய சேவை தேவைப்படும் இடங்களில் எங்களால் தன்னார்வத் தொண்டு செய்யமுடியும்" என்றாள்.

"புதிதாக வரப்போகும் தலைமுறையினர்களுக்காக நாங்கள் வீடுகளைக் கட்டுகிறோம், தாவரங்களை வளர்க்கிறோம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குகிறோம். அபரிதமான ஞானம் வழங்கப்படுகிறது. ஒவ்வொருவரும் இதனைப் புரிந்து கொள்வதற்கும், தங்களுடைய பங்களிப்பை சிறப்பாக அளிப்பதற்கும் மனதளவில் தகுதியானவர்களாக இருக்கிறார்கள். அழிப்பதற்காக அல்ல,

ஆசீர்வாதங்கள் அனைவருக்கும் கடந்து செல்வதற்காக உதவுகிறார்கள். இயேசுகிறிஸ்து, அறிவை ஞானமான முறையில் பயன்படுத்துகிறார். அவர் கண் கண்டபடி நியாயம் தீர்க்காமல், நீதியின்படி நியாயந்தீர்ப்பார்'' என்று ஆலன் ஏசாயா தீர்க்கதரிசியின் கூற்றை, அவர்களுடைய நினைவுக்கு வரும்படியாக குறிப்பிட்டான்.

''ஏசாயா புஸ்தகத்தில்....கிறிஸ்துவா? நான் இதை ஒருபோதும் அறிந்ததில்லை என்று நினைக்கிறேன்'' என்று அரியேல் மெதுவாகப் பேசினார்.

மதிய உணவின் போதும் உரையாடல் தொடர்ந்தது. தண்ணீரை உள் வாங்கிக் கொள்ளும் தன்மை கொண்ட பஞ்சைப் போல அரியேலும், அன்னாவும் இயேசுதான் மேசியா என்ற உண்மையை எந்தவிதமான எதிர்ப்புமின்றி உள்வாங்கிக் கொண்டார்கள்.

''என்னுடைய இருதயத்தை எவ்வாறு கையாள்வது என்பது மேசியாவுக்குத் தெரியும். தன்னையும், எங்களையும் அழித்த அந்த பரிதாபமான ஆத்துமாவை எவ்வாறு கையாள்வது என்பதும் அவருக்குத் தெரியும்'' என்று அன்னா கூறியபோது, அரியேல் அதற்கு உடன்பட்டு தன் தலையை அசைத்தார்.

''எல்லாம் புரிய ஆரம்பிக்கிறது'' என்று அரியேல் முணுமுணுத்தார். ''அனைத்து தீர்க்கதரிசனங்களைப் பற்றியும் நான் சிந்தித்துப் பார்த்திருக்கிறேன். நமது நியாயப்பிரமாணம் கூறிய பலிகள் எல்லாமே மேசியாவின் பலியைத்தான் குறிக்கிறது என்பதையும், நீங்கள் ''அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்'' என்று அழைப்பவர்களைக் கூட்டிச் சேர்த்தபின் அவருடைய ஆளுகையானது, இஸ்ரயேலிலும் மற்றும் உலகமெங்கிலும் ஸ்தாபிக்கப்படும் என்பதையும் நான் பார்க்கத் தவறிவிட்டேன்'' என்று அரியேல் தொடர்ந்தார்.

இயேசு கிறிஸ்துதான் அவர்களின் மேசியா என்பதை அரியேலும், அன்னாவும் விரைவாக ஏற்றுக் கொண்டதில் ரெபெக்காள் ஆச்சரியப்படவில்லை. எந்த தரநிலையின் கீழ் இருந்து நியாயந்தீர்த்தாலும், அரியேல் மற்றும் அன்னா இருவரும் மிகவும் நல்ல மனிதர்களாகவே இருந்தனர். அவர்கள் தேவனை நேசித்தார்கள், அவர்கள் நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசிகளையும் நேசித்தார்கள். பழைய உலகில் ஒவ்வொரு வார இறுதியிலும் யூத ஜெப ஆலயங்களில் நடைபெறும் கூட்டங்களுக்குச் செல்வது அவர்களின் வழக்கமாக இருந்தது. வழிபாடுகளில் தனது இளைய மகன் ஜேக் காட்டிய கவனம் அவரைப் பெருமை அடையச்செய்தது. ஆனால் லெவ்வின் ஆர்வமின்மை தொடர்ந்து எரிச்சலை ஏற்படுத்தி இருந்தது. கடந்த காலத்தில் இருந்திருந்த முரண்பாடுகள் இப்போது திரும்பவும் வரும்போது சமாளிப்பதற்காக ரெபெக்காள் தன்னைத்தானே தயார்படுத்திக் கொள்ள முயன்றாள்.

"உங்களுடைய இருதயம், என் இருதயத்தை விட மிகவும் விசாலமானது, அப்பா. கிறிஸ்துவை மேசியாவாக அங்கீகரிக்கும் நிலைக்கு வர எனக்கு ஒரு வாரம் பிடித்தது" என்று கூறி லெவ் புன்னகைத்தான்.

"நீ எப்போதும் கேட்பதற்கு ஆர்வமாய் இருந்ததில்லை" என்ற அரியேலின் வார்த்தைகள் எரிச்சலுடன் வந்தது. "ஆனால் நீ, ஜேக், கற்றுக் கொள்ளவதற்கு எப்போதும் ஆர்வம் காட்டுவாய்" என்று கூறியபடி அரியேல் ஜேக்கின் முதுகில் தட்டினார்.

"அது பல ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது, அன்பே. பழைய காரியங்களைக் குறித்து நாம் இப்போது பேச வேண்டாம்" என்று அன்னா மெல்லிய குரலில் அரியேலுக்கு அறிவுரை கூறி அவர் பேசியதை ஏற்றுக் கொள்ளமுடியாமல் தலையை ஆட்டினார்.

லெவ்வைப் பற்றின அவனுடைய தந்தையின் கருத்து லெவ்வின் மனதில் தூங்கிக் கொண்டிருந்த சில நினைவுகளை விழித்தெழச் செய்ததை ரெபெக்காள் கவனித்தாள். லெவ்வினுள் நிகழும் இந்த உணர்ச்சிப் போராட்டத்தை மாற்றுவதற்கான அவளது விருப்பத்தை அவள் கட்டுப்படுத்திக் கொண்டாள், ஏனென்றால் சில பிரச்சனைகளை வெளிப்படையாகப் பேசித் தீர்த்துக் கொள்வது மிகவும் முக்கியமானது என்று அவள் கருதினாள்.

"நீ ஒரு இளைஞனாக இருந்தும் தைரியமில்லாதவனாக, எதையும் எதிர்கொள்வதற்கு பயந்து தடுமாறுபவனாகவும் இருந்தாய்" என்று அரியேல் லெவ்விடம் கூறினார்.

"அரியேல், உங்கள் மகனைப் பாருங்கள், அவனது முகம் மாறுவதைப் பாருங்கள்" என்று அரியேல் பேசாமல் இருக்கும்படியாக அன்னா மீண்டும் வற்புறுத்தினார்.

## ஒரு சங்கடம்

அரியேல் தனது கடந்த காலத்தில், தனக்கிருந்த கனவுகள் நிறைவேறாததில் கவலை அடைந்தது போலத் தோன்றியது. அரியேல் தொடர்ந்து பேசினார், அன்னா எதுவும் பேசாமல் நின்று கொண்டிருந்தார்.

"பின்னர் ஒருமுறை நீ உயர்நிலைப் பள்ளியில் படிக்கும்போது, உன்னுடைய தர மதிப்பீடுகளை மாற்றி, நம் குடும்பத்திற்கு அவமானத்தைக் கொண்டு வந்தாய்" என்றார்.

லெவ்வின் முகம் இருண்டுபோனது. தனது சகோதரனைக் காப்பாற்றுவதற்கு வசதியாக ஜேக் தனது நாற்காலியில் நேராக நிமிர்ந்தமர்ந்து, சரியான தருணத்திற்காகக் காத்திருந்தான்.

"அப்பா, என்ன நடந்தது என்று கூறுவதற்கு நீங்கள் எனக்கு வாய்ப்பினைக் கொடுக்கவே இல்லை" என்று லெவ் அமைதியான குரலில் உறுதியுடன் கூறினான்.

"சங்கடமாக...." அரியேல் தொடர்ந்தார்.

"அரியேல், லெவ் உங்களிடம் ஏதோ பேச விரும்புகின்றான்" என்று அன்னா அவசர தொனியில் கூறினார்.

"பரவாயில்லை....அம்மா, எனக்காக நானே பேசுகிறேன்" என்று தனது தாயைப் பார்த்து லேசாக புன்னகைத்தபடி லெவ் பதிலளித்தான். "அப்பா, நீங்கள் சொல்வதுபோல், நான் எதிலும் தடுமாற்றம் உடையவனாகவும், வேத வசனங்களைக் கற்பதில் ஆர்வம் இல்லாதவனாகவும்தான் இருந்தேன். நான் சுதந்திரமாக இருந்தேன், எனக்கு தேவன் தேவை என்று நான் நினைக்கவில்லை. இந்த ஒரு மனநிலையினால் நான் அதிகமானவைகளை இழந்தும் இருக்கிறேன். ஆனால் அதற்காக உங்களது அன்பையும், பாராட்டையும் ஜேக்கை விட எனக்கு குறைவாகத் தர வேண்டும் என்று அர்த்தமல்ல. உங்களது கவனத்தை பெறுவதற்கு நான் பாத்திரவான்தான் என்பதை நிரூபிக்க என் வாழ்நாள் முழுவதும் செலவிட்டேன். நீங்கள் அதைப் பொருட்படுத்தவேயில்லை, ஆனால் ஜேக் மீதான உங்களது விருப்பமானது, எங்களுக்கிடையே ஒரு இடைவெளியை உண்டுபண்ணியது" என்று லெவ் கூறினான்.

தனது முந்தைய வாழ்க்கையில் தன் தந்தையிடம் பேசுவதற்கு தைரியமின்றி இருந்த லெவ், சில கசப்பான உண்மைகளைப் பேசுவதைப் பார்த்த ஜேக் தனது கண்களில் ஆச்சரியத்துடன் நாற்காலியில் நேராக நிமிர்ந்தமர்ந்தான்.

தனக்கு முன் மேசையிலிருந்த கோப்பையை அரியேல் பதட்டத்துடன் ஒரு புறத்தில் இருந்து மற்றொரு புறத்திற்கு நகர்த்தி தனது அசௌகரியத்தை வெளிப்படுத்தினார்.

"அப்பா, நீங்கள் இன்னொரு கோப்பை தேநீர் குடியுங்கள். நான் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்" என்று லெவ் கூறினான்.

ரெபெக்காள் தேநீர் பாத்திரத்திலிருந்த தேநீரை எடுத்து விரைவாக அரியேலின் கோப்பையில் ஊற்றினாள். அரியேல் அவர்கள் கூறியபடி கோப்பையிலுள்ள தேநீரைப் பருகினார், பின்னர் அவரது கோப்பையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"அப்பா, தயவுசெய்து, என்னைப் பாருங்கள்" என்று லெவ் தொடங்கினான்.

அரியேல் நிமிர்ந்து தனது மகனின் முகத்தைப் பார்த்தார். "அப்பா, பள்ளியில் தர மதிப்பீடுகள் மாறியது உண்மைதான். மதீப்பீடுகளை நான் மாற்றியதைப் போலவே சித்தரிக்கப்பட்டது, ஆனால் நான் அதனைச் செய்யவில்லை, அப்பா. நான் சொல்வதை நீங்கள் கேட்க வேண்டும். நான் தர மதிப்பீடுகளை மாற்றவில்லை" என்றான்.

அரியேல் தனது வெற்றுக் கோப்பையையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார், அவருடைய கண்கள் கண்ணீரால் நிறைந்திருந்தது. "மிகவும் சங்கடமாக இருக்கிறது". அவர் தனக்குள்ளாகவே அந்த வார்த்தையை மீண்டும் மீண்டுமாக சொல்லிக் கொண்டிருந்தார். பின்பு எழுந்து தனது அறைக்குள் சென்று கதவை தாழிட்டுக் கொண்டார்.

"அவர் காரியங்களை மதிப்பீடு செய்கிறார், லெவ், அன்பே. அவருக்குச் சிறிது நேரம் கொடு" என்று லெவ்வின் முதுகில் தட்டியவாறு கூறிய அன்னாவின் குரல் தடுமாறியது.

"அம்மா, என் முதல் நாளில் எனக்கும் நேரம் தேவைப்பட்டது. எல்லாவற்றையும் சமாளிக்க முடியாமல் நானும் திணறினேன். எனக்கு

மேசியாவை ஏற்றுக் கொள்வதில் கடினம் இருந்தது. ஆனால் அப்பாவைப் பொறுத்தவரையில்.... அது...."

என்னால் இப்போது புரிந்து கொள்ள முடிகிறது, லெவ். "உன்னுடைய மற்றும் அவருடைய கடந்த காலத்தை ஏற்றுக் கொள்கிறேன் லெவ். அவரது இரண்டு மகன்களும் மிகவும் வித்தியாசமானவர்கள் என்றும், ஆனால் அந்த வித்தியாசத்தினால் ஒருவர் மற்றவரைவிட குறைந்தவர் அல்ல என்பதையும் ஏற்றுக்கொள்கிறேன். நானும் இந்த ஒரு காரியத்தை வேறு விதமாகக் கையாண்டிருக்கலாம் என்பது இப்போது புரிகிறது. எது நடந்தாலும் அந்த விஷயத்தை இலகுவாக்க முயற்சித்ததற்குப் பதிலாக, நீ உனக்காகப் பேசுவதற்கான வாய்ப்பை உனக்கு வழங்க நான் முயற்சித்து இருக்கலாம். எந்த ஒரு விஷயத்தையும் அதன் அடி ஆழம் வரை சென்று பேசித் தீர்த்ததேயில்லை. இப்போது எனக்குத் தெரிகிறது... நீயும், ஜேக்கும் வளர விரும்பியபடி வளர நான் உங்களை விடவில்லை என்பதை நான் இப்போது உணர்கிறேன். எல்லா நேரத்திலும் உங்களை மீட்பதற்கு வருவதன் மூலம் உங்கள் இருவரையும் நான் காயப்படுத்தி இருக்கிறேன், அது உங்கள் இருவருக்குள்ளும், உங்கள் தந்தைக்கும் நடுவில் இருந்த உறவிலும் விரிசலை ஏற்படுத்தியிருக்கிறது. ஆனால் நீ இப்போது நன்றாக வளர்ந்துவிட்டாய், லெவ். நீ வெளிப்படுத்த விரும்பியபடி உன் மனதிலுள்ளதை மரியாதையுடனும், நேரடியாகவும் இப்போது உன்னால் பேச முடிகிறது. அரியேல் தன் வாழ்க்கையின் முதல் நாளிலேயே அநேக பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டியுள்ளதை எண்ணி நான் வருந்துகிறேன்" என்று அன்னா கூறினார்.

## அரியேலின் மன்னிப்பு

அரியேலின் அறைக் கதவு மெதுவாகத் திறக்கும் வரை அவர்களது உரையாடல் மேசையைச் சுற்றி அமர்ந்தவாறு அடுத்த ஒரு மணி நேரம் தொடர்ந்தது.

அரியேல் தனது தொண்டையைச் செருமியபடி மேசையை நோக்கி நடந்து வந்தார். "நான் உணர்ச்சிவசப்பட்டதற்கு என்னை மன்னியுங்கள். நான் குறிப்பாக உன்னிடம்தான் மன்னிப்பைக் கேட்கிறேன், லெவ்" என்றார். அரியேல் லெவ்வின் நாற்காலியின் அருகே நடந்து சென்று தன் மூத்த மகனின் தோள்களில் தன்னுடைய கைகளைப் போட்டு அணைத்தவாறு தன் மகனிடமாய் குனிந்து காதில் கிசுகிசுத்தார். "நாம் மற்றொருமுறை விரைவில் இதைப்பற்றி பேசுவோம், மகனே. இப்போது பேசினால் நீண்ட நேரமாகும்" என்று கூறிவிட்டு அன்னாவின் அருகே சென்று அமர்ந்தார்.

"இந்த முதியவருக்கு அவர் கற்றுக்கொள்வதற்கு இன்னும் வயது இருக்கிறது என்பதை புரிந்து கொண்டு, அவருக்கு நீங்கள் சிறிது அவகாசம் கொடுக்க வேண்டும்..." என்று அரியேல் நகைச்சுவையுடன் கூறினார். லேசான மனநிலை மீண்டும் அந்த அறையை நிரப்பியது.

❀❀❀

**"எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்." (மத்தேயு 6:12)**

# அத்தியாயம் - 16

மறுநாள் காலையில் ஆரோன் குடும்பத்தினர் தொழிற்சாலையைப் பார்வையிடச் சென்றனர். புதிய உலகில் இருந்த தொழிற்சாலை அரியேலையும், அன்னாவையும் மிகவும் கவர்ந்தது. வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான பொருட்களைத் தயாரிக்கும் செயல்முறையானது மிகவும் எளிமையானதாகவும், குறைந்தபட்ச உழைப்பில் அதிகபட்ச உற்பத்தித் திறனைக் கொடுப்பதாகவும் இருப்பதைக் கண்டு அவர்கள் பிரம்மித்தார்கள். புதிய பூமியின் ஒவ்வொரு பகுதியினையும் கண்டு அவர்கள் அகமகிழ்வதைப் பார்த்து லெவ் சிரித்தான்.

அன்றைய நாளின் காலை வேளையின் முதல் வழிபாட்டு ஆராதனையைக் குறித்து அரியேலால் வியப்படையாமல் இருக்க முடியவில்லை. "அருமையான பாடல்களுடன் சரியான வழியில் ஒவ்வொரு நாளையும் துவங்குவதற்கான மிகச் சிறந்தமுறை இதுவே" என்று அவர் வியப்போடு கூறினார்.

"ஆண்கள் தங்களது கருத்துக்களை எளிதாகப் பகிர்ந்து கொள்வதைப் போலவே, பெண்களும் தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது. ஒருவருக்கொருவர் தங்களது எண்ணங்களைப் பகிர்ந்து கொண்டு, மற்றவர்களை உற்சாகப் படுத்துவதற்கு இந்த வழிபாட்டு ஆராதனை உதவியது". வழிபாட்டுச் சேவையைக் குறித்த அரியேலின் பாராட்டுதல்களில் அன்னாவும் இணைந்து கொண்டார். அன்னாவின் முகம் சந்தோஷத்தால் நிறைந்திருந்தது.

அன்றைய ஆராதனையில் அரியேலும், அன்னாவும் புதிதாக உயிர்த்தெழுப்பப்பட்டிருந்த மற்றொரு நபரையும், அவருடைய குடும்பத்தினரையும் சந்தித்தார்கள். மேலும் ஒவ்வொரு தலைமுறையினரும் அடுத்து வரும் தலைமுறையிருக்காக ஏறெடுக்கும் பிரார்த்தனைகள் மற்றும் ஆயத்தங்கள் குறித்த காரியங்களைக் குறித்து அறிந்து கொண்டார்கள். திரும்பக்கொடுத்தலின் வேலைக்குள் இருக்கும் ஆழத்தை உணரத் தொடங்கினார்கள். மேலும் மரண செயல்முறையின் ஒரு மிகப்பெரிய தலைகீழ் மாற்றத்தை அவர்கள் காண்கிறார்கள் என்பதை அவர்கள் உணரத் தொடங்கினார்கள். மிகவும் கவனமாக வடிவமைக்கப்பட்டிருந்த மீண்டும் ஜீவனுக்குத் திரும்பும் செயல்முறையானது வளர்ச்சியின் பாதையில் நடந்து கொண்டிருக்கிறது. அன்பு செய்யக் கற்றுக் கொண்டவர்களுக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் தருகிறது. அதே செயல்முறை அன்பு செய்யக் கற்றுக் கொள்ளாதவர்களைக் கண்டு கவலையும், அக்கறையும் கொள்கிறது. கற்பிக்கும் செயல்முறைக்கு கவலை, அக்கறை போன்ற உணர்வுகள் மிகவும் முக்கியமானது. மக்கள் தங்களது தவறுகளை சரிசெய்து கொள்வதற்கான வாய்ப்புகளையும், உதவிகளையும் இம்முறை கொடுக்கிறது.

பழைய உலகில் தனது தந்தையை எதிர்கொள்வதற்குப் பயந்து, அவரைப் புறக்கணிப்பதற்குக் காரணமாக இருந்த பயம் இப்போது லெவ்விற்கு இல்லை. தன்னை ஒரு தனி மனிதனாக நிலைநிறுத்திக் கொள்வதற்கான வலிமையும், முதிர்ச்சியும் இப்போதுதான் பெற்றிருப்பதை அவன் உணர்ந்தான். சிறிது கால அவகாசம் கொடுத்தால் அவர்களுக்கிடையேயான மோதல்கள் தீர்ந்துவிடும் என்ற நம்பிக்கை லெவ்வுக்கு இருந்தது. அதற்காகக் காத்திருக்கவும் அவன் தயாராக இருந்தான். இப்போது தனது தந்தை தன்னுடைய

நடவடிக்கைகளின்பேரில் தன்னை விமர்சனம் செய்வதைக் குறைத்திருப்பதை லெவ் உணர ஆரம்பித்தான்.

ரேச்சலும், ரெபெக்காளும் மூத்த ஆரோன்களுக்குத் தொடர்ந்து தொழிற்சாலையைச் சுற்றிக் காண்பித்துக் கொண்டிருந்தார்கள். லெவ், ரூபனைச் சந்திப்பதற்காக அவர்களுடன் செல்வதைத் தவிர்த்து விலகிச் சென்றான்.

## ரூபன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுதல்

லெவ், ரூபனைக் கண்டதும் "ஷாலோம்" என்றான்.

ரூபன், லெவ்வைக் கண்டவுடன் தன் தலையைக் குனிந்தவாறு அமைதியாக நின்று கொண்டிருந்தான். லெவ், அவனுக்கு அருகில் சென்றான். "என்னைத் தனியே விட்டுவிடு, லெவ். என்னுடைய கவலையுடனே என்னை விட்டுவிடு..... இந்தக் கவலை எனக்குத் தேவையான ஒன்றுதான், அதற்கு நான் தகுதியானவன்தான்" என்றான்.

"நீ ஏன் அப்படிச் சொல்கிறாய் ரூபன்?" என்று லெவ் கேட்டான்.

"நான் பல தவறுகளைச் செய்துள்ளேன். அதனால் உண்டான பாரம் என்னை அழுத்துகிறது. இனிமேலும் இந்தச் சுமைகளைச் சுமக்கும் ஆற்றல் என்னிடத்தில் இல்லை. துக்கத்தை ஏற்றுக் கொள்வதற்கு நான் தகுதியானவன்தான், இது எனக்குத் தேவைதான்" என்று ரூபன் தரையைப் பார்த்தவாறே மேலும் கூறினான்.

"நாம் அனைவருமே தவறுகள் செய்துள்ளோம். நம்மையும், மற்றவர்களையும் காயப்படுத்தி இருக்கிறோம். ஆனால் கிறிஸ்து நாம் செய்த எந்த ஒரு தவறையும் பொருட்படுத்தாமல், நமக்கு ஒரு மிகச்சிறந்த பரிசை வழங்கியுள்ளார். நாம் செய்த எந்த ஒரு நல்ல காரியத்தினாலும், நாம் மரண தண்டனையிலிருந்து விடுதலை

பெற்றிருக்கமாட்டோம். ஆனால் கிறிஸ்து, நாம் மரணத்திலிருந்து விடுபடுவதற்கான அத்தகைய சிறந்ததொரு அன்பை நம் மேல் பொழிந்துள்ளார் - நாம் ஜீவனோடு வாழ வேண்டும் என்பதற்காக அவர் மரணத்தை ஏற்றுக் கொள்ளத் தயாரானார். இது ஒரு விலையுயர்ந்த பரிசு ரூபன் - யாருமே இதைப் பெறத் தகுதியானவர்கள் அல்ல - இது ஒரு அன்பளிப்பு - இந்த அன்பளிப்பை ஏற்றுக்கொள்வது மாத்திரமே நம்முடைய பங்காய் இருக்கிறது" என்றான்.

"உனக்குத் தெரியாது, லெவ், நான் என்ன செய்தேன் என்று உனக்குத் தெரியாது" என்று ரூபன் கூறினான்.

"கிறிஸ்துவுக்குத் தெரியும், அவரே உனக்கு ஜீவனைக் கொடுப்பதற்கு உன்னைத் தேர்ந்தெடுத்துள்ளார்" என்று லெவ் பதிலளித்தான்.

அந்த வார்த்தைகள் ரூபனுக்குள் தாக்கத்தை ஏற்படுத்தவே, ரூபன் விரைவாக அண்ணாந்து மேலே பார்த்தான், அவன் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்தது.

"நான் இதற்கு முன்பு இதைக் குறித்து யாரிடமும் கூறியதில்லை, லெவ், எனது மகனின் மரணத்திற்கு நான்தான் காரணம். நான், என் மனைவி, மகன் மற்றும் மகள் நால்வரும், ஒரு சுற்றுலாப் பயணத்திற்குச் சென்றிருந்தோம். என் மகன் கீழே தவறி விழுந்து இறந்ததாகவே தகவல் வெளியானது. ஆனால் உண்மை என்னவென்றால், நான் கோபத்தில் அவனை அடித்தேன், அதில் அவன் பின்னோக்கி நகர்ந்து, ஒரு பாறையில் அவனது தலை மோதும்படியாக விழுந்துவிட்டான், பின்னர் அந்தப் பாறை பள்ளத்தாக்கிலிருந்து உருண்டு கீழே விழுந்து மடிந்தான். என் மனைவிக்குக் கூட இந்த உண்மை தெரியாது. இதை ஒப்புக் கொள்ள முடியாததால் நான் என்னை வெறுக்கிறேன் - என்னால் முடியவில்லை" என்று கூறியவாறு அழுதான்.

"நீ செய்ததை ஏற்கனவே கிறிஸ்து அறிந்திருக்கிறார், ரூபன், அவர் உன்னை ஒரு புதிய வாழ்க்கைக்காக எழுப்பியுள்ளார். அவர் உனக்கு ஒரு புதிய தொடக்கத்தைக் கொடுத்திருக்கிறார்...." என்று லெவ் பதிலளித்தான்.

ரூபன் குறுக்கிட்டுப் பேசினான். "எனது மகன் ஜோசப் உயிர்த்தெழுப்பப்படும் நாளை நான் தாமதப்படுத்தி இருக்கிறேன். நான் எப்படி அவனை எதிர்கொள்வேன்? அவனது தாயை எப்படி எதிர்கொள்ள முடியும்? அவனது மரணம் தற்செயலாக நடந்தது என்று நினைத்து என்னைத் தேற்றிய அனைவரையும் எவ்வாறு எதிர்கொள்வேன்? நான் ஒரு கொலைகாரன், நான் ஒரு வேஷக்காரன். என்னுடைய வலி இன்னும் என்னுடன் இருப்பதால், நான் ஜீவனுக்குத் திரும்பியபோது, நான் உயிர்த்தெழுந்ததற்காக வருந்தினேன்" என்று அழுகையினூடே கூறினான்.

"உன்னுடைய துக்கம் நீங்க ஒரு வழி இருக்கிறது, ரூபன். நீ செய்த தவறைக் குறித்து நேர்மையாக இரு, கிறிஸ்துவிடம் மன்னிப்பு இருக்கிறது" என்ற இந்த வார்த்தைகளை லெவ் கூறினான். ரூபன் கூறிய கொலைகாரன் மற்றும் வேஷக்காரன் என்ற வார்த்தைகள் லெவ்வினுடைய நினைவிற்கு வந்தபோது, தன் வயிற்றில் ஓர் இறுக்கத்தை உணர்ந்தான். போர்க்களத்தில் அவனும் ஒருவருடைய உயிரை எடுத்திருந்தது அவனது நினைவுகளுக்கு திடீரென்று வரவே லெவ் தடுமாறினான். அந்த மரணத்தை ஒரு கொலை என்று கருத முடியாது, ஆனாலும் அவன் எடுத்த உயிரானது அவனது இருதயத்திற்கு ஒரு சுமையாகவே இருந்து கொண்டிருக்கிறது, இதைப் போன்ற போரின் நிகழ்வுகள் நம்முடைய அதிர்ஷ்டத்தைப் பொறுத்தே உள்ளது. மற்றவருடைய ஜீவனை நாம் எடுக்கும் வேளையில், நம்முடைய ஜீவனையும் ஒருவர் எடுக்கலாம். வாழ்க்கை

விலைமதிப்பற்றது. ரூபனுடைய மகனின் மரணம் முன்கூட்டியே திட்டமிடப்பட்ட கொலை அல்ல, ஆனால் தற்செயலாக நடந்த மனிதக் கொலையாகும் என்று எண்ணினான்.

## லெவ்வின் வாக்குமூலம்

"ரூபன், நீ பகிர்ந்து கொண்ட காரியம், எனக்கும் என் வாழ்கையில் நடந்த ஒரு நிகழ்வை நியாபகப்படுத்துகிறது. நான் போரில் இறப்பதற்கு சற்று முன்பாக, எதிரிப் படையில் இருந்த ஒரு படைவீரனைச் சுட்டுக் கொன்றேன். எதிரி தன் தலையைத் தூக்கியவுடன் சுடுவதற்கு ஏதுவாக நான் கவனமாக என் துப்பாக்கியைக் குறிபார்த்துக் காத்திருந்தேன். என் துப்பாக்கியின் தோட்டா அவரைத் தாக்கியதால் அந்தப் படைவீரன் விழுந்ததை நான் கண்டேன், பின்னர் அவரிடமிருந்து எந்தவிதமான எதிர்த்தாக்குதலும் எனக்கு வரவில்லை. அது ஒரு கொடுமையான வியாபாரம், கொலை செய்யும் வியாபாரம். அப்படைவீரனின் மரணத்தில் எனக்கு எந்த மகிழ்ச்சியும் ஏற்படவில்லை. தெரிந்தே ஒரு மனித உயிரை எடுக்கும் உணர்வை என்னால் ஒருபோதும் மறக்கமுடியவில்லை. இது என் வேலை - என் கடமையாக இருந்தாலும், நான் அதை விரும்பவில்லை. போரானது மனிதனுக்கு எதிராக மனிதனைத் தூண்டியது. அந்த நிமிடம் வேண்டுமானால் நான் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் அடுத்த நிமிடமே நானும் தாக்குதலுக்குள்ளாகி இறந்துவிட்டேன்" என்றான்.

"போர்க்களத்தில் நான் ஒரு படைவீரனைக் கொன்றேன், ஆனால் அவர் மரிக்க விரும்பவில்லை என்பதை நான் உணர்ந்தேன். நான் கொன்ற அந்த மனிதனைச் சந்தித்து மன்னிப்பு கேட்பேன் என்று நம்புகிறேன்" என்று லெவ் கூறினான்.

"உயிரைப் பறிகொடுப்பது என்பது ஒரு கடைசிக் காட்சியாகத் தோன்றலாம். ஆனால் கிறிஸ்து மரித்தவர்களை மரணத்திலிருந்து

எழுப்புவதால், மரணம் என்பது மீண்டும் ஜீவனுக்குத் திரும்பும் வரையிலான ஒரு தற்காலிக தூக்கம் மட்டுமே. நீ உனது மகனைக் கொல்வதை விரும்பிச் செய்யவில்லை என்பது உனது மகனுக்கும் தெரியும். நீ கோபப்பட்டது உண்மைதான். ஆனால் உன்னுடைய கரங்களில் மகனாக உயிர்த்தெழும் அந்நேரம் அவன் சந்தோஷமாகவே இருப்பான். அவன் உன்னை நேசிப்பான்'' என்றவாறு லெவ் பேசினான்.

ரூபன் தன்னைத் தழுவ வருவதை லெவ் உணர்ந்தான், அவனும் அவனை ஏற்று அணைத்தான். இருவரும் அழுதனர். ''நம் இருவருக்குமே சோகமான நினைவுகள் உள்ளன, லெவ்''. நீ போரில் கொன்ற மனிதனுடன் உன்னால் சமாதானம் ஆக முடியுமென்றால், எனக்கும் கொஞ்சம் நம்பிக்கை உள்ளது என்று ரூபன் கூறினான்.

''போர்க்களத்தில் எதிரியின் மேல் பரிதாபம் காட்டக்கூடாது என்று கற்பிக்கப்பட்டிருந்ததை அறிவேன். ஆனால் அந்த இரக்கமற்ற கொடூரமான கொலை வியாபாரத்தில் நான் ஈடுபட்டிருக்கக் கூடாது என்று இப்போது அடிக்கடி எண்ணுகிறேன் தெரியுமா'' என்று லெவ் கூறினான்.

''அடுத்தகட்ட நடவடிக்கையாக நான் என்ன செய்ய வேண்டும், லெவ்?'' என்று ரூபன் கேட்டான்.

லெவ், ரூபனுடைய கண்களில் இருந்த கண்ணீரைத் தன் கைககளால் துடைத்து விட்டு, ஒரு அடி பின்னாகச் சென்று நின்றவாறு, ''நீ உன்னுடைய கடந்த கால தவறுகளை ஒத்துக் கொண்டு, உண்மையைச் சொல்ல வேண்டும், ரூபன். நீ உனது தவறுகளை ஒத்துக் கொள்ள வேண்டும். உனக்குள் குணமடைதல் துவங்குவதற்கு நீ அனுமதிக்க வேண்டும்'' என்று லெவ் கூறினான்.

''முதன்முறையாக நம்பிக்கை இருப்பது போல் உணர்கிறேன், லெவ். உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது ஒரு முட்டாள் என்று

நான் சித்தரித்த இளைஞனே, இப்போது எனக்குள் இந்த மாற்றம் வருவதற்கு காரணமானவனாய் இருக்கிறான். மேலும் ரெபெக்காளுடனான எனது உறவினைப் பற்றி இனி உனக்கு எந்தக் குழப்பமும் வேண்டாம்.....அவற்றை துடைத்தொழித்துவிட்டேன்...." என்றான்.

"நாளை காலை உன் குடும்பத்தினருடன் ஆராதனைக்கு வருவாய் தானே? நான் உனக்கு இடம் பிடித்து வைக்கிறேன், ரூபன்" என்று லெவ் கூறினான்.

"இப்படியான ஆராதனைகளை நான் இவ்வளவு காலமாக தவிர்த்துவிட்டிருந்தேன். என் வருகையினால் அப்புனித இடம் இருளாக மாறுவதாக நான் எண்ணுகிறேன், லெவ். உண்மை ஒரு நாள் வெளிவரும் என்று எனக்குத் தெரியும். ஆனால் அது என் குடும்பத்தினர்களுக்கும், நண்பர்களுக்கும் கொண்டு வரும் வலியை என்னால் எதிர்கொள்ள முடியாது" என்றான்.

"நீ இவ்வலிகளுடன் இருப்பதை விட, அதற்கான மாற்றத்தைதானே இப்போது செய்ய வேண்டும்?" என்று லெவ் கேட்டான்.

ரூபன் எவ்வளவு கோபக்காரனாகவும், துயரம் மிகுந்தவனாகவும் இருந்தான் என்பதைப் பற்றியும், அது அவனது மகள் மற்றும் மனைவி இருவர் மீதும் ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றியும் லெவ் நினைத்துப் பார்த்தான். ரூபன், தன் தலையை மெதுவாக அசைத்தவாறு... "ஆம் - நான் உண்மையை ஒத்துக் கொள்ளத்தான் வேண்டும். இது என் உள்ளத்தையும் பாதிக்கிறது - கூடவே என் குடும்பத்தாரையும் பாதிக்கிறது" என்றான்.

லெவ் தன் கையை ரூபனிடம் நீட்டியபடி "உனக்குத் துணையாக, நாளை நானும் உன்னுடன் வருகிறேன்" என்றான். பின்பு அன்புடன் தங்களது கரங்களைக் குலுக்கிக் கொண்டனர்.

## நட்பின் வெளிப்பாடு

மறுநாள் காலையில் ரூபன் தன் குடும்பத்தினருடன் ஆராதனைக்கு வந்தான். லெவ் அவர்களுக்காக ஒதுக்கிய இடங்களை கண்டு லெவ்விற்கு அருகே சென்று அமர்ந்தான்.

லெவ், ரூபனின் தோளில் கையைப் போட்டவாறு அவனைப் பார்த்துப் புன்னகைத்தான். "உன்னால் இதைச் செய்ய முடியும், ரூபன், உன்னால் முடியும் என்று எனக்குத் தெரியும்" என்று லெவ் கூறினான்.

ரூபனுடைய சாட்சியே முதலாவதாக இருந்தது. சுற்றுலாவில் மரித்த தனது மகனின் மரணம் பற்றிய உண்மைகள், தன் மகனுக்குத் தான் செய்த தவறை மறைப்பதற்கு எடுத்த முயற்சிகள் மற்றும் தனது இதயத்தின் துயரங்களை மறைக்க தான் எடுத்த முயற்சிகள் குறித்த உண்மையைச் சொன்னபோது ரூபனின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது.

"நான் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுப்பப்பட்டபோது, பழைய உலகில் நான் செய்த தவறுகளினால் ஏற்பட்ட பாரமானது என்னுடைய தோள்களில் சுமையாகத் திரும்பி இருந்தது. நான் மீண்டும் ஜீவன் பெற்றதற்காக வருந்துகிறேன். எனது சொந்த துக்கத்தின் காரணமாக மற்றவர்களையும் காயப்படுத்தியதற்காக நான் வருந்துகிறேன். ஆனால் நான் இப்போது தேவனின் மன்னிப்பையும், கிறிஸ்து மற்றும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின் உதவியையும் நாடுகின்றேன். நான் தேவனுக்கு எதிராகப் பாவம் செய்திருக்கிறேன், எனக்கு எதிராகவும் நான் பாவம் செய்திருக்கிறேன், என் மகனுக்கும், என் குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும் எதிராகவும் நான் பாவம் செய்திருக்கிறேன்" என்றான்.

ரூபனின் மனைவி எழுந்து விரைவாக அவனுக்கருகே சென்று, அவனை அணைத்தபோது அவள் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. பின்னர் அவர்களின் செல்ல மகளும் அவர்கள் இருவரிடமும் ஓடினாள், "அப்பா, அப்பா, என் பக்கத்தில் வந்து உட்காருங்கள், வாங்க" என்று அழைத்தாள். ரூபன் அவளது சின்னஞ் சிறு மேனியை வாரி எடுத்து தனது மார்போடு அணைத்துக் கொண்டான். "அப்பா இதுவரையில் மோசமானவனாக இருந்தேன். ஆனால் இனி நான் வித்தியாசமானவனாக இருப்பேன், நீ வேண்டுமானால் பார், செல்லம்" என்று அவனும், அவனது மனைவியும் தங்கள் இருக்கைகளுக்குத் திரும்பிச் செல்லும்போது, அவன் மென்மையான குரலில் பேசினான்.

லெவ் உடனடியாக எழுந்து ரூபனுக்கு அருகே நின்றவாறு, அடுத்ததாக தனது சாட்சியைக் கூறத் தொடங்கினான். "நான் அளிக்கவிருக்கும் சாட்சியத்திற்கு எனது நண்பர் ரூபனுக்கு, நான் நன்றி தெரிவிக்க வேண்டும்" என்று கூறியவாறு மரியாதையைத் தெரிவிக்கும் விதமாக லெவ், ரூபனின் தோள்களில் தன் கைகளை வைத்தான்.

"குற்ற உணர்வைத் தவிர்ப்பதில் நான் மிகச் சிறந்தவன், நேற்று ரூபன் என்னிடம் தனது குற்றங்களை ஒப்புக்கொள்ளும் போதுதான், எனது புதிய வாழ்க்கையில் இது வரையிலும் நான் வெளிப்படையாகக் கையாளாத என் கடந்த கால நிகழ்வு ஒன்று இருப்பதை உணர்ந்தேன்" என்று லெவ் கூறினான். பின்பு தான் ஒரு மனிதனுடைய உயிரை எடுத்த போர்க்களத்தின் காட்சிகளை விவரித்தான். எதிரிப் படையின் சிப்பாய் மீது தனக்கிருந்த ஆத்திரத்தைப் பற்றிய உண்மையைப் பகிர்ந்து கொண்டபோது, லெவ்வின் குரல் உணர்ச்சிப் பெருக்கினால் உடைந்தது.

"அவருடைய பெயர் எனக்குத் தெரியவில்லை, ஏன் அவருடைய முகத்தைக் கூட நான் நேரில் பார்த்ததில்லை. அவர் யாரோ ஒருவருடைய மகனாகவோ, தந்தையாகவோ, கணவனாகவோ இருந்திருக்கக்கூடும். அவர் யார் என்றே எனக்குத் தெரியாது. நான் அவரைக் கொன்றதற்குக் காரணம் ஒருவேளை, என் மனைவி அன்யாவைக் கொன்றவர்களின் மீது நான் அடக்கி வைத்திருந்த கோபமாகக்கூட இருக்கலாம் அல்லது எனக்குக் கற்பிக்கப்பட்டபடி, கொலைத் தொழிலில் பண்பட்ட ஒருவர் போரின் உக்கிரத்தில் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்திருக்கலாம், ஒரு கொலையாளி செய்வதைப்போன்று செய்தேன். உண்மையாகவே இதற்கான காரணம் எனக்குத் தெரியவில்லை" என்று லெவ் கூறினான்.

லெவ் தனது வாழ்க்கையில் தேவனின் கிருபைகளைப் பெற்றிருப்பதிலும், தன் குடும்பத்தாரைத் திரும்பப் பெற்றிருப்பதிலும் வெளிப்படும் கர்த்தரின் இரக்கத்தைப் பற்றியும் தொடர்ந்து பகிர்ந்து கொண்டான். "அதனால் நான் இங்கே இருக்கிறேன். நான் உங்களுக்கு முன்பாகவும் மற்றும் தேவனுக்கு முன்பாகவும் நின்று, இத்தனை நாட்கள் ஒப்புக்கொள்ள நான் பயந்திருந்த காரியங்களை ஒத்துக் கொள்கிறேன். மேலும் முன்பு என் இருதயத்தை ஆட்கொண்டிருந்த விரோதத்தை, அன்பினால் நிரப்புவதற்கும் நான் விரும்புகிறேன்" என்றான்.

இந்த வழிபாட்டு ஆராதனையானது, பல சாட்சியங்களுடனும் மற்றும் வேதவசனங்களின் புரிந்து கொள்ளுதலில் உள்ள சவால்கள் குறித்த ஒரு குறுகிய ஆய்வோடும் முடிந்தது. வழிபாட்டின் முடிவில் ரூபனும், லெவ்வும் ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். பின்னர் இருவரும் சக வழிபாட்டாளர்களால் சூழப்பட்டனர். ஒவ்வொருவரும் அவர்களுடைய அனுபவங்களையோ அல்லது ஆறுதலான

வார்த்தைகளையோ பகிர்ந்து கொண்டார்கள். தனது தந்தை ரூபனை அவரது பக்கமாக அழைப்பதை லெவ் கவனித்தான். அவர்கள் இருவரும் ஒருவரோடொருவர் சிறிது நேரம் பேசிவிட்டு பின்பு ஒருவரையொருவர் தழுவிக் கொண்டனர். ஆனால் அரியேல், அன்னாவின் வீட்டிற்கு வரும்வரை லெவ்விடம் எதுவும் பேசவில்லை. மற்ற குடும்ப உறுப்பினர்கள் வீட்டிற்குள் சென்றவுடன் அரியேல், லெவ்வை அணுகி அவனுக்கு அருகில் நின்றார். தன் உதடுகளைக் கடித்தவாறு.....

"லெவ், நான் உன்னிடம் நூறாயிரம் முறை மன்னிப்புக் கேட்க வேண்டும், ஏன் அதற்கும் மேலாகக் கேட்க வேண்டும். எல்லா நேரங்களிலும் உன்னை விமர்சித்துப் பேசியதற்கும், உன்னை உன் சகோதரனுடன் ஒப்பிட்டுப் பார்த்ததற்காகவும், நீ எவ்வாறு இருந்தாயோ, அவ்வாறே உன்னை ஏற்றுக் கொள்ளாததற்காகவும் நான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். நீ கூறிய அனைத்தையும் ரூபன் என்னிடம் தெளிவுபடுத்திவிட்டான். அவன்தான் நீ செய்ததைப் போல காட்டி இருக்கிறான், நான் உன்னை நம்ப மறுத்துவிட்டேன்". அரியேல் தனது கரங்களை தனது மகனின் தோளைச் சுற்றிப் போட்டார்.

"லெவ், இப்போது நினைத்துப் பார்த்தால் எனக்கு வெட்கமாக இருக்கிறது. எனது இளவயதில் நானும் உன்னைப் போலத்தான் இருந்தேன் - எப்போதும் அவசரப்படுபவனாக, ஆராதனைகளில் அவ்வளவாக ஆர்வம் இல்லாதவனாகவே இருந்தேன். நான், எனது போதகரின் ஜெப சால்வையை எடுத்து ஒளித்து வைத்துவிட்டேன். அதை நான் சொந்தமாக்கிக் கொள்ளும் நோக்கத்தோடு எடுக்கவில்லை, அதை அவரிடம் திருப்பிக் கொடுத்துவிட்டேன். அந்த சால்வையை நான்தான் எடுத்தேன் என்பது அங்கிருந்த

அனைவருக்கும் தெரியும். மேலும் நான் எனது குடும்பத்தினருக்கு சங்கடத்தை ஏற்படுத்தியவனாகவே இருந்தேன். உன்னைக் குடும்பத்தை இழிவுபடுத்தினவன் என்று அழைக்கும் போதெல்லாம், நான் என்னை நினைத்தும் வெட்கப்பட்டேன். நான் உன் மேல் வைக்க வேண்டிய நம்பிக்கையை வைக்காமல் விட்டுவிட்டேன். என்னுடைய நம்பிக்கைக்கும், உண்மைக்கும் பாத்திரவானாக நீ இருந்தபோதிலும் நான் உன்னை நம்பாமல் விட்டுவிட்டது மிகப் பெரிய தவறுதான். நான் உன்னிடம் தோற்றுவிட்டேன் மகனே, நான் உன்னிடம் தோற்று விட்டேன்" என்றார்.

அரியேல் வீட்டிற்குள்ளாக நடக்கத் தொடங்கினார். அவரது கரம் இன்னும் லெவ்வைச் சுற்றி இருந்தது. "ஆனால், மகனே, நான் இப்போது உன்னைக் கர்த்தரைத் தேடுகிறவனாக, மற்றவர்களுக்கு உதவி செய்வதை விரும்பும் மனிதனாக, தான் நினைப்பதைச் சொல்வதற்கு பயப்படாத தைரியமுள்ளவனாக, இருதயத்தில் இருப்பதைச் செய்வதற்கு துணிந்த ஒரு மனிதனாகக் காண்கிறேன். லெவ், நான் உன்னை நேசிக்கிறேன்" என்றார்.

அரியேல் நின்று தன் மகனைக் கட்டியணைத்தார். பின்னர் இருவரும் ஒரு புதிய தொடக்கத்தை அமைத்துக் கொள்ளும் ஆர்வத்துடன் அமைதியாகப் பேசிக் கொண்டே அருகருகே நடந்தார்கள். பரஸ்பர அன்பும், மரியாதையும் ஒரு அன்பான உறவை உருவாக்கும்.

❀❀❀

**"தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு."**
**(நீதிமொழிகள் 30:12)**

# அத்தியாயம் - 17

மற்றொரு வேலையைத் தேடிக் கொள்வதில் லெவ் ஆர்வமாக இருந்தான். அவன் பல தொழிற்சாலைகளைத் தொடர்பு கொண்டு விசாரித்தான். ஆனால் பெரும்பாலனவைகளில் போதுமான அளவு ஊழியர்கள் இருந்தனர். கற்றுக் கொள்வது என்பது நேரத்தை வீணடிப்பதாக இல்லாதிருப்பினும், தன்னுடைய எல்லா நேரத்தையும் முழுவதுமாகப் படிப்பதற்கு செலவிடுவதற்கு லெவ் விரும்பவில்லை. அவன் விரைவாகவே பாடங்களைக் கற்றுக் கொண்டான்.

பழைய உலகில் லெவ் கல்லூரியில் மின் பொறியியல் வல்லுநர் படிப்பைப் படித்திருந்தான். அந்த நாட்களில் இருந்த தகவல்களைவிட இப்போது இன்னும் மேம்பட்டிருந்தது. கணிணி தொழில்நுட்பம் லெவ்வைக் கவர்ந்தது. இப்போது அறிவுத்திறன் வேகமாக வளர்ந்தது மட்டுமின்றி, கற்பிக்கும் முறைகளும் மேம்பட்டிருந்தது. பழைய உலகில் ஒரு வருடத்தில் கற்றுக் கொண்டவைகளை, இப்போது அவன் ஒரே மாதத்தில் கற்றுக் கொண்டான்.

## எரேமியா கோஹென்

அன்றைய நாளின் அதிகாலை வேளையில், லெவ்விற்கு தனது பழைய கல்லூரி நண்பனான எரேமியா கோஹனிடமிருந்து அழைப்பு வந்திருந்தது. அவர், லெவ் தங்கியிருக்கும் இடத்தின் அருகாமையிலேயே பல நாட்களாக தங்கி இருப்பதாகவும், தான் லெவ்வுடன் வந்து தங்க முடியுமா என்றும் கேட்டார். லெவ், நண்பனை தனது வீட்டிற்கு மகிழ்ச்சியுடன் வரவேற்றான்.

எரேமியா ஒரு யூத மத குருவாக மாறி இருந்ததால், காலப் போக்கில் இருவருக்கும் இடையிலான தொடர்பு நின்றுவிட்டிருந்தது. லெவ், எரேமியாவின் ஆணவத்தை தெளிவாக நினைவில் வைத்திருந்தான், இருப்பினும் பெரும்பாலான மக்கள் அதை பொறுமையோடு சகித்துக் கொண்டிருந்தனர். எரேமியா, காலையில் லெவ்வினை அழைத்தபோது, தான் லெவ்வினுடைய வீட்டிற்கு வந்து தங்கும்போது, தனக்கு நேரம் இருப்பதால் அங்கிருக்கும் தேவாலயத்தின் வழிபாட்டுச் சேவையில் போதிப்பதற்கு தான் விரும்புவதாகவும், அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வைக்குமாறும் லெவ்விடம் கேட்டுக் கொண்டார். லெவ்விற்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. இதுவரை லெவ் கலந்துகொண்ட எந்த தேவாலயத்தின் வழிபாட்டுச் சேவைகளிலும் குருமார்கள் அல்லது உதவியாளர்கள் பணி புரியவில்லை. உண்மையில் பெரும்பாலான மத குருமார்களும், உதவியாளர்களும் வேதாகமத்தைப் புரிந்து கொள்ளாததாலும், பல்வேறு அரசியல் கட்சிகளுடன் அவர்களுக்கிருந்த முந்தைய தொடர்புகளாலும் அவர்களுடைய மதிப்பினை இழந்திருந்தார்கள்.

எரேமியாவுக்கு எப்படி நாகரீகமான முறையில் மறுப்பு தெரிவிப்பது என்று லெவ்வுக்குத் தெரியவில்லை. வழக்கமாக இருக்கும் யூத வழிபாட்டுக் கூட்டத்தின் போதனை முறையிலிருந்து, இப்போதைய முறையானது முற்றிலுமாக வேறுபட்டது என்பதை லெவ் எரேமியாவிடம் விளக்க முயன்றிருந்தான். ஆனால் தான் தேவாலயத்தில் போதிக்க வேண்டும் என்று எரேமியா வற்புறுத்திக் கேட்டுக் கொண்டார். லெவ், எரேமியாவிடம் தனது வீட்டிற்கு வருவதற்கான வழியையும், ஆராதனை துவங்கும் நேரத்தைப் பற்றியும் கூறி இருந்தான்.

லெவ் தொலைபேசியை வைத்த சிறிது நேரத்திற்குள்ளாகவே எரேமியா வந்துவிட்டார். வழக்கமான வாழ்த்துக்களுக்குப் பிறகு

எரேமியா, லெவ்விடம் தான் இறந்துவிட்டதாகவும், சமீபத்தில்தான் உயிர்த்தெழுந்து வந்ததாகவும் கூறினார். அவரது மரணம் போரினால் ஏற்படவில்லை என்றும், ஆனால் எருசலேமுக்கு எதிரான முற்றுகைக்கு சில நாட்களுக்கு முன்பாக ஒரு வாகன விபத்தில் மரித்ததாகவும் கூறினார். லெவ், எரேமியாவிற்கு தன் குடும்பத்தினர்களான ரெபெக்காள், ஜேக், ரேச்சல் மற்றும் ஆனி ஆகியோரை அறிமுகப்படுத்த விரும்பியதால், சற்று முன்னதாகவே தேவாலயத்திற்கு அழைத்துச் சென்றான்.

லெவ் அன்றைய வழிபாட்டு ஆராதனையை ஏற்று நடத்தும் பொறுப்பாளர்களிடம், மரபுக்கோட்பாடுகளைப் பின்பற்றும் முன்னாள் மதகுருவான எரேமியா கோஹனை இன்றைய ஆராதனையில் போதிக்க அனுமதிக்க முடியுமா என்று விசாரித்தான். அவர்கள் அவ்வாறு செய்யத் தயங்குவதாகத் தோன்றியது, எரேமியா கூட்டத்தை ஏற்று நடத்த விரும்புகிறாரா என்று லெவ்விடம் கேள்வி எழுப்பினர். எவ்வாறாயினும், எரேமியா தனது வாழ்க்கையில் கர்த்தருடைய வழிநடத்துதல்களைப் பற்றி சில வார்த்தைகளைச் சொல்ல விரும்பினால், அவ்வாறு செய்வதற்கு அவர் வரவேற்கப்படுவார் என்று கூறினார்கள்.

துதிப்பாடல்களும், பிரார்த்தனைகளும் முடிந்த பின்னர், ஆராதனையை நடத்துபவர் கூட்டத்தாரிடம் சமீபத்தில் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த எரேமியா கோஹன் என்ற பார்வையாளர் அவர்கள் நடுவே இருப்பதாகவும், அவர் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புவதாகவும் அறிவித்தார்.

எரேமியா, பார்வையாளர்களின் மத்தியிலிருந்த தனது இருக்கையிலிருந்தபடியே தனது சாட்சியத்தைப் பகிர்ந்து கொள்வதற்குப் பதிலாக, ஆராதனை நடத்துபவர் பயன்படுத்தும்

மேடைக்குச் சென்று, தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, ஆய்வுத் தலைவரை நோக்கித் தன் கையை அசைத்துவிட்டு, பிரசங்கிக்கத் தொடங்கினார்.

"நான் யூத மதகுரு எரேமியா கோஹன்" என்று பார்வையாளர் களுக்குத் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். "இன்னும் அங்கீகரிப்படாத சத்தியத்தை நான் உறுதிபடுத்துகிறேன் என்று நம்புகிறேன். புனித தலைமைத்துவத்தின் முக்கியத்துவம் குறித்து உங்களுடன் பேச நான் இங்கு வந்துள்ளேன்" என்று கூறி தொடர்ந்தார்.

அறை முழுவதிலும் ஓர் அசௌகரியம் நிலவுவதினை லெவ் உணர்ந்தான். அவன் கண்களை மூடி, தன் உதட்டினைக் கடித்தவாறு எரேமியாவின் பேச்சினைக் கேட்டான்.

"நாம், நம்முடைய தேசத்திற்காக யுத்தம் செய்து ஒரு தேசமாகவே பாவம் செய்திருக்கிறோம். அதன் விளைவாக நமக்கான ஆசீர்வாதம் இன்று வரை தடுக்கப்பட்டுள்ளது. மேசியா விரும்பும்போது, நம்முடைய தேசத்தை எந்த வித வன்முறையுமின்றி அவர் நமக்குக் கொடுத்திருப்பார், மேலும் அனைத்து யூதர்களுக்குமான ஆசீர்வாதங்களை உடனடியாகவும், அதேசமயம் முழுமையான அளவிலும் மேசியா கொடுத்திருப்பார்" என்று எரேமியா கூறினார்.

எரேமியா போரினால் ஏற்பட்ட அழிவுகளையும், அதனால் உண்டான வன்முறையினைப் பற்றியும் விவரித்தார். "பிற தேசங்கள் கோரிய நிலத்தை இஸ்ரயேல் கொடுத்திருந்தால் ஓர் உயிரைக் கூட இழந்திருக்கமாட்டோம்" என்றார்.

எரேமியாவின் வார்த்தைகளைக் கேட்ட பார்வையாளர்கள் பொறுமையிழந்தை அவர்கள் வெளிப்படுத்திய அடையாளங்கள் மூலம்

லெவ் அறிந்து கொண்டான். அவர்கள் தங்கள் இருக்கையில் நெளிந்தவாறும், ஒருவருக்கொருவர் சத்தமாக கிசுகிசுத்துக் கொண்டும் இருந்தார்கள். அவர் கிட்டத்தட்ட இருபத்தைந்து நிமிடங்கள் போரினால் ஏற்பட்ட விளைவுகள் குறித்த தன்னுடைய கோட்பாடுகளை விளக்கினார். கடைசியாக எரேமியா ஒரு நீண்ட ஜெபத்தோடு, "எருசலேமின் உண்மையான சமாதானம் எது என்பதை நாம் நம் இருதயங்களிலும், போதனைகளிலும் உணர்ந்திருக்கலாம். வன்முறை மற்றும் பேராசையினால் நிறைந்திருந்த நம்முடைய பழைய வீணான மரபுகளுக்காக நாம் மனம் வருந்துவோம்" என்று கூறி தனது ஜெபத்தை நிறைவு செய்தார்.

வழிபாட்டிற்குப் பின்பு பலர் எரேமியாவைச் சூழ்ந்து கொண்டனர். முதலில் அவர் திருப்தி அடைந்தது போல் காணப்பட்டார், பின்னர் அவரது நிலைப்பாட்டின் மீது மக்கள் கேள்வி எழுப்பவும் மற்றும் சவால்விடுவதையும் கண்டு அவர் குழப்பமடையத் தொடங்கினார். தேவன் தனது தேசத்தையும், மக்களையும் எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பதற்கு, மிகவும் உறுதியான வெற்றியினைப் பெற்றுத் தரும் வழிமுறையினைக் கையாண்டிருந்தார், இப்படி இருக்கும்போது எப்படி ஒருவரால் இவ்வளவு தைரியமாக மற்ற சாத்தியக்கூறுகளைக் கூற முடியும் என்று பார்வையாளர்கள் ஆச்சரியமடைந்தார்கள். ஆனால் எந்தவொரு விமர்சனமும் எரேமியாவை மாற்றவில்லை.

அவர்கள் மௌனமாக லெவ்வின் வீட்டிற்குத் திரும்பிச் சென்றனர். தேநீர் அருந்திய பிற்பாடு, எரேமியாவின் பிரசங்கத்தைக் குறித்து பேசுவதற்கு இதுவே தகுந்த நேரம் என்று லெவ் முடிவு செய்தான்.

"காலைப் பிரசங்கத்தில் நீங்கள் சொன்னதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை, எரேமியா. இஸ்ரயேலின் எதிரிகளை தேவன்

மிகப்பெரிய வல்லமையோடு எதிர் கொண்டார். வேறு வகையில் எதிரிகளை அணுகி இருந்தால், தேவனைப் பிரியப்படுத்தி இருக்கலாம் என்பது போன்ற எந்தவொரு ஆலோசனையும் ஒரு யூகமாக மட்டுமே இருக்கும். தேவன் தமது மக்களுக்குக் கொடுத்த தேசத்தை, பிற தேசங்கள் கைப்பற்ற முயற்சித்தனர். தேசங்களின் ஆக்கிரமிப்புகளுக்காக தேவன் அவர்களை தண்டித்தார். வேதாகம தீர்க்கதரிசனங்களும், படையெடுத்து வரும் எதிரிகளை அழித்து, தேவன் இஸ்ரயேலைப் பாதுகாப்பார் என்று தெளிவாகக் காட்டுகின்றன, மேலும் தேவனுடைய வார்த்தையின் துல்லியத் தன்மையை வரலாறு நிறைவேற்றியுள்ளது. என்னை மன்னிக்கவும், எரேமியா, உங்கள் கருத்தோடு என்னால் உடன்பட முடியாது" என்றான்.

இருவருக்குமிடையே வாக்குவாதம் தொடர்ந்தது. எரேமியா மேலும் மேலும் கோபமடைவதை லெவ் கவனித்தான். அவரது நெற்றியில் உள்ள நரம்புகள் புடைத்தன, அவர் தொடர்ந்து மிக வேகமாகப் பேசினார், லெவ்வால் ஒரு வார்த்தையைக் கூட இடையே பேச முடியவில்லை. எரேமியா ஆழ்ந்த மூச்சை எடுத்து நெற்றியில் இருந்த வியர்வையைத் துடைக்க முற்பட்ட இடைவெளியில் பேசுவதற்கான வாய்ப்பை லெவ் எடுத்துக் கொண்டான்.

"உண்மைக்குப் புறம்பான எதையும் பிரசங்கிக்க அனுமதிக்காத சக்தி வாய்ந்த ஆவிகள், உன்னைப் பேச முடியாதபடி செய்வதற்கான ஆபத்திற்குள் நீ இருக்கிறாய் என்றான்". ரூபன் மேயரூடன் தனக்கு உண்டான முதல் விளைவைப் பற்றின சொந்த அனுபவத்தை லெவ் பகிர்ந்து கொண்டான்.

லெவ் கூறியதைக் குறித்த எதைப் பற்றியும் சிந்திக்காமல் எரேமியா மேலும் எரிச்சலடைந்தார். "சரிதான், உனக்குக் கொடுக்கப்பட்ட தண்டனைக்கு நீ உரியவன்தான் மற்றும் நீ உன்னுடைய தவறைப்

புரிந்துகொள்ளவும் அது உனக்கு உதவும். மக்கள் தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகத் தாக்குதலைக் கையிலெடுக்க முற்படும்போது, நீ பெற்றதைப் போன்ற பின்விளைவுகளுக்கு ஆளாகி இருக்கின்றனர் என்று நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் நான் வன்முறையோடு தொடர்புடைய எந்த ஒரு காரியத்தையும் கூறவில்லை. என்னுடைய யோசனையானது, எதிரிகள், இஸ்ரயேல் மீது சுமத்திய நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டிருந்தால் வன்முறை தவிர்க்கப் பட்டிருக்கும் என்பதே எனது எண்ணமாக இருக்கிறது" என்றான்.

"சரிதான், ஆனால் உனது சிறந்த ஞானமானது பயன்படுத்தப் பட்டிருந்தால், போரின் முடிவுகள் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும் என்று நீ குறிப்பிட்டாய். ஆனால் அவ்வாறு கூறுவது தேவனுக்கே ஒரு சிறந்த வழியை பரிந்துரைப்பது போன்ற அபாயத்திற்குள் உள்ளது போல் தோன்றுகிறது. இது மற்றொரு வகையிலான வன்முறை எரேமியா. தேவனுடைய வார்த்தைக்கும், அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அவர் தேர்ந்தெடுத்த வழிமுறைக்கு எதிரான வன்முறை" என்று அமைதியாகவும் அதே சமயத்தில் உறுதியோடும் லெவ் கூறினான்.

இருவருக்கும் லெவ் உயர்த்தெழுதலின் தேநீரை ஊற்றினான். இருவரும் சமையலறை மேசையில் அமர்ந்தார்கள்.

## எரேமியா தொடர்ந்து தங்குதல்

எரேமியா திடீரென்று அமைதியானார். "காலையில் எனக்கு ஒரு வேலை இருக்கிறது, அதனால் நான் உன்னுடன் இரவுத் தங்கலாமா? நாளைய தேவாலய கூடுகை வரை நான் உன்னுடன் தங்க விரும்புகிறேன். கூறப்போனால் நான் ஒருவேளை எனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும்" என்றான்.

"என் வீட்டில் தங்க உன்னை வரவேற்கிறேன், எரேமியா"என்று லெவ் பதிலளித்தான்.

விரைவான மதிய உணவிற்குப் பிறகு, எரேமியா வெளியேறிய பின் லெவ் சற்று நிம்மதியாக உணர்ந்தான். அந்த நாளின் எஞ்சிய சிறிது நேரத்தை, அண்மையில் அவன் கற்றுக்கொண்ட கிளை நறுக்கும் வேலையை, அங்கிருந்த மரங்களுக்குச் செய்து பார்த்தான். பகல்பொழுது விரைவாகக் கடந்து சென்றது. பிற்பகலின் பெரும்பகுதியை வேதாகமம் மற்றும் மதச்சார்பற்ற படைப்புகள் இரண்டையும் படிப்பதில் லெவ் செலவிட்டான்.

எரேமியா மாலை உணவிற்கான சரியான நேரத்தில் திரும்பினார். அவர் உணவிற்காக ஆசீர்வாதத்தை வழங்கி, கிறிஸ்துவின் பெயரில் தனது ஜெபத்தை முடித்தார்.

முன்பு மரபுக் கோட்பாடுகளை மேற்கொள்ளும் மத குருவாக இருந்த ஒருவரிடமிருந்து இதனைக் கேட்பது நன்றாய் இருப்பதாக லெவ்விற்குத் தோன்றியது. எரேமியா ஒரு திறமையான பேச்சாளராக இருந்தார். எந்தவொரு கருத்து விவாதத்திற்குள் வந்தாலும், தன்னுடைய வலுவான கருத்துக்களை வெளிப்படுத்தி சமாளிக்கக் கூடியவராகவும் இருந்ததார். சிலவற்றை லெவ்வால் ஒத்துக்கொள்ள முடிந்தது. ஆனால் பெரும்பாலானவற்றை வீணான வார்த்தைகளாகவே விட்டுவிட வேண்டியிருந்தது.

லெவ், அவர்கள் பேசிய சிலவற்றை சுவாரஸ்யமான பாதைக்குள் திருப்புவதற்கு முயன்றான். அதனால் எரேமியாவிடம், அவர் எப்போதாவது முற்பிதாக்களைத் தொடர்பு கொண்டிருக்கின்றாரா என்று கேட்டான்.

"இல்லை, அவர்கள் ஓய்வின்றி இருக்கிறார்கள், அவர்களுக்கு எந்தவிதமான சுமைகளையும் கொடுக்க நான் விரும்பவில்லை"என்று

அவர் கூறினார். "அவர்கள் தேவனுடைய அருமையான ஊழியக்காரர்களாகிய ஆண்களும், பெண்களும் என்று நான் அறிவேன். இத்தகைய திறமையானவர்கள் நம்முடைய காரியங்களை நிர்வகிக்கிறார்கள் மற்றும் கூடிய விரைவில் முழு உலக காரியங்களையும் நிர்வகிப்பார்கள் என்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்" என்றான்.

லெவ், முற்பிதாக்களில் இருவருடன் தனக்கு ஏற்பட்ட தொடர்புகளைப் பற்றியும், அவர்களின் ஞானத்தினாலும், கிருபையினாலும் தான் எவ்வளவு ஈர்க்கப்பட்டான் என்பதையும் குறித்துக் கூறினான். லெவ் தனது வலது கை எவ்வாறு செயலிழந்து என்பதையும், முற்பிதாவாகிய சாராளை எப்படி தொலைபேசியில் தொடர்பு கொண்டான் என்பதைக் குறித்து விவரித்தான்.

"சாராள் மிகவும் கனிவான முற்பிதாவாக இருந்தார். ஆனால் நடந்த எல்லாவற்றையும் முழு உண்மையுடன் சொல்ல வேண்டும் என்று அவர் என்னிடம் கண்டிப்புடன் சொன்னார். மேலும் கிறிஸ்து அனைத்து உண்மைகளையும் வெளிப்படுத்துவார் என்றும், நான் எதையாவது மறைக்க முயன்றால் அது என்னுடைய தண்டனையை நீட்டிக்க வழிவகுக்கும் என்றும் அவர் சொன்னார். நான் கூறிய அனைத்தும் உண்மை என்றும், நடந்த சம்பவத்திற்கு தூண்டுதலே காரணமாக இருந்தது என்பதைக் கண்டறிந்த அவர், விரைவில் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். ஒரு மணி நேரத்திற்குள் என் கை குணமாகிவிடும் என்று அவர் உறுதியளித்தார்" என்று லெவ் விளக்கினான்.

லெவ் கூறியதைக் கேட்ட எரேமியா ஆர்வமாக இருப்பதாகத் தோன்றியது. ஆனால் லெவ்வின் வன்முறை நடத்தை மன்னிக்க முடியாதது என்பதை எரேமியா தெளிவுபடுத்தினார். நகரத்தைப்

பாதுகாக்க இஸ்ரேலிய வீரர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தேவையற்றவை என்ற அவரது நிலைப்பாட்டை, அவரது இந்த வார்த்தைகள் வலுப்படுத்தியது. அவர்கள் சரணடைந்திருந்தால், அந்த நேரத்தின் படுகொலைகள் தவிர்க்கப்பட்டிருக்கும் என்றார். மேசியா அவர்களுக்கு அமைதியான முறையில் வெற்றியைக் கொடுத்திருப்பார் என்று அவர் வாதிட்டார். லெவ் சொன்ன அனைத்தும் எரேமியாவின் நிலைப்பாட்டை வலுப்படுத்தியதோடு, தான் தவறாக எதையும் கூறவில்லை என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்தியது போன்றே தோன்றியது.

லெவ், எசேக்கியேல் 38:16, 21- வசனமான "நீ தேசத்தைக் கார்மேகம் போல்மூட, என் ஜனமாகிய இஸ்ரயேலுக்கு விரோதமாக எழும்பி வருவாய் கடைசி நாட்களிலே இது சம்பவிக்கும் கோகே, ஜாதிகளின் கண்களுக்கு முன்பாக உன் மூலமாய் நான் பரிசுத்தர் என்று விளங்கப்படுகிறதினால் அவர்கள் என்னை அறியும்படிக்கு உன்னை என் தேசத்திற்கு விரோதமாக வரப்பண்ணுவேன்..... என் எல்லா மலைகளிலும் பட்டயத்தை அவனுக்கு விரோதமாக வரவழைப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" என்ற வசனத்தை மேற்கோள் காட்டினான்.

லெவ் கூறி முடிக்கும் வரை எரேமியா கஷ்டப்பட்டுக் காத்திருந்தார், இந்த வசனமானது எது நடந்ததோ அதையே உறுதிப்படுத்துகிறது என்றும், எது நடந்திருக்கத் தேவையில்லையோ அதைக் குறித்துச் சொல்லவில்லை என்ற தனது கருத்தின்மூலம் பதிலடி கொடுக்கக் காத்திருந்தான். அனுமதிக்கப்படாத மற்றும் தவறான கோட்பாட்டின் மீதான எரேமியாவின் தொடர்ச்சியான, வலிமையான அறிக்கையைக் கண்டு லெவ்விற்கு மிகவும் சங்கடமாக இருந்தது. மாலைப்பொழுது இன்னும் கடினமான வாக்குவாதத்தில் கழிந்தது. எரேமியாவின் அதிகாரத் தோரணையும்

மற்றும் தானே சரி என்ற உணர்வும் எந்தவொரு ஆரோக்கியமான கருத்துப்பரிமாற்றத்தையும் சாத்தியமற்றதாக்கியது. அவர் தனது கருத்துக்களுக்கு இசைந்திராத அனைத்திற்கும் எதிராக சவால் விடுவதற்கும் தயாராக இருந்தார்.

இரவில் தூங்குவதற்கு முன்பு லெவ், எரேமியாவிடம் அவருடைய கோட்பாடானது சரியானதா அல்லது தவறானதா என்பதைக் கிறிஸ்து நியாயந்தீர்ப்பார் என்று கூறி எரேமியாவை எச்சரிக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தான். கிறிஸ்து, தான் கூறியதை சரியென்றே நியாயந்தீர்ப்பார் என்று எரேமியாவுக்கு நம்பிக்கை இருப்பதாக லெவ் கருதினான்.

காலையில் அவர்கள் தேவாலயத்திற்கு சென்றார்கள். ஜேக், ரேச்சல், ரெபெக்காள் உள்ளிட்ட அனைத்து வழிபாட்டாளர்களுக்கும், தங்களுடைய வாழ்த்தைத் தெரிவிப்பவதற்காக சரியான நேரத்திற்கு அவர்கள் இருவரும் ஆலயத்திற்கு வந்தார்கள். பாடல்கள் தொடங்கிய உடனேயே எரேமியாவின் மனதில் வழிபாட்டினை விட, மற்ற காரியங்கள் அதிகம் ஓடுவதாக லெவ்வால் உணர முடிந்தது. அவர் பிரசங்க மேடையை எப்படி தன்வசமாக்கிக் கொள்வது என்று யோசித்துக் கொண்டிருப்பதையும், நேற்று அளித்த பிரசங்கம் நிராகரிக்கப்பட்டது என்பது ஒரு பொருட்டாக அவருக்குத் தோன்றவில்லை என்பதையும், அவர் தனது கருத்தை வெளிப்படுத்துவதில் வெறித்தனமாக இருப்பதையும் லெவ் உணர்ந்தான். மேலும் அவரின் செயலைத் தடுத்து நிறுத்த முடியாது என்றும் எண்ணினான்.

ஜெபத்திற்குப் பிறகு, எரேமியா எவ்வாறு தனது கருத்தினை மீண்டும் கூறப்போகிறார் என்பதைப் பார்ப்பதற்கு லெவ் காத்திருந்தான். எந்தவித தயக்கமும் இல்லாமல் எரேமியா தைரியமாக

ஆய்வுத் தலைவரிடம் நேற்றைய தனது செயலுக்கு மன்னிப்பு கேட்பதற்குத் தன்னை அனுமதிக்க வேண்டும் என்று கேட்டார். இது லெவ்வை ஆச்சரியப்படுத்தியது. ஒருவேளை அவர் தனது நிலைப்பாட்டின் மீதான தவறை உணரத் தொடங்கி இருக்கலாம் என்று லெவ் நினைத்தான். அவரின் கோரிக்கையை ஏற்றுப் பேசுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

"நேற்றைய எனது பிரசங்கத்திற்கு நான் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்" என்று எரேமியா தொடங்கினார்.

"நான் நிச்சயமாக மீண்டும் தெளிவுபடுத்த வேண்டும். நேற்று நான் விளக்க முயற்சித்த என்னுடைய நிலைப்பாட்டை இன்னும் அதிகமாக தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது என்று நினைக்கிறேன் - நான் - நான் ___ நான்-". எரேமியாவின் கண்கள் பயத்தில் விரிந்தன, அவரது முகம் அவமானத்தால் சிவந்தது. அவர் தன்னுடைய கைகளால் சைகை செய்தார், ஆனால் அவரால் பேச முடியவில்லை. எவ்வளவு கடினமாக முயன்றும் "நான்" என்ற வார்த்தையைத் தவிர அவரால் வேறு எதுவும் சொல்ல முடியவில்லை. ஆய்வுத் தலைவர் அவரை லெவ்விற்கு அருகில் இருந்த, அவரது இருக்கைக்கு அழைத்துச் சென்று அமர உதவினார்.

கிறிஸ்துவினுடைய வல்லமையானது, எரேமியாவின் பேசும் திறனை தடுத்துவிட்டிருந்தது என்பதை ஒவ்வொரு வழிபாட்டாளர்களும் அறிந்து கொண்டார்கள். கூட்டத்தின் கருப்பொருளானது உடனடியாக மாறியது. வழிபாட்டாளர்கள் அவர்கள் அனுபவித்த விளைவுகளையும், கற்றுக்கொண்ட பாடத்தையும் பகிர்ந்து கொள்ள ஒன்றன் பின் ஒன்றாக வரிசையில் நின்றனர்.

எரேமியா தரையையே பார்த்துக் கொண்டிருப்பதையும், அவரது கண்களில் இருந்து கண்ணீர் வழிவதையும் லெவ் கவனித்தான்.

வழிபாட்டு சேவை முடிந்த அடுத்த நொடியே, எரேமியா கோஹன் எழுந்து விரைவாக தேவாலயத்தை விட்டு வெளியேறினார். அவரது நடையின் வேகம் வேண்டுமென்றே வேகமாக இருந்தது. எரேமியாவை தனியே விட்டுவிட விரும்பியவனாக, லெவ் சற்று பின்னால் நடந்தவாறு அவரைத் தொடர்ந்தான். லெவ் தனது வலது கை செயலிழந்ததை எண்ணிப் பார்த்தான். எரேமியாவிற்கான விளைவானது பொது இடத்தில், அநேக பார்வையாளர்களுக்கு முன் நிகழ்ந்ததால் சற்று கடினமானதுதான். ஆனால் அனைவர் முன்னிலையிலும் நடந்தால்தான் அவர் கற்றுக் கொள்வார் என்பதற்காகவே இவ்வாறு நிகழ்த்தப்பட்டது. அவர் தலைக்கணம் பிடித்தவராகவும், பிடிவாதக்காரராகவும் இருந்தார். வேறு யாருடைய சாட்சியத்தையும் கருத்தில் கொள்ள விருப்பமில்லாதவராகவும், அவர் தனது கருத்துக்களை மட்டுமே முன் வைப்பவராகவும் இருக்கிறார் என்று லெவ் எண்ணினான்.

## எரேமியாவின் ஒப்புதல் வாக்குமூலம்

எரேமியா, லெவ்விற்கு அருகாமையில் இருந்த தொலைபேசியைச் சுட்டிக்காட்டினார். எரேமியா முற்பிதாக்களுடன் தொடர்பு கொள்ள விரும்புவதை அறிந்த லெவ், அவர்களைத் தொடர்பு கொள்வதற்குரிய எண்களை டயல் செய்தான். இணைப்பிற்குள் வந்த வரவேற்பாளர், அவனைத் தெபோராவுடன் பேசுமாறு கூறினார்.

"ஷாலோம், லெவ், உங்களுடைய பிரச்சனை என்ன?" என்று முற்பிதாவாகிய தெபோரா கேட்டார்.

"ஹலோ, தெபோரா. நான் முன்னாள் யூத போதகரான எரேமியா கோஹன் சார்பாக அழைத்திருக்கிறேன். இன்று காலை வேளையின் வழிபாட்டுச் சேவையில் அவர் யூதர்கள் எருசலேமுக்கு எதிராகப்

படையெடுத்த எதிரிகளிடம் எவ்வித எதிர்ப்பின்றி சரணடைந்திருக்க வேண்டும் என்றும், எதிரிகளிடம் எருசலேமை ஒப்படைத்திருக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்திருந்தால் நடந்து முடிந்த பேரழிவானது தடுக்கப்பட்டிருக்கும் என்று பிரசங்கிக்க முயற்சித்த போது, அவருடைய குரலானது பறித்துக் கொள்ளப்பட்டது" என்றான்.

"லெவ், நான் கூறுவதை எரேமியாவும் கேட்கும்படி அவரை உங்களது இரண்டாவது தொலைபேசி இணைப்பில் வைக்கவும்", என்று தெபோரா பதிலளித்தார்.

லெவ்வும், எரேமியாவும் லெவ்வின் படுக்கையறைக்கு நடந்து சென்றார்கள். லெவ் இரண்டாவது தொலைபேசியை எரேமியாவிடம் கொடுத்தான். எரேமியா படுக்கையில் அமர்ந்து, பேசும் பொத்தானை அழுத்தி, ரிசீவரை மெதுவாகத் தனது காதுக்கு நேராக உயர்த்தினார். லெவ் அவரிடமிருந்து குறுக்கே இருந்த நாற்காலியில் அமர்ந்து, மற்றொரு தொலைபேசியை தன்னுடைய காதில் வைத்துக் கொண்டான்.

"எரேமியா நீங்கள் கேட்கிறீர்களா?" எரேமியா வைத்திருந்த தொலைபேசியில் சத்தம் கேட்டதும் தொபோரா கேட்டார். எரேமியாவின் கைகள் நடுங்கியது. அவர் முணுமுணுத்தபடி, லெவ்விடம் "ஆம்" என்று கூறுமாறு சைகை செய்தார்.

"எரேமியா தொலைபேசி இணைப்பில் இருக்கிறார், அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார், தெபோரா" என்று லெவ் கூறினான். "நீங்கள் பேச விரும்புவதை நான் கேட்கலாமென்றால் நான் தொடர்ந்து இணைப்பில் இருக்கிறேன்" என்று லெவ், தெபோராளிடம் கூறினான்.

"லெவ், நீங்கள் தொடர்ந்து இணைப்பில் இருங்கள்" என்று தெபோரா பதிலளித்தார். "எரேமியா, கவனமாகக் கேளுங்கள். உங்கள்

கண்ணோட்டங்களையும், அவற்றை வெளிப்படுத்த முயன்ற உங்கள் ஆர்வத்தையும் நாங்கள் அறிந்திருக்கிறோம். இதுவரைக்கும் நாங்கள் உங்களை அனுமதித்ததற்கான காரணம், மற்றவர்களிடமிருந்து நீங்கள் பெற்ற பதில்களானது நீங்கள் மாறுவதற்கேற்ற நன்மையை உண்டாக்கலாம் என்று நாங்கள் நினைத்தோம். இன்றைய நிகழ்வானது, எங்களை பொறுமை இழக்கச் செய்தது. தம் அதிகாரத்திற்குக் கீழாக அனைத்து தேசங்களையும் கீழ்ப்படியச் செய்வதற்கு, சர்வவல்லமையுள்ள தேவன் மேற்கொண்ட சரியான வழிமுறையை நீங்கள் புறக்கணித்துப் பேச முற்பட்டீர்கள். வன்முறை நிறைந்த உலகமானது, இஸ்ரயேலைக் கைப்பற்ற படைகளை அனுப்பியது, இஸ்ரயேல் தன்னை தற்காத்துக் கொள்ளும் என்ற தீர்க்கதரிசனமானது முன்னறிவிக்கப்பட்டு இருந்தது. மேலும் யுத்தம் இனி ஒருபோதும் அனுமதிக்கப்படாது என்பதை உலகிற்குக் கற்பிக்க வேண்டும் என்பதற்காகவே தேவன் இதனைப் பயன்படுத்தினார். இராணுவத்தின் உடல் வலிமையைச் சார்ந்திருப்பதைக் காட்டிலும், தேவனுடைய ஆவியின் வல்லமையைச் சார்ந்திருப்பதே அவசியமானது" என்று தெபோரா தொடர்ந்தார்.

"நீங்கள் செய்த பாவம் மிகவும் தீவிரமான ஒன்று. அறிவு சார்ந்த விளக்கத்தின் மூலம் சத்தியத்தை நிலைநாட்ட முடியும் என்று மக்கள் நினைத்ததால், பழைய உலகில் பிரச்சனைகள் அதிகமாக இருந்தது. உங்களுக்கு உண்மை என்று தோன்றும் எதையும் கற்பிக்க உங்களுக்கு சுதந்திரம் இல்லை. தாங்கள் மேன்மையாகக் கருதும் தங்களது பொக்கிஷமான கருத்துக்களைப் பிரசங்கிக்க இனி அனுமதிக்கப்படாது. சத்தியத்தைப் பிரசங்கிப்பது மட்டுமே அனுமதிக்கப்படுகிறது. உங்களுக்கு நேரம் தேவை, எரேமியா - உங்களுடைய எண்ணங்களை சீர்தூக்கிப் பார்க்கவும் - உங்களுடைய பிடிவாதக் குணத்திலிருந்து

விடுபடவும் உங்களுக்கு நேரம் தேவை. இன்னும் இரண்டு வாரங்கள் நீங்கள் பேச முடியாமல் இருப்பீர்கள். உங்கள் மௌனத்தின் காலம் முடிந்ததும், நீங்கள் கடந்து வந்த பாதைகளைத் திரும்பச் சரி செய்வதும், நீங்கள் கற்றுக்கொண்டவற்றை, நீங்கள் கற்பிக்க முயற்சித்தவர்களுடன் பகிர்ந்து கொள்வதும் உங்களுக்கு சவாலாக இருக்கும். தேவையான உதவியும், ஆதரவும் உங்களுக்கு வழங்கப்படும். நான் கூறியவைகள் உங்களுக்குப் புரிகிறதா? எரேமியா" என்று தெபோரா கேட்டார்.

எரேமியா, தனது நெற்றியைக் கைகளால் தாங்கிப் பிடித்தவாறு படுக்கையில் அமர்ந்திருந்தார். அவரின் முகம் வெளிறி இருந்தது, தொலைபேசியைப் பிடித்திருந்த அவரது கைகள் நடுங்கின. எரேமியா, லெவ்வைப் பார்த்து, தெபோராவிற்கு சம்மதம் தெரிவிக்கும்படி தன் தலையை அசைத்தார்.

"அவர் "சரி" எனும் விதத்தில் தலையசைக்கிறார், அவருக்குப் புரிந்துவிட்டது என்று நான் நம்புகிறேன்" என்று லெவ் தெபோராவிடம் தெரிவித்தார்.

"நல்லது. எரேமியா நீங்கள் இன்னும் இணைப்பில் இருக்கிறீர்களா?" என்று தெபோரா கேட்டார்.

எரேமியா "ஆம்" என்று தலையசைத்ததை, லெவ், தெபோராவிடம் தெரிவித்தான்.

"இவ்வளவு கண்டிப்புடன் உங்களிடம் நடந்து கொள்வதற்கு நான் வருந்துகின்றேன். ஆனால் நீங்கள் தவறான கருத்துக்களைப் போதிப்பதில் பிடிவாதமாக இருந்தீர்கள். நீங்கள் மற்றவர்களைக் குறைவாக மதிப்பிட்டதால், நீங்கள் ஒருபோதும் யாருக்கும் செவிசாய்க்கவில்லை. எரேமியா, உங்கள் பிடிவாதத்திற்கான

விளைவை நீங்கள் அனுபவித்துதான் ஆக வேண்டும். இந்த நேரத்தில் நீங்கள் தண்டிக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகிறேன். உங்கள் கண்ணோட்டமானது தவறானது என்று நீங்கள் உணர்ந்து கொண்ட பிறகு நீங்கள் என்னை அழையுங்கள். உங்களது பேசும் திறனைப் பெற்ற பிறகு, உங்கள் வாயால் பாவத்தை ஒப்புக்கொள்வதை நான் கேட்க விரும்புகிறேன். உங்கள் இருவருக்கும் ஷாலோம்"என்று கூறி இணைப்பைத் துண்டித்தார்.

ரிசீவரைப் படுக்கைக்கு அருகே இருந்த மேசையில் வைத்த எரேமியாவிடம் எந்தவிதச் சலனமுமில்லை. எரேமியா பலவீனமாகவும், நடுநடுங்கிப் போயிருந்ததையும் பார்ப்பதற்கு லெவ்விற்கு பரிதாபமாக இருந்தது. அவரின் நிலை தொலைந்து போன ஒரு குழந்தையின் நிலையை லெவ்விற்கு நினைவுபடுத்தியது. லெவ், தன் கரங்களை எரேமியாவின் தோளிகளின் மீது போட்டு அணைத்துக் கொண்டான். லெவ் வழங்கிய இரவு உணவை உண்ண மறுத்து, எரேமியா தனது அறைக்கு அழைத்துச் செல்ல லெவ்வை வேண்டினார். முந்தைய இரவு அவர் பயன்படுத்திய விருந்தினர் அறைக்கு எரேமியாவை, லெவ் அழைத்துச் சென்றான்.

"எரேமியா, உங்களுக்கு ஏதேனும் உதவி தேவைப்பட்டால், மேசையைத் தட்டுங்கள்" என்று லெவ் பரிந்துரைத்தான்.

தனது அறைக்குள் நுழைந்ததும், எரேமியா மண்டியிட்டு ஜெபிக்கத் தொடங்கியதை லெவ் கண்டான். தண்டனையின் கீழ் இருக்கும் எவருக்கும் அவனுடைய தண்டனைக் காலத்தைப் புத்திசாலித்தனமாக கடந்து செல்வதற்கான சிறந்த மருந்தாக ஜெபம் இருக்கும். எரேமியா மிகவும் பிடிவாத குணம் கொண்டவராக இருந்தபோதிலும், அவருக்காக லெவ் வருத்தப்பட்டான். முழுமையான

அதிகாரத்தில் தெபோரா இருப்பதையும், தவறு இழைக்காது நீதித்தீர்ப்பு வழங்குவார் என்பதையும் எரேமியா அறிந்திருந்ததால், தெபோராவிடம் இருந்து பெற்றுக் கொண்ட கடிந்து கொள்ளுதலையும், விமர்சனத்தையும் ஏற்றுக் கொள்வதற்கு அவரால் முடிந்தது. தெபோரா அவருக்குக் கொடுத்த மருந்து அவருடைய இருதயத்திற்கு நன்மை தருவிக்கக் கூடியதாய் இருந்தது. இதன் சுவை கசப்பாக இருப்பினும், பிற்பாடு அது நீதியாகிய சமாதான பலனைக் கொடுக்கும்.

எரேமியா எஞ்சிய நாளின் பகுதியைத் தனிமையில் கழித்தார். மண்டியிட்டு ஜெபிப்பதையும், அவ்வப்போது கைகளால் சைகை காட்டி பேசுவதையும், லெவ்வால் காண முடிந்தது. எரேமியா, தான் செய்த தவறை ஒத்துக்கொள்ளும் மனநிலைக்கு வந்துவிட்டார் என்றும், சந்தேகத்திற்கு இடமின்றி அவரது முழங்கால்களிலிருந்து ஒரு சிறந்த மனிதனாக எழுவார் என்பதும் லெவ்விற்குத் தெளிவாகத் தெரிந்தது.

இறுதியாக, எரேமியா இரவு உணவிற்கான நேரத்தில் தனது அறையிலிருந்து வெளியே வந்தார். அவர் லெவ்வை கட்டியணைத்தார், அவரின் இச்செயல் லெவ்வை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது, ஏனென்றால் எரேமியா எப்போதும் உணர்ச்சிவசப்படக் கூடியவராக இல்லாமல், அறிவு சார்ந்தவராகவே இருந்திருந்தார். அவரது தண்டனையை நேரில் கண்ட சாட்சியாக லெவ் இருந்ததை அவர் நினைவில் கொண்டது போல் தெரியவில்லை. அவரின் திமிர்பிடித்த நடத்தை நீங்கி இருந்தது. லெவ் உணவிற்கான ஆசீர்வாதத்திற்காக ஜெபித்தான்.

லெவ் கேள்விப்பட்டிருந்த வரையில் தெபோரா, எரேமியாவுடன் அதிக நேரம் செலவிட்டிருந்தார். ஆனால் அத்தருணத்தின் ஒரு நொடி கூட வீணாகவில்லை. எரேமியா, பேச முடியாமல் இருந்தபோதிலும், அவரின் மன மாற்றத்தை லெவ்வால் காண முடிந்தது. எரேமியா

புன்னகைத்தார், முதல் முறையாக மற்றவர் பேசியதை அவர் கவனித்தார், இதற்கு முன்பு வரை அவர் மற்றவர் பேசியதை கவனித்ததே இல்லை. அவரது பேச இயலாத நிலமையானது, அவருக்கு தேவனிடம் செவிசாய்ப்பதற்கு உதவியது. முன்பு தான் தேவனின் வார்த்தைகளைக் கூட யாரிடமும் இருந்து கேட்க மறுத்துவிட்டதை இப்போது அவர் உணர்கிறார்.

எரேமியா தனது அறையில் ஜெபம் செய்வதிலும், வேதவாக்கியங்களை வாசிப்பதிலும் மாலை நேரத்தைக் கழித்தார். இரவு நேரத்தில் லெவ் வீடு திரும்பிய பின்பும் கூட, எரேமியாவின் அறையில் விளக்கு இன்னும் எரிந்து கொண்டே இருந்தது.

காலையில் எரேமியா, லெவ்வுடன் தோட்டத்திற்குச் செல்ல விரும்பினார். அவரின் வீட்டிற்கு நீண்ட தூரம் பிரயாணம் செய்ய வேண்டி இருப்பதால், காலை உணவிற்குப் பின் அவர் புறப்படுவதாக ஓர் அட்டையில் எழுதிக் காட்டினார். காலை உணவிற்குப் பிற்பாடு, எரேமியா, லெவ்வைத் தழுவி பிரியாவிடை கொடுத்தார். மேலும் அவரது பேச்சு திரும்பியதும் தான் திரும்பவும் வருவதாகவும், "எனக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்" என்று எழுதி லெவ்விடம் காட்டினார்.

வாய்ப்பிருக்கும் போது மீண்டும் இங்கு வருவதற்கு அவரை வரவேற்றவாறு, "ஷாலோம்" என்று கூறி லெவ் விடை பெற்றான்.

**"இருள் என்னை மூடிக்கொள்ளுமென்றாலும், இரவும் என்னைச் சுற்றி வெளிச்சமாயிருக்கும்; உமக்கு மறைவாக இருளும் அந்தகாரப்படுத்தாது இரவும் பகலைப்போல வெளிச்சமாயிருக்கும் உமக்கு இருளும் வெளிச்சமும் சரி". (சங்கீதம் 139:11,12)**

# அத்தியாயம் - 18

செய்து முடித்திருந்த காரியங்களின் பட்டியலை சரி பார்த்தவாறும், வேறு என்ன தேவை? என்று யோசித்தவாறும், அன்யாவின் வீட்டின் சமையலறையில் நடந்து கொண்டிருந்த லெவ் "இன்னும் என்ன தேவை" என்று தன் மனதில் எண்ணியதை சத்தமாகக் கேட்டான். "அவளுடைய படுக்கையறையில் உயிர்தெழுதலின் தேநீர் இருக்கிறது. மேஜையில் ஏதேனின் பழம் மற்றும் ஏதேனின் ரொட்டி இருக்கிறது. - ஓ இன்னும் சில போர்வைகள் தேவை", என்று முணுமுணுத்தவாறே கவனக்குறைவாக எதிரே வந்த ஏஞ்சலாவின் மீது மோதினான்.

லெவ் மோதியதால், ஏஞ்சலாவின் கைகளில் வைத்திருந்த போர்வைகள் தரையில் விழுந்ததில், அவள் சிரித்தாள்.

"லெவ், அமைதியாக இருங்கள். அன்யா விரைவில் இங்கு வந்துவிடுவாள். நீங்கள் சரியானதைச் செய்யாமல் விட்டுவிட்டாலோ அல்லது சொல்லாமல் விட்டுவிட்டாலோ அவள் ஒன்றும் மறைந்து போய்விட மாட்டாள். அதனால் பயப்படத் தேவையில்லை" என்று ஏஞ்சலா கூறினாள்.

"அமைதியாக இரு, லெவ்" என்று தனக்குத்தானே கூறியவாறு வீட்டின் வரவேற்பு அறையில் இருந்த சோபாவில் அமர்வதற்குச் சென்றான். லெவ், தனது இந்தப் புதிய வாழ்க்கையில் இரண்டாவது முறையாக கொஞ்சம் உற்சாகத்துடனும், எதிர்பார்ப்புடனும் மற்றும் ஒரு வித பயத்துடனும் இருந்தான். தனக்குப் பிறக்கப் போகும்

குழந்தைக்குக் காத்திருக்கும் ஒரு தந்தைக்குரிய உணர்வுகளோடு அமர்ந்திருந்தான். அவன் சோபாவின் பின்னால் சாய்ந்து அமர்ந்து கண்களை மூடிக்கொண்டு, அவன் உயிர்த்தெழுந்ததில் இருந்து கடந்த ஆறு மாதங்களில், தான் கற்றுக்கொண்டவற்றை யோசித்துப் பார்த்தான். உண்மையை எதிர்க்கொள்வதைத் தவிர்த்து, அதனால் உண்டாகும் மன அழுத்தத்துடன் இருப்பதைக் காட்டிலும், உண்மையை ஒத்துக் கொண்டு வாழ்வது ஒரு நிவாரணமாக இருந்தது. அவனை அழுத்திக் கொண்டிருக்கும் உண்மையை ஒருமுறை அவன் எதிர்க்கொண்டுவிட்டால், அவனுக்குள் மறைவான இரகசியம் எதுவும் இருக்காது. அன்யாவின் கொடூரமான மரணத்திற்கு அவன் பொறுப்பல்ல.

லெவ்வின் மனம் நிகழ்காலத்திற்குத் திரும்பியது. விரைவில் அன்யா உயிர்த்தெழுந்து, அவளுக்கு நிகழ்ந்த வேதனையான நினைவுகளை எதிர்க்கொள்ளப் போகிறாள். அவள் வெற்றியோடு அதை எதிர்க்கொள்வாள் என்று லெவ் நினைத்தான்.

## அன்யா ஜீவனுக்குத் திரும்புதல்

அன்யாவின் படுக்கையறையில் இருந்து சத்தம் வந்தது. ஏஞ்சலா எழுந்து நின்ற, தம் மைத்துனனின் தோள்களில் தட்டி, அவனை அணைத்தவாறு "போங்கள் லெவ், அவளிடம் போங்கள், மீண்டுமாக அவளது வாழ்வின் அனைத்தும் துவங்கப் போகிறது, அவளது வாழ்க்கையின் முதல் அத்தியாயத்தை அவள் எழுத நீங்கள் அவளுக்கு உதவுங்கள்" என்று அவனுடைய காதருகே ஏஞ்சலா கிசுகிசுத்தாள்.

லெவ், அன்யாவின் அறைக்குள் நுழைந்தான். ஒரு லேசான போர்வைக்கு அடியில் இருந்த அவளது மென்மையான உடலையும் மற்றும் அவளது அமைதியான, அழகான முகத்தையும் நிதானமாகப்

பார்த்தபோது, அவன் வியந்து பெருமூச்சுவிட்டான். அவளுடைய சுவாசம் சீராக இருந்தது, அவள் அவ்வப்போது ஒரு சிறு அசைவுடன் அமைதியாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள். நடந்து கொண்டிருக்கும் அதிசயத்திற்குச் சாட்சியாக இருந்த லெவ், பிரம்மிப்பில் அவளது படுக்கையின் அருகே மண்டியிட்டான். பல வருடங்களுக்கு முன்பு இறந்திருந்த அவள் இங்கே இருக்கிறாள். அவனுக்கு நினைவில் இருந்ததைவிட அவள் மிகுந்த அழகுள்ளவளாக இருந்தாள், உடல் முழுவதும் காயத்தின் எந்தவிதமான தடயங்களும் இல்லாமல் முழு ஆரோக்கியத்துடன் இருந்தாள். அவளது சுவாசம் வேகமாக மாறுவதையும், அவளது புலம்பல்கள் சத்தமாக மாறுவதையும் லெவ் உன்னிப்பாகக் கவனித்தான். அவள் அமைதலின்றி தன் தலையை இரு புறமும் மாறி மாறி திருப்பினாள். வலியினால் துடிப்பதைப் போல் அவள் முகம் சுருங்கியது. மேலும் அவளது நெற்றியின் மீது வியர்வைத் துளிகள் முத்தாகப் படர்ந்தன.

"இல்லை" என்று அவள் கூறியவாறு பெருமூச்சு விட்டாள். அவள் கைகள் போர்வையைத் தாண்டி வெளியேவர, லெவ் உள்ளுணர்வில் உடனடியாக அவளது கைகளைப் பற்றினான். ஏதோ ஒரு கனவில் சிக்கியது போல், சிறு சிறு மூச்சுத் திணறல்களுக்கிடையே பேசினாள். அவளது கண்கள் இன்னும் இறுக்கமாக மூடியிருந்தன.

"அன்யா இப்போது எல்லாம் சரியாகிவிட்டது, முடிந்துவிட்டது" என்று லெவ் உறுதியான குரலில் ஆனால் அதே சமயம் மெதுவாகப் பேசினான். "நீ, இப்போது பாதுகாப்பாக இருக்கிறாய். யாராலும் இப்போது உன்னைக் காயப்படுத்த முடியாது" என்று அவளுடைய நெற்றியை மெதுவாகத் தடவியவாறு லெவ் கூறினான்.

அன்யாவின் உடல் தளர்ந்தது. பயத்தினால் நிறைந்திருந்த அவளது கருவிழிகளைத் திறந்து லெவ்வைப் பார்த்தாள். அன்யா

போர்வையைப் போர்த்தியபடியே எழுந்து உட்கார்ந்தாள். லெவ்வின் கரங்களுக்குள்ளாக தன் முகத்தைப் பதித்து கதறி அழுதாள்.

"ஓ, லெவ், நாம் இருவரும் எப்போதும் சேரமுடியாதபடி பிரிந்துவிட்டோம் என்று நினைத்திருந்தேன்" என்று அன்யா கூறி அழுதாள்.

"நீ நன்றாக இருக்கிறாய், என் அன்பே" என்று லெவ் பதிலளித்தான்.

"லெவ், அவர்கள் எனக்குச் செய்தது பயங்கரமாக இருந்தது....." அவளது பிடியை இன்னும் இறுக்கி, லெவ்வை இறுகப் பற்றிக் கொண்டாள். அதனால் ஒரு கணம் லெவ்விற்கு மூச்சு விடுவதற்குக் கடினமாக இருந்தது.

"எனக்குத் தெரியும், அன்யா, எனக்குத் தெரியும். இப்போது அது நினைவுகளாக மட்டுமே இருக்கிறது - நினைவுகள் மட்டுமே. உன்னுடைய காயங்கள் எங்கே என்று பார்?" என்று லெவ் கூறினான்.

அன்யா தன் பிடியைத் தளர்த்தினாள். அன்யா தன் கைகளையும், தோள்களையும் பார்த்தாள், பின்னர் அவளுடைய முகத்தையும், வயிற்றையும் தன் கைகளால் தடவிப் பார்த்துக் கொண்டிருப்பதை லெவ் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான். பின்பு அவள் நம்பமுடியாமலும், பிரம்மிப்புடனும் லெவ்வை உற்று நோக்கினாள். அவளுக்கு எந்த ஒரு வலியும் இல்லை என்பதை அவள் உயிர்த்தெழுந்த நிமிடத்தில் இருந்து இப்போதுதான் முதல்முறையாக சுயநினைவோடு உணர்ந்தாள். "என் காயங்கள் எங்கே?" என்று ஆச்சரியத்துடன், லெவ் கேட்ட கேள்வியை மெதுவாக தனக்குள்ளாகவே கேட்டுக் கொண்டாள். அவள் லெவ்வின் கண்களை சிறிது நேரம் உற்றுப்

பார்த்துவிட்டு, பின்பு மீண்டும் அவள் கைகளைப் பார்த்தாள். நான் நன்றாக இருக்கிறேன் - லெவ் - இது எப்படி சாத்தியமாகும்? - எப்படி இவ்வாறு நடக்க முடியும்? - அவன் என்னை துண்டு துண்டாக வெட்டினான் - ஆனால் இப்போது நான் முழுமையாக இருக்கிறேன் என்றாள்.

லெவ் உயிர்த்தெழுதல் தேநீர் வைக்கப்பட்டு இருந்த பாத்திரம் அருகே சென்று, படுக்கைக்கு அருகில் போடப்பட்டிருந்த மேசையில் இருந்த இரண்டு கோப்பைகளில் இருவருக்குமாக தேநீரை ஊற்றினான்.

"இதைக் குடி, அன்யா" என்று லெவ், அன்யாவிடம் கூறினான். அவள் குடிப்பதை அவன் மிகுந்த பாசத்துடன் பார்த்தான். அன்யா அவளுக்குக் கொடுக்கப்பட்டதை குடித்து முடித்ததும் மீண்டும் ஒருமுறை தேநீரை அவளது கோப்பையில் ஊற்றினான். பின்னர் அவன் தனது தேநீரை எடுத்து அருந்தினான்.

"நடந்தவைகள் அனைத்தும் ஒரு கனவாகத்தான் இருந்திருக்க வேண்டும்" என்று அவள் கிசுகிசுத்தாள். "ஆனால் அது உண்மையில் நடந்ததுபோலவேதான் இருந்தது லெவ், அது மிகவும் பயங்கரமானது" என்று அன்யா கூறினாள்.

லெவ், அவளது நீண்ட கருமையான கூந்தலைப் வருடியவாறு "அன்யா, அன்பே அன்யா" என்று அவளை அமைதிப்படுத்தும் தொனியில் பேசினான். "நடந்தவைகள் ஒரு கனவு அல்ல, ஆனால் அவை அனைத்தும் முடிந்துவிட்டன. நீ புதிய பூமியில் ஜீவனுடன் உயிர்த்தெழுப்பப்பட்டுள்ளாய், மீண்டும் யாரும் உன்னை இங்கே துன்பப்படுத்தமாட்டார்கள். மேசியா நம்மோடு உள்ளார், அவருடைய வல்லமையால் நீ மீண்டுமாக ஜீவனைப் பெற்றிருக்கிறாய்" என்று லெவ் கூறினான்.

## அன்யாவும், ஏஞ்சலாவும் திரும்பச் சேர்தல்

தனது அளவிற்கு ஏற்றவாறு கச்சிதமாகத் தைக்கப்பட்டிருந்த உடைகளை அன்யா கண்டு கொண்டாள். அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டார்கள்.

"நீங்கள் பார்ப்பதற்கு முதிர்ச்சி அடைந்தவராகவும் - ஆரோக்கியமாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பற்கள் நேராக உள்ளது, லெவ்". அன்யா சிரித்துக் கொண்டே தன் பார்வையை லெவ்விடமிருந்து ஏஞ்சலாவுக்குத் திருப்பி, பின்பு மறுபடியும் லெவ்வை அன்புடன் பார்த்தாள். "என் கணவர் மற்றும் என் சகோதரியின் முன்பாக நான் - இது நம்பமுடியாத அற்புதமாக உள்ளது" என்று அன்யா தன் கண்களில் கண்ணீர் ததும்பக் கூறினாள்.

தன்னுடைய சொந்த வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகளோடு போராடிக் கொண்டிருக்கும் ஒருவருக்கு இந்தப் புதிய உலகின், புதிய வாழ்க்கையில் மாறுபட்டிருக்கும் எதார்த்தங்களை எவ்வாறு விளக்குவது என்று லெவ் தனக்குள் குழம்பினான். அதனால் உண்டான அசௌகரியத்தினால் அவன் தன் இருக்கையில் நெளிந்தவாறு அமர்ந்திருந்தான்.

"நான் மரித்துவிட்டேன் என்றும், மேசியாவின் வல்லமையால் இப்போது உயிரோடு இருக்கிறேன் என்றும் நீங்கள் சொல்கின்றீர்கள். இது நம்பமுடியாததாக உள்ளது, நம்புவதற்கு வாய்ப்பே இல்லை" என்று அன்யா அவநம்பிக்கையோடு சிரித்தவாறு தன் தலையை ஆட்டினாள்.

"நானும் உயிர்த்தெழுந்தபோது மிகவும் குழப்பமாகவும் - அதே சமயத்தில் மிகவும் மகிழ்ச்சியாகவும் உணர்ந்தேன்" என்று லெவ் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டான்.

"நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன், லெவ், ஆனால் எனக்கு இன்னும் பயமாக உள்ளது. நான் பாதுகாப்பாகத்தான் இருக்கிறேன்

என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்று அன்யா அறையைச் சுற்றிப் பார்த்தவறு கேள்வி எழுப்பினாள். பின்பு லெவ்வையும், அவளுக்கு முன்னாள் தட்டில் இருந்த ஏதேனின் பழத்தையும் பார்த்தாள்.

லெவ் மற்றும் ஏஞ்சலா இருவரும் இப்புதிய பூமியில் கீழ்ப்படியாமையால் உண்டாகும் விளைவுகளையும், மேசியாவின் ஆவிக்குரிய வல்லமை பற்றியும், அவருடைய அபிஷேகம் செய்யப்பட்டவர்களையும், முற்பிதாக்களைப் பற்றியும் விவரித்து அன்யாவிற்குக் கூறினர்.

“ஞாபகங்கள் பயங்கரமானது. இத்தகைய ஞாபகங்களை எப்படி சமாளிப்பது என்று எனக்குத் தெரியவில்லை” என்று அன்யா புலம்பினாள்.

“அன்யா, நீ இன்னும் கொஞ்சம் தேநீர் அருந்து, கொஞ்சம் பழங்களையும் சாப்பிடு, இவற்றைப் பற்றி பிறகு எங்களுடன் பேசலாம்” என்று லெவ் அவளின் கரங்களின் மேல் தன் கரங்களை வைத்து அமைதிப்படுத்தினான். அன்யா, ஏதேன் பழத்தை எடுத்து சிறிது சாப்பிடத் தொடங்கினாள். ஏஞ்சலா, ஏதேன் பழத்தில் உள்ள ஜீவனளிக்கும் மற்றும் குணப்படுத்தும் வல்லமையினைப் பற்றி விளக்கினாள். ஒவ்வொரு கடியின்போதும் அதன் தனித்துவமான சுவையையும், தன்மையையும் அன்யா உணர்ந்தாள். அவள் சாப்பிட்டு முடிக்கும் போது, ஏஞ்சலா தனது விளக்கத்தை முடித்தாள். பின்பு மூவரும் சிறிது நேரம் அமைதியாக இருந்தனர்.

## திகிலூட்டும் நினைவுகள்

இறுதியாக, அன்யா நடுங்கிய குரலில் பேசினாள். “லெவ், நான் பாதுகாப்பாக இருப்பதாகத்தான் நினைத்தேன், உங்கள் நண்பர்கள்

சிலருடன், உங்களது படைப் பிரிவின் தலைமையகத்திலிருந்து கேரவன் வாகனத்தை நான் ஓட்டிச் சென்றேன். நான் உங்களோடு சேர்ந்து நேரம் செலவிட வேண்டும் என்பதற்காக, விரைவாக வீட்டிற்கு வர விரும்பினேன். அப்போது திடீரென்று குண்டுகள் வெடிக்கும் சத்தத்தையும், கலாட்டா நடப்பது போன்ற ஒரு சத்தத்தையும் நான் கேட்டேன், எனக்கு முன்னால் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மீது மோதுவதைத் தவிர்ப்பதற்காக, அங்கு போடப்பட்டிருந்த தடுப்புக்கு அருகாமையில் நான் வண்டியை நிறுத்தினேன்". கண்ணாடிகள் உடைந்து நொறுங்கும் சத்தத்தையும், தோட்டாக்களின் சத்தத்தையும் கேட்டேன். அதைத் தொடர்ந்து ஒரு மனிதனின் குரலையும் கேட்டேன். அவன் என்னை வாகனத்திலிருந்து வெளியேறும்படி சைகை செய்தான் என்றாள்.

"அவன் என்னை வாகனத்திருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றுவதற்கு முன் நான்...." என்று பேசிக் கொண்டிருக்கும் போதே அவளது குரல் தடுமாறியது. அன்யா, தன் கதையைத் தொடர்ந்த போது அவளது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது. மேலும் லெவ் மற்றும் ஏஞ்சலாவின் கண்களிலும் கண்ணீர் வழிந்தது. லெவ் தானும் அங்கு இருப்பதைப் போலவும், விநோதமான ஒரு கனவில் நடந்த உண்மைகளைப் பார்த்துக் கொண்டிருப்பதைப் போலவும் உணர்ந்தான்.

"நான் அவனிடமிருந்து தப்புவதற்காகக் கடுமையாகப் போராடினேன். என்னை அவன் தரையிலே தள்ளி விழச் செய்த அந்தக் கடைசி நிமிடம் வரை, நான் என் பற்களை கடித்துக் கொண்டு போராடினேன். அந்த மனிதன் அரபு மொழியில் என்னைப் பார்த்து அவதூறாகப் பேசினான், அவனது வார்த்தைகளை என்னால் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிந்தது. தப்பிப்பதற்கு நான் எடுத்த முயற்சிகளைத் தடுப்பதற்காக துப்பாக்கியின் பின் பாகத்தைக் கொண்டு என்னை தாக்கியவாறு, அவன் அடிக்குரலில்...."

"அல்லாஹ் இரக்கமுள்ளவர், அல்லாஹ் மேன்மையானவர், அல்லாஹ் புகழப்படக் கூடியவர். அவர் புத்தகத்தின் மேல் நம்பிக்கை இல்லாத மக்களுக்கு - மரணம் மட்டுமே உள்ளது" என்று கத்தினான்.

"தீவிரவாதிகளுக்குத் தங்களுடைய எதிரிகளைச் சிதைப்பதற்கு, அவர்களுடைய உடல் பாகங்களையும், கால்களையும் வெட்டுவது என்பது சாதாரணமானதே. நான் ஒரு மூர்க்கமான பெண் சிங்கத்தைப் போல போராடினேன். ஆனால் அவனது வெறித்தனமான கோபத்தில் இருந்து என்னால் தப்ப முடியவில்லை. என் உடல் இரத்தக் களரியாகும் வரையிலும், நான் நிர்வாணமாகும் வரையிலும் என்னை அவன் வெட்டினான். என்னுடைய இரத்த வெள்ளத்தில் நான் மிதந்தேன். நான் விண்மீன்கள் நிறைந்த வானத்தை வெறித்துப் பார்த்தேன், பின்னர் நான் வீங்கி இருந்த எனது கண்களை மூடினேன்" என்றாள்.

"அந்த மனிதன் வெற்றிக் களிப்பில் எழுந்து நின்றான். அந்த இடம் விளக்குகளால் பிரகாசமாகியது, மகிழ்ச்சியின் குரல்கள் என் காதுகளில் விழுந்தன. நான் சுயநினைவை சற்று நேரம் பெறுவதும், பின்பு இழப்பதுமாக இருந்தேன்".

"அதன் பின்பு யாரோ ஒருவர் என் உடலையும், கால்களையும் துணியால் கட்டுவது போன்று உணர்ந்தேன். அவர்கள் என்னைத் துணிகளில் சுற்றி ஒரு வாகனத்திற்கு இழுத்துச் சென்றார்கள்.... அங்கு இருந்தவர்களில் இருவர் - பெண்கள் - வலிமையான பெண்களாய் இருந்தார்கள். வாகனம் கரடுமுரடான பாதையில் சென்றதும், பயணம் அசௌகரியமாக இருந்ததும் எனக்கு நினைவில் இருக்கிறது. எனக்கு நினைவில் இருக்கும் அடுத்த காரியம், நான் படுக்கையில் இருந்ததுதான். நான் சிறிது நேரத்தில் மயக்கமடைந்தேன்". அன்யாவின் குரல் உடைந்து ஒலித்தது, அவளால் அதற்கு மேல் எதுவும் பேசமுடியவில்லை.

லெவ் தனது நாற்காலியை அன்யாவிற்கு அருகில் இழுத்துப் போட்டு, அவளது தோள்களைச் சுற்றி தன்னுடைய கரங்களைப் போட்டு அணைத்தவாறு அமர்ந்தான். "நீ கடந்து சென்ற எல்லாவற்றிற்காகவும் நான் மிகவும் வருந்துகிறேன், அன்யா, நீ இப்போது மீண்டும் ஜீவனோடு எங்களுடன் இருப்பதற்கு மிகவும் நன்றியுள்ளவனாகவும் இருக்கிறேன்" என்று அவளது காதருகில் கிசுகிசுத்தான். லெவ் சிறிது நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான். பின்பு அவன் அவளது காரை எவ்வாறு கண்டுபிடித்தான் என்பதையும், அவளது உடைகள் கிழிக்கப்பட்டு, முழுவதும் இரத்தந்தோய்ந்து இருந்ததையும், இந்த நிலைக்கு ஆளாக்கிய குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்காக, அவன் வேகமாக காரை ஓட்டிக் கொண்டு சென்றபோது, கார் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியது பற்றியும், பின்னர் தலையில் பலத்த காயங்களோடு ஒரு மருத்துவமனையில் தான் அனுமதிக்கப்பட்டதைப் பற்றியும் லெவ் விவரித்தான்.

"சில வாரங்களுக்கு முன்பு வரை, உனது பெயரை உச்சரிக்கக் கூட என்னால் முடியவில்லை, அன்யா" என்று லெவ் தன் நிலையை எடுத்துக் கூறினான்.

"உங்களுக்காகவும் நான் வருந்துகின்றேன், லெவ். என்னுடைய வண்டியையும், உடைகளையும் கண்டபோது, உங்களுக்கு எவ்வளவு கடினமாக இருந்திருக்கும், லெவ்" என்று பேசிய அன்யாவின் குரல் பலவீனமாக இருந்தது. அவள் எழுந்தமர்ந்து கூறிவிட்டு, நாற்காலியில் நன்கு சாய்ந்து, கண்களை மூடிக்கொண்டாள். "இப்போது, நான் ஜீவனோடு இருக்கிறேன், நான் ஆரோக்கியமாகவும் இருக்கிறேன். உலகில் நான் மிகவும் நேசிக்கும் இரண்டு நபர்களுடன் சேர்ந்திருக்கிறேன்" என்று அன்யா மெதுவாகத் தன் பலவீனமான குரலில் கூறினாள்.

ஏஞ்சலா, அன்யாவுக்கு மற்றொரு கோப்பை உயிர்த்தெழுதல் தேநீரை ஊற்றினாள். அன்யா தேநீரை குடித்து முடிக்கும் வரை லெவ் மற்றும் ஏஞ்சலா மேலோட்டமான உரையாடலைத் தொடர்ந்தனர்.

"உனக்கு ஓய்வு தேவை அன்யா, வா அறைக்குள் போகலாம்" என்றவாறு லெவ்வும், ஏஞ்சலாவும் ஒன்றாக எழுந்து இருபுறமும் நின்று, தாங்கிப் பிடித்தவாறு அன்யாவை அவளது அறைக்கு அழைத்துச் சென்றனர்.

"தயவுசெய்து என்னை விட்டு எங்கும் போகாதிருங்கள், லெவ்" என்று அன்யா மெல்லிய குரலில் கோரினாள்.

"நான், இங்குதான் இருப்பேன் அன்யா" என்று லெவ் அவளுக்கு உறுதியளித்தான்.

அன்யா கண்விழித்து, லெவ்வைப் பார்த்து புன்னகைத்தாள். அடுத்த சில மணிநேரங்கள் லெவ்வும், ஏஞ்சலாவும் அன்யாவுடன் பேசிக் கொண்டிருந்தனர். அவளது வீடும், தோட்டமும் அவள் விரும்பிய வகையில் இருந்தன. பின்பு புதிய பூமியின் ஒளிபரப்பில் (NEB-New Earth Broadcast) முற்பிதாக்களுடன் நடந்த ஒரு சிறிய நிகழ்ச்சி அவளைக் கவர்ந்தது. அவர்களது திருமணம் நடந்து இருபத்து ஐந்து ஆண்டுகளாகிவிட்டது என்றும், ஆறு மாதங்களுக்கு முன்பாகத் தான் உயிர்த்தெழுப்பப்பட்டதை லெவ் விளக்கியபோது, அன்யா லெவ்வை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

"எவ்வளவு காலத்தைக் கடந்திருக்கிறேன் என்பதைக் குறித்த அறிவு எனக்கு இல்லை" என்று தன்னைப் பற்றித் தானே விமர்சித்துக் கொண்டாள்.

இது அவளுடைய வீடு என்றும், அவனது வீடு இங்கிருந்து சற்று தொலைவில்தான் உள்ளது என்றும் லெவ் கூறியபோது, அன்யா மீண்டும் ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

"லெவ், நீங்கள் இறப்பதற்கு முன்பு மறுமணம் செய்து கொண்டீர்களா? இப்போது நீங்கள், உங்கள் இரண்டாவது மனைவியுடன் இணைந்து வாழ்கிறீர்களா?" என்று அவள் தனது குரலில் எவ்விதமான உணர்ச்சியும் இன்றிக் கேட்டாள். லெவ் சங்கடமாகப் பார்த்தான். "நீங்கள் மறுமணம் செய்து கொண்டதில் எனக்கு மகிழ்ச்சிதான், அன்பே. அது சரிதான்" அதில் தனக்கு எந்தவித வருத்தமும் இல்லை என்று அன்யா உறுதியளிக்க முயன்றாள்.

"நான் மறுமணம் செய்து கொண்டேன், ஆனால் நான் அவளுடன் இந்தப் புதிய பூமியில் சேர்ந்து வாழவில்லை. புதிய உலகில் கணவன்-மனைவி உறவு முறைகள் முற்றிலும் வித்தியாசமானது" என்றான். குடும்ப உறவுகளைப் பற்றியும், திருமண உறவானது ஆழ்ந்த மற்றும் திருப்தியளிக்கும் வகையில் நட்புறவாக மாறிவிட்டிருப்பதைப் பற்றி கூறிய லெவ்வின் விளக்கத்தை, அன்யா எவ்விதக் கேள்விகளும் கேட்காமல் அமைதியாகக் கேட்டுக் கொண்டாள். "நீ இறந்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, நான் ரெபெக்காளை மணந்தேன், ரெபெக்காளும், ஏஞ்சலாவும் சேர்ந்து இந்த வீட்டை கட்டுவதற்குக் கடினமாக உழைத்தார்கள்" என்ற லெவ் தொடர்ந்து கூறினான்.

அன்யா பேசும் வரை மூவரும் அமைதியாக இருந்தனர்.

"நான் சிலவற்றிற்கு என்னைப் பழக்கிக் கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். நான் நன்றியுள்ளவளாக இருக்கிறேன் - ஆனால் அதே நேரத்தில் குழப்பமாகவும், எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் தாங்கிக் கொள்ள முடியாதவாறு இருப்பதாகவும் உணர்கிறேன்" என்றாள்.

"நான் உயிர்த்தெழுந்தபோது எனக்கும் இதே விதமான உணர்வுகள் இருந்தது, என் நினைவில் இருக்கிறது" என்று லெவ் தலையசைத்தபடி முணுமுணுத்தான்.

"வா, ஏஞ்சலா, இங்கு வந்து என்னுடன் உட்கார். நானும், லெவ்வும் பேச வேண்டியதைப் பேசி விட்டோம், இப்போது நமக்கான நேரம்" என்று அன்யா, ஏஞ்சலாவை அருகில் அழைத்தாள்.

இரண்டு சகோதரிகளும் ஆர்வமுடன் பேசுவதை லெவ் பார்த்தான், அது அவனது முகத்தில் புன்னகையையும், அவர்களின் சிரிப்பின் சத்தம் அவனது இதயத்திற்கு நிம்மதியையும் கொடுத்தது. தான் கிளம்பும்படிக்கு அன்யா தனக்கு ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்ததாக லெவ் உணர்ந்தான். அவன் இல்லாத நேரத்தில், புதிய உலகின் ஒழுங்குமுறைகளை உள்வாங்குவதற்குத் தேவையான தனிமையை அவளால் பெற்றுக் கொள்ளமுடியும் என்று உணர்ந்து கிளம்புவதற்குத் தயார் ஆனான்.

ஏஞ்சலாவை அணைத்து லெவ் விடை பெற்றான். பின்னர் அன்யாவின் முன் வந்து நின்றான். அவள், அவனது முகத்தைத் தன் கரங்களால் பற்றி, அவனை அவளருகே இழுத்தாள். அவள் கண்களில் உணர்ச்சியின் கிளர்ச்சியையும், அவனது உதடுகளில் முத்தமிட வேண்டும் என்பதற்கான ஆர்வம் அவளுள் எழுவதையும் லெவ் கண்டான். பின்பு அவளுக்கு குழப்பம் உண்டானதால் முத்தமிடுவதற்கு பதிலாக அவனைத் தழுவிக் கொண்டாள். இதே போன்றதொரு தருணம் தான் உயிர்த்தெழுந்த முதல் நாளின் அனுபவத்தில் தனக்கும் ஏற்பட்டிருந்ததை லெவ் நினைவு கூர்ந்தான்.

அவர்கள் அதிக நொடிகள் ஒருவரையொருவர் அணைத்தபடியே இருந்தனர். "நான் உங்களை நேசிக்கிறேன், லெவ். நீங்களும், ஏஞ்சலாவும் எனக்குச் செய்த அனைத்திற்காகவும் நான் மிகவும் நன்றியுள்ளவளாக இருக்கிறேன். ரெபெக்காளிற்கும் நான் நன்றியுள்ளவளாக இருக்கிறேன். பழைய உலகில் உங்கள் வலியை அவள் குறைத்திருக்கிறாள், புதிய உலகில் அவள் எனக்கு உதவி

இருக்கிறாள். நான் அவளைச் சந்திக்க விரும்புகிறேன், லெவ். அவளைச் சந்திக்க முடியுமா?" என்று அன்யா கிசுகிசுத்தாள்

"உன்னைச் சந்திக்க ரெபெக்காள் மிகவும் ஆவலாக இருக்கிறாள். எந்த நேரத்தில் உன்னைச் சந்தித்தால் சரியாக இருக்கும் என்று அவளுக்குத் தெரியாததால் அவள் வரவில்லை" என்று லெவ் கூறினான்.

"இன்றிரவு சந்திக்கலாம், லெவ். இன்றிரவு நீங்கள் அவளை உங்களுடன் அழைத்து வருகிறீர்களா?" என்று அன்யா கேட்டாள்.

லெவ் ஒத்துக்கொண்டு தலையசைத்தான்.

அன்யாவும், ஏஞ்சலாவும் வரவேற்பு அறையில் உள்ள சோபாவில் அமர்ந்து தங்கள் உரையாடலை மீண்டும் தொடங்கினர். லெவ், ஒருவரையொருவர் கிண்டல் செய்து சிரித்துக் கொண்டிருந்த இரண்டு சகோதரிகளை பிரம்மிப்புடனும், நன்றியுடனும் மீண்டும் ஒரு முறை பார்த்துவிட்டு "நான் மீண்டும் வருகிறேன்," என்று கூறிவிட்டு வெளியேறினான்.

## அன்யா, ரெபெக்காளின் சந்திப்பு

அன்றைய நாளின் மாலைக்குப் பின்னர் லெவ்வும், ரெபெக்காளும் அன்யாவின் வீட்டின் வாசலில் நின்று கொண்டிருந்தனர். லெவ் வீட்டு வாசலின் அழைப்பு மணியை அழுத்தினான்.

ஏஞ்சலா, லெவ்வையும் பின்னர் ரெபெக்காளையும் அணைத்து வரவேற்றாள்.

"அன்யா எப்படி இருக்கிறாள்?" என்று ரெபெக்காள், ஏஞ்சலாவிடம் தணிந்த குரலில் கேட்டாள்.

"நன்றாக இருக்கிறாள். உன்னைச் சந்திக்க விரும்புகிறாள். வா". ஏஞ்சலா, தனது கையை ரெபெக்காளின் தோள்களைச் சுற்றி அணைத்தவாறே, இருவரையும் சமையலறைக்கு அழைத்துச் சென்றாள். அவர்கள் சமையலறைக்குள் நுழைந்ததும் அன்யா எழுந்து நின்றாள். ரெபெக்காள், அன்யாவிற்கு சில அடிகள் முன்பாக வந்து நின்றாள். அன்யாவின் கருவிழிகள் பிரகாசமாகி, புன்னகையோடு ரெபெக்காளை வரவேற்றன. அவளுடைய வெளித் தோற்றத்தினை அன்போடும், வியப்போடும் பார்த்தாள்.

"ரெபெக்காள்" என்று அன்யா மென்மையாக அழைத்தாள்.

"அன்யா?" என்று ரெபெக்காள் கண்களில் கண்ணீருடன் பதிலளித்தாள். இருவரும் ஒருவரையொருவர் தழுவி, ஒருவருக்காக மற்றொருவர், தோள்களில் சாய்ந்து அழுதார்கள். "நான் உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தேன் - நீங்கள் கடந்து வந்த அனைத்திற்காகவும் ஜெபித்தேன் - நான் உங்களைச் சந்தித்ததில் பெருமைப்படுகிறேன்" என்று ரெபெக்காள் கூறினாள்..

"நீங்கள், ஏஞ்சலாவுடன் சேர்ந்து எனக்காக மிகவும் கடினமாக உழைத்திருக்கிறீர்கள். அவள் என்னிடம் அனைத்தையும் கூறினாள். நீங்கள் செய்தவைகளுக்காக உங்களுக்கு மிகவும் நன்றி ரெபெக்காள்" என்று அன்யா கூறினாள்.

ரெபெக்காள் அவளிடமிருந்து விலகி, அவளது கரங்கள் தொடும் தூரத்தில் நின்றாள். அவர்கள் ஒருவரையொருவர் கண் சிமிட்டாமல் சில மணி துளிகள் ஆழமாகப் பார்த்துக் கொண்டனர்.

லெவ்வும், ஏஞ்சலாவும் அவர்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த இருவருடைய சுவாரஸ்யமான அறிமுகக் காட்சியைப் பார்ப்பதற்காக

சற்று இடைவெளி விட்டு நின்றிருந்தனர். அன்யாவும், ரெபெக்காளும் ஒருவருக்கொருவர் தெரிந்துகொள்ள சிறிது நேரம் கொடுப்பதற்காக அவர்கள் பின்னால் நின்று கொண்டு, தங்களது தனிப்பட்ட உரையாடலில் ஈடுபட்டிருந்தனர்.

அடுத்த சில மணிநேரங்கள், நான்கு பேரும் கடந்த கால மற்றும் தற்போதைய அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டதில் புன்னகையோடும், கண்ணீரோடும் விரைவாகக் கடந்து சென்றது. அடுத்த தலைமுறையினரை உயிர்த்தெழுப்புவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து அவர்கள் கலந்தாலோசித்தனர்.

ரெபெக்காளும், அன்யாவும் லெவ்வின் தனித்துவமான நடத்தைகளைப் பற்றிய நினைவுகளைப் பகிர்ந்து கொண்டதால் மாலைவேளை மகிழ்ச்சியுடன் நிறைவு பெற்றது. இந்த உரையாடலானது அவர்களுக்கு இடையே இருந்த பழைய உலகின் உணர்வுகளையும், லெவ்வுடனான உணர்வுகளையும் ஒருவருக்கொருவர் புரிந்து செயல்பட உதவியது.

சரி, நேரமாகிவிட்டது. நாங்கள் கிளம்புகிறோம் என்று ரெபெக்காள் கூறினாள். புறப்படுவதற்கு முன்பு - "அன்யா நான் உங்களுக்கு ஒன்றைக் கொண்டு வந்துள்ளேன், அது உங்களிடம் தானே உள்ளது, லெவ்?" என்று லெவ்விடம் கேட்டாள்.

லெவ், காகிதத்தால் சுற்றப்பட்டு, அதன் மீது காட்டு மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்த ஒரு பெட்டியை ரெபெக்காளிடம் கொடுத்தான். ரெபெக்காள், லெவ்விடமிருந்து பெட்டியை வாங்கி அன்யாவிடம் கொடுத்தவாறே, "இதை உங்களுக்குக் கொடுக்க நான் விரும்பினேன், அன்யா" என்று கூறினாள்.

அன்யா அதனைத் திறந்தபோது ஆச்சரியத்தில், "ஓ! எவ்வளவு அழகாக இருக்கிறது" என்றாள். அதில் திராட்சைக் கொடிகள் கைகளால் வரையப்பட்டு, வண்ணம் தீட்டப்பட்டிருந்த முன்பக்க அட்டையக் கொண்ட ஒரு குறிப்பேடு இருந்தது. "இது பழைய உலகில் - நான் வைத்திருந்த கடைசி பத்திரிக்கையின் முன்பக்க அட்டையைப் போன்றே வடிவமைக்கப்பட்டிருக்கிறது" என்று அன்யா வியப்புடன் கூறினாள்.

"ஆமாம், எனக்குத் தெரியும். நான் அதைக் குறிப்பாக உங்களுக்காகவே வடிவமைத்தேன். நீங்கள் அந்த இதழை எவ்வளவு விரும்பினீர்கள் என்று லெவ் என்னிடம் கூறி இருக்கிறார்" என்று ரெபெக்காள் கூறினாள்.

அன்யா உணர்ச்சிவசப்பட்டாள். இந்த நாளில் நிகழ்ந்த தங்களது விலையேறப் பெற்ற திரும்பச்சேர்தல் முடிவுக்கு வந்ததை நால்வரும் எண்ணுகையில், அந்த அறையே திடீரென்று அமைதியானது.

❀❀❀

"இதோ அடியேன் இருக்கின்றேன் என்னை அனுப்பும்...."(ஏசாயா 6:8).

# அத்தியாயம் - 19

ஆரோன் குடும்பத்தினர், முற்பிதாக்களின் தலைமையிடத்தில் இருந்த வரவேற்பு அறைக்குள் நுழைந்து, அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தார்கள். வரவேற்பு அறையில் இருந்த பெண், ஆலனின் பெயரை அழைக்கும் வரை காத்திருந்தார்கள். முற்பிதாக்களில் ஒருவரைச் சந்திப்பதற்கு இந்த முழு குடும்பத்திற்கும் கிடைத்திருக்கும் வாய்ப்பைக் கண்டு, அங்கு காத்திருந்த மற்றவர்கள் ஆச்சரியப்பட்டனர். ஆரோனின் குடும்பம் உள்ளே நுழைந்து அமர்ந்தபோது, ஏனோக்கு தன்னுடைய தொலைபேசி உரையாடலை முடித்துக் கொண்டார்.

"ஹா.... எங்கள் அனைவரையும் மகிழ்வித்த ஆலன், கண்டிப்பாக நீங்களாகத்தான் இருக்க வேண்டும்" என்று ஆலனை நோக்கிக் கூறினார். ஆலன் தனது நாற்காலியில் இருந்து எழுந்து நின்றான். மிக உயரிய அதிகாரத்தில் இருந்தும், தன் முன் ஒரு நண்பரைப் போல நட்புடன் நின்று, தன் கைகளைப் பிடித்து உற்சாகத்தோடு குலுக்குவதைக் கண்டான்.

"நீங்கள்தான் அரியேலாக இருக்க வேண்டும்" என்றார்.

அரியேல் எழுந்து நிமிர்ந்து நின்றார்.

"ஆமாம், சரிதான், நான்தான் அரியேல். இரண்டு மாதங்களுக்கு முன்புதான் உயிர்த்தெழுந்தேன், இவர் என் அன்பான மனைவி - முன்னாள் மனைவி - அன்னாள். உங்களைச் சந்திப்பதில் நாங்கள் மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறோம்" என்று அரியேல் கூறினார்.

அன்னாள் எழுந்து தனது கணவரின் அருகில் நின்றார். தனது கணவரின் கூற்றை ஆமோதிப்பது போல் தன் தலையை மாத்திரம்

அசைத்தார். "மதிப்பிற்குரிய, திரு.ஏனோக்கு அவர்களே, உங்களுக்கு மேன்மை உண்டாகுக". அரியேல் இன்னும் ஏனோக்கின் கரங்களை விடாமல் பிடித்துக் கொண்டிருந்ததால், அன்னாள், ஏனோக்கின் கரங்களுக்கு மேலாக அன்பாகத் தட்டினார்.

இன்னும் கைகளை விடவில்லையா என்று அரியேல் தனக்குத்தானே மெதுவாகக் கூறினார். "நீங்கள் மற்றவர்களை விட உயரிய இடத்தில் இருக்கிறீர்கள். உலகமானது தலை கீழாக மாறி அழிவின் பாதையில் சென்று கொண்டிருந்த காலத்தில், நீங்கள் வாழ்ந்தீர்கள். ஆனால் நீங்கள் மட்டும் தேவனோடு சஞ்சரிப்பவராக இருந்தீர்கள். இத்தகைய மகத்துவத்தைப் பெற்றிருக்கும் உங்களது சிறப்பை என்னால் விவரிக்க இயலவில்லை" என்று அரியேல் தொடர்ந்தார்.

ஏனோக்கின் புன்னகை அவரது முகத்தை பிரகாசமாக்கியது. அப்போது தெரிந்த அவரின் பல்வரிசை அவரின் அடர் கருப்பு நிற தோலிலிருந்து முற்றிலும் மாறுபட்டு பளிச்சென்று இருந்தது. அவர் மனதாரச் சிரித்தவாறு, அரியேலின் கண்களை நேராகப் பார்த்தார். "கிறிஸ்துவைத் தேடுகிறவர்களையும், இருதயத்தில் உள்ளதை எதிர்கொள்ளத் தயாராக உள்ளவர்களையும் சந்திப்பது, என்னைக் அதிகம் கனப்படுத்துவதாயுள்ளது" என்றார்.

அரியேல், தன் பிடியைத் தளர்த்திக் கொண்டு பின்னால் நகர்ந்தார். தான் அனுபவித்த போராட்டத்தை ஏனோக்கு முழுமையாக அறிந்திருப்பதை அவர் உள்ளுணர்வினால் அறிந்து கொண்டார். ஆரோன் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும், தனது தனிப்பட்ட குறிப்பினைக் கொடுக்க ஏனோக்கு தொடர்ந்தார்.

"உங்கள் மகன் கானாவில் சிறந்ததொரு வேலை செய்கிறான். அங்குள்ள மக்கள் அவனை மிகவும் நேசிக்கிறார்கள். ஆலன் கற்று

கொடுக்கும் அனைத்தையும் கற்றுக் கொள்வதற்கு அவர்கள் கடுமையாக முயற்சி செய்கிறார்கள்" என்று ஏனோக்கு தனது பார்வையை லெவ் மற்றும் ரெபெக்காளிடம் செலுத்தியவாறு கூறினார்.

பின்னர் அவர், ஆலனிடம் நேரடியாக அவன் மேற்பார்வையிட்ட நடவடிக்கைகள் பற்றியும், அவனோடு பணிபுரிந்த கானானிய மக்களைப் பற்றியும் பேசினார். மோசஸ்-ரசல் என்ற கண்பார்வை இழந்த சிறுவன், மீண்டும் பார்வை பெற்றதால் அவனுக்கு உண்டான சந்தோஷத்தையும், மேலும் அச்சிறுவன் கிறிஸ்துவைப் பற்றி அறிந்து கொள்வதற்கு கொண்டிருந்த ஆர்வத்தையும் அவர் குறிப்பிட்டார். கானா மக்களால் எழுப்பப்பட்ட ஒரே புகார் என்னவென்றால், வேலையில் இருந்து சிறிது நாட்கள் விடுப்பு எடுக்குமாறு ஆலன் அவர்களை ஊக்குவித்ததே என்றார். மின்னணு உபகரணங்கள் மற்றும் கணினிகள் பயன்பாட்டிற்குள் வரத் தொடங்குவதற்கு எவ்வளவு நாட்கள் ஆகும் என்று ஏனோக்கு, ஆலனிடம் கேட்டார். ஆலன் இன்னும் சில மாதங்கள் ஆகும் என்று பதிலளித்தான்.

"மிகச் சிறந்தது", என்று ஏனோக்கு உறுதியாகக் கூறினார். "நீங்கள் வேறொரு வேலையை ஏற்கத் தயாரா? கூடுதல் பணியைச் செய்வதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?" என்று ஆலனிடம் வினவினார்.

"என் குடும்பத்தினருடன் நேரம் செலவழிப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது, ஆனாலும் கானா மக்களிடம் திரும்பிச் செல்வதற்கு ஆர்வமாக உள்ளது. வேறொரு பணிக்காக அவர்களை விட்டுப் பிரிந்துச் செல்வதை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. ஆனால் நான் உங்களின் கீழ், சேவையில் ஈடுபட்டுள்ளேன். உங்கள் தன்னார்வலர்கள் பட்டியலில் என்னை முதலிடத்தில் வைக்கவும்" என்று ஆலன் கூறினான்.

## லெவ் மற்றும் ரெபெக்காள், ஜெர்மனிக்கு நியமிக்கப்பட்டனர்

ஏனோக்கு, ஆச்சரியத்துடன் லெவ்விடமாய் திரும்பினார். "லெவ், உங்களைப் பற்றிக் கூறுங்கள்? நீங்கள் கடுமையாகப் படித்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் உங்களது இருதயத்தில் உள்ள சிக்கல்களை நன்றாகக் கையாண்டு வருகிறீர்கள். மற்றவர்களுடைய பிரச்சனைகளில், உதவுவதற்கான திறமை உங்களிடம் இருப்பதாகத் தெரிகிறது. ஜெர்மனியில், நாம் புதிதாகத் தொடங்கும் வேலைகளுக்கு நமக்கு சில தன்னார்வலர்கள் தேவைப்படுகிறார்கள். ஜெர்மானியர்கள், இந்தப் புதிய சமுதாயத்திற்கான திட்டங்களையும், நம்முடைய ஆலோசனைகளையும் மற்றும் நவீன கணினி தொழில்நுட்பங்களைப் புரிந்து கொண்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்கு நமக்கு தன்னார்வத் தொண்டர்கள் தேவை. அவர்களில் பலர் எபிரெய மொழி பேசுகிறார்கள், இருப்பினும் எங்கள் சார்பாக நீங்கள் செல்ல விரும்பினால், ஜெர்மன் மொழியை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும் அதற்கு உங்களுக்கு சில மாதங்கள் ஆகும்" என்று லெவ்விடம், ஏனோக்கு விளக்கினார்.

ஏனோக்கு, லெவ்வின் தயக்கத்தை உணர்ந்தவராக, உடனடியாக அவருக்கு சில விஷயங்களை உறுதிபடுத்தினார். ஏதேன் பழம் நம் சிந்தையில் ஏற்படுத்தும் தாக்கத்தை லெவ்விற்கு நினைவுபடுத்தினார். மூன்று அல்லது நான்கு மாதங்களில் உச்சரிப்பு மாறாது ஜெர்மானிய மொழியைக் கற்றுக் கொள்ள முடியும் என்றும், ஜேக்கிடமிருந்து நவீன கணினி தொழில்நுட்பத்தை அறிந்து கொள்வதில் அவருக்கு எந்தவித சிரமமும் இருக்காது என்றும் அவர் உறுதியளித்தார்.

"லெவ், இந்த வேலையில் நீங்கள் உங்களை ஈடுபடுத்திக் கொள்கிறீர்களா?" என்று ஏனோக்கு கேட்டார்.

ஏனோக்கு பேசுவதை சற்று நிறுத்தினார், இருப்பினும் லெவ் பதிலளிப்பதற்கு இடம் கொடுக்காது அவரே தொடர்ந்தார்.

"இன்னும் ஒரு வருடத்திற்குள் இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த அனைவரும் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டிருப்பார்கள். அதைத் தொடர்ந்து இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்களும் திரும்பி வருவார்கள். ஜெர்மனியின் வரலாறானது அதன் சமகாலத்தில் வாழ்ந்த மற்ற நாடுகளின் வரலாற்றை விட தனித்துவமானது. இஸ்லாமியர்கள் மட்டுமல்லாது ஜெர்மானியர்களும் யூதர்கள் மீது வெறுப்புணர்வை ஆழமாகக் கொண்டிருந்தனர். இவர்களைப் போல வேறு எந்த ஒரு தலைமுறையும், யூதர்கள் மீது இவ்வளவு வெறுப்புணர்வைக் கொண்டிருந்ததில்லை. அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்பங்களை, நீங்கள் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கும் போது, அவர்களுக்கு யூதர்களின் மீதான வெறுப்பினால் உண்டாகும் தாக்கங்களையும், நீங்கள் கையாள வேண்டியிருக்கும். நீங்கள் சில எதிர்ப்புகளையும், தப்பெண்ணங்களையும் சந்தித்தால் ஆச்சரியப்பட வேண்டாம். இந்தச் சவால்களை சமாளிக்கத் தேவையானவை எல்லாம் உங்களுக்கு வழங்கப்படும்" என்றார்.

"சரி" என்ற லெவ்வின் குரல் பலவீனமாக ஒலித்தது.

"நீங்கள் பயப்படுவதுபோல் தெரிகிறது. உங்களால் இந்த வேலையைச் செய்ய முடியும் என்று நான் உறுதியளிக்கிறேன். இல்லையென்றால் நாங்கள் உங்களிடம் கேட்டிருக்க மாட்டோம். உண்மையில், கிறிஸ்துவே உங்களை இந்தப் பணிக்குத் தேர்ந்தெடுத்தார், நான் அல்ல. கொடுக்கப்பட்டிருக்கும் பணிக்கு தகுதியற்ற எவரையும் அவர் தேர்ந்தெடுக்க மாட்டார்" என்று ஏனோக்கு கூறினார்.

லெவ் நம்பிக்கையின்றி தனது இருக்கையில் அமர்ந்து இருந்தான்.

"நீங்கள் இராஜாவின் சேவையில் ஈடுபடுவதற்காக வெளிநாடு செல்வதற்கு விரும்புகிறீர்களா?" என்று ஏனோக்கு உற்சாகத்துடன் ரெபெக்காளிடம் கேட்டார். "ஆனால் நீங்களும் ஜெர்மன் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

ரெபெக்காள் தன் தலையை அசைத்து சம்மதம் தெரிவித்தாள்.

ரெபெக்காள் அந்த வேலையை ஏற்றுக்கொண்டால், ஜெர்மனியில் உள்ள பல்வேறு தோட்டக்கலை நடவடிக்கைகளுக்கான தொடர்பு அதிகாரியாகவும் செயல்படுவார் என்று ஏனோக்கு தொடர்ந்து கூறினார். இந்தப் பணியில் அவளது பங்கானது முக்கியத்துவம் வாய்ந்தது என்று வலியுறுத்தினார். அடுத்தடுத்து உயிர்த்தெழுப்பப்படும் தலைமுறைகளுக்குப் போதுமான ஏதேன் மரங்களும், பழத்தோட்டங்களும் தேவை என்பதால், அவளின் பங்கு முக்கியமானது என்று வலியுறுத்தினார்.

"தொழில்நுட்பத்தில் உங்களால் தீர்க்க முடியாத சிக்கல் ஏதாவது எழுந்தாலோ அல்லது நீங்கள் எதிர் கொள்ளும் பணியில் ஏதேனும் உதவி தேவைப்பட்டாலோ, தனிப்பட்ட முறையில் என்னை அந்த நாளின் பகற்பொழுதில் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் நீங்கள் அழைக்கலாம், அவசரத்தேவை என்றால் இரவு நேரத்திலும் அழைக்கலாம். இதுதான் எனது தனிப்பட்ட தொலைபேசி எண். இதை வேறு யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டாம். இந்த எண்ணை மனப்பாடம் செய்துவிட்டு, இந்த அட்டையை அழித்துவிடவும். இது உங்களுக்கும் பொருந்தும், லெவ்" என்றார்.

ஏனோக்கு, வழக்கமான செல்போன்கள் போல தோற்றமளிக்கும் இரண்டு சிறிய தொலைபேசிகளை வெளியே எடுத்து, லெவ் மற்றும்

ரெபெக்காளிடம் அதைக் கொடுத்தார். இந்தச் செல்போன்கள், முற்பிதாக்களின் அலுவலகங்களில் மட்டுமே புரிந்து கொள்ளப்படும் பாதுகாப்பான தகவல் தொடர்புகளை வழங்குவதாக அவர் விளக்கினார்.

அந்த நாளின் மீதிப்பகுதி முழுவதும் எதிர்பாராத மகிழ்ச்சியின் ஊடே கடந்து சென்றது. முழு ஆரோன் குடும்பமும், சில முற்பிதாக்களுடன் மதிய உணவு உண்ணும்படியான கனம்மிக்க வாய்ப்பைப் பெற்றனர். ஏனோக்கு அவர்களை உல்தாள், பாராக், தெபோராள், சிம்சோன் மற்றும் சாமுயேல் ஆகியோருக்கு அறிமுகப்படுத்தினார். ஏனோக்கு, அரியேலிடம் ஜெபம் ஏறெடுக்கும்படி கூறினார். அரியேலின் வார்த்தைகள் சுருக்கமாகவும், எளிமையாகவும் இருந்தது. "அன்புள்ள ஆண்டவரே, நீர் எங்களுக்குச் செய்திருக்கிற பூமிக்குரிய ஆசீர்வாதங்களுக்கான ஏற்பாட்டிற்காகவும், இங்கு கூடியுள்ள ஒவ்வொருவருக்கும் நீர் செய்தவைகளுக்காகவும், முழு மனுக்குல குடும்பத்தினர் அனைவருக்கும் நீர் செய்தவைகளுக்காகவும், எங்களது நன்றியை முழுமையாக வெளிப்படுத்த முடியாது. மேசியாவின் பெயரில் உமக்கு நன்றிகளை ஏறெடுக்கிறோம், ஆமென்" என்று ஜெபித்தார்.

முற்பிதாக்களிடமிருந்து, ஆரோன் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் தாங்கள் பெற்றுக்கொண்ட மரியாதைக்குரிய உபசரிப்பினால் உண்டான ஆச்சரியத்தை கிரகித்துக் கொள்ள முயன்றவாறு அமைதியாக சாப்பிட்டார்கள். அவர்கள் எளிமையான உணவான ஏதேன் பழம் மற்றும் திராட்சை ரசத்தைப் பகிர்ந்து கொண்டனர். மேலும் முற்பிதாக்களிடையே நடந்த சுவாரஸ்யமான உரையாடலைக் கவனித்தனர். முற்பிதாக்கள் உயிர்த்தெழுதலினால் ஏற்பட்ட மகிழ்ச்சி மற்றும் ஏதேன் பழத்தின் காரணமாக ஏற்பட்ட

மாற்றங்கள் குறித்துச் சிலருடைய காரியங்களைப் பேசிச் சிரித்தபோது, அந்த மகிழ்ச்சி இவர்களையும் தொற்றிக் கொண்டது.

சாமுயேல், அவர்களது பணி துரிதமாக செய்யப்பட வேண்டும் என்று கூறியபோது, அவர்களுடைய மனநிலை சற்று கவலையடைந்தது.

"சாத்தான் கட்டவிழ்க்கப்படும் காலத்தில், தீமை மற்றும் பொய்யின்(தவறான எண்ணங்கள்) பக்கமாக இசைந்து இருக்கப் போகும் நபர்களின் எண்ணிக்கையைக் குறைக்க உதவுவதே நமது பணியின் நோக்கம் ஆகும். தற்போதையை காலமானது தேசத்து ஜனங்கள் அனைவரும் மேய்ப்பனுடைய குரலை அடையாளம் கண்டு கொண்டு அங்கீகரிக்கவும், நேசிக்கவும் கற்றுக் கொள்ளுவதற்கான வாய்ப்பினை வழங்குகிறது. இங்கு நம் ஒவ்வொருவருடைய பணியும் இந்த ஒரே நோக்கத்திற்காக மட்டுமே" என்று சாமுயேல் கூறினார்.

## ஆனியின் சவால் - நாகரிகமற்ற பழங்குடியினர்

ஆனி, தன்னுடைய குறுகிய கால படிப்பினை முடித்த பிறகு சேவை செய்யவதற்கு ஆப்பிரிக்கா, தென்அமெரிக்கா மற்றும் இந்தோனேசியாவில் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் சில பழங்குடியினரிடம் செல்வதற்கு முற்பிதாக்கள் அழைப்பு விடுத்தனர். இந்த ஜனங்கள் உயிர்தெழுதலின் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள ஆர்வமாக இருக்கின்றனர். ஆனால் "நாகரீகமடைந்த" மக்கள், இவர்களது உழைப்பைச் சுரண்டி, இவர்களை நியாயமற்ற முறையில் நடத்தியதால், நாகரீகமடைந்தவர்களுடன் இவர்கள் பழகுவதில்லை. ஆனியினுடைய இளமையும், விலங்குகள் மற்றும் இயற்கையின் மீதான அவளது அன்பும் பழங்குடியினர்களுக்கு, அவளுடைய உதவியை ஏற்றுக்கொள்வதை சுலபமாக்கும். உயிர்த்தெழுந்தவர்களுடைய

தேவைக்கு ஏற்ப, ரேச்சல் சேவையில் ஈடுபடுவதற்கு தயாராக இருக்கிறாரா என்பதைக் குறித்தும் அவளிடம் கேள்வி எழுப்பினார்.

ஜேக், அதிநவீன தொழில்நுட்பத்தினைப் பயிற்றுவிப்பதற்கு நீங்கள் எங்களுக்குத் தேவை. "ஏனென்றால் எவ்வளவு விரைவாக நாம் அறிவியலை மேம்படுத்துகிறோமோ, அவ்வளவு விரைவாக முழு உலகமும் செயல் திறனுடையதாகும். நீங்கள் ஒரு அற்புதமான வேலையைச் செய்கின்றீர்கள், நீங்கள் குழுவாக செயல்படுவதில் சிறந்தவர்" எனவே உங்களை நாங்கள் விட முடியாது என்றார்.

ஆனி, தனது தொண்டையைக் கணைத்தவாறு ஒரு கேள்வியைக் கேட்பதற்கு முனைந்தாள். "மன்னிக்கவும், ஏனோக்கு அவர்களே, ஏன் என்னைப் போன்ற சாதாரணமான ஒருவரை, தேசங்களைப் பார்வையிட தேர்வு செய்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

ஏனோக்கு தனது இறுதி அறிவிப்பை வழங்கினார். "நீங்களே முதலில் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கின்றீர்கள். அதனால் நீயும், உன்னைப் போன்றவர்களுமே, மற்றவர்களுக்கான ஆசீர்வாதங்களைச் சுமந்து செல்வதற்கு முதலில் ஆயத்தமானவர்களாக உள்ளீர்கள் என்பதால் நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். புதிய பூமியின் ஆற்றலினால் வாழும் அன்றாட ஜனங்கள் என்பதே உங்களின் மிகப்பெரிய சொத்து. மறுஜென்ம காலத்தின் செயல்முறைகள் சிறப்பாக நடைபெற ஆரம்பிக்கும்போது, தேசங்களைத் தனிப்பட்ட முறையில் பார்வையிட முற்பிதாக்களாகிய எங்களுக்கு அதிக சுதந்திரம் கிடைக்கும். ஆனால் அதுவரையில் நிலத்தினை மறுபங்கீடு செய்வதிலும், ஏதேன் மர ஏற்றுமதிகளை ஒருங்கிணைப்பதிலும், பள்ளியில் பயில்பவர்களுக்குத் தேவையான தகவல் மற்றும் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட திட்டங்களை உருவாக்குவதிலும் நாங்கள் மும்முரமாக இயங்கிக் கொண்டிருக்கின்றோம். உன்னுடைய விருப்பமானது உதவிகரமாக இருப்பது மட்டுமல்லாமல்,

அவசியமானதாயுமிருக்கும். அந்தப் பணிகள் தொடங்கும் சமயத்தில், நாங்கள் உன்னைத் தொடர்பு கொள்வோம்" என்றார்.

ஏனோக்கு எழுந்து நின்று, மதிய உணவுக் கூட்டமானது முடிந்துவிட்டது என்று சைகையால் காட்டியவாறு, அறையின் கதவைத் திறந்தார். ஆரோன் குடும்பத்தினரும் எழுந்து நின்றனர். "ஷாலோம், தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்" என்று அவர் கூறினார். ஒவ்வொரு முற்பிதாக்களின் கரங்களையும் குலுக்கியவாறு, அறையினை விட்டு வெளியேறினர்.

லெவ் தனது படுக்கையில் படுத்தவாறு, பலகணி வழியே வானில் தெரிந்த, நிலவொளியின் வெளிச்சத்தின் வழியாக நட்சத்திரங்களை கண்சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். வானத்திலும், பூமியிலும் உள்ள தேவனின் கைவேலைகளை ஆச்சரியத்தோடுப் பார்த்து பிரம்மித்தான். இந்த நாள் ஆசீர்வதிக்கப்பட்ட நாளாக இருந்தது. ஹிட்லரின் கீழ் இருந்த முந்தைய தலைமுறையைப் பற்றிய ஏனோக்கின் விளக்கமானது லெவ்வைக் கவலையடையச் செய்தது. தனக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பணிகளைக் கையாளும் திறன் தன்னிடம் உள்ளதா? என்ற எண்ணத்தோடு கூட அவன் ஏனோக்கின் வார்த்தைகளை நினைத்துப் பார்த்தான்.

"நீங்கள் எதிர்ப்புகளையோ, தப்பெண்ணங்களையோ சந்தித்தால் ஆச்சரியப்பட வேண்டாம், இந்தச் சவால்களைச் சந்திப்பதற்கு ஏதுவான அனைத்தையும் நீங்கள் பெற்று இருக்கின்றீர்கள். நீங்கள் கிறிஸ்துவைப் பிரதிநிதித்துவப்படுத்துவீர்கள், அவர் உங்களுக்கு ஞானத்தைத் தருவார்" என்று ஏனோக்கு கூறி இருந்தார்.

❋❋❋

*"கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்...."*
**(எசேக்கியேல் 11:19).**

# அத்தியாயம் - 20

ஜெர்மனிக்குச் செல்வதற்கு, லெவ்விற்கு அழைப்பு வந்ததிலிருந்து நான்கு மாதங்கள் விரைவாகக் கடந்திருந்தன. ஜேக்கின் பொறுப்பின் கீழ் இருந்து, கணினி தொழில்நுட்பத்தை லெவ் கற்றுக் கொண்டிருந்தான். அவனும், ரெபெக்காளும் சேர்ந்து ஜெர்மன் மொழியைப் பயிற்சி பெற்றிருந்தனர். ரெபெக்காள், லெவ்வை விட விரைவாகக் கற்றுக்கொண்டாள் - அவளுடைய உச்சரிப்பும் கிட்டத்தட்ட சரியாக இருந்தது. தாங்கள் இருவரும் இவ்வளவு குறுகிய காலத்தில் இவ்வளவு விரைவாகவும், சரளமாகவும் கற்றுக் கொண்டனர் என்பதைக் குறித்து அவர்களுக்கே ஆச்சரியமாக இருந்தது.

அவர்கள் இருவரின் தடுமாற்றமான ஆரம்பகால உரையாடல்களை நினைத்தபோது லெவ்விற்கு சிரிப்பு வந்தது. அவர்கள் கற்றுக் கொள்ள ஆரம்பித்த சில வாரங்களுக்குப் பிறகு, இருவரும் ஒன்றாக இருக்கும் போதெல்லாம் ஜெர்மானிய மொழியை மட்டுமே பேச வேண்டும் என்று ஒரு விதியை வகுத்துக் கொண்டு இருந்தனர். முதலில் அது அவர்களுக்கு கடினமாக இருந்தது. "எனக்கு பாதுகாப்பான -கு-ளி-ர்- தாங்கக் கூடிய - வெப்பமான - ஆடைகள் - இல்லை - அது நமது பயணத்திற்கு - தேவை" என்று திணறியவாறு பேசுவார்கள். பின்பு அவர்கள் பேசிக் கொண்ட வார்த்தைகளை, ஒருவருக்கொருவர் கேலி செய்து சிரிப்பார்கள்.

## பெர்லின்

அவர்களது விமானம் "டெல் அவிவிலிருந்து" டிசம்பர் 21-ஆம் தேதி காலை 6 மணிக்கு அவர்கள் திட்டமிட்டபடி புறப்பட்டது.

"நீங்கள் பெர்லின் நகரத்திற்குச் செல்லுங்கள், ஜெர்மனி அரசாங்கமானது நீங்கள் அங்கு தங்கியிருக்கும் காலத்தில் உங்களுக்கான வீட்டினை வழங்கும். மேலும் உங்களது உணவிற்கு ஏதேன் பழங்களும் வழங்கப்படும்" என்று ஏனோக்கு அவர்களின் கடைசி தொலைபேசி உரையாடலில், லெவ்விடம் அனைத்தையும் விளக்கி கூறி இருந்தார்.

ஏதேன் மரங்கள், ஜெர்மனியில் இன்னும் பழங்களை உற்பத்தி செய்யத் தொடங்கவில்லை. அவர்கள் பழத்தை இறக்குமதி செய்கிறார்கள். அதில் பெரும்பாலானவை வயதானவர்களுக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் கொடுக்கப்படுகின்றன. ஏதேன் பழம் பெறுபவர்களின் பட்டியலில் லெவ்வும், ரெபெக்காளும் சேர்க்கப்படுவார்கள்.

"நினைவில் கொள்ளுங்கள், லெவ், உங்களது பணியானது இரண்டு நோக்கங்களைக் கொண்டது. நமது உயரிய தொழில்நுட்பத்தை ஜெர்மானியர்கள் ஏற்றுக்கொள்ளுவதற்கு நீங்கள் அவர்களுக்கு உதவ வேண்டும், ஆனால் அதைவிட மிக முக்கியமாக, நீங்கள் உங்களது இருதயம் மற்றும் சிந்தையின் குணங்களின் தரத்தை அவர்களுக்குக் காட்ட வேண்டும். அது அவர்களுக்குள் மறைந்திருக்கிற தவறான எண்ணங்களை அவர்கள் மேற்கொள்ளுவதற்கு உதவும். பல ஆண்டுகளாக கற்பிக்கப்பட்டிருந்த யூதர்களுக்கு எதிரான வெறுப்பின் போதனைகளானது அவர்களது நினைவில் இருந்து அகற்றப்பட வேண்டும். குறைந்தபட்சம் வாரத்தில் ஒருமுறையாவது என்னை அழையுங்கள். நீங்கள் விரும்பும் எந்த மொழியையும் என்னிடம் பேசலாம் - நான் எல்லா மொழிகளையும் அறிவேன். ஷாலோம், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்ற ஏனோக்கின் வார்த்தைகளை பயபக்தியுடன் நினைவு கூர்ந்து லெவ் பெருமூச்சு விட்டான்.

ஹெர்மன் ஸ்டூபெல் மற்றும் ஹான்ஸ் கோபெல் என்ற இரண்டு ஜெர்மானிய அதிகாரிகள், இவர்களை விமான நிலையத்தில் சந்தித்து, அங்கிருந்த ஒரு உணவகத்திற்கு அழைத்துச் சென்றார்கள். "உங்களுக்கு விருப்பமானதை வாங்கிக் கொள்ளுங்கள். பணத்தைப் பற்றி எண்ண வேண்டாம்" என்று ஹான்ஸ் அறிவுறுத்தினார்.

ரெபெக்காள், லெவ்வைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்தவாறு, திறமையாகப் பேசினாள்.

"உண்மையில், நாங்கள் சைவ உணவிற்குப் பழகிவிட்டோம். எனக்கு இந்தக் கீரை சூப் மிகவும் பிடிக்கும். உணவிற்குப் பிறகான இனிப்பிற்கு, அந்தந்த பருவத்திற்கான பழங்களை எடுத்துக் கொள்கிறோம்" என்றாள்.

"என்னுடைய இறைச்சி சூப்பைப் பார்த்தால் உங்களுக்கும் சாப்பிட வேண்டும் என்று தோன்றாதா?" என்று ஹெர்மன் ஸ்டூபெல் இனிமையான குரலில் கேட்டார்.

ரெபெக்காள் சிரித்துக் கொண்டே "நீங்கள் ஏதேன் பழத்தை சாப்பிட ஆரம்பித்தவுடன், இறைச்சி சாப்பிடுவதை விட்டுவிடுவீர்கள்" என்று தனது கண்களில் பிரகாசத்துடன் பதிலளித்தாள்.

"நீங்கள் சொல்வதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. பழத்திற்காக, இறைச்சியை விட்டுவிடுவதா? அது என் மரணத்தில்தான் நடக்கும்...." என்று ஸ்டூபெல் கூறினார்.

"நீங்கள் இறைச்சியை விடத்தான் போகிறீர்கள், திரு. ஸ்டூபெல்" என்று லெவ் கிண்டலாகக் கூறினான்.

அவர்கள் அனைவரும் சிரித்தார்கள், அவர்களிடையே இருந்த இறுக்கம் குறைந்தது. பின்பு ஏதேன் பழத்தின் ஆற்றல்களைப் பற்றியும், ஏதேன் பழத்தைச் சாப்பிடுவதன் மூலம், வயதானவர்களும் மற்றும்

நோய்வாய்ப்பட்டவர்களும் எவ்வாறு விரைவான முன்னேற்றங்களையும், வலிமையையும் பெற்றுக் கொள்கிறார்கள் என்பதைக் குறித்தும் அவர்கள் தொடர்ந்து கலந்துரையாடினார்கள்.

அவர்கள் உடனடியாக ஆர்டர் செய்ததால், அவர்களின் உணவு குறித்த நேரத்தில் அவர்களின் மேசைக்கு கொண்டு வரப்பட்டது.

அவர்களுக்கு வழங்கப்பட்ட விரைவான சேவையைப் பார்த்து லெவ் மற்றும் ரெபெக்காளின் முகமானது ஆச்சரியத்தை வெளிப்படுத்தியது. அதனைக் கண்ட ஹெர்மன் "ஜெர்மானியர்கள் விரைவான செயல்திறனை விரும்புகின்றவர்கள்" என்று கூறிச் சிரித்தார். பின்னர் அவர்களுடைய முந்தைய உரையாடலின் தொடர்ச்சியாக "இவைகள்தான் ஏதேன் பழத்தின் நோக்கமாகவும் இருக்கிறது" என்று மேலும் கூறினார்.

"நாம் ஒருவரோடொருவர் நன்றாகப் பழக வேண்டும்" என்று அவர் மீண்டும் தனது நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தபடி நம்பிக்கையோடு கூறினார்.

இந்தக் கலந்துரையாடலில் தானும் கலந்து கொள்ளும் ஆவலுடன், ஹான்ஸ் தன் நாற்காலியின் முனைக்கு நகர்ந்தவாறு "இஸ்ரயேலில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் மிகவும் கவனமாக உற்று நோக்குகிறோம் என்பது உங்களுக்குத் தெரியும், மரித்தவர்கள் ஜீவனுக்குத் திரும்புகிறார்கள் என்பதில் எந்த வித சந்தேகமும் எங்களுக்கு இல்லை. மிக உயரிய வேலையானது நடந்து கொண்டிருக்கிறது. இந்த ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வதற்கு நாங்களும் ஆர்வமாக உள்ளோம், மேலும் முற்பிதாக்களால் வகுக்கப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்கவும் நாங்கள் ஆர்வமாக உள்ளோம்" என்றார்.

ஹான்ஸ் கோபெல், திடீரென்று லெவ் மற்றும் ரெபெக்காளிடமிருந்து தனது பார்வையை விலக்கி, தனது தட்டில் குவிக்கப்பட்டு இருந்த உருளைக்கிழங்கையேப் பார்த்துக் கொண்டிருந்தார். பின்பு முட்கரண்டியால் அவைகளைக் கிளர ஆரம்பித்தவாறு, "எங்களுடைய தவறுகளுக்காக நாங்கள் தண்டிக்கப்பட்டுள்ளோம்" என்று அமைதியான குரலில் கூறினார். "படையெடுப்பிற்குக் காரணமானவர்களாக இங்கு இருந்தவர்கள், இஸ்ரயேலில் இருந்த எங்களது வீரர்கள் சந்தித்ததை விட மோசமான பாதிப்புகளை அடைந்தனர்" என்றார்.

ஹெர்மன் ஸ்டூபெல் பதற்றத்தோடு இருமியவாறு "உங்களது புதிய பூமியின் கணினியைப் பார்ப்பதற்கு ஆவலோடு உள்ளேன், லெவ். மேலும் அதிநவீன தொழில்நுட்பத்தினைக் கொண்ட இந்தப் புதிய பூமியில் வாழ்வதற்கு ஆர்வமாக உள்ளேன்" என்றார்.

ஹான்ஸ் கோபெல், அவர்களது உரையாடலை காலநிலையின் (வானிலை) பக்கமாக மாற்றினார். "வருடத்தின் இந்த மாதத்தில்தான் மிதமான காலநிலை இருக்கும்" என்றார்.

லெவ் மீண்டும் முந்தைய விசயத்தைக் குறித்துப் பேசுவதற்குத் திரும்பினான். "முற்பிதாக்கள் ஏற்று நிர்வகிக்கும் எல்லாவற்றிலும் அற்புதமான செயல்திறனுடன் செயல்படுகின்றார்கள். நீங்கள் அவர்களை நேரில் சந்திக்கும் போது, அவர்கள் செய்யும் ஒவ்வொரு செயலிலும் அசாத்தியமான நுண்ணறிவு ஊடுருவி இருப்பதைக் காண்பீர்கள். மோதல்கள் மற்றும் தவறுகளை, இரக்கம் மற்றும் பொறுப்புணர்வின் கலவையுடன் சரியான விதத்தில் எவ்வாறு கையாள்வது என்பது முற்பிதாக்களுக்குத் தெரியும். கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் செய்யப்பட்டவர்களின் முழுமையான

அதிகாரத்தின் கீழ் முற்பிதாக்கள் இருப்பதை அனைவரும் அறிந்திருப்பது அவசியம்" என்று லெவ் கூறினான்.

"கிறிஸ்துவும், அவருடைய அபிஷேகம் செய்யப்பட்டவர்களும் மனிதர்களின் இருதயத்தைக் குணப்படுத்துவார்கள் என்பதை நம்பலாம்" என்று ரெபெக்காள் மேலும் கூறினாள்.

"நல்லது, அப்படியானால் அவர்கள் கடினமான வேலையைத்தான் மேற்கொள்ளப்போகிறார்கள்" என்று ஹெர்மன் ஆழந்து மூச்செடுத்தபடி கூறினார். லெவ் மற்றும் ரெபெக்காள் இருவருக்கும் ஏதேன் பழங்கள் வழங்கப்படுவது மற்றும் அவர்கள் விரும்பும் இடங்களுக்குச் செல்வதற்கான பயண ஏற்பாடுகள் போன்ற எளிதான காரியங்களைக் குறித்து உரையாடினர். அதனைத் தொடர்ந்து கடந்த தலைமுறையினரின் உயிர்த்தெழுதல், எதிர்ப்புகளை எவ்வாறு கையாள்வது போன்ற கடினமான சூழ்நிலைகளின் கீழ் செயல்படுத்த வேண்டிய பாதுகாப்பான திட்டங்களைக் குறித்த உரையாடலினூடே இரவு உணவு தொடர்ந்தது.

இரவு உணவிற்குப் பிறகு, அவர்கள் ரெபெக்காளை அவளுடைய அறைக்கு அழைத்துச் சென்றனர், பின்னர் ஒரு சில குடியிருப்புகளைக் கடந்து அடுத்த தெருவில் லெவ்வின் அடுக்குமாடி குடியிருப்பிற்குச் சென்று அவனையும் விட்டார்கள். மறுநாள் காலை 8 மணிக்கு லெவ்வை அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

லெவ் தனது கணிணியும், பயணப் பெட்டியும் எந்தவித சேதமுமில்லாமல் வந்துவிட்டதைக் கண்டு நிம்மதியடைந்தான். குளிர்சாதனப் பெட்டியில் இருந்த ஏதேன் பழத்தை எடுத்து மென்றவாறு, தனது பயணப் பெட்டியைப் பிரித்தான். ஏதேன் பழத்தினால் உற்சாகமடைந்தவனாக, அடுத்த நாள் என்னென்ன

காரியங்களை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று எண்ணியவாறே, தன் பொருட்களைப் பெட்டியில் இருந்து எடுத்தான். இந்த இரண்டு அரசாங்க அதிகாரிகளுக்கும் நல்ல நோக்கங்கள் இருந்தன, ஆனால் புதிய பூமியின் ஏற்பாடுகள் பற்றி அதிகம் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. அவர்கள் இப்போது பழைய உலகில் ஒரு காலையும், புதிய உலகில் மற்றொரு காலையும் வைத்திருக்கிறார்கள் என்று லெவ் நினைத்தான்.

## கானாவின் கணினி சவால்

ஹான்ஸ் மற்றும் ஹெர்மன், பெர்லின் நகரின் மையப்பகுதியில் இருந்த பளிங்குக் கற்களினால் கட்டப்பட்டிருந்த ஒரு பெரிய கட்டிடத்திற்கு லெவ்வை அழைத்துச் சென்றபோது, அவன் சற்று பதற்றத்துடன் இருந்தான். அங்கு பழைய உலகின் பொன்மொழி "க்ரோப் இஸ்ட் இன்டலிஜென்ஸ்" (அறிவே மகத்துவமானது) என்று பொறிக்கப்பட்டிருந்த ஒரு கல்வெட்டை லெவ் கண்டான். அவர்கள் ஒவ்வொருவரும் கறுப்பு நிறப் பெட்டியைத் தங்களது கைகளில் பிடித்தவாறு கலந்தாய்வு நடக்கவிருக்கும் அறையை நோக்கிச் சென்றபோது, அக்கட்டிடத்தின் மிக உயர்ந்த சிற்ப வேலைப்பாடுள்ள உட்கூரையும், சிலைகளால் செதுக்கப்பட்டிருந்த தூண்களும் அவர்கள் நடையின் சத்தத்தை எதிரொலித்தது.

கணினி மற்றும் மின்னணு துறைகளில், முன்னணி வகித்த விஞ்ஞானிகளோடு காலைக் கூட்டம் தொடங்கியது. "முற்பிதாக்களின் பல்கலைக்கழகத்தின் பட்டதாரி, அதிநவீன கணினி தொழில்நுட்பத்தில் பல வருட அனுபவங்களைப் பெற்றுள்ள திரு.லெவ் ஆரோன் உங்கள் முன் இருக்கிறார்" என்று ஹான்ஸ் லெவ்வை மனதார, நட்பான முன்னுரையுடன் அறிமுகப்படுத்தினார். ஆனால் அது லெவ்வின் தகுதிகளை மிகைப்படுத்திக் கூறியதுபோல் இருந்தது.

லெவ், கரவொலியை நிறுத்துமாறு தன் கைகளில் செய்கை காட்டினான். "நான் மரித்து பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த வருடத்தில்தான் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டேன்" என்று தன்னை மிக எளிமையாக அறிமுகப்படுத்திக் கொண்டான். அறை முழுவதிலும் நிசப்தம் நிலவியது. "இறுதிப் போரின் படையெடுப்பில் நான் மரித்தேன். நான் உயிர்த்தெழுந்தபோது எனக்கு ஏற்பட்ட மிகப்பெரிய ஆச்சரியம் என்னவென்றால், என் காயங்கள் அனைத்தும் நீங்கி இருந்தது. ஜீவனோடிருந்த கடைசி நிமிடங்களில் நான் இழந்திருந்த என் இடது கை முழுவதும் குணமடைந்திருந்தது. சொல்லப்போனால் நான், இரண்டு கைகளிலும் எல்லா வேலைகளையும் செய்யக் கூடியவனாக இருந்தேன்" என்றான். பார்வையாளர்களிடமிருந்து சிரிப்பொலி எழுந்தது மற்றும் மீண்டும் ஒரு பலத்த கரவோசையை எழுப்பினார்கள்.

"இஸ்ரயேலில் தொடங்கிய ஆசீர்வாதமானது, உலகமெங்கிலும் பரவி வருகிறது. உதாரணமாக, கானாவில் மிகவும் மேம்பட்ட தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வருகின்றன. இன்னும் சில மாதங்களுக்குள் அவர்கள் அதிநவீன கலைநயமிக்க வீடுகள், கணினிகள், மின்னணுவியல் உபகரணங்களில் அதிநவீன தொழல்நுட்பத்தை உருவாக்குவார்கள். மேலும் விரிவான திட்டங்களில் ஒன்றான ஜீவனளிக்கும் மரங்களை திரும்பவும் வளர்ப்பதற்கான திட்டத்தையும் உருவாக்குகின்றார்கள்" என்றான்.

"அதிநவீன தொழில்நுட்பத்தில் முன்னணி வகிக்கும் நாடுகளில் ஒன்றாக, கானா எப்படி இருக்க முடியும்?" என்று அறையின் பின்புறத்தில் இருந்து யாரோ ஒருவர் கேள்வி எழுப்பினார்.

"சார், நீங்கள் கூறுவது உண்மைதானா?" முன்பக்க வரிசையில், தன் கைகளில் ஒரு தடிமனான கோப்பு ஒன்றை வைத்திருந்த ஒருவரின்

குரல் உரக்க ஒலித்தது. அவரின் மெல்லிய கேசம், இன்னும் பொன்னிறமாக இருந்தது. அவரது அடர் நீல நிறக் கண்கள் எதிர்ப்பினைத் தெரிவித்ததில் பளிச்சிட்டன, இருந்தாலும் அவரது குரல் ஆதரவு தரும் விதத்தில் நட்பாக இருந்தது. "கானானிய மக்கள் சமீப காலத்தில்தான் முன்னேறியிருக்கின்றார்கள். அவர்களில் ஒரு சிலரே தெளிவான சிந்தை கொண்டிருக்கலாம் என்றாலும், அவர்கள் நிச்சயமாக மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்தவர்களை விட முன்னேறியவர்களாக இருக்க முடியுமா?" என்று கேள்விகளைக் கேட்ட பின் அவர் சிரித்தார். அங்குள்ள பலர் அவர் கூறுவதை ஒத்துக் கொள்வதைப் போல தங்கள் தலையை அசைத்தனர்.

லெவ்வும் பதிலுக்குப் புன்னகைத்தான். இஸ்ரயேலின் மீதான ஜெர்மனியின் கவனத்தை, இஸ்ரயேலில் இருந்து கானாவின் முன்னேற்றத்தின் மீது திசை திருப்பியதற்காக லெவ் நன்றியோடு இருந்தான். ஆலனுடன் பணியாற்றிய இளைஞர்களில் ஒருவரின் நம்பமுடியாத கற்றலின் அனுபவத்தை லெவ் பகிர்ந்து கொண்டான். ஏதேன் பழத்தின் உதவியுடனும், முற்பிதாக்களின் மேம்பட்ட பயிற்றுவிக்கும் திறன்களினாலும், அவர் ஒரு சில மாதங்களில் ஒரு சிறந்த கணினி நிபுணரானார் என்பதைப் பற்றியும் பகிர்ந்து கொண்டான். "இவைகளே கானாவில் அவர்கள் தயாரிக்கத் தொடங்கும் கணினிகளின் வகைகளுக்கான மாதிரிகள்" என்று கூறியவாறு லெவ் கருப்புப் பெட்டியைத் திறந்தான்.

"இந்தத் தொழில்நுட்பத்தினை, எங்கு வேண்டுமானாலும் வைத்து ஒன்றிணைக்க முடியும் என்பதைக் கண்டு, இதற்கு இணையான ஒரு தொழில்நுட்பம் வேறு எங்குமே இல்லை என்பதைக் குறித்து நான் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். ஆனால் இதுவே உங்களுக்கான எனது சவாலாக இருக்கிறது" என்று கூறியவாறு லெவ்

தொடர்ந்து கணினியை ஒன்றிணைத்தான். அதன் உறுதித்தன்மை, பல செயல்களை ஒரே நேரத்தில் செய்வதற்கான திறன் மற்றும் அதனை எவ்வளவு எளிதாகத் தயாரிக்க முடியும் என்பதைப் பற்றியும் விவரித்தான். "நான் கூறியவற்றைச் சோதிக்கவும், உங்கள் கணினிகளுடன் இவற்றை ஒப்பிடுவதற்கும் ஏற்றவாறு, நான் இதை உங்களிடமே கொடுத்து விடுகிறேன். அப்போதுதான் நீங்கள் அதன் திறன்களை அளவிடவும் மற்றும் அதன் குறைகளை என்னிடம் தெரிவிக்கவும் முடியும் என்றான். கணினி தொழில்நுட்பத்தில், நீங்கள் செய்திருக்கும் பெரிய முன்னேற்றங்கள் எங்களுக்குத் தெரியும், மேலும் இந்தக் கணினியைக் குறித்த உங்களது வெளிப்படையான மதிப்பீட்டை நாங்கள் வரவேற்கிறோம். செயல்படுத்துவதற்கு திட்டங்கள் இருக்கின்றன. நீங்கள் விரும்பினால், இந்தப் புதிய பூமியின் கணினியை நீங்களும் உற்பத்தி செய்யலாம். ஆனால் அது உங்களது முடிவாகவே இருக்க வேண்டும்" என்றான்.

சில வினாடிகள் அமைதியாகக் கழிந்தன. தங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள சவாலை விஞ்ஞானிகள் கிரகித்துக் கொண்டிருந்தனர். அதைத் தொடர்ந்து, மீண்டும் கரவோசை எழும்பியது. சிலர் நம்பிக்கையோடு தங்கள் தலைகளை அசைப்பதை லெவ் கவனித்தான். லெவ் அவர்களின் உள்நோக்கங்களைச் சுலபமாக அறிந்து கொண்டான் அவர்கள் இந்தச் சவாலை தீவிரமாக எடுத்துக் கொண்டார்கள். மேலும் இந்தப் புதிய தொழில்நுட்பத்தை, தரம் குறைவானதாக நிரூபிக்க முடியும் என்று அவர்கள் நம்பி இருந்தார்கள்.

சிறிய இடைவெளிக்குப் பிறகு, புதிய பூமியின் கணினியை உபயோகித்து, அவர்கள் விரும்பியபடி அதைச் சோதித்துப் பார்க்க, லெவ் அவர்களை அழைத்தான். அவர்களுடைய சிந்தனைகளின் நோக்கங்களை லெவ்வால் புரிந்து கொள்ள முடிந்தது. அவர்களின்

பல்வேறு அணுகுமுறைகளைக் காண்பதற்கு லெவ் ஆர்வத்துடன் இருந்தான்.

லெவ், ஜெர்மானியர்களின் கணினியையும், புதிய கணினியையும் அருகருகே வைத்து சோதிக்கும்படியாக அவர்களுக்குப் பரிந்துரைத்தான். தொடர்ச்சியாக அநேக சுருக்கமான ஒப்பீட்டுச் சோதனைகளுக்குப் பிறகு, புதிய பூமியின் கணினி, தங்களுடையதை விட மேம்பட்டதாக இருப்பதால், மேலும் ஒப்பிட்டுப் பார்ப்பதில் எந்தவித பயனுமில்லை என்று ஜெர்மானியர்கள் முடிவுக்கு வந்தனர். பின்பு சோதனையானது புதிய பூமியின் கணினியை மட்டுமே சோதிப்பதற்குத் திரும்பியது.

அன்றைய நாள் செல்லச் செல்ல, லெவ்விற்குப் பல்வேறு நபர்களுடன் பேசுவதற்கான வாய்ப்புகள் கிடைத்தன. அநேகர் புதிய பூமியின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலமாகக் கிடைக்கும் கல்வி சார்ந்த நன்மைகள் மற்றும் திட்டங்களினால் ஈர்க்கப்பட்டனர். தொலைக்காட்சியின் நிகழ்ச்சிகள் இருந்த இடத்தை, கல்வி சார்ந்த திட்டங்கள் எடுத்துக் கொள்ளும் என்றும், அதைத் தவிர எருசலேமில் இருந்து வரும் உலக செய்திகள் மட்டுமே ஒளிபரப்பப்படும் என்றும் லெவ் விளக்கினான்.

"புதிய பூமியின் செய்தியின் பதிப்பை யாராவது ஏற்கவில்லை என்றால் என்ன செய்வது? யாராவது முற்பிதாக்களைத் தாக்கினால் என்ன செய்வது?" என்று யாரோ ஒருவர் கேட்டார்.

"முற்பிதாக்கள் அனைவரும், கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் செய்யப்பட்டவர்களின் வல்லமையால் பாதுகாக்கப்படுவார்கள். அவர்களில் யாருக்கேனும் தீங்கு செய்ய முயன்றால், செய்த தவற்றிற்காக உடனடி விளைவுகளைச் சந்திப்பதே அதற்கான பலனாக

இருக்கும்.” சரீரப் பிரகாரமாக ரூபனைத் தாக்க முயன்றபோது, தனக்கு ஏற்பட்ட விளைவுகளைப் பற்றி லெவ் சுருக்கமாக விவரித்தான். அறையில் இருந்த சில எதிர்ப்பின் தன்மைகளை லெவ் உணர்ந்தான். மேலும் இந்த மனிதர்களில் யாராவது இந்த எச்சரிக்கையை சவாலாக எடுத்துக் கொண்டு, கணினியைச் சேதப்படுத்த முயற்சிப்பார்களோ என்றும் சந்தேகித்தான்.

சோதனையானது அந்த நாள் முழுவதும் தொடர்ந்தது. அங்கிருந்து கிளம்புவதற்கு முன்பு, லெவ் சில இறுதிக் கருத்துக்களைத் தெரிவித்தான். “நான் இந்தக் கணினியை இங்கு விட்டுச் செல்கிறேன், விரிவாக ஆய்வு செய்வதற்கு விரும்பும் எவரும், இந்தக் கணினியைப் பயன்படுத்தலாம். உங்களுக்கு மதிப்பீடு செய்வதற்கு ஒரு வார காலம் உள்ளது. இந்தப் புதிய தொழில்நுட்பத்துடன் ஒன்றிணைந்து செல்வதற்கு நீங்கள் முடிவு செய்வீர்களானால், அதனுடைய உற்பத்தி நடைமுறைகள் குறித்து நான் உங்களுக்குக் கூறுவேன். இந்த நாள் இனிய நாளாக அமைய வாழ்த்துக்கள், நண்பர்களே” என்று லெவ் தன் உரையை முடித்துக் கொண்டான்.

## ஹெர் முல்லரின் சம்பவம்

மறுநாள் காலையில் லெவ் அங்கு வந்தபோது, அங்கிருந்தவர்கள் அனைவரும் கோபத்துடன் இருப்பதைக் கண்டான். சிலர் தீவிரமான வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தனர். ஹான்ஸ் கோபெல் உடனடியாக லெவ்வை அணுகினார்.

“மன்னிக்கவும், திரு.ஆரோன். பயங்கரமான சம்பவம் ஒன்று நடந்துவிட்டது. திரு.முல்லர் அவர்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார். அவருடைய கைகளுக்கு ஏதோ ஒன்று நடந்திருக்கிறது. அவரால் அவருடைய கைகளைப் பயன்படுத்த முடியவில்லை” என்றார்.

லெவ் என்ன நடந்திருக்கிறது என்பதை அறிந்து கொண்டான். தனது கணினி மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து, அதனை ஆய்வு செய்தான். பேனல்கள் நீக்கப்பட்டிருந்தன, மேலும் சிறிய மின் எழுச்சி பாதுகாப்பான் துண்டிக்கப்பட்டிருந்தது.

"நான் திரு.முல்லரைப் பார்க்க வேண்டும். தயவுசெய்து என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுங்கள். அவருக்கு எவ்வாறு உதவ வேண்டும் என்று எனக்குத் தெரியும், ஆனால் நான், அவரைத் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேச வேண்டும்" என்றான்.

அந்த அறை திடீரென்று அமைதியானது. எல்லாருடைய கண்களும் ஹான்ஸ், லெவ்வை அறைக்கு வெளியே அழைத்துச் செல்வதையேப் பார்த்துக் கொண்டிருந்தன.

ஹான்ஸும், லெவ்வும் விரைவாக மருத்துவமனைக்குச் சென்றனர்.

செவிலியர் நிலையத்தில் இருந்த மேசைக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த செவிலியரிடம் "தயவுசெய்து, நான் திரு.முல்லரைப் பார்க்க வேண்டும்" என்று லெவ் சரளமாக ஜெர்மன் மொழியில் பேசினான்.

"அவருக்கு எக்ஸ்-ரே எடுக்கப்படுகிறது, நீங்கள் காத்திருக்க வேண்டும்" என்று கூறியவாறு, அந்தச் செவிலியர் கீழே நோக்கிக் குனிந்து, நோயாளியின் அட்டவணையில் குறிப்புகளை எடுக்கும் தன்னுடைய பணிக்குத் திரும்பினார்.

லெவ் தயங்கினான், ஆனாலும் தொடர்ந்து முயன்றான். "இஸ்ரயேலில் உள்ள முற்பிதாக்களிடமிருந்து, அவருக்கான அவசரமான செய்தி ஒன்று என்னிடம் உள்ளது. எவ்வளவு விரைவாக அவரைப் பார்க்க முடியுமோ அவ்வளவு விரைவாக நான் அவரைப் பார்க்க விரும்புகின்றேன்" என்றான்.

"இஸ்ரயேலின் முற்பிதாக்கள்" என்ற வார்த்தையைக் கேட்டபோது, செவிலியரின் நட்பற்ற பார்வை தன்னைத் துளைத்து, ஊடுருவுவதை லெவ் உணர்ந்தான்.

"எக்ஸ்ரேக்கள் எப்போது எடுத்து முடிக்கப்படும் என்பதை நான் சரி பார்க்கின்றேன். இவர் பக்கவாதத்தால் இரு கைகளும் பாதிக்கப்பட்டவராக இருக்கிறார். அவருக்கு சிகிச்சை அளிக்கும் வரை நீங்கள் காத்திருக்கலாம் என்று உங்களுக்குத் தோன்றவில்லையா?" என்று அந்தச் செவிலியர் கேட்டார்.

லெவ்வின் தொடர் முயற்சிகள், அவளுக்கு எரிச்சலை ஏற்படுத்துகிறது என்பதை உணர்ந்தான்.

"எனக்குப் புரிகிறது. உங்களால் முடிந்த அளவிற்கு விரைவாக நான் அவருடன் பேச விரும்புகிறேன் — நன்றி" என்று கூறிவிட்டு, லெவ் அந்த மேசையை விட்டு வெளியேறி, தன்னை இந்த இடத்திற்கு கூட்டி வந்த ஹான்ஸ்க்கு அருகில் சென்று மருத்துவமனை காத்திருப்பு அறையில் அமர்ந்தான்.

"நீங்கள் ஒரு மருத்தவர் என்று எனக்குத் தெரியாதே" என்று தனது குரலில் கேலியை வெளிப்படுத்தும் விதமாக ஹான்ஸ் குறிப்பிட்டார்.

"இல்லை, நான் ஒரு மருத்துவர் இல்லை, ஹான்ஸ். ஆனால் அவர் எப்படி பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார் என்பது எனக்குத் தெரியும் என்று நினைக்கின்றேன். அவருக்கு எவ்வாறு உதவு முடியும் என்றும் எனக்குத் தெரியும் என்று நான் நினைக்கின்றேன்" என்று லெவ் பதிலளித்தான்.

ஹான்ஸ் சத்தமாக பெருமூச்சுவிட்டவாறு தனது தோள்களைக் குலுக்கினார். இருவரும் தொடர்ந்து காத்திருந்தனர், அப்போது இருவருமே அமைதியாக அமர்ந்து இருந்தனர்.

லெவ் கண்களை மூடிக் கொண்டான். பெர்லினின் மையப் பகுதியில் உள்ள இந்த மருத்துவமனைக்கு அவரை அழைத்து வருவதற்குக் காரணமாக இருந்த நிகழ்வுகளை அவனது சிந்தைக்குக் கொண்டு வந்து மதிப்பீடு செய்தான். ஜெர்மனியில் தனது மூன்றாவது நாளில், திரு.முல்லரைப் பார்ப்பதற்காக மருத்துவமனையில் இப்போது காத்துக் கொண்டிருக்கிறான். முந்தைய நாள் இரவு ரெபெக்காளுடனான தொலைபேசி உரையாடலின் போது, அவள் கூறியதை அவன் நினைவு கூர்ந்தான். சில ஆண்களிடமிருந்து வந்த எதிர்ப்பினை, அவர்கள் வெளிப்படுத்திய கருத்துக்களில் இருந்தும், அவர்களின் உடல் அசைவிலிருந்தும் தன்னால் உணர முடிந்தது என்று லெவ், ரெபெக்காளிடம் குறிப்பிட்டான்.

"நிச்சயமாக இடையூறுகள் இருக்கும் என்று ஏனோக்கு நம்மை எச்சரித்திருந்தார், லெவ். ஏசாயா தீர்க்கதரிசி அவர்களும் அவ்வாறே கூறியுள்ளார். அவர் எழுதியுள்ளதாவது, "வாசல்கள் வழியாய்ப் பிரவேசியுங்கள், பிரவேசியுங்கள் ஜனத்துக்கு வழியைச் செவ்வைப்படுத்துங்கள், பாதைகளை உயர்த்துங்கள், உயர்த்துங்கள், அதிலுள்ள கற்களைப் பொறுக்கிப்போடுங்கள், ஜனங்களுக்காகக் கொடியை ஏற்றுங்கள்." இஸ்ரயேலுடன் இணைவதன் மூலம், தேவனைத் தேடுபவர்களுடைய வழியில் கற்களும், தடைகளும் இருக்கும் என்று ஏசாயா தீர்க்கதரிசி நம்மிடம் கூறி இருக்கிறார். நமது பணியின் நோக்கமானது கற்களை அகற்ற உதவுவதேயாகும். அப்போதுதான் தேசங்களின் ஜனங்கள் மகா வல்லமையுள்ள இராஜாவின் ஆட்சியை நோக்கியும், அதன் மூலம் வரும் உயர்ந்த ஆசீர்வாதங்களை நோக்கி நெருக்கமாகவும், சுதந்திரமாகவும் பயணிக்க முடியும். நாம் அந்தக் கற்களை - அகற்றுபவர்கள் மற்றும்

அவருடைய திட்டத்தின்படி மிகச் சரியாக நாம் அந்த வேலையைச் செய்கின்றோம்" என்று ரெபெக்காள் கூறியிருந்தாள்.

சிறிது நேரம் கழித்து ஹான்ஸ் பேசினார், லெவ்வின் தொடர்ச்சியான சிந்தனை தடைபட்டது. "நாங்கள் உங்களை நம்புகிறோம், லெவ். இந்தப் பக்கவாதம் உண்டாவதற்குக் காரணமான எந்தவித தீங்கு விளைவிக்கும் இரசாயனப் பொருட்களோ அல்லது வாயுக்களோ அந்தக் கணினியில் இல்லை என்று நான் நம்புகிறேன். கணினிக் கட்டமைப்பு மற்றும் திட்ட வடிவமைப்பு இவற்றை ஆராய்வதற்கு, நாங்கள் வழக்கமாக கணினியின் சட்டத்திற்குள் பார்ப்போம். நாங்கள் வழக்கமாகச் செய்வதையே செய்தோம். ஒருவேளை நாங்கள் தவறு செய்திருக்கலாம்" என்று ஹான்ஸ் கூறினார்.

"நீங்கள் எதையும் கண்டுபிடித்திருக்கமாட்டீர்கள், ஹான்ஸ். கிறிஸ்துவிற்கும், அவரது அபிஷேகம் செய்யப்பட்டவர்களுக்கும், இரசாயனப் பொருட்களோ, வாயுக்களோ தேவையில்லை. அவர்களுக்கு ஆவிக்குரிய வல்லமை இருக்கிறது. எங்களிடம் எந்த இரகசியமும் இல்லை. இவ்வாறு நடந்ததற்குக் காரணம் நான் கூறியதே, திரு.முல்லர் ஒரு விளைவை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்" என்றான்.

"மன்னிக்கவும்" என்ற செவிலியரின் குரல் அவர்களின் உரையாடலை நிறுத்தியது. "திரு.முல்லர் அவர்கள் இப்போது அறை எண் 242-ல் உங்களைப் பார்க்கத் தயாராக உள்ளார்" என்றார்.

## சதையான ஓர் இருதயம்

லெவ், திரு.முல்லரை உடனடியாக அடையாளம் கண்டுகொண்டான். எதிர்ப்புகள் நிறைந்திருந்த நீல நிறக் கண்களைக் கொண்டிருந்த அந்த மனிதர், படுக்கையில் படுத்திருந்தார். அவரது

கண்கள் எந்தவித உணர்ச்சியையும் வெளிப்படுத்தாமல், கடுகடுப்பான பார்வையுடன் மேற்கூரையை வெறித்துக் கொண்டிருந்தன.

"காலை வணக்கம், திரு. முல்லர்" என்று லெவ் வாழ்த்துரைத்தான். திரு. முல்லர் தொடர்ந்து மேற்கூரையையேப் பார்த்தபடி, எதுவும் பேசவில்லை.

"திரு.முல்லர்" என்று ஹான்ஸ் உரக்க அழைத்தார். "உங்களுக்கு நேர்ந்ததைப் பற்றிக் கேள்விப்பட்டதில், நாங்கள் மிகவும் வருந்துகிறோம். மருத்துவர்கள் ஏதேனும் கூறினார்களா?" என்று கேட்டார்.

திரு.முல்லர், இல்லை என்பது போல் தலையை ஆட்டினார். "நன்றி, ஹான்ஸ், நீங்கள் கவலைப்படுவது, என் மீதான உங்களது அன்பைக் காட்டுகிறது" என்றார்.

"உங்களுக்கு நேர்ந்தவைகளுக்காக நான் வருந்துகின்றேன். உங்களது இந்த நிலையை எளிதில் சரி செய்ய முடியும் என்பதை நான் உங்களிடம் தெரியப்படுத்தவே இங்கே வந்திருக்கின்றேன், ஹெர் முல்லர்" என்று அவர், லெவ்வை நேரடியாகப் பார்க்க மறுத்தபோதிலும் லெவ் தொடர்ந்து இவைகளைக் கூறினான்.

"உங்களது நிலையை மிக விரைவாகச் சரிசெய்யலாம், ஆனால் அதற்கு நீங்கள் முற்பிதாக்களின் அலுவலகத்தைத் தொடர்பு கொண்டு என்ன நடந்தது என்பதை அவர்களிடம் உண்மையாகச் சொல்ல வேண்டும். நான் எந்தக் காரணத்திற்காக பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டேனோ, அதே காரணத்திற்காக நீங்களும் பாதிக்கப்பட்டுள்ளீர்கள். கிறிஸ்துவும், அவரது அபிஷேகம் செய்யப்பட்டவர்களும் தலையிட வேண்டிய அவசியமுள்ள ஒரு விஷயத்தையே நீங்கள் செய்துள்ளீர்கள். இவர்கள் தலையிட்டு

இக்காரியத்தை சரிசெய்யாவிட்டால், மேலும் தீங்கு விளைவிக்கிறதாய் இருக்கும். அவர்களால் நம் மனதின் எண்ணங்களைப் படிக்க முடியும், மேலும் நம் இருதயத்தில் என்ன இருக்கிறது, நம்முடைய செயல்கள், மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும் என்பதையும் அவர்கள் அறிவார்கள். நீங்கள் நடந்த முழு உண்மையையும் முற்பிதாக்களிடம் சொல்ல வேண்டும். நீங்கள் அப்படிச் செய்தால் உங்கள் பக்கவாதம் குணமாகலாம். எனது அனுபவத்தில், அவர்களிடம் நான் உண்மையைக் கூறிய ஒரு மணி நேரத்திற்குள்ளாகவே, எனது கைகளில் உணர்வு திரும்புவதை உணர்ந்தேன். நான் உங்களுக்காக எருசலேமிற்கு அழைக்கலாமா?" என்று லெவ் கேட்டான்.

திரு.முல்லரின் முகம் சிவந்தது. அவரது சோகமான தோற்றமானது, இவ்வாறு செய்வது என்பது அவருக்கு மிகவும் கடினமானது என்பதற்குச் சான்றாக இருந்தது. தன் கண்களை இறுக்கமாக மூடிக் கொண்டு, அவர் சிறிது நேரம் அமைதியாக இருந்தார்.

இளம் மருத்துவர் ஒருவர் கதவைத் தட்டிவிட்டு, அறையின் உள்ளே நுழைந்தார்.

"திரு.முல்லர், எங்களது சோதனைகளின் அடிப்படையில் எந்த நோயின் அறிகுறிகளையும் எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஏதேனும் அசௌகரியம் இருக்கிறதா?" என்று மருத்துவர் தனது நோயாளியுடன் சுருக்கமாகப் பேசிவிட்டு, பின்னர் வெளியேறினார்.

திரு.முல்லர், தனது முகத்தை லெவ்விற்கு எதிர்ப்புறம் உள்ள சுவரைப் பார்த்தவாறு திருப்பிக் கொண்டு, "தயவுசெய்து எருசலேமிற்கு அழையுங்கள், திரு.ஆரோன்", என்று நடுங்கிய குரலில் கூறினார்.

லெவ், முற்பிதாக்களுக்கு வேக சுழற்சி முறையில் எண்களை அழுத்தினான். திரு.முல்லர், எலிசபெத்துடன் பேசுவதற்கு வசதியாக தொலைபேசியை அவரிடம் கொடுத்தான். திரு.முல்லர் பேசத் தொடங்கியவுடன், ஹான்ஸ் அறையை விட்டு வெளியேறினார். முல்லர், தான் கேபிள்களைத் துண்டித்துவிட்டதையும், அதனால் அவரின் கரங்களைப் பயன்படுத்த முடியாதவாறு செயலிழந்ததை விளக்கிக் கூறினார். கணினிகளை உருவாக்குவதே அவருடைய வாழ்நாள் வேலையாக இருந்ததால், புதிய கணினியை மக்கள் ஏற்றுக்கொள்வதை அவர் விரும்பவில்லை என்று அவர் ஒப்புக்கொண்டார். "ஆம், ஆம், ஆம்" என்று எலிசபெத்தின் கேள்விகளுக்கு மறுமொழியாக திரு.முல்லர் கூறினார்.

"இந்தப் புதிய கணினி, எங்களுடையதை விட மிக உயர்ந்தது என்று எனக்குத் தெரியும். இதனை ஒப்புக்கொள்வதற்கு எனக்குக் கடினமாக இருந்தது....எனது கைகளின் பயன்பாட்டை மீண்டும் பெற நான் என்ன செய்ய வேண்டும்? ஆம்...ஆம்...ஆம்... நன்றி, ஃப்ரூலின்(ummarried young women) எலிசபெத். நீங்கள் மிகவும் கனிவாகப் பேசினீர்கள்" என்றார்.

லெவ் அறைக்குள் நுழைந்ததில் இருந்து, இப்போதுதான் முதல் முறையாக திரு.முல்லர், லெவ்வை நேருக்கு நேர் பார்த்தார். தயவுகூர்ந்து "தொலைபேசியை எடுத்துக் கொள்ளுங்கள். நன்றி, திரு.ஆரோன்" என்றார்.

லெவ், மருத்துவமனை அறையின் வாசலில் நின்றவாறு திரு.ஹான்ஸை அழைத்தான். பின்னர் அவரிடம் திரு.முல்லரை மருத்துவமனையில் இருந்து புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படிக் கூறினான். திரு.ஹான்ஸ் குழப்பத்தோடு, லெவ்விடமிருந்து தனது பார்வையை விலக்கி திரு.முல்லரைப் பார்த்தார். பாதிக்கப்பட்டவர், சம்மதம் தெரிவிப்பது போல் தலையை அசைப்பதைக்

கண்டார். தன் தோள்களைக் குலுக்கியவாறு, பின்னர் செவிலியர் நிலையத்திற்குச் சென்றார்.

அடுத்த ஒரு மணி நேரத்தில் திரு.முல்லர் அவ்வப்போது லெவ்வைப் பார்த்து அமைதியாகப் பேசினார். இந்த அனுபவம் தனக்கு எவ்வளவு கடினமாக இருந்தது என்பதை விளக்கினார். அவரது கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சியால் பெற்ற செழிப்பான வணிகத்தைப் பற்றியும், ஒரு புதிய கணினி வரிசையை உண்டாக்கியதைப் பற்றியும் அவர் விவரித்தார்.

"ஆனால் எலிசபெத் எனது கல்லான இருதயத்தை உடைத்தார் - என் இருதயத்தில் கற்கள் இருந்தன, லெவ், கற்கள் இருந்தன - முதல் முறையாக நான் எனது கணினி தொழில்நுட்ப சாம்ராஜ்ஜியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற எனது விருப்பத்தின் விளைவாக, எனது சொந்த மகளும், மனைவியும் உயிர்த்தெழுப்பப்படுவதற்கான வழியைத் தடுப்பதற்கு நானே காரணமாக இருந்திருப்பேன் என்பதைக் கண்டு கொண்டேன். அவர்கள் உயிருடன் இருந்தபோதும் நான் அதிகமான மணிநேரங்கள் மிகவும் கடுமையாக உழைத்தேன், அவர்கள் இறந்த பிறகும் நான் தொடர்ந்து உழைக்கிறேன். எனது கணினி சாம்ராஜ்ஜியமானது, இன்னும் பலர் தங்களுடைய அன்புக்குரியவர்களைத் திரும்பப் பெற முடியாமல் போவதற்கு வழிவகுத்திருக்கும். எனது சொந்த குணமடைதலையும் - எனது கைகளும், இருதயமும் குணமடைவதையும் கூட தடுத்திருக்கும்" என்றார்.

"நான் இனியும் இந்த வழியில் வாழ்வதற்கு விரும்பவில்லை" என்று அவர் தொடர்ந்து கூறியபோது அவரது கண்களில்இருந்து கண்ணீர் வழிந்தது.

மூவரும் செவிலியர் நிலையத்தைச் சென்றடைந்தபோது, அங்கிருந்த மருத்துவர் தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார்.

"உங்களது உடல் நிலையானது இன்னும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது, இந்த நேரம் வரை எந்த விதமான நோய்க்கான அறிகுறிகளையும் எங்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. உங்களது பிரச்சனையின் காரணத்தை அறிவதற்கு முன்பே உங்களை அனுப்புவது என்பது ஆபத்தானது" என்று மருத்துவர் கூறினார்.

"ம்ம்.... ஆனால் டாக்டர், நான் நன்றாக இருப்பதை உணர்கிறேன். இந்தக் காகிதத்தில் நானே கையெழுத்திட முடியும் என்று நான் நம்புகிறேன்" என்று திரு.முல்லர் பதிலளித்தார்.

அவர் தனது வலது கரத்தை மேசைக்கு உயர்த்தி, பேனாவைப் பிடித்து, தன்னுடைய பெயரை எழுதினார். அவரால் முன்புபோல் தங்கு தடையின்றி எழுத முடியவில்லை என்றாலும், அவரது வழக்கமான கையெழுத்தைப் போல அவரது எழுத்துக்கள் பிரதிபலித்தன.

"அப்படியென்றால் மிகவும் நல்லது" என்று மருத்துவர் தன் புருவங்களை உயர்த்தி, தலையை அசைத்தவாறு கூறினார்.

"எனக்கு யார் உதவினார்கள் என்பதை நீங்கள் ஒருபோதும் நம்பமாட்டீர்கள், எருசலேமில் உள்ள முற்பிதாக்களிடம் இருந்து வந்த அழைப்பே என்னை குணமாக்கியது" என்று அவர் மருத்துவரை நோக்கி தன் தலையைச் சாய்த்தவாறு அமைதியான குரலில் கூறினார்.

அவர் சிரித்துக்கொண்டே லெவ் மற்றும் ஹான்ஸின் பக்கமாகத் திரும்பி, "நாம் கிளம்பலாமா, நண்பர்களே?" என்றார்.

❁❁❁

*“உம்முடைய ராஜ்ஜியம் வருவதாக் உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறது போல பூமியிலேயும் செய்யப்படுவதாக” (மத்தேயு 6:10).*

# அத்தியாயம் - 21

ஏதொ தவறு நிகழ்ந்திருப்பது போல் லெவ்விற்குத் தோன்றியது. அவனால் அதனை உணர முடிந்தது, ஆனால் என்ன தவறு என்பதைச் சரியாகக் கண்டுணர முடியவில்லை. கணினிகளில் ஒன்று சிறப்பாகச் செயல்படவில்லை. அதனால் லெவ், புதிய பூமியின் இரண்டாவது கணினியின் வடிவமைப்போடு, முதல் கணினியின் வடிவமைப்பை ஒப்பிட்டுப் பார்த்தான். அனைத்து அம்சங்களும் பொருந்துவது போலவே இருந்தன. இருப்பினும் ஏதோ ஒன்றைத் தொலைத்தது போன்றதான அசௌகரியமான உணர்வு லெவ்வை விட்டு நீங்கவில்லை.

திரு.முல்லர், தனக்கு என்ன நடந்தது என்பதை அறிந்துகொள்ள விரும்பும் யாருடனும், தன்னுடைய அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டதால், புதிய கணினி தொழில்நுட்பத்தைக் குறித்து எந்த ஒரு சிறிய அளவிலான எதிர்ப்பும் இல்லாமல் இருந்தது. யூத இனத்தின் மேன்மைக்குச் சான்றாக, நிரந்தரமான ஊறு விளைவிக்கக் கூடிய அதி நவீன விஷம் அல்லது நரம்பு வாயுவைக் கொடூரமாகப் பயன்படுத்தியதே, திரு.முல்லரின் பக்கவாதத்திற்கான காரணமாய் இருக்கும் என்ற பொதுவான சந்தேகத்தை திரு.முல்லரின் நேர்மையான பதிலானது உடைத்திருந்தது. அறிவியல் நிறுவனத்தில் பணிபுரிந்தவர்கள், திரு.முல்லரின் மனப்பான்மையிலும், வாழ்க்கையிலும் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டபோது, லெவ் மீதும், அவனுடைய நோக்கத்தின் மீதும் அவர்களுக்கு இருந்த மரியாதையானது மிகவும் அதிகரித்திருந்தது.

திரு.முல்லர் அவரிடத்தில் ஏற்பட்ட மாற்றத்தின் காரணமாக, நேர்மறையான எண்ணங்களோடு தன்னுடன் பணிபுரியும் விஞ்ஞானி ஒருவரை அணுகி, அவருடைய தோள்களில் தன்னுடைய கரங்களைப் போட்டவாறு, உங்கள் மகன் ஜெரால்டு மீண்டும் ஜீவன் பெறும்போது ஏற்படப்போகும் சந்தோஷத்தை நினைத்துப் பாருங்கள், பீட்டர். என்னுடைய மனைவியையும், மகளையும் காணப்போவதற்காக நான் ஆர்வமாக இருக்கிறேன். என்னால் அதிக நாட்கள் காத்திருக்க முடியாது. கணினிகளையும், புதிய பூமியின் தொழில்நுட்பத்தையும் நடைமுறைப்படுத்துவதன் மூலமாக மட்டுமே இந்த நம்பிக்கைகளை நாம் உண்மையாக்க முடியும். நம்முடைய முயற்சியானது மக்களுக்குத் தேவையான வீடுகளைக் கட்டுவதையும் மற்றும் ஏதேன் பழங்களை அனைவருக்கும் தாராளமாகக் கிடைக்கச் செய்வதையும் சாத்தியமாக்கும். இவைகள் நிறைவேறும் வரையிலும், உயிர்த்தெழுதல் நடைபெறாது என்று அவரிடம் இரகசியமாகக் கூறினார்.

முற்பிதாக்களால் பதிவு செய்து கொடுக்கப்பட்ட, பயிற்சி வகுப்புகளுக்கான பாடங்களைக் கொண்ட நாடாக்களை விஞ்ஞானிகள் பெற்றுக் கொண்டபோது அவர்களுக்கிருந்த எதிர்பார்ப்பும், உற்சாகமும் தொடர்ந்து அதிகரித்தன. கூடிய விரைவில் உற்பத்தியினைத் தொடங்குவதற்கு அவர்கள் ஆர்வமாக இருந்தார்கள். ஜீவன் மீதான அவர்களது விருப்பமானது பற்றி எரிந்தது. ஆனால் இவர்களில் யாரோ ஒருவர், இந்த உற்சாகத்தினை குறைப்பதற்கு செயல்படுவது போலவும், தன்னைப் பின் தொடர்வது போலவும் லெவ் உணர்ந்தான். தன்னைப் பற்றி அறிந்து கொள்வதற்கு அறிவியல் நிறுவனத்தில் உள்ளவர்கள் ஆர்வமாக இருப்பது அவனுக்கு தெரியும். அங்கிருப்பவர்கள் அவனைப் பற்றி தாங்கள் அறிந்ததை, அவர்களுக்குள்ளாகவே பேசிக்கொள்வார்கள். ஆனால் இப்போது இன்னும் தீவிரமாக, அவனைக் குறித்து யாரோ

ஒருவர் அறிய முற்படுவது போல உணர்ந்தான். லெவ் மெதுவோட்டம் செல்லும்போதும், இடைவெளி நேரத்தில் நடைபயிற்சி மேற்கொள்ளும் போதும் தன்னை யாரோ பின் தொடர்வது போல உணர்ந்தான்.

இறுதியில், அன்றைய நாளின் மாலை வேளையில், கணினி வடிவமைப்பில் இருந்த மாறுபட்ட நிலையை லெவ் கண்டறிந்தான். லெவ்விற்கு கொஞ்சம் நிம்மதியாகவும், அதே நேரத்தில் பதற்றமாகவும் இருந்தது. பயத்தினூடே நடந்து சென்று, முற்பிதாக்களைத் தொடர்பு கொள்வதற்கென்று கொடுக்கப்பட்ட தனிப்பட்ட தொலைபேசியில் இருந்து, ஏனோக்கை அழைத்து தற்போதைய நிலையைக் குறித்து லெவ் கலந்துரையாடினான். பின்பு ஏதோ ஒரு தீவிரமான யோசனையில் தனது அடுக்குமாடி தளத்தைச் சுற்றி மெதுவோட்டம் ஓடினான்.

திடீரென்று நின்று, தனக்குப் பின்னால் திரும்பிப் பார்த்தான். மிக அருகாமையில், துல்லியமாக காலடிச் சத்தம் கேட்டது. லெவ் வேகமாக நடக்க ஆரம்பித்தான். தன்னுடைய குடியிருப்பை நோக்கிச் செல்வதற்கான ஒரு சுற்றுப் பாதையை லெவ் தேர்ந்தெடுத்தான். இப்போதும் யாரோ ஒருவர் அங்கு இருப்பது போலவே இருந்தது. மீண்டும் திடீரென்று நின்றவாறு, தன்னுடைய கண்களைச் சுருக்கியவாறு மங்கிய நிலவொளியில் தனது சுற்றுப் புறத்தைச் சுற்றிலும் பார்வையிட்டான்.

நீங்கள் யாராக இருந்தாலும், என் முன்னே வாருங்கள் என்று அமைதியாக லெவ் அழைத்தான். "பயப்படத் தேவையில்லை" என்றான். ஒருவரும் பதிலளிக்காததால், தன்னுடைய அடுக்குமாடிக் கட்டிடத்தைச் சென்றடையும் வரை வேகமாக நடந்தான்.

## வழிபாட்டுச் சேவைக்கு வருபவர்கள் அதிகரித்தனர்

மறுநாள் காலையில் லெவ் வழிபாட்டு சேவைக்குச் சென்றான். அங்கு கூட்டம் அதிகமாக இருந்ததைக் கண்டு ஆச்சரியமடைந்தான்.

லெவ், ரெபெக்காளுடனும், வேறு சிலருடனும் பின்வரிசையில் நின்றிருந்தான். ரெபெக்காளினுடைய வருகை குறித்து, லெவ் நன்றியோடு இருந்தான். அதிகமான ஜனங்களோடு தொடர்புக்குள் இருக்க வேண்டும் என்பதற்காக, இருவரும் வெவ்வேறு வழிபாட்டுச் சேவைக்கு செல்ல ஆரம்பித்ததில் இருந்தே, வழிபாட்டுச் சேவையில் இருவரும் சந்தித்துக் கொள்வது என்பது அரிதான நிகழ்வாக இருந்தது. இஸ்ரயேலுக்கு எதிரான கடைசிப்போரைக் குறித்த மதத்தலைவர்களின் வாக்குறுதிகளானது, ஜனங்களுக்கு முற்றிலும் குழப்பத்தை உண்டாக்கியது. அவர்கள் ஏமாற்றமடைந்ததன் விளைவாக, இஸ்ரயேலுக்கு எதிரான கடைசிப் படையெடுப்பிற்குப் பிறகு, தேவாலய வழிபாடானது தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால் பல ஆண்டுகளாக, சிறிய எண்ணிக்கையிலானவர்கள் இரகசியமான இடத்தில் கூடி, இஸ்ரயேல் தேசத்தைக் குறித்து, அவர்கள் கேள்விப்பட்ட விசித்திரமான அறிக்கைகள் மற்றும் நடந்த நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கு முயற்சி எடுத்தனர்.

திரு.முல்லர் அவர்களுக்கு ஏற்பட்ட விளைவு மற்றும் அதனால் அவருக்கு உண்டான இருதயமாற்றம், இஸ்ரயேல் தேசத்திலிருந்து வரவிருக்கும் புதிய பூமியின் ஆசீர்வாதங்களைக் குறித்ததான லெவ் மற்றும் ரெபெக்காளின் சாட்சியங்கள், அந்த இடத்தில் ஒவ்வொரு நாளும் பரவத் தொடங்கியதால், வழிபாட்டுச் சேவைக்கு வருபவர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது. இன்றைய பார்வையாளர்களின் கூட்டமானது, சமாளிக்க முடியாத அளவிற்கு அதிகமாக இருந்தது. மேலும் அனைவரிடத்திலும் உற்சாகம் தெரிந்தது.

சாட்சிகூறும் நேரத்தின் போது, லெவ் எழுந்து நின்று, "என் பெயர் லெவ் ஆரோன், நான் இஸ்ரயேல் தேசத்தைச் சேர்ந்தவன். என்னுடைய ஜனங்கள் ஒரு காலத்தில் நிராகரித்த கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவுக்கும், அவர் செய்த எல்லாவற்றிற்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். நான் ஏறக்குறைய ஒரு வருடத்திற்கு முன்பு உயிர்த்தெழுப்பப்பட்டேன். கடைசிப் படையெடுப்பின் போதான முதல் நாள் போரில், எங்களது தேசத்திற்காக போரிட்டபோது மரித்தேன். எனக்கு இப்போது கொடுக்கப்பட்டிருக்கும் இப்பணியைக் கண்டு நான் வியக்கிறேன். எனது முதல் மனைவி ஒரு தீவிரவாதியால் கற்பழிக்கப்பட்டு, கொல்லப்பட்டாள். என் பெற்றோர் தற்கொலை குண்டுவெடிப்பில் இறந்து விட்டனர். நான் மரித்தபோது, எனது இரண்டாவது மனைவியும், மகனும் என்னை நிரந்திரமாக இழந்து விட்டதாக எண்ணினார்கள். நாங்கள் அனைவரும் இப்போது மீண்டும் ஒன்றாக ஜீவனோடு இருக்கிறோம். முதல்முறையாக அவர்களைப் பார்த்தபோது ஏற்பட்ட சந்தோஷத்தையும், நான் நினைத்துப்பார்க்கவே இயலாத அளவிற்கு இப்போது அவர்களோடு நெருங்கியிருப்பதையும் என்னால் விவரிக்க இயலாது" என்று கூறியவாறு லெவ் தனது கண்களில் வழிந்த கண்ணீரைத் துடைத்தான்.

"எனது பயம் மற்றும் போராட்டம் இவைகளிலிருந்து விடுபடுவதற்குத் தேவையான உதவிகளையும், வழிமுறைகளையும் நான் பெற்றேன். இனி உயிர்த்தெழுப்பப்படப்போகும் மற்றவர்களுக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யும் வேலைகளில், நான் எவ்வாறு உதவ முடியும் என்பதைக் கண்டறிவதற்கு முற்பிதாக்களைத் தொடர்பு கொண்டேன். பாலஸ்தீனிய கிளர்ச்சியில் மரித்திருந்த ஒரு குடும்பத்திற்கு வீட்டினைக் கட்டுவதற்கு நான் உதவினேன். மேலும் அவர்கள் உயிர்த்தெழுந்தபோது, அவர்களோடு இருந்த அனுபவமானது அற்புதமாக இருந்தது - மீண்டும் ஒரு முறை புதியதாகத் தந்தையானது போல இருந்தது. அதனாலேயே உங்களுடைய தொழில்நுட்பத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், உங்களுக்கு

உதவுவதற்காகவும் நான் இங்கே வந்துள்ளேன். உங்களது தொழில்நுட்பத்தை ஒழுங்குபடுத்தினால்தான், உங்கள் தேசத்தில் வீடுகளைக் கட்டவும், ஏதேன் மரங்களை வளர்க்கவும், உங்களது அன்புக்குரியவர்கள் திரும்பி வருவதற்குத் தயாராகவும் முடியும். நான், உங்களுடன் இங்கே இருப்பதில் பெருமை அடைகிறேன். இந்தப் புதிய தொடக்கத்திற்காக கிறிஸ்துவுக்கு நன்றி சொல்கிறேன்" என்றான்.

உயிர்த்தெழுதலின் மகிழ்ச்சியையும், தங்களது அன்புக்குரியவர்களுக்கு வேண்டியவற்றை தயார் செய்வதிலிருந்த மகிழ்ச்சியையும் கொண்டக் காட்சிகளை ஜனங்கள், தங்கள் மனக்கண்களில் கண்டபோது, அங்கு கூடியிருந்தவர்களிடையே நிலவிய நிசப்தம் கலைந்தது.

தன்னுடைய நரைத்த தலைமுடியினைக் கொண்டைக்கு உள்ளாகச் சுற்றி அடைத்து வைத்திருந்த, பெரிய அளவிலான தோற்றத்தைக் கொண்டிருந்த பெண்மணி, தேவாலயத்தின் முன் பகுதியை நோக்கி வந்த போது, லெவ் சற்று விலகி நின்றான்.

எருசலேமுக்கு எதிரான முற்றுகையில், நான் எனது மகனை, எனது ஒரே மகனை இழந்தேன். நான் அவனை இழந்ததற்காக தவிக்கின்றேன். இந்தப் பூமியை விட்டு பிரிந்தவர்களில், என் குடும்பத்தில் கடைசி நபர் அவன்தான். எனக்கு அவன் திரும்பவும் வேண்டும். நான் அவனை பரலோகத்தில் சந்திக்கலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால் நான் பூமியில் இருக்கிறேன். பூமியில் இருப்பது என்பது அவ்வளவு மோசமான காரியம் அல்ல. தேவனுடைய சித்தமானது பரலோகத்தில் செய்யப்படுவது போலவே இப்போது பூமியிலும் செய்யப்பட்டு வருகிறது. முன்பு புரிந்து கொள்ளாத ஒன்றை, இப்போது முதல் முறையாக புரிந்து கொள்கிறேன். "பிரேதக் குழிகளில் உள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்கும் காலம் வரும்

என்பதை இப்போது புரிந்து கொள்கிறேன். நான் என்னுடைய மகனை பூமியில் பார்ப்பேன். இந்தப் பூமியில் பார்ப்பேன் என்று இப்போது புரிந்து கொள்கிறேன்" என்றார்.

அந்தப் பெண்மணி தனது கைகளால் முகத்தை மூடியவாறு அழுதார். லெவ் அவரது தோள்களைப் பற்றிப் பிடித்தான். அந்த நேரத்தில் அவன் செய்த குற்றமானது அவனது இருதயத்தில் எழுவதை உணர்ந்தான். தன்னுடைய மகனின் மரணத்தைக் குறித்த ரகசியத்தை ரூபன் ஒத்துக் கொள்ளும் படியாக, லெவ் ரூபனிடம் பேசிய நாளிலிருந்தே, தான் போர்களத்தில் மரிப்பதற்கு சற்று முன்பாக கொலை செய்திருந்த சிப்பாயைக் கண்டறிய வேண்டும் என்ற ஆர்வம் அவனுக்கு இருந்தது. அந்தச் சிப்பாய் ஜீவனுக்குத் திரும்பும்போது, அவனுடைய வீட்டைக் கட்டுவதற்கு உதவ வேண்டும் என்றும் நினைத்தான்.

காலியாக இருந்த மர பெஞ்சு ஒன்றை நோக்கி, லெவ் அந்தப் பெண்மணியை அழைத்துச் சென்றபோது, யாரோ ஒருவர் தன்னைக் கண்காணிப்பது போன்றதான உணர்வு அவனுக்குள் வந்தது. தன்னைப் பின்தொடரும் அந்த நபரை அடையாளம் காண வேண்டும் என்ற தீர்மானத்திற்கு அவன் வந்தான். அவன் நிமிர்ந்து பார்த்தான். தேவாலயத்தின் பின்னால் நின்று கொண்டிருந்த, ஒல்லியான தோற்றம் கொண்ட நபர் மீது அவனது பார்வை விழுந்தது. அந்த மனிதனின் கண்கள் சிவந்து வீங்கி இருந்தன. அவன் நீண்ட நேரம், லெவ்வைக் கூர்ந்து பார்த்த படி இருந்தான். பின்பு தன்னுடைய தலையைக் குனிந்து தரையைப் பார்த்தான். திரு.முல்லரின் கீழாக, அறிவியல் நிறுவனத்தில் பணியமர்த்தப்பட்ட பயிற்சியாளர்களில், அவரும் ஒருவர் என்பதை உடனடியாக லெவ் அடையாளம் கண்டு கொண்டான்.

மற்ற துக்கமடைந்திருந்த தாய்மார்களும், அவர்களுடைய அனுபவங்களையும், அவர்களுடைய குடும்பங்களுடன் மீண்டும் இணைந்து இருப்பதற்கான அவர்களுடைய விருப்பத்தையும், தாங்கள் கடந்துவந்த பாதையை இருண்ட காலத்தின் கோணத்திலிருந்தும், இப்போது தேவனுடைய திட்டத்தைப் புரிந்து கொண்டதையும் பற்றி சாட்சியாகக் கூறினர்.

ஒருவர் ஏதேன் பழத்தின் ஆற்றலைக் குறித்தும், அவருடைய இளமையும், ஆரோக்கியமும் படிப்படியாக திரும்பியதைக் குறித்தும் சாட்சி பகிர்ந்தார். "நான் செவிடனாக இருந்தேன். ஆனால் இப்போது இந்த அறையில் இருப்பவர்களின் முணுமுணுப்பையும் என்னால் கேட்க முடிகிறது" என்றார்.

வழிபாட்டுச் சேவை முடிந்த பின்பு, வந்த மணித்துளிகளானது கேள்விகளாலும், உற்சாகத்தினாலும் நிரம்பி இருந்தது. ஜனங்கள், லெவ் மற்றும் ரெபெக்காளைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்களின் வல்லமையைப் பற்றியும், முற்பிதாக்கள் பற்றியும், ஏதேன் பழத்தின் ஆற்றல் பற்றியும், அதைப் பொது ஜனங்களுக்குக் கிடைக்கும் படி செய்வதற்கான செயல்முறைகளைப் பற்றியும், தங்களது சொந்தக் குடும்பத்தினர் உயிர்த்தெழுந்து வருவதற்கான ஏற்பாட்டிற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றியும் கலந்தாலோசித்தார்கள்.

கூட்டம் குறையத் தொடங்கியபோது, லெவ்வின் கவனம் அறையின் பின்புறமாகச் சென்றதை ரெபெக்காள் கவனித்தாள்

"லெவ் என்ன ஆயிற்று?" என்று கேட்டாள்.

"அவர் சென்று விட்டார்" என்று லெவ் பதிலளித்தான்.

"யார் சென்று விட்டார்?" என்று ரெபெக்காள் விசாரித்தாள்.

அவன் கவனித்திருந்த, கணினி வடிவமைப்பில் ஏற்பட்டிருந்த மாற்றத்தைப் பற்றியதான விஷயத்திற்கு, முற்பிதாக்களிடம் இருந்து இன்னும் எந்த ஒரு வழிகாட்டுதலையும் பெற்றுக் கொள்ளாததால், அவன் குழப்பத்திலேயே இருப்பதை ரெபெக்காளால் பார்க்க முடிந்தது.

வழிபாட்டுச் சேவை நடந்த இடத்திலிருந்து, இருவரும் ரெபெக்காளின் வீட்டிற்கு நடந்தே சென்றார்கள். அவளின் குடியிருப்பைச் சுற்றிப் போடப்பட்டிருந்த, சிறிய கற்களால் ஆன நடைபாதையில் இருவரும் சிறிது நேரம் நின்றார்கள்.

"முற்பிதாவாகிய ஏனோக்கு, ஏன் இன்னும் என்னைத் தொடர்பு கொள்ளவில்லை? என்று என்னால் அறிய முடியவில்லை, ரெபெக்காள்" என்றான்.

"பொறுத்திருந்து பார்ப்போம், லெவ். தேவனுடைய சித்தமானது பூமியில் நிறைவேறத் தொடங்கிவிட்டது. ஜெர்மனியிலும்தான்" என்று ரெபெக்காள் கூறினாள்.

## ஃபிரிட்ஸ் ராமெல்

கடந்த இரண்டு நாட்களாக லெவ் அறிவியல் நிறுவனத்தின் அவனுடைய வழக்கமான வேலை நேரம் முடிவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவே, அங்கிருந்த பூங்காவிற்கு வந்து கொண்டிருந்தான். அவன் வேதாகமத்தை வாசித்து, தியானிப்பதற்காக வந்தான். அன்று அவனுடைய சிந்தையானது, ஓய்வு நாள் சேவையைப் பற்றியே தொடர்ந்து சிந்தித்துக் கொண்டிருந்தது. தேவாலயத்தில் அவன் பார்த்த அந்த மனிதர், ஃபிரிட்ஸ் ராமெல் என்று இப்போது லெவ் கண்டறிந்தான். ஃபிரிட்ஸ் ராமெல், வழிபாட்டுச் சேவையில் லெவ்வைப், பார்த்ததிலிருந்தே அவருடைய வழக்கமான வேலை நேரத்திற்கு வரவில்லை.

லெவ் தனக்கு முன்பாக நீண்ட நேரமாகத் திறந்து வைக்கப்பட்டிருந்த வேதாகமத்தோடு, பூங்காவில் இருந்த இரும்பு பெஞ்சில் அமர்ந்திருந்தான். ஒரு பெண் ரொட்டித் துண்டுகளை புற்கள் மீது வைப்பதையும், அது காந்தம் போல சாம்பல் நிறப் பறவைகளைத் தன் பக்கமாக இழுப்பதையும் லெவ் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பெண் நகர்ந்த போது பறவைகள் கலைந்தன. அந்தப் பெண் குனிந்து, இன்னும் அதிகமான ரொட்டித் துண்டுகளைப் போட்டுவிட்டு, அமைதியாக இருந்தாள். சிறிது நேரத்தில் புறாக்கள் மீண்டும் அவளிடமாய் வந்து, மதிய உணவிற்குத் தேவையான ரொட்டித் துண்டுகளை கொத்திச் சென்றன. அவள் ரொட்டித் துண்டுகளை, பறவைகளை ஈர்ப்பதற்கான காந்தம் போன்று பயன்படுத்துகிறாள் என்று லெவ் நினைத்தான். லெவ், ஃபிரிட்ஸ் ராமெல்லை நினைத்து பெருமூச்சு விட்டான். தன்னை அழுத்திக் கொண்டிருக்கும் கவலையிலிருந்து, லெவ் தன்னை விடுவித்துக் கொள்ள விரும்பினான். தான் பயத்திலும், குழப்பத்திலும் சூழப்பட்டு இருப்பது போல் லெவ், தன்னை உணர்ந்தான்.

லெவ் கடந்த சில நாட்களில் நிகழ்ந்தவைகளை நினைத்துப் பார்த்தான். அறிவியல் நிறுவனத்தில் அனைத்தும் நன்றாகவே போய்க் கொண்டிருந்தது. அனைவரும் உற்சாக மிகுதியில் இருந்தார்கள். விஞ்ஞானிகள் உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஆர்வமாக இருந்தனர். பொறியியல் குழுவினர் திட்டங்களை விரைவாகப் புரிந்து கொண்டனர். மேலும் புதிய பூமி கணினிகளின் கூறுகளை உற்பத்தி செய்வதற்குத் தேவையான தயாரிப்பு செய்முறைகள் தொடர்பான முற்பிதாக்களின் போதனைகளை உள்வாங்கிக் கொண்டனர். ஒவ்வொருவரும் இந்த கணினிக் கூறுகள், இதுவரை அவர்கள் வேலை பார்த்திருந்த கூறுகளை விட மேன்மையானவை மட்டுமல்லாமல்,

எளிதில் உருவாக்கக் கூடியவை, மேலும் நீடித்த நிலைத்தன்மை உடையவை என்பதை ஏற்றுக் கொண்டனர்.

மறுநாள் லெவ் மின்னணு தொழில்நுட்பத்தையும், கணினிகளையும் மிகப்பெரிய அளவில் உற்பத்தி செய்யத் தொடங்குவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிக்கைகளை வெளியிடத் தயாராக இருந்தான். திரு.முல்லர், தன்னுடன் பணிபுரிபவர்களுக்கு புதிய திசையையும், வழிகாட்டுதலையும் காட்டும் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தார். ஏனெனில் தான் பெற்றுக் கொண்ட சிறந்த சமாதானத்தின் காரணமாக, மறுசீரமைத்தல் என்ற மகத்தான பணிக்கு ஜெர்மனியைத் தயார் செய்ய வேண்டும். அதற்காக கட்டயாமாக மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை எதிர்கொள்வதற்காக, புதுப்பிக்கப்பட்ட அணுகுமுறையைக் கையாண்டார்.

ரெபெக்காள், லெவ்விடம் தோட்டங்களின் வடிவமைப்பில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்று கூறியிருந்தாள். குளிர்காலங்களிலும், ஜெர்மனியர்களுக்கு காய்கறிகள், ஏதேன் பழங்கள் மற்றும் பிற பழங்களின் தொடர்ச்சியான அறுவடையைக் கொடுக்கும்படியாக அதன் வடிவமைப்பு அமைக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருந்தாள். ஒவ்வொரு வீட்டிலும் காய்கறித் தோட்டங்கள் மற்றும் பழத்தோட்டங்களுக்குப் பதிலாக, எரிசக்தி மின்கலத்தின் மூலம் வெப்பமாக்கப்படும், செயல் திறனுள்ள "வெப்ப வீடுகள்" சிறப்பாக அங்கே வடிவமைக்கப்பட வேண்டும். லெவ் மற்றும் ரெபெக்காள் இருவரும் இந்தப் புதிய முன்னேற்றத்தைக் குறித்து உற்சாகத்துடன் இருந்தனர். மேலும் தங்களுக்குக் கிடைத்த இத்தகைய வீடுகளை உருவாக்கும் முதல் வாய்ப்பை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

லெவ் இறுதியில் கணினி வடிவமைப்பில் இருந்த தவறினைக் கண்டறிந்து அவற்றை சரி செய்தான். கணினிக்கு சேதம் விளைவிக்கும் நோக்கத்துடன் செய்யப்பட்ட ஒன்றாகவே இருந்தது என்பதில் அவன் உறுதியாக இருந்தான். "உங்கள் வேலையைத் தொடங்குங்கள் மனம் தளராதிருங்கள் ஷாலோம், தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்" என்ற சுருக்கமான செய்தியையே ஏனோக்கிடமிருந்து லெவ் பெற்று இருந்தான்.

கணினியின் சேதத்தை விளைவித்த நபரை எப்படி சமாளிப்பது என்று லெவ்விற்கு இன்னும் புரியவில்லை. ஆனால் இப்படிப்பட்ட சமயங்களில் ஊறுவிளைத்தவருக்கு ஏற்படும் பேச்சுத் திறன் குறைபாடு அல்லது கை, கால்கள் இயங்குவதில் குறைபாடு போன்ற விளைவுகளால் ஒருவரும் பாதிக்கப்படவில்லை. ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் ஒருவரும் அவ்வாறு பாதிக்கப்படவில்லை. ஃபிரிட்ஸ் ராமெல் எங்கே சென்றார்? இறுதியாக எல்லாவற்றையும் அறிய முற்படும் முயற்சியை கைவிட்டு விட்டு, மரபெஞ்சில் சாய்ந்து அமர்ந்தவாறு கண்களை மூடினான்.

பயந்த புறாக்கள் எழுப்பிய சத்தத்தினாலும், அவை சிறகுகளை படபடத்ததால் எழும்பிய ஓசையினாலும் லெவ் தன் கண்களைத் திறந்தான். அவன் புறாக்கள் விரைவாக கலையத் தொடங்குவதையும், ஒவ்வொரு அடியின் போதும், தலைகளை மேல் நோக்கி எழுப்புவதையும் பார்த்தான். அந்தப் பெண்மணி அங்கிருந்து சென்றிருந்தாள். அந்தப் பெண்மணி நின்ற இடத்தில் இப்போது ஃபிரிட்ஸ் ராமெல் புல்வெளிக்கு நடுவில் அமைதியாக நின்றவாறு, பறவைகளை மீண்டும் வரவழைப்பதற்கான முயற்சியை எடுத்துக் கொண்டிருந்தான்.

"அவைகள் எளிதில் மிரளும் தன்மை கொண்டவை" என்று சத்தமாகக் கூறினான். பின்பு தன்னுடைய மடியில் திறந்தவாறு வைக்கப்பட்டிருந்த வேதாகமத்தைத் தொடர்ந்து லெவ் வாசித்தான்.

ஃபிரிட்ஸ் ராமெல், லெவ்வை உன்னிப்பாகப் பார்த்தவாறு, மரபெஞ்சிலிருந்து ஓர் அடி பின்னோக்கி நகர்ந்து நின்றான். லெவ் கொஞ்சமாக சிரிப்பதைப் பார்த்தான். பின்னர் மரபெஞ்சை நோக்கி ஒரு அடி முன்னால் நகர்ந்து நின்றான். லெவ் தனக்குள்ளாக லேசாக சிரித்துக்கொண்டான். அவனது கண்கள் இன்னும் வேதாகமத்தையே பார்த்துக் கொண்டிருந்தன. ஃபிரிட்ஸ் ராமெலின் ஆர்வமானது இறுதியில் உச்சத்தினை எட்டியது, அதனால் அவன் அமைதியாக மரபெஞ்சை அடைந்து, அதன் மற்றொரு ஓரத்தில் அமர்ந்தான்.

"நான் உங்களைத் தொடர்ந்து கண்காணித்துக் கொண்டிருக்கிறேன்" என்று ஃபிரிட்ஸ் ராமெல் கூறினார்.

லெவ், தொடர்ந்து வாசிப்பதில் மூழ்கி இருந்தான்.

"நான் திரு.முல்லரையும் கண்காணித்துக் கொண்டிருக்கிறேன். காரியங்கள் சரியாக இல்லை. சொல்லப்போனால் தவறாக இருக்கிறது. அனைத்தும் தவறாக இருக்கிறது, லெவ்" என்று கரப்பான குரலில், வேகமாகப் பேசியதில் அவனுடைய சிந்தை வெளிப்பட்டது. "என்னை என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. உங்களுக்கு அநேக காரியங்கள் தெரியும் என்பதை நான் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன் - எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை" என்று தொடர்ந்து கூறினான்.

"உங்களுக்கு என்னிடம் பேசுவதற்கு ஏதாவது இருந்தால், நான் கேட்பதற்கு தயாராக இருக்கிறேன்" என்று லெவ் தன்னுடைய பார்வையை வேதாகமத்திலிருந்து எடுக்காமலேயே கூறினான்.

## அக்கிரமத்தின் வலை

"எனக்குள் இருக்கும் எல்லாவற்றையும் கூறுகிறேன், திரு. ஆரோன். நான் வழிபாட்டுச் சேவையின் சாட்சி நேரத்தில், மற்றவர்கள் பகிர்ந்து கொண்ட அனுபவங்களைக் கேட்டேன். அந்தப் பெண்மணிகள் தங்கள் குடும்பத்தைத் திரும்பப் பெறுவதற்கு எவ்வளவு விரும்புகிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. அவர்களைப் போல ஒருவனாக நான் இருந்திருந்தால் நானும் அவ்வாறே விரும்பி இருப்பேன். ஆனால் நான் அவர்களைப் போன்ற ஒருவன் அல்ல" என்றான்.

லெவ் தன்னுடைய ஓரப்பார்வையால், ஃபிரிட்ஸ் தன்னுடைய கைகளைப் பிசைந்து கொண்டிருப்பதைக் கண்டான். ஃபிரிட்ஸ் தொடர்ந்து பேசுவதற்காக பெருமூச்சு விட்டான். பின்பு அவன், "நான் நாசி இயக்கத்தின் மீது அதிகப் பற்றுகொண்டிருந்த குடும்பத்தினரில், ஐந்தாவது தலைமுறையில் பிறந்தவன்" என்றான்.

லெவ் பெருமூச்சு விட்டவாறு தொடர்ந்து கேட்டான்.

"தனிப்பட்ட விதத்தில் நான் ஒரு நியோ-நாசியாக (யூத வெறுப்பினர்) இல்லை. நான் பல ஆண்டுகளாக நடந்த அநேக காரியங்களை ஏற்றுக் கொள்ள முடியாதவனாகவே இருந்தேன். ஏனெனில் அவைகள் உண்மையாகத்தான் நடந்திருந்தன என்பதை நான் நம்ப விரும்பவில்லை. எருசலேமுக்கு எதிரான முற்றுகை என்னை சிந்திக்க வைத்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஆனால் பல நூற்றாண்டுகளாக தேவன் சிறிய தேசமான இஸ்ரயேலைப் பாதுகாத்து வருவது போல் எனக்குத் தோன்றியது மற்றும் அதிசயக்கத்தக்க வகையில், நிகழ்வுகளின் திருப்பத்தை நாங்கள் கண்டபோது, எனது எண்ணம் உறுதியடையத் துவங்கியது". ஃபிரிட்ஸ் தொடர்ந்து தனது கைகளை பிசைந்தவாறு பதட்டமாக இருந்தார்.

"ஏதேன் பழம் குறித்தும், மரித்தவர்களின் உயிர்த்தெழுதல் குறித்தும் இஸ்ரயேலில் இருந்து வரும் செய்திகளை நான் நம்புகிறேன். உங்களுடைய மற்றும் ரெபெக்காளினுடைய சாட்சிகளையும் நான் நம்புகிறேன். உயிர்த்தெழுதலானது பல மில்லியன் கணக்கானவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொண்டு வரும் என்று எனக்குப் புரிகிறது. ஆனால் அது என்னுடைய குடும்பத்திற்கு மகிழ்ச்சியைக் கொண்டு வராது". ஃபிரிட்ஸ் சற்று நிறுத்தி, லெவ்வின் கண்களை சில நொடிகள் பார்த்துவிட்டு, பின்பு இன்னும் பதட்டமாகவே இருந்த தனது கைகளை மீண்டும் பார்த்தான்.

"எனது குடும்பம் - என் குடும்பத்தில் சிலர், மீண்டும் ஜீவன் பெறுவதை விட மரித்த நிலையிலேயே இருப்பதையும், அவர்கள் வாயு அறைக்குள் அனுப்பியவர்களை எதிர்கொள்ளாமல் இருப்பதையுமே விரும்புவர். நீங்கள் புதிய தொடக்கம் என்று கூறுவது அவர்களுக்கு சுமையாகவே இருக்கும், என்னுடைய மற்ற குடும்பத்தினருக்கும், எனக்கும் சுமையாகவே இருக்கும்" என்று கூறியவாறு ஃபிரிட்ஸ் கைகளால் தனது முகத்தை மூடி அழுதான். அவன் அமைதியாக அழுததில், அவனது உடல் குலுங்கியது.

லெவ், ஃபிரிட்ஸின் பக்கமாகத் திரும்பி, தனது கரங்களை இளைஞனின் தோள்களைச் சுற்றியவாறு போட்டான். "உங்களுடைய நேர்மையை நான் பாராட்டுகிறேன், ஃபிரிட்ஸ். உங்களது சிந்தையில் அநேக காரியங்கள் உள்ளன" என்றான்.

"மேலும் நான் நினைக்கிறேன், ஒருவேளை நான் யூதர்களைக் கொன்ற குடும்பத்தினர்களில் ஒருவனாக இருந்தால், அவர்கள் ஜீவனுக்குத் திரும்புவதை குறித்து நான் சிந்திப்பதில் இருக்கும் பயமானது நியாயமானதாகவே இருக்கும். என்னுடைய கடந்த காலத்து செயல்களினால் உண்டான குற்ற உணர்ச்சியினையும், அவமானத்தையும்

சந்திக்க எனக்கு விருப்பம் இல்லை. ஆரிய இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்பதற்காகவே, அப்பாவி ஆண்களையும், பெண்களையும், குழந்தைகளையும் அழித்தொழிப்பதற்கான "இறுதி முடிவை எடுப்பதில்" பங்களித்தவர்களில் ஒருவராக, எனது மூத்த தாத்தாவும் மற்றும் என்னுடைய அநேக உறவினர்களும் இருந்திருந்தனர். மற்றவர்களோடு இணைந்து, இவர்களும் யூத இனத்தைக் குறி வைத்தனர். இப்போது நீங்கள் ஒரு யூதன், எங்களுடைய தேசத்திற்கு உதவ முன்வந்துள்ளீர்கள். நீங்கள் பிரகாசமான எதிர்காலம் என்று கூறுவது, எனக்குப் பிரகாசமான எதிர்காலமாக எனக்குத் தோன்றவில்லை" என்றான்.

"உனது குடும்பத்தினர் மட்டுமல்ல ஃபிரிட்ஸ், அநேகர் கடுமையான பாவங்களைச் செய்திருக்கின்றனர். "அநேகர் செய்யும் காரியத்தை தானும் செய்யலாம்" என்ற மனோவியலானது, தனிமையில் செய்ய முடியாத தீமையை, அநேகரோடு இணைந்து செய்வதற்கு வழி வகுத்துக் கொடுத்தது. "கொடூரமாக" இருப்பது என்பது நம்முடைய இரத்தத்தில் காணப்படவில்லை. தங்களுடைய பாவங்களை ஒத்துக் கொள்வதற்கான போதுமான தைரியத்தைக் கொண்டவர்கள், மன்னிப்பைத் தேடுகிறார்கள். அவர்களது பாவமானது மன்னிக்கப்படும். கிறிஸ்து, பாவங்களை மன்னிப்பவராக இருக்கிறார். பாவமானது எந்த ஒரு தண்டனையும் இல்லாமலேயே மன்னிக்கப்படும் என்று அர்த்தம் இல்லை. மன்னிப்பது என்பது எளிதானது அல்ல. ஆனால் ஹோலோகாஸ்டின் போன்ற கொடூரமான பாவங்கள் கூட மன்னிக்கப்படும்" என்று லெவ் கூறினான்.

அவர்களது உரையாடல் தொடங்கியதிலிருந்து முதன்முறையாக ஃபிரிட்ஸின் கண்கள், லெவ்வின் கண்களை நேரடியாகப் பார்த்தான். பின்பு அவனது கண்கள் லெவ்விடமிருந்து விலகவில்லை.

"ஃபிரிட்ஸ், நான் போர்க்களத்தில் அநேகரைக் கொன்றேன். அவர்கள் அனைவரும் முகமறியாத, பெயரறியாத என்னுடைய எதிரிகள் ஆகினர், நான் அறிந்திராத அவர்களைக் கொலை செய்வதற்கு நான் பயிற்சி அளிக்கப்பட்டு இருந்தேன். தெளிவாகத் தெரியாத காரணங்களுக்காக நாங்கள் ஒருவரை ஒருவர் எதிர்த்துப் போரிட்டோம். பல நூற்றாண்டுகளாக ஆண்கள் இந்தப் பணியைச் செய்திருக்கின்றனர். அது இப்போது முடிவடைந்ததற்கு, தேவனுக்கு நன்றி. எந்த ஒரு தீர்வையும் காணமுடியாதவைகளுக்கான விளைவாகவே போர் இருந்தது. இருப்பினும், ஆதரவற்றோரை வேண்டுமென்றே கொலை செய்பவர் எதிர்கொள்ளும் சுமையைப் போன்றதான ஒரு சுமையை படை வீரர்கள் பெறுவதில்லை. ஆம், சரிதான், ஹோலோகாஸ்டுக்குப் பொறுப்பு வகித்தவர்கள், அவர்கள் கொன்ற அநேகரை மீண்டும் சந்திக்கப் போகிறார்கள். அது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. இருப்பினும், அவர்கள் செய்த பாவத்திற்கு அவர்கள் தேவனுக்கேற்ற துக்கம் கொள்வார்களானால், அவர்கள் மன்னிக்கப்படுவார்கள் மற்றும் அவர்கள் கொலை செய்தவர்களோடு ஒப்புரவாகவும் முடியும். இது சுலபமான காரியம் அல்ல. ஆனால் நிச்சயம் சாத்தியமான காரியம் ஆகும். மறுசீரமைப்பின் பணி என்பது வழிதவறிய அநேகருக்கு உதவுவதற்காகவே ஆகும். தேவனுடைய ஆவி "எல்லா மாம்சங்களின் மீதும் ஊற்றப்படும்", அப்போது அவர்களுடைய உள்ளான இருதயம், மாற்றத்தையும், குணமடைதலையும் நோக்கி வரவேண்டும் என்றான்.

"என்னுடைய பெற்றோருக்கும், முந்தைய மூத்த தலைமுறையான தாத்தா, பாட்டிகளுக்கும் வெறுப்புணர்ச்சி கற்பிக்கப்பட்டு இருந்தது. இதைப் போன்ற கேடுகெட்ட செயலை அவர்கள் விருப்பத்துடன் செய்திருப்பார்கள் என்று நான் நம்பவில்லை. ஆனால் அந்த வலையில்

மாட்டிக் கொண்டபோது, அவர்களை அதிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கான வலிமை அவர்களுக்கு இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. மனிதாபிமானமற்ற குற்றத்தை செய்ததில் அவர்களுக்கிருந்த பங்கானது அவர்கள் அப்போது ஜீவனோடு வாழ்வதை உறுதி செய்தது. ஆனால் அவர்கள் தங்கள் கைகளில் இரத்தக் கறைகளோடு ஜீவனோடு இருந்தனர். மேலும் அவர்களுக்கு கிடைத்தப் பரிசானது குற்ற உணர்ச்சியால் நிறைந்திருந்த வெறுமையான வாழ்க்கை மட்டுமே. மேலும் விஷவாயு நிரப்பப்பட்ட அறைகளைத் தங்கள் கனவுகளில் கண்டார்கள்" என்று ஃபிரிட்ஸ் கூறினான்.

"அக்கிரமத்தின் வலை (web)/ கண்ணி வலுவானது, ஃபிரிட்ஸ். அவர்கள் வெறுப்பு மற்றும் வெகுஜனஉளவியல் (அநேகர் செய்வதை நாமும் செய்யலாம்) காரணத்தினால் அதற்குள்ளாக இழுக்கப்பட்டிருந்தனர். கிறிஸ்து, வெறுப்பினை நேரடியாகவே அறிந்திருக்கிறார். கிறிஸ்துவிற்கு அருகில் சிலுவையில் அறையப்பட்டிருந்த இரண்டு குற்றவாளிகள் மீது ஜனங்கள் காட்டிய வெறுப்பைக் காட்டிலும், அதிகமான வெறுப்பை அவர் எதிர்கொண்டார். பாவத்திலிருந்து விடுபட்டு அன்பை மீண்டும் பெறுவதற்கான ஒவ்வொரு வாய்ப்பினையும், எவ்வாறு நம் ஒவ்வொருவருக்கும் கொடுக்க வேண்டும் என்று அவர் அறிவார். இதைப் பெற்றுக் கொள்வதற்கு விடாமுயற்சியும், பலமும் தேவை. ஆனால் தங்களுடைய வாழ்க்கையை மாற்றி அமைக்க விரும்பும் அனைவருக்கும் இந்த வாய்ப்பானது கிடைக்கப் பெறும்" என்றான்.

## இழுக்கும் ஒரு காந்தம்

"இவை அனைத்தும் உண்மையாக இருக்க வேண்டும் என்று நான் நம்புகிறேன்" என்று ஃபிரிட்ஸ் கூறினான்.

"உங்களுடைய சொந்த வாழ்க்கையில் நீதியைத் தேடுங்கள், அதன் பின்பு நீங்கள் புரிந்து கொள்வீர்கள்" என்று லெவ் பதிலளித்தான்.

புல்வெளியின் நடுப்பகுதிக்கு புறாக்கள் மீண்டும் வரத் தொடங்கின. அவைகளுக்கு உணவளிக்க ஃபிரிட்ஸ் எழுந்தான்.

"நீங்கள், உங்களைச் சுற்றிலும் ரொட்டித் துண்டுகளை போட்டுவிட்டு அசையாமல் நின்றீர்களானால், புறாக்கள் அதிகம் வரும். ரொட்டித் துண்டுகள் காந்த சக்தியாக செயல்படும்" என்று லெவ் கூறினான்.

ஃபிரிட்ஸ், மறுபடியும் லெவ்விற்கு அருகாமையில் வந்து அமர்ந்தான். இரண்டு அல்லது மூன்று அடிகள் தூரத்திற்கு ரொட்டித் துண்டுகளை வீசியவாறு பேசினான்.

"நான் இரண்டு வாக்கு மூலங்கள் கொடுக்க வேண்டும், லெவ். முதலாவது, நான் தான் கணினியில் சேதம் விளைவித்தேன். கணினியில் சில வடிவமைப்பினை மாற்றியமைத்தேன். இது என்னுடைய முட்டாள்தனமான செயல், மறுசீரமைப்பு செயல்முறைக்கு இடையூறு உண்டாக்குவதற்கான மிகவும் அற்பமான செயல். இரண்டாவதாக, எனது பெற்றோர் மற்றும் தாத்தா, பாட்டியும் உயிர்த்தெழுப்பப்படும்போது, உடனடியாக அவர்களுக்கு ஏற்படப்போகும் வலியினைத் தாமதமாக முயன்றேன். என்னை மன்னித்து விடுங்கள். ஆனால் நான் உங்களால் இழுக்கப்பட்டுவிட்டேன். நீங்கள் காந்தம் போல் என்னை இழுத்துவிட்டீர்கள்" என்றான்.

ஃபிரிட்ஸ் புறாக்களுக்கென்று அவன் தரையில் வீசி இருந்த ரொட்டித் துண்டுகளைப் பார்த்தான். இப்போது புறாக்கள் அவைகளை கொத்த ஆரம்பித்தன. "உங்களுடைய அனுபவங்களையும், உங்களது கருத்துக்களையும் கேட்க விரும்பினேன். மேலும் நீங்கள் எவ்வாறு வாழ்கிறீர்கள் என்றும் பார்க்க விரும்பினேன். அதனாலேயே உங்களை சில நாட்களாகப் பின் தொடர்ந்தேன்" என்றான்.

லெவ் சிரித்தவாறு, "என்னை யாரோ ஒருவர் பின் தொடர்கிறார் என்பது எனக்குத் தெரிந்தது. ஆனால் அது நீங்கள்தான் என்று எனக்குத் தெரியாது" என்றான்.

"எனக்கு இன்னும் ஒரு கேள்வி இருக்கிறது, லெவ். நாம் பேசிய தீமையின் வலையை உருவாக்கியவர்களின் நிலை என்ன ஆகும்? அவர்களும் உயிர்த்தெழுதலைப் பெற்றுக் கொள்வார்களா?" என்று கேட்டான்.

"மரண தண்டனைக்கு உட்பட்டு இருக்கும் மனுக்குலத்தில் இருந்து எவரையும் விடுதலையாக்கும் அதே பலியானது, அவர்களையும் விடுதலையாக்கும். அவர்களை உயிர்த்தெழுப்புவதற்கும் அதே வல்லமையானது செயல்படும்."

"ஆனால் அவ்வாறு செய்வதற்கு அதிகமான தைரியத்தையும், முயற்சியையும் கொடுக்க வேண்டும். அநேகவற்றை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது" என்று லெவ் கூறினான். ஹிட்லரைப் போன்றவர்களுமா? என்று ஃபிரிட்ஸ் கேட்டான்.

பயத்தினால் லெவ் தன் முதுகுத்தண்டு நடுங்குவது போல் உணர்ந்தான்.

"ஹிட்லரைப் போன்றவர்களுமா?" என்று ஃபிரிட்ஸ் மீண்டுமாய் கேட்டான்.

ஆமாம், ஹிட்லரைப் போன்றவர்களும்தான்" என்று லெவ் பதிலளித்தான்.

❀❀❀

**“வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்” (மத்தேயு 11:28).**

# அத்தியாயம் - 22

லெவ், காலையில் நடந்த ஏனோக்குடனான தொலைபேசி உரையாடலைக் குறித்து மீண்டும் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

“ஏனோக்கு அவர்களே, நான் போர்க்களத்தில் கொன்ற அந்த சிப்பாயினுடைய பெயரைத் தெரிந்து கொள்வதற்கு மிகவும் விரும்புகிறேன். இதற்காக நான் ஜெபித்துக் கொண்டிருக்கிறேன். இப்போது உங்களிடம் கேட்கிறேன். அவரது பெயரை நான் எப்படி கண்டுபிடிப்பது? அவருடைய உயிர்த்தெழுதலுக்காக என்னால் ஏதாவது செய்ய முடியுமா?” என்று பணிக்குச் சென்று கொண்டிருக்கும் போது தன்னுடைய பாதுகாப்பான தொலைபேசியில் இருந்து லெவ் பேசி இருந்தான். “என்னால் ஏதாவது ஒரு வகையில் அவருக்கு உதவ முடியும் என்றால், நான் இங்கு அதிக நாட்கள் தங்கி இருப்பதற்கு உங்களை வேண்டிக்கொள்கிறேன்” என்று ஏனோக்கிடம் கேட்டிருந்தான்.

“உங்களது விருப்பத்தை நாங்கள் ஏற்கனவே அறிந்துள்ளோம். அதனை நிறைவேற்ற உதவுவதில் நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். நீங்கள் கொன்ற சிப்பாயின் பெயர் ஃபிரெட் க்ரூப்பர். அவர் குழந்தையாக இருக்கும்போதே அவனுடைய பெற்றோர் அவனை கைவிட்டு விட்டனர். அவன் ஓர்அனாதையாக வளர்க்கப்பட்டிருந்தான்” என்று ஏனோக்கு பதிலளித்திருந்தார்.

இதற்கிடையில் உங்களது பகுதியில் நடைபெறும் கணினி உற்பத்தியைத் தொடர்ந்து கண்காணியுங்கள். இஸ்ரயேலில் இருந்து வந்த மற்றவர்களும் இப்பணியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நாம்

திட்டமிட்டபடி சரியாகத்தான் போய்க் கொண்டிருக்கிறோம். வீடுகள் மற்றும் கணினிகளின் உற்பத்தியிலும் மற்றும் ஜெர்மனியில் ஏதேன் பழ உற்பத்தியிலும், அதனை விநியோகிப்பதிலும் உள்ள முன்னேற்றத்தினைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சி அடைகிறோம். அந்த நாட்டில் தன்னார்வத் தொண்டு செய்யும் மற்றவர்களையும், ரெபெக்காள் மற்றும் உங்களுடைய வேலையையும் தேவன் ஆசீர்வதித்திருக்கிறார்".

ஏனோக்கிடமிருந்து பெற்ற பாராட்டினால், லெவ் மகிழ்ச்சியாக காணப்பட்டான். கட்டிடம் கட்டுவதிலும், தாவரங்களை நடவு செய்வதிலும் காணப்பட்ட முன்னேற்றத்தின் விகிதத்தைக் கண்ட ஏனோக்கிற்கு மகிழ்ச்சியாகவும், வியப்பாகவும் இருந்தது. நிலங்கள் முற்பிதாக்களால் பிரித்து, ஒதுக்கப்பட்டு இருந்தன. பழைய உத்திகள் அகற்றப்பட்டு, புதிய உத்திகள் உருவாக்கப்பட்டிருந்தன. மறுசீரமைப்பின் காட்சியின் மூலம் உண்டான மகிழ்ச்சியினால், அவற்றை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளில் பலர் இணைந்து இருந்தனர். ஏதேன் பழத்தின் உதவியோடு வயதானவர்கள், இளவயதுள்ளவர்களாக மாறி இருந்தனர். நோய்வாய்ப்பட்டவர்கள் குணமடைந்து, மறுசீரமைப்பின் பணியில் மனதார தங்களை இணைத்துக் கொண்டார்கள். மாற்றங்களைப் பார்ப்பதற்கு மிகவும் சுவாரஸ்யமாக இருந்தது.

தெருவில் செல்லும்போது, ஜனங்கள், லெவ்விடம் வந்து அவர்களுடைய தற்போதைய உடல் நிலையைப் பற்றிக் கூறுவர். "திரு.ஆரோன், இன்று காலை நான் கண்விழித்த போது எனது உடலில் சிறிதளவு கூட கடினத்தன்மை இல்லை. ஊன்றுகோல் தேவைப்படும் யாராவது உங்களுக்குத் தெரியுமா? என்னுடைய கண் கண்ணாடி இனி எனக்குத் தேவையில்லை, திரு.ஆரோன். இப்போது இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று கேள்வி எழுப்புவர்.

பெர்லின் நகர வீதியில் மெது ஓட்டம் அல்லது நடைப்பயிற்சி செய்யும்போது லெவ் அநேக நண்பர்களைப் பெற்றிருந்தான். மேலும் அதில் அநேகருடைய பெயரையும் தெரிந்து வைத்திருந்தான்.

## ஃபிரெட் க்ரூபரைச் சந்திப்பதற்குத் தயாராகுதல்

ஃபிரெட் க்ரூபருக்கான வீட்டைக் கட்டுவதற்கு உதவுவதிலும், அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் சவால்களை எதிர்கொள்வதிலும் நான்கு மாதங்கள் விரைவாக சென்றிருந்தன. போர்க்களத்தில் அவன் கொன்றிருந்த சிப்பாயை, விசேஷமாக யூத எதிர்ப்பினைக் கொண்டிருந்த சிப்பாயை எவ்வாறு எதிர்கொள்வது என்பது பற்றி லெவ்விற்குத் தெரியவில்லை. ஃபிரெட் க்ரூபர், தன் இருதயத்தில் யூத விரோத கொள்கைகளைக் கொண்டவராக இருந்தார். உடைந்திருந்த அவனது குடும்பத்திற்கு எந்தச் செயல்முறையின் மூலம் இணக்கத்தைக் கொண்டு வர முடியும் என்றும் லெவ்விற்குத் தெரியவில்லை. நீயோ-நாசி என்ற யூத வெறுப்புக் குழுவின் பெயரானது, லெவ்வை உள்ளூர உறைய வைத்தது.

மறுசீரமைப்பின் பணியானது அவனைச் சுற்றி இருந்த பகுதிகளிலும், ஜெர்மனிய நாடு முழுவதிலும் தொடர்ந்து கொண்டிருந்தது. தங்களுடைய அன்புக்குரியவர்கள் அனைவரும் உயிர்த்தெழுப்பப்படுவதற்கு தயாராகுவதற்காக, தோளோடு தோள் சேர்ந்து வேலை செய்யும் சிந்தையானது அதிகரித்திருந்தது. நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாற்றத்தினை ஒருவராலும் மறுக்க முடியவில்லை.

எருசலேமின் சமீபத்தியக் கண்டுபிடிப்பானது, தண்ணீரில் இருந்து இரண்டு பகுதி ஹைட்ரஜனையும், ஒரு பகுதி ஆக்ஸிஜனையும் தனித்தனியே திறம்பட பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் ஆகும். இந்தக்

கண்டுபிடிப்பானது, சூரிய ஆற்றலை எப்போதுமே பெற்றுக் கொள்வதற்குச் சாத்தியமற்ற நாடுகளுக்கு, சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத சூரிய ஆற்றலினை வழங்குவதற்கு வழி வகுத்தது. தெய்வீகத் தலையீட்டினால் வானிலை முறைகளானது சமநிலைப் படுத்தப்பட்டுள்ளது. இதனால் பருவங்கள் மிதமானதாகவும், மழை மற்றும் பனியானது பூமி முழுவதிலும் தராளாமாகப் பெய்வதால், தண்ணீர் அனைவருக்கும் தாராளமாகக் கிடைக்கப்பெறும் வகையில் மாறி இருந்தது.

சூரிய ஆற்றலுக்கும், ஹைட்ரோ-ஆக்ஸி சக்திக்கும் இடையில், உலகிலிருந்த எரிசக்தி பிரச்சனையானது வரலாற்றில் அதிகம் பேசப்பட்ட ஒன்றாக இருந்தது. ஹைட்ரோ-ஆக்ஸி எரிபொருள் கலத்தின் உற்பத்தியை நகல் எடுக்கும் திறனானது, ஜெர்மனி முழுவதுக்கும் விரைவாகப் பகிரப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. மற்ற முன்னேற்றங்கள், எதிர்கால சந்ததியினருக்கான மறுசீரமைப்பின் ஏற்பாடுகளைச் சுலபமாகவும், திறன்மிக்கதாகவும் ஆக்கியது. ஜெர்மனி முழுவதிலும் ஏதேன் மரங்கள், புதிய வெப்ப வீடுகளில் செழித்து வளர்ந்திருந்தன. உலகின் அனைத்து நாடுகளிலும் இதே போன்ற முன்னேற்றங்கள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைக் கண்ட லெவ் உற்சாகத்துடனும், நன்றி உணர்வுடனும் இருந்தான். அனைவரும் இப்போது கிறிஸ்து மற்றும் அவருடைய அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் மற்றும் முற்பிதாக்களின் அதிகாரத்திற்கு கீழ் வந்துள்ளனர்.

ஃபிரெட் க்ரூபருக்கான வீட்டினைக் கட்டுவதற்குத் தன்னார்வ தொண்டு செய்ய முன்வந்த மூவரில் ஒருவர், ஃபிரிட்ஸ் ராமெல். அவரைப்பற்றி நினைக்கும் ஒவ்வொரு தருணத்திலும் லெவ்வின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. முட்டாள்தனமும், கூச்ச சுபாவமும்

கொண்ட அவர், ஒவ்வொரு நாளும் அதிக நம்பிக்கையுடனும், வாழ்க்கையின் மீது முழு அன்புடனும் முன்னேறிக் கொண்டிருக்கிறார். இவர் தனது எதிர்காலத்தைப் பற்றி நேர்மறையான சிந்தை கொண்டவராக மாறியிருந்தார். மேலும் ஃபிரெட் க்ரூப்பர் உயிர்த்தெழுவதற்குத் தேவையானவற்றை தயார் செய்து முடித்திருந்த நிலையில், தன்னுடைய சொந்தக் குடும்பத்தின் உயிர்த்தெழுதலைக் குறித்து இவருக்கு இருந்த பயமானது குறைந்திருந்தது. சில நேரங்களில் அவர்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போது இடைவிடாமல் தனக்குத்தானே தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பார். அவருக்கு அசௌகரிமாய் இருக்கும் பிரச்சனைகளைக் குறித்து யோசிப்பதற்கான வழிமுறையாக இது இருந்தது.

"கிறிஸ்து, இஸ்ரயேலுக்காகப் போரிட்ட படையெடுப்பின் அந்த முக்கியமான நாளில், கிறிஸ்து பெரும்பாலான யூதர்களை ஒரே இரவில் மாற்றினார். அவர் ஜனங்களின் யூகங்களையும், மரபுகளையும் விரைவாக முறியடித்தார். மேலும் சிறிது காலம் தாமதமாகி இருந்தாலும் என்னுடைய வாழ்க்கையிலும், கிறிஸ்து மாற்றங்களைச் செய்தார்" என்று ஃபிரிட்ஸ் கூறினார்.

ஃபிரிட்ஸ், மீதமிருந்த குட்டையான பழ மரங்களை நடுவதற்கு "வெப்ப வீடுகளில" இருந்த மண்ணைத் தோண்டிக் கொண்டிருந்தார். அவர் கடைசி மரத்தைப் புதிய வீட்டில் நடவு செய்துவிட்டு, அதைச் சுற்றி இருந்த நிலப்பகுதியைத் தன்னுடைய கைகளைக் குவித்தவாறு வைத்துக்கொண்டு விரைவாகத் தட்டி சமன்படுத்தினார். தனக்குத்தானே பேசிக் கொண்டிருப்பதைப் போலவே, தனியாக வேலை செய்து கொண்டிருந்தார். அவர் தன்னுடைய மூக்கைச் சொறிந்தபோது, தன் கைகளில் இருந்த மண் அவரின் முகத்தில் அப்பியதைக் கண்ட லெவ் இன்னும் அதிகமாகச் சிரித்தான்.

"எங்கள் ஜனங்கள் உங்களை எப்படிப் பார்க்கிறார்கள் என்று பாருங்கள், லெவ். நீங்கள் உச்சரிப்பில் எந்த ஒரு தடுமாற்றமுமின்றி ஜெர்மன் மொழியைப் பேசுகிறீர்கள். நீங்கள் ஒரு யூதன் என்பதற்காக மக்கள் கவலை கொள்வதில்லை. சொல்லப் போனால் உங்களது பாரம்பரியத்திற்காக அவர்கள் உங்களை மதிக்கிறார்கள். பழைய சிந்திக்கும் முறையானது இப்போது இல்லை. அதன் குறைந்தபட்ச தடயம் கூட இருப்பது போல் இப்போது தெரியவில்லை". ஒரு கணம் மண்ணைத் தட்டுவதை நிறுத்திவிட்டு, தன்னுடைய கைகளை முழங்கால்களைச் சுற்றிப் பிடித்தவாறு அமர்ந்து ஃபிரிட்ஸ், லெவ்விடம் மென்மையாகப் பேசினார்.

"ஒருவேளை தவறான எண்ணங்கள் இப்போது மறைந்து இருக்கலாம், பின்னாளில் நாம் அதனைக் காண வேண்டியிருக்கும். என்னுடைய பெரிய-கொள்ளுதாத்தா அவருடைய தலைமுறையினருடன் உயிர்த்தெழுந்து வரும் போது நிச்சயமாக ஒரு கொந்தளிப்பு இருக்கும் என்று நினைக்கிறேன்" என்று கூறினார்.

## ஃபிரெட் க்ரூப்பர் திரும்புதல்

ஃபிரெட் க்ரூப்பர் உயிர்த்தெழும் நாள் வந்துவிட்டிருந்தது. லெவ் கோபமாய் இருந்த ஃபிரெட் க்ரூப்பரை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

"என்னை முட்டாள் ஆக்காதீர்கள், மிஸ்டர், நான் மிகவும் குழம்பி இருக்கிறேன் என்றுதான் சொல்ல வேண்டும். என்னுடைய கடைசி நினைவுகள்.... நினைவுகள் நிச்சயமாக போர்க்களத்தைப் பற்றினதே ஆகும். அது என்னுடைய நினைவில் தெளிவாக இருக்கிறது. மற்ற எதுவும் எனக்கு நியாபகம் இல்லை. உங்கள் வீட்டில் நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால்

என்னை உங்கள் வீட்டில் அனுமதித்ததற்கு நன்றி. என்னுடைய மேலதிகாரியுடன் தொடர்பு கொண்டவுடன், நான் இங்கு இருந்து சென்று விடுகிறேன்" என்றார்.

தனக்கு முன்பாக இருந்த இளைஞனிடம், அவரால் நம்ப முடியாத உண்மைகளை மீண்டும் கூறுவதற்கு லெவ் முயன்றான். "மேல் அதிகாரி என்று யாரும் இங்கு இல்லை ஃபிரெட். நீங்கள் இனி ஒருபோதும் இராணுவத்தில் இருக்கப் போவதில்லை. இப்போது இந்த முழு உலகத்திலும் இராணுவம் என்பது இல்லை" என்று லெவ் கூறினான்.

"இராணுவம்தான் எனது வாழ்க்கை" என்று கூறியவாறு வரவேற்பறையில் நடந்து கொண்டிருந்த ஃபிரெட் க்ரூப்பரைப் பார்த்தபோது, அவர் பதட்டத்துடன் இருப்பதை லெவ்வால் புரிந்து கொள்ள முடிந்தது. "நீங்கள் என்ன அமைதி விரும்பியா? நான் எங்கே இருக்கிறேன்? நான் உங்கள் தொலைபேசியை உபயோகிக்கலாம் என்றால் உபயோகிக்க என்னை அனுமதியுங்கள், சார். நான் எனது தலைமையகத்திற்கு அழைக்க வேண்டும். நான் மட்டும் தனியாகப் பிரிந்து வந்துவிட்டேன என்று அவர்கள் நினைப்பார்கள்" என்றான்.

"தொலைபேசி அங்கே இருக்கிறது, நீங்கள் விரும்பும் எந்த எண்ணிற்கும் நீங்கள் அழைக்கலாம்" என்று லெவ் கூறினான்.

தொலைபேசியை நோக்கி தடுமாறியவாறு நடந்த அவர், தனக்குப் பழக்கமான எண்களை அழைத்தார். அவர் அழைத்த எண்கள் அனைத்திற்கும், இந்த எண் தற்போது சேவையில் இல்லை என்றே பதிலே மறுமுனையில் இருந்து வந்தது. அவர் ஆப்பரேட்டருக்கு டயல் செய்து, ஜெர்மானிய இராணுவத்தின் தலைமையகத்தின் எண்ணைத் தரும்படி கேட்டுக் கொண்டார். அவர்கள் கூறிய பதிலில்

அவனது முகம் சிவந்தது. லெவ்விடம் தோற்றுவிடாதவாறு, ஃபிரெட் மீண்டும், மீண்டும் பலமுறை டயல் செய்தார். பின்பு தொலைபேசியை கோபத்தில் வைத்துவிட்டு, தனக்கு முன்பாக நின்று கொண்டிருந்த அந்நியனைப் பார்த்தார்.

"ஏன் என்னிடம் இப்படி விளையாடுகிறாய்? நீ என்னிடம் கூறியதை விட அதிகமான விஷயங்கள் உனக்குத் தெரியும், அந்தத் தகவல்களை நீ எனக்குத் தராவிட்டால், நான் உன் வாயில் குத்திவிடுவேன்" என்றார்.

ஃபிரெட், தன் முஷ்டியை இறுக்குவதை லெவ் கவனித்தான்.

"நான் ஒரு ஜெர்மானியன், நாட்டுப்பற்று மிக்க போர்வீரன். நான் இப்போது நடத்தப்படுவதை விட சிறப்பாக நடத்தப்படுவதற்கு தகுதியானவன். நீ கூறியதில் எந்த அர்த்தமும் இல்லை. உன்னுடைய விளையாட்டை நிறுத்திவிட்டு, உன்னால் என்னோடு இணங்க முடியாதா?" என்று ஃபிரெட் கேட்டார்.

"ஃபிரெட், நானும் உயிர்த்தெழுந்தபோது முதலில் எனக்கும் எதுவும் புரியவில்லை, குழப்பமாக இருந்தது எனக்கு நினைவில் இருக்கிறது. என்னுடைய மரணம் எனக்கு நினைவில் இருந்தது. எனது மரணத்திற்குப் பிறகு எனக்கு நினைவில் இருந்த அடுத்த விஷயம் நான் ஜீவனோடும், ஆரோக்கியமாகவும் இருந்ததுதான். நான் உயிர்த்தெழுந்தது போலவே, நீங்களும் கிறிஸ்துவின் வல்லமையால் உயிர்த்தெழுப்பப்பட்டிருக்கிறீர்கள்" என்று லெவ் கூறினான்.

ஃபிரெட் தன்னுடைய தலையை வேகமாக அசைத்தவாறு தரையையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"உங்களுடைய மூக்கு கண்ணாடி எங்கே ஃபிரெட்? உங்களுடைய கண் பார்வை எவ்வளவு கூர்மையாக மாறி உள்ளது

என்பதைக் கவனித்தீர்களா? உங்களுடைய உடம்பில் உள்ள பச்சை குத்துதல்கள் எங்கே? நான் உங்களுடைய பற்களின் மருத்துவ அறிக்கையைப் படித்தேன். அதில் நீங்கள் கடவாய்ப்பல்லை இழந்திருந்தீர்கள் என்பதைக் கண்டேன். நீங்கள் இப்போது கண்ணாடியில் அதைக் கவனித்தீர்களா?'' என்று லெவ் கேட்டான்.

ஃபிரெட் திடீரென்று லெவ்வை நோக்கி வருவதை நிறுத்திவிட்டு, லெவ்விற்கு முதுகைக் காட்டியவாறு திரும்பி நின்றான். பின்பு தன்னுடைய சட்டையின் கையை மேல் நோக்கி சுருட்டி விட்டு, தன்னுடைய மேல் கையை சரிபார்த்தான். பின்பு அறையைச் சுற்றிலும் பார்த்துவிட்டு, கண்ணாடியை நோக்கி நடந்து தன்னுடைய வாயை திறந்து பார்த்தான்.

''நம்பவே முடியவில்லை'' என்று முணுமுணுத்தான். கண்களில் திகைப்போடு லெவ்வின் பக்கமாகத் திரும்பினான்.

''வாருங்கள் ஃபிரெட் என்னோடு மேசையில் வந்து அமருங்கள்'' என்று லெவ் கூறினான். ஒரு வார்த்தையும் பேசாமல் ஃபிரெட், லெவ் கூறியதற்குக் கட்டுப்பட்டான்.

லெவ் உயிர்த்தெழுதலின் தேநீரை ஊற்றினான். சில ஏதேனின் பழங்களைச் சுவைக்கும் படி கொடுத்தான். ஃபிரெட்டின் சிறிது நேர மௌனத்தை லெவ் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டான்.

''ஃபிரெட் நடந்தவற்றை நான் முன்பே கூறினேன். ஆனால் அதை உங்களால் ஏற்றுக்கொள்ள முடியாததால், முற்றிலும் நிராகரித்தீர்கள். உங்கள் கண்கள், பற்கள் போன்றவற்றின் முழுமையான ஆரோக்கியத்திற்கு வேறு என்ன சரியான காரணம் இருக்க முடியும்'' என்று லெவ் கேட்டான்.

"நான் - பச்சை குத்தியுள்ளது எனக்குப் பிடிக்கும் - ஆனால் இப்போது அவைகள் அழிந்துவிட்டன" என்ற அவரது குரலில் ஏமாற்றத்தின் உணர்வு தெரிந்தது.

லெவ் சிரித்தவாறு "அநேக மாற்றங்கள் இருக்கின்றன, இவைகள் அதிர்ச்சியாகத்தான் இருக்கும். எனக்கும் மாற்றங்கள் இருந்தன. நான் மரித்தபோது, எனது மகன் சிறுவனாக இருந்தான். அவன் என்னை மீண்டும் ஜீவனுடன் பார்த்தபோது வளர்ந்த மனிதனாக அப்பா என்று அழைத்தான். என்னால் முகத்தோற்ற ஒற்றுமையைக் காண முடிந்தது. அவன் என் மகன்தான் என்று எனக்குத் தெரியும். ஆனால் இரண்டு காலங்களுக்கு இடையில், எந்த ஒரு இணைப்பும் இல்லாமல் நான் என்னைக் கண்டது, எனக்கு வெறுப்பாக இருந்தது" என்று கூறினான்.

ஃபிரெட் தனக்குக் கொடுக்கப்பட்ட உயிர்த்தெழுதலின் தேநீரை அருந்தினார். பின்பு ஏதேன் பழத்தையும், ஏதேன் ரொட்டிகளையும் சுவைத்தார்.

"நல்ல உணவு" என்றார். அவரது வாய் முழுவதும் உணவு இருந்ததால், அவரது வார்த்தைகள் குளறியபடி ஒலித்தன.

"அதிசயத்தைத் தவிர வேறொன்றினாலும் நீங்கள் இங்கு இல்லை" என்று லெவ் கூறினான்.

ஃபிரெட் தன் வாயில் இருந்தவற்றை விழுங்கியவாறு, தன் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தபோது அவர் சற்று அமைதியாகவும், நிம்மதியாகவும் இருப்பது போல் உணர்ந்தார்.

"நீங்களும், அந்த நாளில் போர்க்களத்தில் இருந்ததாக கூறினீர்கள். நான் என்னால் முடிந்தவரை எதிரிகள் என்னை மேற்கொள்வதை எதிர்ப்பதற்கு முயன்றேன். எப்படியோ அவர்கள்

என்னைப் பிடித்து விட்டார்கள் என்று நினைக்கிறேன். அவர்கள் என்னை மேற்கொண்டது நடந்திருக்கக் கூடாது. யூதர்கள் தொடர்ந்து போரிட்டனர். நாங்கள் எவ்வளவுதான் ஈயம் காய்ந்த வெடிப்பொருள்களை ஊற்றித் தாக்கினாலும் அவர்கள் தப்பினர். எங்கள் மீதான எதிரிகளின் எதிர்ப்பினை அடக்குவதற்கு, நாங்கள் விமானப்படையை அழைத்தோம். விமானங்கள் வருவதற்கு முன்பாகவே அந்த இழிவான யூதர்கள் நாங்கள் இருந்த இடத்தை அடைந்து எங்களைத் தாக்கினர். எனக்கு நினைவில் இருப்பதெல்லாம் மிக சூடான ஈயக்குண்டானது என் தலையின் மேல் பறந்து வந்ததுதான். நான் மரணத்தை தழுவும் அளவிற்கு காயமடைந்தது எனக்குத் தெரியும். இந்நிகழ்வு எப்படியாவது நடக்காமல் இருந்திருக்கலாம் என்றும், நான் மரிக்காமல் உயிரோடு இருந்து அந்த யூதர்களைக் கொன்று குவித்திருக்கலாம் என்றும் விரும்புகிறேன்" என்றார்.

ஃபிரெட் தன்னுடைய கழுத்து மற்றும் மார்பு பகுதியினைத் தடவிப் பார்த்தார். எந்த ஒரு காயமும் இல்லாமல் இருப்பதையும், காயத்திற்கான எந்த ஒரு தடயமும் இல்லாமல் இருப்பதையும் கண்டார். தன் தலையை அசைத்தவாறு கண்களைச் சுருக்கிக் குழப்பத்தோடு பார்த்தார்.

"குறைந்தபட்சம் நான் இப்போது அந்த அருவருப்பான இஸ்ரயேல் நாட்டிலாவது இல்லை. நான் அந்த இடத்தை வெறுக்கிறேன். நான் எனது தாய் நாட்டிற்கு மீண்டும் திரும்பி இருப்பதே நல்லது என்று நினைக்கிறேன். அந்த முட்டாள்களான யூதர்கள் சரணடைய எவ்வளவு நாட்கள் எடுத்தது? என்று வினவினார்".

லெவ் பதிலளிக்க சற்று தயங்கினான்.

"நீங்கள் இதைக் கேட்பதற்கு விரும்ப மாட்டீர்கள் ஃபிரெட். அன்றைய நாளில் இஸ்ரயேலை எதிர்த்துப் போரிட்ட படைகள் முதல்

நாள் மட்டுமே வெற்றியைத் தழுவினர். அடுத்த நாள் காலையில் விசித்திரமான நிகழ்வுகள் நடந்தன” என்று லெவ் கூறினான்.

வெப்பம் காற்றினை நிரப்பியத்தையும், தகவல் தொடர்பு சாதனங்கள் பழுதடைந்ததையும், அதன் விளைவாக இஸ்ரயேலின் எதிரிப் படைகள் அழிவுக்குள்ளாகியதையும் விவரித்தான்.

ஃபிரெட்டின் கண்கள் பயத்தினால் அகல விரிந்தன.

“அந்த நாளில் நான் மரித்திருக்காவிட்டால், மறுநாளில் நான் மரித்திருப்பேன் என்றுதானே நீங்கள் சொல்ல வருகிறீர்கள்” என்று கேட்டான்.

“நான் உங்களுக்காக வருந்துகிறேன், ஃபிரெட். நீங்கள் அறிந்த உலகமானது மாறிவிட்டது. அப்போதிலிருந்து நிறைய வருடங்கள் சென்று விட்டன. இப்போது போர் ஆயுதங்களோ, இராணுவமோ இல்லை. உலக தேசங்களின் வரலாற்றிலேயே முதல்முறையாக எங்கும் அமைதி நிலவுகின்றது. நீங்கள் இருக்கும் வீடு உங்களுடையது என்று லெவ் வேண்டுமென்றே விஷயத்தை திசை திருப்பினான். இது உங்களுக்குச் சொந்தமானது ஃபிரெட்” என்றான்.

ஃபிரெட், லெவ்வை கண்சிமிட்டாமல் பார்த்தான். அவரது சோகமான முக பாவமானது நிச்சயமற்ற புன்னகைக்கு மாறி இருந்தது.

“லெவ், நீங்கள் என்னை ஏமாற்றவில்லையே? இந்த அழகான வீடும், இந்த நிலமும் எனக்கு சொந்தமானது என்று கூறுகிறீர்களா? யார் என் மீது இவ்வளவு அன்பு காட்டுவது? நான் இதுவரையிலும் எதையும் சொந்தமாக வைத்துக் கொண்டதுமில்லை. நான் இதுவரை வாழ்ந்த எந்த வீட்டையும், என் சொந்த வீடாக உணர்ந்ததும் இல்லை. நான் அநாதையாக வளர்ந்தேன். எனக்கு இவைகளைக் கொடுக்க வேண்டும் என்று யாரோ ஒருவர் ஏன் நினைக்க வேண்டும்?” என்று கேட்டார்.

"கிறிஸ்து உங்கள் மீது அக்கறை கொண்டு, உங்களுக்காக மரித்தார். மேலும் உங்களைப் புதிய வாழ்க்கைக்காக உயிர்த்தெழுப்பி இருக்கிறார். மீண்டும் உங்கள் வாழ்வைத் தொடங்குவதற்கான ஒரு வாய்ப்பினை உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்" என்று லெவ் கூறினான். ஃபிரெட்டின் கண்களில் கண்ணீர் திரண்டு நிற்பதை லெவ் கண்டான். கடுமையான உண்மையைத் தொடர்ந்து பேசுவதற்கான அடையாளமாக அதனை லெவ் கருதினான்.

"ஃபிரெட், உங்களிடம் இதை எப்படிச் சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் நான் கண்டிப்பாக இதைச் சொல்லத்தான் வேண்டும். மெகிதோ சமவெளியில், பின்னாலிருந்து உங்களைக் கொன்ற அந்த இழிவான யூதன் நான்தான். ஹெலிகாப்டர்கள் வானிலிருந்து குண்டுகளை வீசத் தொடங்கிய சிறிது நேரத்திலேயே நானும் மரித்தேன். குண்டின் அடர்த்தியான வெப்பம், எனது இடது கையை சிதைத்தது, எனது மார்புப் பகுதியில் காயம்பட்டதும், அது எனக்கான முடிவு என்பதை அறிந்தேன். நானும் உங்களைப் போலவே மரிப்பதற்கு விரும்பவில்லை. உங்களுடைய உயிர்த்தெழுதலில் உங்களோடு இங்கிருக்கும் கனம் பொருந்திய வாய்ப்பிற்காக நான் கேட்டுக் கொண்டேன்" என்றான்.

ஃபிரெட் மேசையில் இருந்தும், லெவ்விடம் இருந்தும் சில அடிகள் பின்னோக்கி நகர்ந்து நின்றவாரு தரையையேப் பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் லெவ் தான், பேசுவதைத் தொடர்ந்தான்.

"நான், வேறு மூவருடன் இணைந்து உங்களுக்கான வீட்டைக் கட்டுவதற்குத் தன்னார்வத் தொண்டு செய்தேன். இந்த வீடு உங்களுக்குச் சவுகரியமானதாகவும், உங்கள் சொந்த வீட்டைப் போல உணரச் செய்வதற்காகவும், இந்த வீட்டைக் கட்டுவதற்காக நாங்கள் கடினமாக வேலை செய்தோம்" என்றான்.

"அப்படியென்றால் நீங்கள் ஒரு யூதன், அப்படித்தானே லெவ்?" என்று ஃபிரெட் கேட்டார்.

ஃபிரெட் மீண்டும் குழப்பத்திற்குள்ளானார். தன்னுடைய கோப்பையையும், தட்டையும் திரும்பத் திரும்ப மாற்றி வைத்தார். அதனால் அவர் பதற்றத்துடனும், அமைதியின்மையுடனும் இருப்பதை லெவ் புரிந்து கொண்டான். ஃபிரெட், லெவ்வைப் பார்ப்பதைத் தவிர்த்தார்.

"என்னால் இதை நம்ப முடியவில்லை, உலகில் எத்தனையோ ஜெர்மனியர்கள் இருக்க, ஏன்- என்னோடு இப்போது இங்கே ஒரு யூதன் இருக்க வேண்டும்?" என்று கேட்டார்.

"ஏனென்றால் நான் உங்களைக் கொன்றவன் என்பதால் கூட இருக்கலாம். நான் அதனைச் சரி செய்ய விரும்பினேன். கிறிஸ்து, என்னுடைய ஜனங்களை ஆசீர்வதித்திருக்கிறார். அந்த ஆசீர்வாதங்களை, உங்களோடும், அனைத்து ஜெர்மானியர்களுடனும், அனைத்து தேசத்தின் உலக ஜனங்களோடும் பகிர்ந்து கொள்வதற்காகவும் இருக்கலாம்" என்று லெவ் கூறினான்.

## அநாதையாக்கப்பட்டவன்

இரண்டாவது முறையாக லெவ் ஊற்றிய உயிர்த்தெழுதலின் தேநீரை ஃபிரெட் குடித்தார்.

"விஷயங்களைச் சரியாகச் செய்ய விரும்பும் மற்றவர்களும் உள்ளனர் அல்லவா, ஃபிரெட். உங்கள் அம்மா, அவர் உங்களைப் பார்க்க விரும்புகிறார். லெவ் தயங்கியவாறே உங்கள் அப்பாவும் இருக்கிறார்'" என்று கூறினான்.

"நான் உங்களுடனே இருக்க விரும்புகிறேன்" என்ற ஃபிரெட்டின் வார்த்தைகள், தொண்டையை அடைத்தது போல

கரகரப்பாக ஒலித்தன. அவர் தன் கண்களை இறுக மூடிக்கொண்டு அழ ஆரம்பித்தார். "நான் அவர்களை வெறுக்கிறேன். என்னை விட்டுச் சென்றதற்காக நான் அவர்களை வெறுக்கிறேன் - மேலும் நான் உங்களையும் வெறுக்கிறேன் - உங்கள் ஜனங்களையும் வெறுக்கிறேன் - நீங்கள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக நீங்கள் கொடுத்த தொல்லைகள் மற்றும் அவமானங்களுக்காக நான் உங்களையும், உங்கள் ஜனங்களையும் வெறுக்கிறேன் என்றார். உங்கள் ஜனங்கள் மரிக்கக்கூடாது என்பதற்காக நீங்கள் பொறுமையாக, விடாமுயற்சியுடன் செயல்பட்டீர்கள் - அதனால் நீங்கள் வெற்றி பெற்றீர்கள். ஆனால் எனது சொந்த பெற்றோர்கள் - அவர்கள் என்னைக் கைவிட்டுவிட்டார்கள் - நான் குழந்தையாக இருக்கும்போதே என்னை விட்டுச் சென்றனர் - நான் அவர்களை வெறுக்கிறேன் - நான் வெறுக்கிறேன்..." என்ற அவரது குரல் அடுத்தடுத்த உணர்ச்சிகளின் போராட்டத்தைச் சமாளிக்க முடியாததால் தடுமாறியது.

ஃபிரெட் அழுததால் அவரது உடல் முழுவதும் குலுங்கியது, அவர் மேசையின் மீது சாய்ந்து அமர்ந்தார். லெவ் அவருக்கு அருகில் அமர்ந்தான். இவர் சுமந்து கொண்டிருக்கும் பளுவின் பாரத்தை லெவ்வால் உணரமுடிந்தது. இந்த உணர்வு அவனது தனிப்பட்டக் கவலையின் பாரத்தைத் திடீரென எடுத்துப் போட்டது.

## ஃபிரெட்டின் கற்றல் துவங்கியது

அந்த நாளின் பிற்பகுதியில், லெவ், ஃபிரெட்டை அவருடைய வீட்டையும், சுற்றுப்புறத்தையும் பார்வையிடுவதற்குக் கூட்டிச் சென்றான். ஃபிரெட், லெவ்வை ஒரு சிறுவன் போல் பின் தொடர்ந்தார். அமைதியாகவும், ஏதோ சிந்தனைவயப்பட்டவராகவும் இருந்தார். அவர்கள், அவருடைய புதிய வெப்ப வீட்டை சுற்றிப் பார்த்தபோதும், லெவ் கூறிய அனைத்து விளக்கங்களையும்

கேட்டபோதும் தீவிர ஆர்வம் உள்ளவராகக் காணப்பட்டார். முற்பிதாக்களின் அறிவுறுத்தலின்படி தனது கணினியின் வழியாகத் தனக்குக் கிடைத்த கல்வியறிவு குறித்து லெவ், ஃபிரெட்டிடம் விளக்கினான்.

ஃபிரெட்டின் விட்டின் சுற்றுப்புறத்தில் புதிதாக கட்டப்பட்டிருந்த குடில்களைச் சுற்றி நடந்துவாறு, லெவ் புதிய பூமியின் மாற்றங்கள் குறித்து ஃபிரெட்டிடம் விளக்கினான். அவருடைய வட்டாரத்தில் வழிபாட்டுச் சேவை நடைபெறும் இடத்தையும் காட்டினான். அவருடைய முதல் வழிபாட்டுச் சேவைக்கு, அவருடன் தானும் வருவதாக லெவ் முன்வந்து கூறினான்.

வீட்டிற்குத் திரும்பியதும், கடைசிப் படையெடுப்பின் வீடியோ காட்சிகளையும், திடீரென்று போரில் நிகழ்ந்த மாற்றமானது இஸ்ரயேலின் சார்பாக இருந்த தெய்வீகத் தலையீட்டினை உறுதி செய்யும் விதமாக இருந்ததையும் கண்டு ஃபிரெட் அதிர்ச்சி அடைந்தார். அவருடைய நாட்டின் இராணுவம் தோல்வி அடைவதைக் கண்டார். வானில் இருந்து விமானங்கள் விழுவதையும், போர்க்கப்பல்கள், ஜீவனற்ற கப்பல் பணியாளர்களுடன், கடலில் மிதந்து கொண்டிருப்பதையும் கண்டார். நிலப்படை, கடற்படை, விமானப்படை போன்ற மூன்று படையெடுப்பின் படைகளையும் தேவன் கைப்பற்றி இருப்பதைக் கண்டார். தேவனுடைய கோபத்திலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு ஒருவரும் இல்லை. முதலில் இஸ்ரயேலுக்கு எதிராகக் கூடிய படைகள் அழிக்கப்பட்டன. எதிரிப் படையின் கடுமையான தோல்விச் செய்தி விரைவாகப் பரவ ஆரம்பித்த பிறகு, கிளர்ச்சியை உண்டுப் பண்ணக் கூடிய சக்திகள், அனைத்து தேசங்கள் மீதும் கட்டவிழ்த்து விடப்பட்டன. மக்கள் கும்பலாக கலவரத்தில் ஈடுபட்டதுமல்லாமல், தங்கள் சொந்த அரசாங்கத்தினையே தாக்கினர்.

தேவாலயங்கள் ஜனக்கூட்டத்தாரின் கோபக்கினையை எதிர்கொண்டன மற்றும் அராஜகம் எங்கும் பரவியிருந்தது. ஆக்ரோஷமான ஜனங்களைச் சமாதானம் செய்ய முடியாததால், சட்டம் ஒழுங்கு சீர்குலைந்தது. இவைகளை ஃபிரெட் காட்சிகளாகப் பார்த்தார்.

"நீங்கள் என்னிடம் உண்மையைத்தான் கூறி இருக்கிறீர்கள், லெவ். அன்பையும், கருணையையும் என்னிடம் காட்டிய ஒரே நபர் நீங்கள்தான். ஆனால் நீங்கள் ஒரு யூதர்" என்று ஃபிரெட் கிசுகிசுத்தார்.

ஃபிரெட் தன் நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தவாறு கண்களை மூடினார்.

"நான் ஒரு யூதனால் பராமரிக்கப்படுகிறேன்" என்றார்.

"இரவு வணக்கம் ஃபிரெட், நான் உங்களை காலையில் சந்திக்கிறேன்" என்று ஃபிரெட்டின் தோள்களின் மீது லெவ் தனது கையை வைத்தவாறு கூறினான். ஃபிரெட்டிடம் விடைபெற்று லெவ் கதவை நோக்கி நடந்தான்.

லேசான மனதுடன் லெவ் வீட்டை விட்டு வெளியேறினான். ஃபிரெட்டிற்கு முன்பாக நிறைய தடைகள் உள்ளன. விரக்தியினால் அவரைக் கைவிட்ட தாயை, அவர் எதிர்கொள்ள வேண்டும். அவரைப் பற்றிய எந்தவித அக்கறையும் இல்லாத, சொல்ல முடியாத அளவிற்கு சுயநலமாக இருந்த தந்தையை அவர் எதிர்கொள்ள வேண்டும். அவர் தன் பழைய நண்பர்களை எதிர்கொள்ள வேண்டும். இவற்றிற்கான முடிவு லெவ்வின் கைகளில் இல்லை. இவை அனைத்தும் ஃபிரெட், தனது மனநிலையை மாற்றி அமைத்துக் கொள்ளும் நிலையினையேச் சார்ந்து இருக்கிறது என்று லெவ் எண்ணினான்.

**"உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்து குடிகள் நீதியை கற்றுக் கொள்வார்கள்" (ஏசாயா 26:9)**

# அத்தியாயம் - 23

காலையில் வழிபாட்டுச் சேவையின் போது, ஃபிரெட் உற்சாகத்துடன் ஆராதனையை கவனிப்பதை லெவ் கண்டான். "உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனம் திரும்பி குணப்படுங்கள்" (அப்போஸ்தலர் 3:20) என்ற வசனப் பகுதியை, அன்றைய பாடத்தை நடத்தியவர் கூறினார். அந்த வசனப் பகுதி ஃபிரெட்டைக் கவர்ந்தது.

வழிபாட்டினை நடத்துபவரின் கருத்துக்கள் ஃபிரெட்டை முணுமுணுக்கத் தூண்டின. "நான் மாறுவதற்கு விருப்பம் இல்லாமல் இருப்பது மட்டுமே, எனக்கான ஆசீர்வாதத்தினைத் தடுக்கும் என்று முணுமுணுத்தார்". லெவ் தலையசைத்தான். "இந்த மனிதன் யார்? இவர் சிறப்பாக பேசுகிறார், இவரால் ஒரு மனிதனைச் சிந்திக்க வைக்க முடிகிறது, அவர் பேசுவது என்ன என்பதை அறிந்தேதான் அவர் பேசுகிறார்" என்று ஃபிரெட் தொடர்ந்து கூறினார்.

"அவர் இஸ்ரயேலின் மீதான படையெடுப்பைக் கடுமையாக எதிர்த்த, ஒரு சிறிய வேதாகம ஆய்வுக் குழுவைச் சேர்ந்தவர். இஸ்ரயேலின் மீதும், தேவ வார்த்தைகளின் மீதும், அந்தச் சிறிய குழுவினர் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். அதன் நிமித்தமாக அவர்கள் அதிக பாதிப்பிற்கும் உள்ளாகி இருந்தனர்".

வழிபாட்டு ஆராதனைக்குப் பிறகு, கூட்டத்திலிருந்த இரண்டு இளைஞர்கள் ஃபிரெட்டைச் சந்திக்க வருவதை லெவ் கண்டான். அவர்களைக் கண்டதும் உடனடியாக அவர்களை ஃபிரெட் வரவேற்றவாறு தனது பேச்சினைத் தொடர்ந்தார்.

"ஜான், லுட்விக் நீங்கள் இருவரும் அருமையாக இருக்கிறீர்கள். இதுவும் இந்தப் புதிய பூமியின் அதிசயமா? நான் இன்னும் எனது பாரங்களில் இருந்து விடுபட முயன்று கொண்டிருக்கிறேன்" என்று கூறினார்.

"நாம் எப்போது சந்திக்கலாம்? நாம் செய்வதற்கு நிறைய விஷயங்கள் இருக்கின்றன" என்று அவர்களில் ஒருவன் கூறினான்.

ஃபிரெட், லெவ்வைப் திரும்பிப் பார்த்துவிட்டு, பின்பு தனது பழைய நண்பர்களைப் பார்த்தார்.

"நான் முயற்சி செய்கிறேன், இவர் என்னுடைய நண்பர் லெவ், இணையத்தின் வழியாகச் சில பாடங்களை, நான் கற்றுக்கொள்ளத் தொடங்குவதற்கு உதவுகிறார். அவர் இந்த வாரம் என்னை அறிவியல் நிறுவனத்தைப் பார்வையிட அழைத்துச் செல்லவிருக்கிறார்" என்றார்.

"நீ கற்றுக் கொள்வதற்கு ஆர்வம் காட்டுபவன் இல்லையே? எப்போதிலிருந்து புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்தாய்?" என்று லுட்விக் கிண்டலாகக் கேட்டான்.

"கல்வியானது, முற்பிதாக்களின் அதிகாரங்களுக்குக் கீழாக வந்ததிலிருந்து சுவாரசியமாக இருக்கிறது. நான் வெறுக்கும் வரலாறு கூட இப்போது சுவாரசியமாக உள்ளது. திரும்பவும் கற்றுக்கொள்வதற்கு எனக்கு நிறைய விஷயங்கள் இருக்கிறன. நிச்சயமாக அநேக காரியங்கள் நமக்கு தவறாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை இப்போது என்னால் உணர முடிகிறது" என்றார்.

ஜான் மற்றும் லுட்விக் இருவரும் அதிர்ச்சி அடைந்து, ஃபிரெட்டை கண் சிமிட்டாமல் உற்றுப் பார்த்தனர்.

இருவரும் ஃபிரெட்டிடம் கைகுலுக்கி விடைபெறும்போது, "இந்த யூதன், உன்னை முழுவதுமாக ஆட்கொள்ள விட்டுவிடாதே" என்று

லுட்விக் அவனது காதில் கிசுகிசுத்தான். அவர்கள் லெவ்வை ஒரு சில கணங்கள் முறைத்துப் பார்த்துவிட்டு, அந்த இடத்தை விட்டுச் சென்றனர்.

"அவர்கள் சற்று கரடு முரடானவர்கள்" என்று ஃபிரெட், லெவ்விடம் கூறினார். பின்பு இருவரும் ஃபிரெட்டின் வீட்டை நோக்கி நடந்தார்கள்.

லெவ் அவர்களைக் குறித்துப் பேசுவதை விட்டுவிட்டான். ஃபிரெட், தன்னுடைய தாயை விரைவில் சந்திப்பதற்கான சாத்தியக்கூறுகளைப் பற்றிய சிந்தனையில் இருப்பதை லெவ் அறிந்திருந்தான். மேலும் சிறிது காலத்திற்கு முன்பு உயிர்த்தெழுந்திருந்த தன்னுடைய நண்பர்களைப் பற்றியும், ஃபிரெட்டுடன் சிறிது நேரம் செலவழிக்க விரும்பிய அவர்களது வெளிப்படையான நோக்கத்தைப் பற்றியும், ஃபிரெட்டுக்கு உண்டாயிருந்த வருத்தத்தைப் பற்றியும் லெவ் அறிந்திருந்தான்.

## ஃபிரெட் அறிவியல் நிறுவனத்திற்கு வருகை தருதல்

காலை மற்றும் மதியத்திற்கு இடைப்பட்ட நேரத்தில், லெவ், ஃபிரெட்டை அறிவியல் நிறுவனத்திற்கு அழைத்துச் சென்றான். அவரது வீட்டைக் கட்டுவதற்கு ஒவ்வொரு நாளும் அவர்களுடைய நேரத்தை ஒதுக்கி உதவிய சிலரை சந்தித்ததில் ஃபிரெட் உற்சாகம் அடைந்தார்.

அறிவியல் நிறுவனத்தில், பாதுகாவலர் எவரும் இல்லை. அவர்கள் வாகன நிறுத்தும் இடத்தை நோக்கி காரைச் செலுத்திய போது லெவ், ஃபிரெட்டிடம் காவலர் இல்லாததை சுட்டிக்காட்டினான். லெவ், "தலைமை நிர்வாகியின்" வாகனம் நிறுத்தும் இடத்தில் தனது காரை நிறுத்துவதை ஃபிரெட் கவனித்தார்.

"லெவ், தலைமை நிர்வாகி மதிய உணவை முடித்துவிட்டு வந்த பிற்பாடு, அவருடைய வாகனத்தை நிறுத்த அந்த இடம் அவருக்குத் தேவைப்படும் என்று நீங்கள் நினைக்கவில்லையா? பொதுவாகவே, அவர்கள் தங்களுடைய இடத்தை மற்றவர்கள் எடுத்துக் கொள்வதை ஏற்றுக் கொள்ள மாட்டார்களே?" என்று ஃபிரெட் கேட்டார்.

"உண்மையில் நான் அவரது காரையே இரவலாக வாங்கி வந்து இருக்கிறேன், அதனால் அவர் கவலைப்பட மாட்டார். இந்தக் கார் தேவைப்படும் நேரத்தில் அது இந்த இடத்தில் அவருக்காக நிற்கும், அவர் தாராளமான குணம் படைத்த மனிதர்" என்றான்.

"சரி, நீங்கள் எந்த ஒரு பிரச்சனையிலும் மாட்டிக் கொள்வதை நான் விரும்பவில்லை. இராணுவத்தில் இருக்கும்போது நாம் இதைப் போன்ற காரியம் எதையாவது செய்திருந்தால் சிறையில் தான் இருந்திருப்போம்" என்றார்.

லெவ் புன்னகைத்தவாறு, "என் மீது அக்கறை கொண்டதற்கு நன்றி ஃபிரெட் என்றான். பின்பு எந்த ஒரு சிறைச்சாலையும் இனி இங்கே இல்லை. ஜனங்கள் தாங்களாகவே தவறிழைக்காமல் நடந்து கொள்கிறார்கள், ஏனென்றால் அதுதான் ஒரே வழி. இதுவரை நீங்கள் அறிந்திடாத ஆவிக்குரிய படைகள் நம்மிடம் உள்ளன. நீங்கள் ஏதாவது தவறு செய்ய முயற்சித்தால், அந்த நேரத்திலேயே நீங்கள் தண்டிக்கப்படுவீர்கள். என்னுடைய கை செயலிழந்ததைப் போல" என்று லெவ் கூறினான்.

லெவ், ஃபிரெட்டிற்கு ஹெர்மன், ஹான்ஸ் மற்றும் ஃபிரிட்ஸ்ஸை அறிமுகப்படுத்தினான். லெவ்வைப் பார்ப்பதற்காக வரிசையில் நின்று கொண்டிருந்த தொழில்நுட்ப வல்லுநர்களின் கேள்விகளுக்கு பதில் அளித்தவாறு, லெவ், ஃபிரெட்டை அறிவியல் நிறுவனத்தைச் சுற்றிப் பார்க்க அழைத்துச் செல்லும்படி ஃபிரிட்ஸ்ஸிடம் கூறினான்.

ஃபிரெட்டைச் சந்திப்பதற்கு மற்றவர்களை விட அதிக ஆர்வம் கொண்டவராக ஃபிரிட்ஸ் ராமெல் இருந்தார், அவர் ஃபிரெட்டின் கைகளைக் குலுக்கினார். அவரது பிடி வலிமை உள்ளதாக இருந்தது.

"ஃபிரெட் க்ரூப்பர்!, உங்களுடைய உயிர்த்தெழுதல், எனக்குள் எவ்வளவு மாற்றங்களைக் கொண்டு வந்தது என்று உங்களுக்குத் தெரியாது. இந்த முழு உயிர்த்தெழுதலின் செயல் முறையையும் நினைத்து எனக்கு பயமாக இருந்தது. மேலும் இச்செயல்முறையைத் தாமதப்படுத்தலாம் என்ற நம்பிக்கையில், நான் லெவ்வின் கணினியைக் கூட அழிக்க முயற்சி செய்தேன்" என்று முதன்மை உற்பத்திப் பகுதிக்கு வழிநடத்திய நீண்ட நடைபாதையில் நடந்து சென்றபோது ஃபிரிட்ஸ் ராமெல் கூறினார்.

"எனது குடும்பத்தின் முந்தைய தலைமுறையினர்கள் உயிர்த்தெழுந்து வருவது என்பது எவ்வாறு இருக்கும் என்பதை நினைத்தாலே எனக்குப் பயமாக இருந்தது. ஹிட்லரின் இறுதி முடிவில், எனது குடும்பத்தினரும் தங்களது பங்கை ஆற்றியுள்ளார்கள். அவர்கள் உயிர்த்தெழுந்து வரும்போது, அவர்களுக்கு ஏற்படப் போகும் அவமானத்தையும், அதனால் எனக்கு உண்டாகப்போகும் அவமானத்தையும், என்னால் தாங்க முடியாது என்று நினைத்தேன். ஆனால் லெவ் எனக்கு உதவினார். இப்போது என்னுடைய சிந்தனையில் சில மாற்றங்களை செய்து கொண்டு வருகிறேன். பின்பு இறுதிப் போரில் லெவ்வால் கொல்லப்பட்ட உங்களைப் பற்றி தெரிந்து கொண்டேன். உங்களது வீட்டைக் கட்ட உதவுவதற்கு, லெவ்வுடன் இணைந்து நானும் தன்னார்வத் தொண்டு செய்ய முன்வந்தேன். மேலும் உங்களைப் பற்றி அதிகமாக கேள்விப்பட்டதாலும், உங்களுக்கு செய்த தவற்றை திருத்திக்கொள்ள லெவ் விரும்பியதாலும், உங்களது உயிர்த்தெழுதலைப் பார்ப்பதற்கு நான் அதிகமான ஆர்வத்துடன்

இருந்தேன். என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால் உங்களுடைய உயிர்த்தெழுதலை எதிர்பார்க்கத் தொடங்கிய அதே வேளையில், கொஞ்சம் கொஞ்சமாக என்னுடைய சொந்த உறவினர்களின் உயிர்த்தெழுதலைப் பற்றி எனக்கு இருந்த பயமானது குறையத் தொடங்கியது" என்று ஃபிரிட்ஸ் ராமெல் கூறினார்.

"உங்கள் உதவிக்கு நன்றி, ஃபிரிட்ஸ்!, நீங்களும், மற்றவர்களும் எனக்குச் செய்த எல்லாவற்றிற்காகவும் நான் கடமைப்பட்டுள்ளேன்".

மதிய நேரம் வேகமாகச் சென்றது. லெவ்வும், ஃபிரெட்டும் வீட்டிற்குத் திரும்பும் நேரம் வந்தது. அவர்கள் ஃபிரெட்டின் வீட்டை நோக்கி வண்டியைச் செலுத்தினர்.

"அறிவியல் நிறுவனத்தில், ஒரு வகையான உற்சாகத்தை என்னால் உணர முடிகிறது, லெவ் வரப்போகிற தலைமுறையினருக்குத் தேவையான ஏதேன் பழங்கள், வீடுகள் மற்றும் கணினிகளை உருவாக்குவதற்கான வேலைகளில் நானும் பங்காற்ற விரும்புகிறேன்!" என்றார்.

"நான் உங்களிடத்தில் கூறிய அனைத்துப் பாடங்களையும் நீங்கள் கற்றுக் கொண்டால், ஒரு வருடத்திற்குள்ளாக நீங்களும் இதைப் போன்ற ஓர் இடத்தில் பணிபுரியலாம்" என்று லெவ் கூறினான்.

"ம்ம்ம்....அந்த மனிதர் ஃபிரிட்ஸ், அவர் ஒரு சிறந்த மனிதர். சவால்களைச் சமாளிப்பதற்கான நேர்மறையான எண்ணங்களைக் கொண்டவராக இருக்கிறார்" என்று ஃபிரெட் கூறினார்.

லெவ், ஆமாம் என்பது போல் தலையசைத்தான். பின்பு ஒரு நிமிடம் அமைதி நிலவியது. ஃபிரெட் எதிர்கொள்ள வேண்டிய கடினமான விஷயத்தைக் குறித்துப் பேச வேண்டிய சரியான தருணம் இதுவே என்பதை லெவ் உணர்ந்தான்.

"உங்களுடைய தாயாரைச் சந்திக்கப் போவதில் உள்ள சவாலை எப்படி எதிர்கொள்ளப் போகின்றீர்கள்?" என்று ஃபிரெட்டிடம், லெவ் வினவினான்.

ஃபிரெட் திடீரென்று அமைதியானார். லெவ் காரை நிறுத்தும் இடத்திற்குச் செல்லும் வரை ஃப்ரெட் எதுவும் பேசவில்லை.

"நீங்கள் எனக்கு நிறைய உதவிகள் செய்திருக்கிறீர்கள், லெவ். எனக்கு உதவி செய்ய வேண்டிய எந்த அவசியமும் உங்களுக்கு இல்லை. ஆனாலும் நீங்கள் எல்லாவற்றிலும் எனக்கு உதவியுள்ளீர்கள். என்னுடைய ஒரு மனது என் தாயை சந்திக்க விரும்புகிறது, மற்றொன்றோ கோபமாக இருக்கிறது. நான் சந்திக்கிறேன், ஆனால் அதைப்பற்றி எந்த ஒரு வாக்குறுதியும் என்னால் கொடுக்கமுடியாது" என்று ஃபிரெட் கூறினான்.

லெவ் நிறுவனத்தின் காரை ஃபிரெட்டின் வீட்டில் நிறுத்தினான்.

"நீங்கள் அவரைச் சந்திப்பதையே நான் விரும்புகிறேன். நாளை காலை நேரத்திற்குப் பிறகு சந்திப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்கிறேன், நன்றி" என்றவாறு லெவ் விடை பெற்றான்.

ஃபிரெட் காரில் இருந்து இறங்கி, அதன் கதவை மூடிவிட்டு நடந்தார். அதனை தனது காரின் பக்கவாட்டுக் கண்ணாடியின் வழியே லெவ் பார்த்துக் கொண்டிருந்தான். யாரோ ஒருவர், தன்னைப் பின் தொடர்வது போல் லெவ் உணர்ந்தான். ஆனால் யாரையும் லெவ்வால் பார்க்க முடியவில்லை.

## ஜான் மற்றும் லுட்விக் தங்களுடைய தவற்றிற்கான விளைவினைப் பெறுதல்

காலை வழிபாடு முடிந்ததும், லெவ் தனது வீட்டை நோக்கி வேகமாக நடந்தான். ஜான் மற்றும் லுட்விக் ஃபிரெட்டுடன் பேச

விரும்பினர். லெவ் அதில் தலையிட விரும்பவில்லை. ஃபிரெட் தன்னுடைய சொந்த முடிவுகளை தானே எடுக்க வேண்டும், மேலும் அவர் எவ்வாறு நடந்து கொள்வார் என்பதைக் குறித்ததான ஆர்வம் லெவ்விற்கு இருந்தது. தன்னைப் பின்னால் இருந்து ஒருவர் அழைப்பது போல் லெவ் உணர்ந்தான்.

"லெவ் நில்லுங்கள்," ஃபிரெட்டின் குரல் லெவ்வை அழைத்தது. "ஜான் மற்றும் லுட்விக்கிடம், அவர்கள் வழி தவறி நடக்கிறார்கள் என்றும், அவர்கள் உங்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று, நான் அவர்களிடம் கூறிவிட்டேன். அவர்கள் இருவரும் உங்களை அவமதிக்கும் விதத்தில் உங்களைப் பற்றிப் பேசினார்கள். எனக்கு எந்த யூதரையும் தனிப்பட்ட முறையில் தெரியாதவரையில், எனக்கு யூதர்களை வெறுப்பது எளிதாக இருந்தது. ஆனால் இப்போது எனக்கு உங்களைப் பற்றித் தெரியும். என்னால் உங்களை வெறுக்க முடியாது. அவர்களுக்கும் உங்களைப் பற்றி தெரிந்திருந்தால், அவர்களாலும் உங்களை வெறுக்க முடியாது" என்று ஃபிரெட் கூறினான்.

"எனக்கு ஆதரவாகப் பேசியதற்கு நன்றி, ஃபிரெட்" என்று லெவ் கூறினான்.

லெவ்வும், ஃபிரெட்டும் வீட்டை அடைந்தபோது ஜானும், லுட்விக்கும் வீட்டின் வாசலில் சாய்ந்தவாறு நின்று கொண்டிருந்தனர்.

"ஒருவேளை அவர்கள் உங்களிடம் மன்னிப்பு கேட்க வந்திருக்கலாம்" என்று ஃபிரெட், லெவ்விடம் முணுமுணுதார்.

"ஏதேன் பழங்களையும், ரொட்டிகளையும் வாங்குவதற்கு என்னோடு வர விரும்புகிறாயா?" என்று ஃபிரெட்டிடம் கேட்டவாறே லெவ், ஜான் மற்றும் லுட்விக்கிற்கு முன்பாக வந்து நின்றான்.

"நீ ஏன் உனது வீட்டிற்குச் செல்லவில்லை, யூதனே? நீ இங்கு இருப்பதை நாங்கள் விரும்பவில்லை" என்று ஜான் கூறினான்.

"நீ கூறியது உனக்குத்தான் பொருந்தும், லெவ் என்னுடைய நண்பர்" என்று ஃபிரெட் கூறினார்.

"ஆமாம்....சரிதான். அவன் எனக்கு நண்பன் அல்ல" என்று ஜான் பதிலளித்தவாறு லெவ்வினுடைய கோட்டைப் பிடித்து இழுத்து, அவனுடைய கழுத்தை சுற்றி இறுக்கிப் பிடித்தான். அதே சமயத்தில் லுட்விக், பின்னோக்கி நகர்ந்து நின்று லெவ்வினை உதைப்பதற்காகத் தன்னை தயார் செய்து கொண்டான்.

"என்ன......" என்று ஜான் உரத்த குரலில் கத்தியவாறு தனது கைகளைத் தூக்க முயன்றபோது, அவனது இரண்டு கைகளும் செயலிழந்து இருபுறத்திலும் தொங்கியதைக் கண்டான்.

லுட்விக் நிலை தடுமாறி, தன்னைச் சமன்படுத்த முடியாமல் தரையில் விழுந்தான்.

"எனது கால்கள் - எனது கால்களில் உணர்ச்சி இல்லை" என்று லுட்விக் கத்தினான்.

லெவ், லுட்விக் எழுவதற்கு உதவினான். பின்பு அவனது தோள்களில் சாய்ந்து நின்று கொள்ளுமாறு லுட்விக்கிடம் கூறினான்.

"நான் உங்கள் இருவரையும், உங்களது வீட்டிற்கு அழைத்துச் செல்கிறேன். மேலும் நீங்கள் இருவரும் பக்கவாதத்திலிருந்து விடுபட என்ன செய்ய வேண்டும் என்பதையும் நான் உங்களுக்குக் கூறுகிறேன்" என்று லெவ் கூறினான்.

லெவ், லுட்விக்கை தன்னுடைய காரை நோக்கி அழைத்துச் சென்றான். வாகனத்தில் ஏறுவதற்கு லெவ் அவனுக்கு உதவும் தருவாய்

வரையிலும் ஃபிரெட் மற்றும் ஜான் இதனை அதிர்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்தனர். மேலும் லெவ், ஜானும் வாகனத்தில் ஏறுவதற்கு உதவினாலும் எதுவும் பேசவில்லை. அதன் பிறகான சிறிய பிரயாணத்திலும் அமைதியாகவே இருந்தனர். லெவ், ஜானின் வீட்டை நோக்கி காரைச் செலுத்தினான். வீட்டை அடைந்ததும் தன்னுடைய காரின் கதவைத் திறந்து ஜானிற்கு உதவினான். பின்பு அவனுடைய சிறிய வீட்டிற்குள் அவனை அழைத்துச் சென்றான். பின்பு சிறிது நேரம் கழித்து லெவ் மட்டும் தனியாக காருக்குத் திரும்பினான்.

"அவன் எப்படி இருக்கிறான்" என்று ஃபிரெட் கேட்டான்.

"இப்போது அவர் கலவையான உணர்ச்சிகளைக் கொண்டிருக்கிறார். மேலும் இன்று அவருக்கு நடந்த காரியங்களைக் குறித்து யோசித்துக் கொண்டிருக்கிறார், ஆனால் அவரால் முற்பிதாக்களில் ஒருவருடன் இப்போது பேச முடிந்தது. தான் செய்த தவறை அறிக்கையிடுவதில் உண்மையுள்ளவராக இருந்தார் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் அவரது கைகளைப் பயன்படுத்தும் திறனை அவரால் பெற முடியும் என்று நான் நம்புகிறேன். கடுமையான நீதியின் கீழ் இருக்கும் ஆளுகையானது எவ்வாறு இருக்கும் என்று இப்போது அவர் கற்றுக் கொள்கிறார். மனுக்குலம் இவ்வளவு வேகமாக கற்கிறதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது. முன்பு எல்லாவற்றையும் சந்தேகிக்க அவரால் முடியும். ஆனால் இப்போது அப்படி இல்லை".

லெவ், ஜானின் வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பாக அவர் கூறிய வார்த்தைகளை நினைவு கூர்ந்தான். "நான் எதிர்பார்த்தது போல் போட்டியிடுவதற்கு திறனற்ற, பயனற்ற யூதன் நீ அல்ல. ஆனால் உன்னையும், உனது மக்களையும் வெறுக்க விரும்பும் எனது எண்ணத்தை என்னால் மாற்றிக் கொள்ள முடியாது. நான் இன்னும்

உன்னையும், உன் மக்களையும் வெறுக்கிறேன். அதனால் இப்போது எந்த ஒரு பயனும் இல்லாத போதிலும் கூட, நான் உங்களை வெறுக்கிறேன்'' என்று கூறினான்.

''நாங்கள் அதிகம் வெறுக்கும் மக்களின் ஆதிக்கத்திற்கு கீழ் அடிபணிய வேண்டி இருப்பதே இப்போதைய எங்களது பிரச்சனை'' என்று கிண்டலான தொனியில் லுட்விக் கூறினான்.

''உண்மையான பிரச்சினை என்னவென்றால் மனக்கசப்பும், வெறுப்பும் உங்களது இருதயத்தை அரிப்பதே'' என்று லெவ் ஒரே சீரான குரலில் கூறினான். ''பக்கவாதம் என்பது ஓர் உடல் ரீதியான விளைவாக இருந்தாலும், அது ஒருவர் தன் சொந்த இருதயத்தின் மனப்பான்மையை மாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற்கான ஒரு சிறந்த நினைவூட்டலாகும்'' என்று லெவ் பதிலளித்தான்.

லுட்விக்கை, அவனது வீட்டிற்குள் அழைத்துச் சென்று வரவேற்பு அறையில் இருந்த சோபாவில் அமரச் செய்வதற்கு ஃபிரெட்டும் உதவினார். பின்பு ஃபிரெட் காரில் சென்று காத்திருக்கலாம் என்று வெளியேறினார். லெவ் சிறிது நேரத்தில் திரும்பி வந்தான். அவன் சோர்வாக இருந்ததை அவனது முகம் காட்டியது.

''லுட்விக்குடனான உரையாடல் எவ்வாறு இருந்தது லெவ்?'' என்று ஃபிரெட் கேட்டார்.

''லுட்விக் தனக்குத்தானே ஆபத்தை உண்டாக்கிக் கொள்வாரோ என்று எனக்கு பயமாக இருக்கிறது. முற்பிதாவாகிய சாராளுடனான உரையாடலின் போது அவரால் உண்மையைக் கூற முடியவில்லை. அடுத்த இரண்டு வாரங்களுக்கு அவரது பக்கவாதத்தைத் தொடர வேண்டி இருக்கும். ஊன்றுகோல்கள் வாங்குவதற்கு நான் அவருக்கு பரிந்துரைத்திருக்கிறேன். ஜானுக்கும், லுட்விக்குக்கும் அன்றைய

நாளுக்குத் தேவையான ஏதேன் பழங்கள் இருப்பதை அவர்களிடம் தெரிவித்துவிட்டேன். மேலும் சிறிது உயிர்த்தெழுதலின் தேநீர் தயார் செய்து வைத்துவிட்டு வந்தேன். அவர்கள் எதைத் தேர்வு செய்யப் போகிறார்கள் என்பதைக் காண்பதற்கு சுவாரசியமாக இருக்கிறது. நாளை அவர்களிடம் பேசுகிறேன்'' என்று லெவ் கூறினான்.


''இந்நிகழ்வானது இன்றைய காலைவேளையின், வழிபாட்டுச் சேவையின் பாடத்தில் கூறிய உவமைக்கு ஒத்திருக்கிறது. இராஜா தன்னுடைய வேலைக்காரனின் பெரிய கடனை மன்னித்தார். ஆனால் அந்த வேலைக்காரனோ அவனிடம் சிறிதளவு கடன் பெற்றிருந்த, அவனது ஊழியக்காரனான மற்றவனிடம் முழு கடனையும் திரும்பச் செலுத்தும் படி கட்டளை இடுகிறான். அதனால் அந்த வேலைக்காரனைச் சிறையில் அடைக்குமாறு தேவன் கூறினார். நாம் நீதியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காகவே தேவன் இந்த உவமையைக் கூறியிருக்கிறார். நீங்கள் கூறியது போல, கசப்பும், வெறுப்பும் கொண்ட மனதினை உடையவர்களையே காயப்படுத்துகின்றது'' என்று ஃபிரெட் கூறினான்.

ஃபிரெட் திடீரென்று அமைதி ஆனார். இந்த வார்த்தைகள் தனக்கு முன் இருக்கும் தன்னுடைய சொந்த வாழ்க்கையின் விஷயங்களில், தான் எதைத் தேர்ந்தெடுக்கப் போகிறேன் என்பதற்கு இது மிகவும் பொருத்தும் என்பதை அவர் புரிந்து கொண்டார்.

**தொடரும்......**

**பிரதிகள் தேவைப்படுவோர்**
**தொடர்புக்கு:**
**8428737474**

**சகோதரர் யூஜின் பர்ன்ஸ்** அவர்கள்,
அவரது வாழ்நாள் முழுவதிலும் கதைகள் மீது,
அதிலும் விசேஷமாக வேதாகமத்தின் கதைகள் மீது
ஆர்வம் கொண்டவராக இருந்தவர் ஆவார்.
மனுஷர் எல்லாருடைய வாழ்க்கையின் கதையானது
கல்லறையோடு முடிந்துவிடுகின்றது. ஆனால்
மரித்தோரின் உயிர்த்தெழுதல் பற்றின
வாக்குத்தத்தமானது இதை மாற்றப்போகின்றது.
மறுஜென்ம காலத்தில், அதாவது மரித்தோரின்
உயிர்த்தெழுதலின் காலங்களில்,
எல்லா மனுஷருடைய வாழ்க்கைக் கதையும் மீண்டும்
தொடரப்போகின்றது என்பதை நினைக்கும்போதே
மேனி சிலிர்க்கின்றது. இந்தப் புத்தகத்தில்,
வாழ்க்கையை முற்றிலும் புதியதொரு **பரிணாமத்தில்** பார்ப்பதற்கான காட்சித்திரையை
ஆசிரியர் திறக்கிறார். மரித்தோரின் உயிர்த்தெழுதலானது, **மீண்டும் ஜீவனோடு**
வருபவர்களுக்கு வாழ்க்கையை மீண்டும் வாழ்வதற்கான இரண்டாவது மேடையை
அமைத்துக்கொடுக்கிறது.



**நீங்கள் உட்பட, ஒவ்வொரு மனுஷனும், சீரான
பூமியில் காணப்படும் பரதீசில்
மீண்டும் வாழ்வீர்கள்.**

